பிசுமில்லா ஹிற்றகுமா னிற்றகீம்.

உ

இரத்தினவிலாசம் நசீகத்துலாசம்.

கும்பகோணத்தைச்சார்ந்த-திருநறையூர்
செய்யிது முகம்மது சாகிபவர்கள் குமாரர்
சேகு முகம்மது லெப்பை
ஆலிம்சாகிபு அவர்களாலியற்றியது.

அம்மாபட்டணம்
காதி நருமது ராவுத்தரவர்கள் குமாரர்
மவுலானா செய்துயூசுபு லெப்பை ஆலிம்சாகிபு
அவர்களாலும்
பார்வையிடுவித்து

காயற்பட்டணம்
கல்லாகுமது மகுதூமுகம்மதுப்
புலவரவர்களால்
பரிசோதித்துத் திருத்தப்பட்டு
டி - சே - ஆலிம்சாகிபு அவர்கள் முயற்சியால்
சென்னை
மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு - காப்பி - ௲

இசுமத்து - கூ௱க௯அ ஸபர்மீ.

1-84

விளம்பரம்.

—0*0—

இந்தக்கித்தாபுவேண்டியபுண்ணியவான்கள் சென்ன பட்டணம் குஜிலிக்கடை பிரம்புஹத்தவாடை இருசப்ப மேஸ்திரிதெருவில் (௪௫)வது நம்பர்வீட்டில் - ச-பீ- சேகப்துல்காதிறு ராவுத்தரிடத்திலும் - கும்பகோணந் தாலூக்கைச்சார்ந்த திருநெறியூரி லிருக்கும்-ஹாஜிசே குமுகம்மது சாகிபிடத்திலும் - மதுரை-புதுமண்டபத் தில் ஷாப்புக்கடை வியாபாரஞ்செய்யும் புலவர் சேகப் துல்காதிறு ராவுத்தரிடத்திலுங் கிரையத்திற்குப் பெற் றுக்கொள்ளலாம்.

பிசுமில்லா ஹிற்றகுமா னிற்றகீம்.

ஃ து

முகவுரை.

---*---

அல்லாவுக்கும் - அல்லாவுடைய றசூலுக்கும் - வேதங்களுக்கும் ஒப்புக்கத்துனாளைக்கும்-ஈமான்கொண்ட மூமீன்முசிலீமாகிய எமது பிறவிகளே நேசர்களே-அஷரூபாலவர்களே இசுலாமான நமதுமார்க்கத்தி னன்மைமைவேண் - நவீனத்துல்லசுரூர்-ஷிறுஹத்துல் லிசுலாம்-துற றத்துல்நாசிஹீன்- ஹத்துல்மஜாலிசு-றத்துல்முகுத்தார் - பத்தாவி ஆலங்கிரிமுதலாகிய அனேகங்கித்தாபுகளில் இரத்தினச்சுடர்போலே பிரகாசமாய்விளங்குகின்ற நுட்பங்களான-ஹதீதுகள்-ஹிக்காயத்துகள் கிஸ்ஸாக்கள்-மசலாக்களாகியவைகளைத்தெரிந்து புறக்கியெடுத்துப் பாவக்கடலில் மூழ்கிய பாவியடியான் - கும்பகோணத்தைச்சார்ந்த திருநாறையூரில்வசிக்கும்-செய்யிதுமுகம்மதுசாகிபுகுமாரன்-சேகுமுகம்மதென்பவன் தமிழ்ப்பாஷைபால் தர்ஜுமாச்செய்து-இரத்தினவிலாசம் நசீஹத்துலாசமென்னும் பேருங்கொடுத்து-ஹிஜுறத்து - கஙாகஞூ ஸபர்மாதம் அல்லாறூகுலுதவியைக்கொண்டும் அச்சிட்டு நிறைவேலாயிற்று.

ஆனால் இந்தக்கித்தாபை அனேகநாளாய் அனேகங்கித்தாபுகளைச் சேகரித்து அவைகளைப் பார்வையிட்டுத் தர்ஜுமாச் செய்து பெரிய வுலமாக்களிடத்திலும் காண்பித்து அச்சிட்டது யாது காரணத்திற்கென்னில் - இந்த ஸமானுவில் நமதுதேசங்களில் முசிலிமாகிய அனேகம் புண்ணியவான்கள் மகாசிறப்பும் வலுப்பமுமாகிய புறுக்கானுல் ஹமீது-குறுஆனுல்மஜீதையும்-அதிற்சொல்லியிருக்கிற ஏவல் விலகல்-இல்முகளையும்-முதலிலே தங்களுடைய பிள்ளைகள் பிறவிகள் இனத்தார் முதலிய மற்றவர்களுக்குப் படிப்பித்துக் கொடுக்காமலும்- தாங்களும்படித்துக்கொள்ளாமலும் அழிந்துபோகிற மாயத்துனியாவுடையசவுக்கியத்தைவேண்டிச் சண்டாளசதிகாரபாதகதுரோகியான இப்லீசுடையமாயாவினைதவலையிற்சிக்கிக்கொண்டு பலபலபாஷைகளைக் கற்றிருந்தால் அதனாலே பணச்சம்பாத்தியஞ்செய்து - நாமும் நமது

குடும்பஸ்தரும்-இருகத்தாயிருந்துதின்னலாமென்று அல்லாறசூல்சொன்னபிரகாரம்-முதலிலே குறுஆன் இல்முகளைப்படிக்காமல் அதைப் பரதேசியாக விட்டுவிட்டு மற்றப்பாஷைகளையும் - அவைகளிலுள்ள கல்விகளையும் படிக்கிறதுந்தவிரப் படிக்கமுயற்சியுஞ்செய்கிறார்கள்.

இன்னும்-அல்லாகுத்தஆலா நான்குமாதமும்-பத்துநாளும் ஹித்தாஇருக்கவேண்டுமென்று திடனாகச்சொல்லியிருக்க அதைவிட்டுவிட்டு ஒன்றரைப்பொழுது-மூன்றுநாள் - நாற்பதுநாள் - ஹித்தாப்போதுமென்று பெரும்பான்மையாக இந்தக்கித்தாபிற் சொல்லியிருக்கிறபடி பிதஹத்தாக நடத்தி வருகிறார்கள்-ஆதலால்-அஃகஃதிற்கு ஆகுமான இல்முகளைவிரிக்காமற் சுருக்கமாகத்தெரிந்தெடுத்து அறபுவாக்கியத்திற்குத் தமிழ்மொழிபெயர்த்து யாவருக்கும்வேண்டியவிதிகளாதலால் அல்லாகுத்தஆலா நம்மனைவோருடைய பாவத்தையும் பொறுத்துக் கிருபை றகுமத்துச் செய்வானென்று ஹம்து சலாத்தைக் கொண்டுந் தொடங்கி யச்சிடப்பட்டன.

ஆய்-முசிலீமாகிய இகுவான்களே-இவ்விதம் அல்லாகுத்த ஆலாவுடைய சொல்லைப்பேணி குறுஆன் இல்முகளை முதலிற் படிக்காமல் விட்டுவிட்டு மற்றப்பாஷையிலுள்ள கல்விகளைப் படித்து இபாதத்துச் செய்யாமற்போனால் நாளைகியாமத்திலே அல்லாகுத்தஆலாவை யெவ்விதஞ்சந்திக்கிறது-இன்னும்-இருந்தாப்போலிருந்து மலக்குல் மவுத்தென்கிற புலிவந்து விழுந்து பிடித்துத் தகர்த்து முறித்து றாகென்னும் உயிரை வாங்கிக்கொண்டுபோவாரோ அப்போது எவ்விதமாகுவீர்கள்.

எத்தனையெத்தனை அன்பியாக்கள்-எத்தனையெத்தனை அவுலியாக்கள்-எத்தனைஎத்தனை குதுபுமார்கள் - எத்தனையெத்தனை உலமாக்கள் எத்தனையெத்தனை ஆபிதீன்கள்-எத்தனையெத்தனை சுல்தான்கள்-அமீறுகள்-எத்தனையெத்தனை ஹாக்கிம்கள்-அதிகாரிகள் எத்தனையெத்தனை சீமான்கள் -மிஸ்கீன்கள்-ஆகியஇவர்களின்பேரிலெல்லா மவுத்தென்கிற வேங்கைப்புலிவந்து விழுந்து முறித்துத்தகர்த்து றாகைப் பறித்துக் கொண்டதே அதை நீங்கள் கேட்கவில்லையா.

இன்னும்-உங்களிலுள்ள எத்தனையெத்தனை தாய்தகப்பன்மார்கள் எத்தனையெத்தனை பெண்சாதிபிள்ளைகள் - எத்தனையெத்தனை வாலிபர் வயதுசென்ற முதியவர்கள்- ஆகிய இவர்கள்பேரிலெல்லாம்-மவுதவென்கிற இராஜாளிப் பறவைவந்து கொத்தி யுயிரைப்போக்கிட வில்லையா-

அந்தமையித்தை நீங்கள்குளுப்பாட்டிக் கபனிட்டுச் சந்தூக்கில்வைத்துத் தோளின்பேரிற்றூக்கிச் சுமந்துகொண்டுபோய்த்தொழுதுகப்புறுக் குழியில் வைத்து மண்ணைத் தள்ளிப்போடவில்லையா.

அவைகளையெல்லா மறந்துவிட்டுத் துனியாவே நமக்கு வீடென்றும்-காசுபணங்களே நமக்குச் சதமென்றும்-மவுத்து நமக்கு வரமாட்டாதென்றும-எண்ணியிருக்கிறீர்களோ அப்படி நீங்கள் எண்ணுகிறதற்கு என்னமுகாந்திரமிருக்கிறது-அல்லாகுத்தஆலாவைத்தவிரச் சகலவஸ்துகளும் ஹலாக்காய்ப்போய்விடுமென்று குறுஆனில் வந்திருக்கிறதே-இன்னும்-நீங்கள் கண்காணக்கட்டின பெண்சாதிபிள்ளை உடற்பிறந்தான்மார்கள் முதலியபேர்கள்பேரிலே மவுத்தென்கிற அம்புவந்து விழுந்து கோர்த்துக்கொண்டு ஹலாக்காக்கிப்போடவில்லையா-அவர்களைக்கண்டு நீங்கள் சஞ்சலம்-துக்கம்-விசனமுதலானவைகளை யடையவில்லையா.

இன்னும்-மணிப்புருவினுடைய கழுத்தில் ஒருஆரம் பற்றிப்பிடித்துக்கொண்டிருப்பதுபோலே உங்களுடைய கழுத்திலே மவுத்தென்கிறசவடிபற்றிப்பிடித்துக்கொண்டிருக்கிறதென்றுகுத்துபாக்கோர்வையிட்டவர்கள் சொல்லியிருக்கிறதைநீங்கள்பார்க்கவுங்கேட்கவுமில்லையா ஆனால்-எமது இகுவான்களே-மவுத்தினுடையசங்கதிகளை நன்றாய்க் உ[illegible]ப்பார்த்து மவுத்தென்கிறவேங்கை யுங்களின்பேரிலே வந்து விழுந்து ரூகைப்பறித்துக்கொள்வதற்கு முன்பாக-அல்லாகுத்த ஆலாவுக்குப்பயந்து - ஆகிறத்துக்காகவேண்டி ஸாலிஹான அமலென்கிற ஸவாதாக்களை இப்போதேதேடித் தயார்செய்துகொள்ளுங்கள்-இதைக்கொண்டுதான் நாம் சொர்க்கம்புகுதவேண்டும்.

அப்படி - ஸாலிகான அமலென்கிற ஸவாதாக்களை இப்போதே தயார்செய்யாமல் இபுலீசுடையவலையில் அகப்பட்டுச் சிக்கிக்கொண்டு துனியாவுக்கே தொண்டு ஊழியஞ்செய்துகொண்டு அல்லா றசூல்சொன்னசொற்களை மறந்துவிட்டால் - ஸக்கறாத்துஹாலில் முந்நூறுவாட்கொண்டு வெட்டுகிறதைக் காண அதிக வருத்தமாக இருக்குமென்று ஹதீதில்வருகின்றதே-இன்னும்-மவுத்தாகிற மையித்துடைய முடிகளில்நின்று மொருமுடியை வானலோ[illegible]பூலோகர்பேரில்வைக்கப்படுமாகில் அல்லாகுத்தஆலாவுடைய வுத்தரவுகொண்டு அவர்களெல்லோரு மடிந்துபோவார்களென்றும் ஹதீத்வந்திருக்கின்றதே.

இன்னும்-ஒருறிவாயத்தில் மவுத்துடையவருத்தத்தில் [illegible]றுவொருதுள்ளியை துனியாவினுடைய மலைகளின்பேரிலே வைக்கப்படுமேயானால் அம்மலைகளெல்லாம்உருகிப்போய்விடுமென்று வந்திருக்கின்றதே-இன்னும்-ஒருஹிக்காயத்தில் ஒருஇராஜாவானவர் தன்னிருப்பிடமிட்டெழுந்து அழகான வுடையுடுத்து யுயர்ந்த குதிரையின்பேரிலேறிக்கொண்டு ஆளடிமைகளுடனே மெத்தவும் பெருமையாக ஓர்ஊரை நாடி நடந்துபோகிறவழியிலே எளிமையாகிய ஒருமிசிக்கீன்வந்து அந்தஇராஜாவுக்குச் சலாம்சொன்னார்-அந்தச்சலாத்திற்கு இராஜா ஜவாபுசொல்லாமற்போகச்சே அந்தமிசிக்கீன் இராஜாரேறிப்போகிற குதிரையின்கடிவாளத்தைப் பிடித்தார்-அப்போது-இராஜா மிசிக்கீனைப்பார்த்து நீயென்னவேலைசெய்துபோட்டாய் இருக்கட்டும் கடிவாளத்தைவிடு என்று சொன்னார்.

அதுகேட்டு மிசிக்கீனானவர் இராஜனைப்பார்த்து - உம்மிடத்தில் எனக்கு ஒருஹாஜத்திருக்கிறதென்றார்-அப்போது இராஜா தம்முடையமகிழ்ச்சியினாற் கீழிறங்கிச் செய்தியைக் கேளாமற் குதிரையின்மேலிருந்தே செய்தியைச்சொல்லுமென்றார்-உடனே அந்தமிசிக்கீன் நான் மலக்கல் மவுத்தாயிருக்குமென்று சொன்னார்-அதுகேட்டு இராஜாவுடையசிறம் பேதலித்து நாவுகுழறி ஒய்-மலக்கல்மவுத்தே என்னைவிட்டுவிடும்-நான் வீட்டுமட்டிற்போய் என்வேலைகளைமுடித்துவிட்டு அவ்விடத்திலுள்ளவர்களுக்கும் பயணஞ்சொல்லிக்கொண்டு வருகிறேனென்று சொன்னார்.

அதுகேட்டு மலக்கல்மவுத்து இராஜாவைப்பார்த்து அது கூடாது அல்லாவின்பேரிலாணையாக ஒருவனையும் நீ காணமாட்டாயென்று சொல்லிப் பின்னர் - இராஜாவுடைய றூகைக் கைபற்றிக்கொண்டார்-உடனே இராஜா குதிரையின்பேரிலிருந்துதடிபோலே மடிந்து[illegible]க் கீழேவிழுந்துவிட்டாரென்று வருகின்றதே

இன்னும்-ஒருமனிதன் அனேகம் பணங்காசுகளைச் சம்பாதித்து அழகான ஒருமாளிகையைக்கட்டி இன்றையதினம் நமது சந்தோஷத்தையெல்லாம் வெளிப்படுத்தவேண்டுமென்றுநாடித் தம்மைச்சார்ந்த பந்துஜனங்களுக்கு நல்ல[illegible]த்தான - வஜீபனஞ் செய்துகொடுத்து உண்ணும்படிசெய்துவிட்டுத் தாம் ஒருகட்டிலின்பேரிலே கால்மேலே கால்போட்டுக்கொண்டு தன்னபுசைப்பார்த்து - ஓ நபுசே உனக்குப்

போதுமானமட்டுந் திரவியமுண்டாக்கிக்கொண்டேன் - அதனாலே நீ சுகம்பெற்றுக்கொள்ளென்று சொல்லிக்கொண்டிருந்தார்.

அப்படி யிருக்கும்போது மலக்கல்மவுத்து ஒரு மிசிக்கீனுடைய கோலமாகவந்து கதவைத்தட்டினார்-உடனே அந்தச்சீமானுடைய ஆளடிமைகள் ஓடிவந்து பக்கீரேநீம் உனக்கு இவ்விடத்தில் என்னவேலையென்றுகேட்டதற்கு-மலக்கல்மவுத்தவர்கள் உங்கள்எஜமானனை நான் கூப்பிட்டதாகச்சொல்லுங்களென்றார்கள்-அதுகேட்டு அந்தஆளடிமைகள் உன்போல்கொத்தமனிதனிடத்திலேயா எங்கள்எஜமானன்வருவானென்று சொன்னார்கள்-அதுகேட்டு மலக்கல் மவுத்தவர்கள்-ஆம்-வரத்தானேவேண்டுமென்று சொன்னார்கள்-அதுகேட்டு ஆளடிமைகள் தங்களுடைய எஜமானனிடத்திற்போய்ச் சொன்னார்கள்-அதுகேட்டுஎஜமானன்-ஆளடிமைகளைப்பார்த்து அவனையடித்துக் கால்கையையொடிக்காமல் விட்டுவிட்டீர்களாவென்று சொன்னான்.

இவ்விதஞ் சொல்லிக்கொண்டிருக்கும்போது வெளியிலேநிற்கிற மலக்கல்மவுத்தவர்கள் பூட்டியிருக்கிற கதவிலே கையையோங்கி யோரடியடித்து நான் மலக்கல்மவுத்தாயிருக்குமென்று போய்ச்சொல்லுங்களென்று சொன்னார்கள்-இந்தச்சொல்லை யவர்கள்கேட்டவுடனே அவர்களுக்கும் அவர்கள் எஜமானனுக்கும் போதமாறிப் போய்விட்டது-பின்னர்-எஜமானனவர் மலக்கல்மவுத்தவர்களுக்கு மெதுவாகத் தனக்குப்பதிலாக வேறொருவனை யெடுத்துக்கொள்ளும்படி சொன்னான்.

இதனிடையில் மலக்கல்மவுத்தவர்கள் வீட்டிற்குட் புகுந்து அந்தப்பணக்காரனைப்பார்த்து உன்னுடையதிரவியத்தைச் செய்யவேண்டியபடி செய்துகொள்-நான் உன்னுடைய றூகை வாங்கியேயல்லாமல் வெளியேபோறதில்லையென்று சொன்னார்கள்-அதுகேட்டுஅந்தப்பணக்காரன்-தன்னுடைய திரவியங்களையெல்லா மெடுத்துவந்து குவிக்கச் செய்து அதைப்பார்த்து மிகவும் வியாகூலமும்-கவலையுமுள்ளவராகித் திரவியத்தைப்பார்த்து அல்லாகுத்தஆலா வுனக்குலகுனத்துச்செய்வானாகவும்-என்னை நீயல்லவா நாயனுக்கு இபாதத்துச்செய்யவிடாமற் பிராக்காக்கிவைத்தாயென்று சொன்னான்-அப்போது அல்லாகுத்தஆலா அந்தத்திரவியத்தை அவரோடு பேசும்படிசெய்ததால்-அந்தத் திரவியம் அவனைப்பார்த்து என்னை நீயேன் தூஷணிக்கிறாய் நீஎன்னைக்கொண்டு இராஜராஜாக்க ளிடமெல்லாஞ் சென்றிருந்தாய்-தக்குவாவுடைய பேர்களுக்கு ஒன்றுங் கொடுத்தாயில்லையல்லவா.

முகவுரை.

இன்னும்-என்னைக்கொண்டு அழகியபெண்களோடு சுகமான அ
னுபோகமுஞ்செய்தாயல்லவா-இன்னும் - கெட்டபாதையிலும் செலவு
செய்தாயல்லவா-அப்போது நானுன்னை என்னவதென்றுங்கேட்கவில்
லையே நீஅப்போதுஎன்னை நல்லவழியிலே செலவுசெய்திருப்பாயாகில்
நானுனக்கு உதவுவேனென்று சொல்லி முடிவாகினபோது - மலக்கல்
மவுத்தவர்கள் அந்தப் பணக்காரனுடைய றாகைக் கைப்பற்றினார்கள்
அவர் அப்படியே அடித்துமோதிக் கீழேவிழுந்துவிட்டார்.

ஆ-ஆ, இன்னனில்லாகி வஇன்ன இலைகிறுஜஊன் நான் என்ன
தான்சொல்லுவேன்-மூமீன் முசிலீமாகிய இகுவான்களே நீங்கள் பாரு
ங்கள் காற்றென்றும் மழையென்றும் பாராமலோடித்திரிந்து அருமை
யாகச்சம்பாதித்துத் தம்முடைய தலையிலுந் தோளிலுந்தூக்கிச் சுமந்
துகொண்டுவந்து பெட்டகங்களில்வைத்துப் பூட்டிட்டுக் காப்பாத்திய
நன்றி-விசுவாசம்-ஓர்- அனுப்பிரமாண்டமுமில்லாமற்சதிமான மோ
சம் அந்தப்பணக்காரனுக்குச்செய்துபோட்டப் பொருளாச்சுதே அதை
நீங்கள்பார்க்கவும் கேட்கவுமில்லையா.

ஆனதால் காசுபணத்தைச் சதமென்றுநம்பலாமா-அப்படி நீங்க
ளும் காசுபணத்தைச் சதமென்றும்-நிலங்-காணி-பூமிகள் - தோட்டந்
துறவுகளைச் சதமென்றும்-மற்ற லோககாரியங்களையும்- சதமென்றுநம்
பாமல் என்னுடைய பிறவிகளாகிய - மூமீன் முசிலீமான நேசர்களே
அறிவையுடையபேர்களே-அஷருபானவர்களே-இந்தக் கித்தாபி லச்சி
டப்பட்ட முப்பத்திரண்டுபாபுகளிலடங்கிய இரத்தினவொளிபோன்ற
அறிவுகளை யுங்கள்தெளிவான மனக்கண்ணினலே நன்ருகப் பார்வை
யிட்டு அந்தந்த பாபுகளிலும் சொல்லியிருக்கிற அறிவென்னுமயத்தை
மனமென்னுங் காந்தத்தினலே பிடித்துப்பார்த் துணர்ந்து படித்துத்
தாங்களும் அமல்ச்செய்வதுடனே தங்கள்தங்கள் பெண்டுபிள்ளைகளுக்
கும் படித்துக்காட்டியாவது அல்லது படிப்பவர்களைக்கொண்டு படிக்
கச்சொல்லிக் கேட்கும்படிசெய்தாவது-அவர்களையு நல்லஅமலில்நடக்
கும்படி செய்யவேண்டியது.

இன்னும்-ஹதீது - வசூலு - சொல்லுகிறதற்குச் சபைகூட்டுவது
போலே சபைகூட்டி இந்தக் கித்தாபை யாவருக்குங் காதில்நுழையச்
செய்து கருத்தைவியப்பாக்கி நல்லஅமலைச் செய்யும்படிசெய்வது பார்
த்தவர்கள்-கேட்டவர்கள்-யாவருக்கும் நன்மையாகஇருக்கும். அப்படிச்

செய்வார்கள்-தீனுக்குதவியானவர்களா யிருக்குமென்பதற்கு யாதேனுமோர் சந்தேகமில்லை.

இன்னும் - இந்தக் கித்தாபைக் காணிக்கைவைத்துக் கையாட்சி செய்கின்ற புண்ணியவான்கள் ஏனதானவென்று பார்த்தும் பாராம லிப்புத்தகத்தை வாங்கிப்போட்டோமேயென்று அசட்டையான வெண்ணங்கொண்டு பெட்டிபார்க்கவைக்காமற் கூர்க்கப்பார்த் துணர்ந்து படித்து நல்ல அமல்களைச் செய்வீர்களென்றும்-இதிற் சொற்குற்றம் பொருட்குற்றங்களிருக்கில் மனம்பொறுத்து மேற்[illegible]த்திரிபுகளைப் பார்வையிட்டதின்பின்னர்-திருத்திக்கொள்வீர்களென்றும்-உங்களரிதாகிய கனிஷையை யாமிகுந்த அன்பாதரவுடனே இன்பமாகக் கோருகின்றனம்.

ஆண்டவனே-இந்த இலேசாகிய அடிமையான என்னுடையபாவத்தையும்-என்னுடைய தாய்தகப்பன்மார்களுடையபாவத்தையும்-என் உஸ்தாதுமார்களுடைய பாவத்தையும்-என்பாட்டன் பூட்டன்முதலாகிய சகலபந்துஜனங்களான ஆண்பெண்க ளனைவோர்களுடையபாவங்களையும்-இந்த இரத்தினவிலாசம் நசீஹத்துலாசமென்னுங் கித்தாபில் அச்சிடப்பட்ட அறிவுகளைப் படிப்பவர்கள் படிக்கக்கேட்பவர்கள்முதலாகிய சகலமூமீன் முஸ்லீமாகிய - ஆண்பெண் அனைவோர்களுடைய பாவங்களையும்பொறுத்து-ஈமானுடனே நற்கரைசேர்த்து அவுலியாக்கள் ஸாலிஹீன்கள் கூட்டத்திற்சேர்த் தெழுப்பி-லிவாவுல் ஹம்தென்கிற கொடிநிழலுக்கத்து-நன்மைத்திராசுத்தட்டைக் கனக்கவைத்து நன்மைப்பட்டோலையை வலதுகையிற்றந்து-நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய ஷபாஅத்திற்குமாளாக்கி ஸிறாத்தல்முஸ்தகீமென்னும்பாலத்திலே மின்வெட்டிமறைவதுபோலே கடத்திவைத்து-ஹவுலல்க் கவுதருத்துத் தண்ணீருங்குடிக்கத்தந்து நபிநாயகமவர்களிருக்கிறதலத்திற்கு அசல்மாளிகையிலே குடியிருக்கவைத்து-உன்னுடைய லிக்காவென்கிற திருக்காட்சியையுந் தந்தருள் செய்வாயாகவும்-ஆமீன்-யாறப்பல்-ஆலமீன்.

முகவுரை முற்றிற்று.

இஃது

மதுரையைச்சார்ந்த

திருப்பத்தூர்

சேலம் - மீராராவுத்தரவர்கள் குமாரர்

காதிறு பாட்சாராவுத்தா வியற்றிய

சா த் து க வி க ள்.

வெ ண் பா.

ஆதியுரை யும்மழகா ராலகபி தம்முனையு
நீதியிமா மானவர்க ணேருரையும்—ஓதறபி
லுள்ளவுரை யைத்தெளிவா யொண்டமிழி னுள்முறை
யுள்ளபடி செய்தா ருவந்து.

சீரா ரறபுரைதேர் சேகுமு கம்மதென்னும்
பேராரு மாலிமவர் பெட்பாகப்—பாரோர்கள்
சிந்தைமகிழ்ந் தேஹுமல்கள் செய்குலதற் கேயியற்று
மந்தவுரை விந்தையுரை யாம்.

சேகு முகம்மதெனுஞ் சீராலிம் [illegible]யவர்
வாகுடனே செய்தவுரை மாலைச்சோ—மோகமுடன்
பார்த்துப் படித்திடிலோ பாவவினை தீர்ந்திறைவன்
சேர்த்திறகு மத்துறுவர் கேள்.

சாத்துகவிகள் முற்றிற்று.

இந்த இரத்தினவிலாசம் நசீஹத்துலாசமென்னுங் கித்தாபை யியற்றி யச்சிட்ட சேகுமுகம்மதுலெப்பை யாலிமவர்களுடைய அனுமதியின்றி யச்சிற்பதிப்பிக்கின்றவர்களும் அதைப்பதிப்பிக்கு மச்சுக் கூடத்தலைவர்களும்-கஅசஅ௵ ஜனவரி௴ உடு௳யில் பதிப்பிக்கப்பட்ட கனம்பொருந்திய கவரன்மெண்டு - கெஜட்டென்னும் பத்திரிகையில்-கஅசஎ௵ ஸ்ரீ௴த்து (உய) வது ஆக்டிற் கூறியபடி மேற்படியாரால் வழக்கிடப்படும்-நஷ்டத்திற் குத்தரவாதியாகக் கடவரென் றியாவருமறிவீர்களாக.

இரத்தினவிலாசம் நசீஹத்துலாசத்தின்

அட்டவணை

பக்கம்.

௧ கடவுள் துதி.
௨ உலப்பறு நலான நிய்யத்துச்செய்வதின்பயான்.
௮ தாய்தகப்பன்மார் பிள்ளைகளுக்குக் குறு ஆன்படித்துக்கொடுக்கிறதினாற் கிடைக்கிறவரிசையின்பயான்.
௰௬ குறு ஆனோதுகிறவர்க்குக்கிடைக்கிற வரிசையின்பயான்.
௰௮ பிசுமிலுடைய வரிசையின்பயான்.
௨௧ அல்சம்துசூறத்துடைய வரிசையின்பயான்.
௨௫ குல்குவல்லாசூறத்துடைய வரிசையின்பயான்.
௩௨ யாசீன்சூறத்துடைய வரிசையின்பயான்.
௪௫ [illegible]குர்சிய்யியுடைய வரிசையின்பயான்.
௫௩ இஸ்முபடிக்கிற வரிசையின்பயான்.
௬௩ தொழுகையுடைய வரிசையின்பயான்.
௬௫ தொழுகையைவிட்டவர்களுக்குக்கிடைக்கிற வேதனையின்பயான்,
௭௪ ஜும்ஆத்தொழுகையுடைய வரிசையின்பயான்.
௭௬ ஸக்காத்துக்கொடுக்கிற வரிசையின்பயான்.
௮௨ றமலான்மாதம் நோன்புபிடிக்கிற வரிசையின்பயான்.
௯௧ தறுவீகுத்தொழுகையுடைய வரிசையின்பயான்.
௯௮ லைலத்துல்கதுறுடைய வரிசையின்பயான்.
௱௧ ஷவ்வால்மாதம் ஆறுநோன்புபிடிக்கிற வரிசையின்பயான்.
௱௪ துல்ஹஜ்ஜுமாதம் அறபாஎன்னு மொன்பதாம்நாள் நோன்பு பிடிக்கிற வரிசையின்பயான்.
௱௫ ஐயாமில்பீலென்னும் பெயர்பெற்ற மூன்றுமூன்றுநோன்புபிடி
௱௭ முஹற்றமாதம் நோன்புபிடிக்கிற வரிசையின்பயான். [க்கிறவரி
௧௧௧ றஜபுமாதம் நோன்புபிடிக்கிற வரிசையின்பயான
௧௧௫ ஷகுபான்மாதத்தில் நோன்புபிடிக்கிற வரிசையின்பயான்.
௧௧௭ ஹஜ்ஜினுடைய வரிசையின்பயான்.
௧௧௯ நோன்புப்பெருநாளையிற்கொடுக்கிறபித்துறுஸதக்காவரிசையின்
௧௨௨ ஹஜ்ஜுப்பெருநாளையில்குறுபான்கொடுக்கிறவரிசையின்பயான்.
௧௨௬-லாஇலாகஇல்லல்லா முகம்மதுற்றசூலுல்லாகியென்கிற திக்கிறு
௧௨௮-சலவாத்துடைய வரிசையின்பயான். [டையவரிசையின்பயான்.
௧௩௬-கபுறை ஸியாறத்துச்செய்கிற வரிசையின்பயான்.
௧௩௮-பள்ளிவாசற்கட்டுகிறதிலும்பழுதுபார்க்கிறதிலுங்கிடைக்கிறவரி
௧௪௨-ஹித்தாவுடைய வரிசையின்பயான். [சையின்பயான்
௧௪௫-மவுலீதுசரீபினுடைய வரிசையின்பயான்.

ஆக பயான்கள் - ௩௨.

இரத்தினவிலாசம் நசீஹத்துலாசத்தின் அட்டவணை முற்றிற்று.

———

பிழை திருத்தல்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தல்.
௰	௨௪	புகுத்துவிப்பான்	புகுதவைப்பான்
௰௧	௰௯	யாகென்னில்	யாதென்னில்
௰௫	௰௪	நெர்வழிவில்	நேர்வழியில்
௨௧	௰௮	வரியில்சேர்க்கவேண்டியது, றகீம்என்கிற பீமில்நின்றும் மதுவாறு ஓடுகிறது.	
௩௧	௮	அல்கம்துகுறத்தை	அல்கம்துகூறத்தை
௩௭	௩௧	அதுகட்டு	அதுகேட்டு
௩௮	௨௯	ஆச்சுரியம்	ஆச்சரியம்
௩௯	௨	என்டைய	என்னுடைய
ஷெ	௯	வலாம்பூலது	வலம்பூலது
௪௰	௨	திருக்	திரகங்
௫௨	௨௬	றுமமை	மறுமை
௫௩	௩	யெடுக்கட்டது	[illegible]
௬௧	௰௫	காருக்கின்றது	காக்குகின்றது
௬௩	௩௬	அஷருமா	அஷைருபா
௬௪	௨௪	பிள்கள்	பிள்ளைகள்
௭௪	௰௮	கொடிப்பிடித்தி	கொடிபிடித்து
௭௭	௰௭	ஜு"ஆத்	ஜும்ஆத்
௮௯	௰௧	நிபாஹின்	நியாஹின்
௯௰	௰௨	மூசா	[illegible]சா
௯௫	௰௪	தொழுவனுல்	தொழுவதினுல்
௯௭	௨௰	அதிலுண்[illegible]ான	[illegible]யானத
௯௯	௨௬	மூக்ததீசி	மூகத்தீ[illegible]
௱	௰௫	எழுதப்பட[illegible]	எழுதப்படும்
ஷெ	௰௬	வருகின்ற-ம[illegible]	வருகின்ற றமலான்
௱௯	௨	மாணர்கள்	மாணுர்கள்
ஷெ	௰	மருளிச்செ	மருளிச்செய்
௱௪	௰௮	ஐயூ	ஐயூயு
௱௮	௫	சுக்ருர்	சுக்குர்
௱௰௯	௮	பித்துறுஸக்காத்துடைய	பித்துருஸதக்காவுடை[ய
௱௨௰	௰௫	தும்புரவா	துப்புரவா
௱௨௬	௰௬	சிபு	சிபுரீல்
௱௩௨	௯	கீக்வி	கீக்கிவி
௱௩௩	௰௩	கருத்ததரு	தருத்ததரு
௱௩௪	௰௧	தாலாயி	தலாயுல்
௱௩௭	௨௮	கொள்வீர்களா	கொள்வீர்கள்
௱௩௮	௰௩	யாதமொரு	யாதாமொரு
௱௪௰	௫	நருமணிதன்	ஒருமணிதன்
௱௪௨	௭	சோக்கதி	சேர்க்கை
௱௪௩	௰௯	சர்க்காரிடத்தில்	அதைச்சேர்ந்தஇடத்தி[ல்வார்[illegible]
௱௪௪	௰௧	புரிஷன்	புருஷன்

பிழைதிருத்தல் - மு[illegible]ற்று.

பிசுமில்லா இற்றகுமா னிற்றகீம்.

இஃது

இரத்தினவிலாசம் நசிஹத்துலாசம்.

கடவுள் துதி.

அறபுவாக்கியம்.

அல்கம்து லில்லாகி றெப்பில் ஆலமீன்
வல்ஆக்கிபத்து லில்முத்தக்கீன் வஸ்ஸலாத்து
வஸ்ஸலாமு அலா றசூலிகி செய்யிதினு
முகம்மதின் வஆலிகி வசகுபிகி அஜ்மயீன்.

தமிழ்வாக்கியம்.

எல்லாப்புகழும் புக[illegible]ம் சருவவல்லமையுமுள்ள கடவுளான அல்லாகுத்தஆலாவுக்[illegible]யிருக்கும் - அவன் எப்பேர்க்கொத்த நாயனினுல்-சந்திர[illegible]-சூரியன்-நட்சத்திரங்கள் இவைகளினுல் வான்லோகத்தையும்-மரமட்டை[illegible]கொடி-புற்பூண்டு முதலியவைகளினும் பூமியையும்-வெள்ளு[illegible]ழும்பும் அலைகளினுற் கடல்களையும்-நபிமார்களின் அனந்தகாலத்திற்குடைய தெளிவான ஆலிம்களினுல் உலகத்தையும்-தன்னுடைய வுத்தரவான வசியறிவிக்கும் ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்களினுல் மற்ற மலாயிக்கத்துகளையும்-அழகிய கூறுல்ஈன்களென்னுந் தேவரம்பையர், நவரத்தினமாளிகை யிவைகளினுல் சுவர்க்கலோகத்தையும்-வள்ளலான தெளிவான முத்தொளிவான காரணகடவுள் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களினுல் மற்ற நபிமார்களையும் - மிசுகீன்கட்கு ஹஜ்ஜாகிய ஜும்ஆ நாளினுல் மற்றநாட்களையும்-ஆயிரமாதம் வணக்கஞ்செய்வதைக் காண அதிக ஏற்றமுஞ்-சிறப்பும்-நன்மையும்பொருந்திய-லைலத்துல் கதறென்னும் இரவினுல் மற்ற இரவுகளையும்-நரகங்களையடைத்துச் ஜின் ஷைத்தான்களைத் தளைந்து சிறையாக்கிச் சொர்க்கவாயில்களைத் திறந்து சிங்காரித்து மிகவு மலங்காரஞ்செய்யப்படு மகா சிறப்பான றமலான்மாதத்தினுல் மற்ற மாதங்களையும்-நாளொன்றிற்கு நூற்றிருபது றகுமத்து இறங்குந்தலமாகியும் [illegible]திக்குநடுத்தலமாகியும் விளங்குந் திருமக்கமா நகரத்தில் நான்குதிசைக்குங் கிபுலாவாகிய கருபத்துல்லாஎன்னும் பெயருடைய பள்ளிவாயிலினுல் மற்றப் பள்ளிவாயில்களையும்-ஹறும்-ஹலால்-ஏவல்-விலை

கல்-இரகசியம்-பராசிய மிவைகள்-இன்னதென்றுகாட்டி நல்ல துலாம்
பரமான நேர்வழியையறிவிக்கும்-புறுக்கானுல்கமீத், குறஆனுல் மஜீ
தென்னும் வேதத்தினால் மற்றவேதங்களையும்-லவ்குல் மகுபூலுப் பல
கையி லெழுதப்பட்ட எழுத்துகளுக்கெல்லா முதலெழுதப்பட்ட (பிசு
மில்லாகிற்றகுமா னிற்றகீமென்னுந்திருநாமத்தினால்-புறுக்கான்வேதத்
தையும்-இவைபோலே மற்றவைகளையும் மகாசிறப்புவலங்காரமுமாக்
கிவைத்தானே அப்பேர்க்கொத்த நாயனாகஇருக்கும்.

ஆதியும்-அந்தமும் அறவும்-மூறவுமில்லாத பரிபூரணப்பொரு
ளாய்விளங்கும்-அல்லாகுத்தஆலா இவ்வுலகத்திலே குபிரென்னுமிருள்
நிறைந்து மூடிவருங் காலத்திலே தீனில் ஸ்லாமென்னும் பிரகாசத்தி
னால் அவ்விருளைநீக்கி யுண்மையாகிய நேர்வழியைக்காட்டுந் தனது பு
றுக்கானென்னும்வேதத்தை யெவ்விடங்களிலும் பிரபல மாக்கும்பொ
ருட்டுத் தனது திருத்தூதராக அனுப்பிய நாயகமையும்-தெள்ளித் தெ
ளித்து வடித்துத்திரட்டித் திருவுருவுந் திருமணியையுஞ் சகலபடைப்பு
களிலு மேன்மையும் உயர்வுஞ் சிறப்பும்பொருந்தி-யிருலோகத்திற்கு
மொளியான காரணகுருவான பேரின்பக் கடவுளை செய்யிதுல் அவ்வ
லீன்-ஷபீகுல்முதுநபீன்-இமாமுல்முத்தகீன் - கபீபுறெப்பில்ஆலமீன்
அகுமது-ஹாமிது-மகுமூது-முஸ்தபா-முகம்மதுநபிசல்லல்லாகு அலை
கிவசல்லம் அவர்கள்பேரிலும்-நட்சத்திரப்பிரகாசம்போன்ற அவர்கள்
ஆல் அசுகாபிகள் பேரிலும் - சலவாத்துஞ்சலாமு முண்டாவதாகவும்
வல்கம்துலில்லாகி றெப்பில்-ஆலமீன்-ஆமீன்-யாறப்பல்-ஆலமீன்.

கடவுள் துதி முற்றிற்று.

கலப்பறுதலான நிய்யத்துச்செய்வதின்பயான்.

அழகான நம்முடைய நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவ
சல்லமவர்களுடைய கற்பூரவாடைகமழுந் திருவாய் மலர்ந்தருளினதா
வது யாதென்னில்-அமல்களெல்லாம்- நிய்யத்துகளைக் கொண்டாயிருக்
கும்-எந்தமனிதன் எதை நிய்யத்துச்செய்வானோ அது அவனுக் குண்
டாகும். .

---

* ஆனதால்-ஒருவனுடையநாட்டம்-அல்லாகுத்த ஆலாவையும்-அவ
னுடைய தூதாக்கரானறசூலையும் -நாடுவானாகில் அந்நாட்டப்பிரகாரம்
பெற்றுக்கொள்வான்-இன்னும்- துனியாவில் பணங் காசுமுதலியதைப்
பெற்றுக்கொள்ள-அல்லது ஒருபெண்ணைக் கலியாண முடித்துக்கொள்
ளநாடுவானாகில் அவைகள் அவனாட்டப்படி கிடைக்குமென்று திருவு
ளமானார்கள் - இக்ஹதீதின்கருத்து நபிநாயகம்மதீனத்துக்கு - கிஜ்ரத்
போனதின்பின்னர்-சிலர் - நபிநாயகத்தைக் காணவேண்டி நிய்யத்துச்

செய்துபோனார்கள்-சிலர்-அவிடத்தில் வியாபாரஞ் செய்துகொள்ளலா மென்று நாடிப்போனார்கள் - சிலர் - பெண்களைக் கலியாணஞ் செய்து கொள்ளலாமென்று நாடிப்போனார்கள்-அந்தந்தநாட்டப்படி. வரைவரை பெற்றுக்கொண்டார்கள்.

இன்னு மூமினன போர்களுடைய கியத்தாகிறது மகாசிறப்பும்- மேன்மையும் உயர்த்தியுந்தங்கிய அல்லாகுத்தஆலாவுடைய அறுகை யைப் பார்க்கினு மிகவும் நலமும் ஏற்றமுமாயிருக்குமென்று அபிப்பிராயகந்திருவுளமானார்கள்.

ஒரிக் காயத்து.

எரியாவுறு மித்திலைன்னுங் கித்தாபில் இமாமகஸ்ஸாலி றஹிமஹுல்லாஹு அவர்கள் சொல்லியிருக்கிறதாவது-யாதென்னில்-சில கவுமுகள் [illegible] த வணங்குகிறார்களென்னும் சமாசாரம் ஓர் ஆபிதானவருக்குத்தெரி[illegible] அவர் அம்மரத்தைவெட்டிப்போடுகிறதற்காக எண்ணமுற்று-அ[illegible]யுதங்களையெடுத்துக்கொண்டு விரைவாக் கடந்துபோகும்போது, இபுலீசானவன் அவ்வழியிலே யெதிர்க்கவந்து ஆபிதானவ[illegible]யடுத்து-ஒய்-ஆபிதே-நீர் அந்தமரத்தைவெட்டிப்போட்டசானல்-அ[illegible]தர்கள் இன்னும்-வேறொருமரத்தை வணங்குவார்கள் ஆ[illegible]-உம்முடையஇபாத்துகளிலே நீர் மீண்டுபோமென்று சொல்லுறான்.

அதகேட்டு ஆபிதானவர், இபுலீசைப்பார்த்து நானெவ்விதத்தினும் அம்மரத்தை வெட்டிப்போடுவேனென்றுசொல்லி முடுகும்போது இபுலீசுவெட்டக்கூடாதென்று தக்கித்ததில் இருவருக்குங்கைகலவி சண்டைபிரிட்டது-அப்போது ஆபிதானவர் இவன்மரத்தைவெட்டவிடாமல் நம்மைத் தடுக்கிறபடியினால் முதலில்இவனைத்தான் வெட்டிப்போட்டுப் பின்னர் மரத்தைவெட்டவேண்டுமென் றெண்ணங்கொண்டு இபுலீசைவாரித்தூக்கிக் கீழேபோட்டார்-உடனே இபுலீசானவன் ஆபிதானவனைப்பார்த்து-ஒய்-ஆபிதே-நீர்-பக்கீருஞமனிதனுகஇருக்கிறீர்-ஆகலால் உம்முடைய இபாதத்தளவில்மீண்டுபோம்-உமக்குஇரவெல்லாந்தினம் இரண்டுதங்கக்காசுவீதம் நீர்சயனித்து நித்திரைசெய்கிற தலையணையின்கீழ் வைக்குகிறேன்-அதைப் பெற்றுக்கொள்ளும்- மேலும்-நீர் அம்மரத்தைவெட்டாமல்-விட்டுவிட்டுப்போவதினாலும் அதை வணங்காதிருப்பதினாலும்-உமக்கு யாதொரு குற்றமுமில்லை அல்லாகுத்தஆலா காவலானுகில்-அம்மரத்தைவெட்டிப்போட ஒருநபியை யனுப்பிவைப்பானென்று சொன்னான்.

இச்சொற்களையெல்லாம் ஆபிதானவர் நிசமென்று நம்பிக்கொண்டு தமது வீட்டிற்குப்போய் இராவுகாலத்திற் படுத்திருந்து காலையிற் கண்விழித்தெழுந்து பார்க்கும்போது-இபுலீசு சொற்படிக்குத் தலையணையின்மேலே யிரண்டுதங்கக்காசு இருக்கக்கண்டெடுத்தார்-இரண்டாம் நாளும் அதேபிரகாரம் இரண்டுதங்கக்காசு கண்டெடுத்தார்-மூன்றாம் நாள் அங்கே பொருவஸ்துவையும் ஆபிதானவர் காணாமையால் வெகுண்டு அம்மரத்தைவெட்டிப்போட எண்ணி விரைவாயெழுந்துபோகும்போது-இபுலீசானவன் முன்போலே அப்பாதையில் எதிர்வந்து ஆபிதானவரைவெட்ட முடுகினான்-அதுகண்டு இவருந் தயாராகி யிரண்டுபேரும் சண்டைசெய்ததில், இபுலீசானவன்மிகைந்து ஆபிதானவரை வாரித் தூக்கிக் கீழேபோட்டான்-அப்போது ஆபிதானவர்-இபுலீசைப்பார்த்து, முன்செய்தசண்டையிலே நானுன்னைவாரித் தூக்கிக் கீழேபோட்டு மிகைத்துக்கொண்டதும்-இப்போது செய்த சண்டையிலே நீ யென்னைவாரித் தூக்கிக்கீழேபோட்டு மிகைத்துக் கொண்டதும் என்ன சபபினாலென்று கேட்டார்.

அதற்கு இபுலீசானவன்-ஆபிதானவரைப் பார்த்து நீர் முற்பட அல்லாவுக்காகக் கோபங்கொண்டு மரத்தை வெட்ட வந்ததால் என்னை மிகைத்துக்கொண்டீர்-இப்போது நீர் இரண்டு தங்கக்காசுக்காகக் கோபங்கொண்டு வந்ததால் - நானும்மை மிகைத்துக் கொண்டேனென்று சொன்னான்-ஆகையால் மூமீனாகிய உடற்பிறப்புகளே, இந்தக் கிஸ்ஸாவை நன்றாகப்பார்வையிட்டுச் சண்டாள இபுலீசுடைய மாயவலைக்குள் அகப்படாமற் கலப்பறுதலான நிய்யத்துடனே யிபாதத்துச்செய்து வருவீர்களாக.

ஹிக்காயத்து.

ஹயாத்துல்-ஹைவானென்னுங்கித்தாபில், தமீரிப்பியென்பவர்கள் சொல்லியிருக்கிறது யாதென்னில்- ஆதம் அலைகிஸ்ஸலாமவர்களை அல்லாஹுத்தஆலா வானலோகத்திலிருந்து பூலோகத்திலிறக்கிவைத்தபோது-காட்டுகளிலுள்ள மிருகஜாதிகள் கூட்டங்கூட்டமாகவந்து மரியாதை யதபுடனே ஆதம் அலைகிஸ்ஸலாம் அவர்களைக்கண்டு சலாம்சொல்லி அடிபணிந்துநின்றபோது-ஆதம் அலைகிஸ்ஸலாம் அவர்கள் சந்தோஷமாகி யந்த மிருகஜாதிகளடங்கலுக்குந் துஆச்செய்து அனுப்பிவிட்டார்கள். பின்பு-அதுபோலே ம[illegible]ள்களில் ஓர்கூட்டம் ஆதம் அலைகிஸ்ஸலாம் அவர்கள் முகதாவில் அதபுடனே மரியாதையாகவந்துசலாம்சொல்லித்

காட்சிசெய்து நின்றன - அதுகண்டு ஆதம் அலைகிஸ்ஸலா மவர்மகிழ்ச்சி கொண்டு துஆச்செய்து அம்மான்களுடைய முதுகுகளின்பேரில் - தங்களுடையமுபாறக்கான திருக்கையினாற்றடவினார்கள் உடனே அந்தமான்கள்பேரிலெல்லாம் கஸ்தூரிவாசனை யுண்டாகினவா - இவ்விதம் நூதனமாகக் கஸ்தூரிவாசமுண்டாகியமான்கள் தங்களிருப்பிடத்திற் றப்போகக்கண்ட வேறோர் மான்கூட்டங்கள் கஸ்தூரிமணக்குகிறமான்கூட்டங்களையடுத்து - உங்கள்பேரில் கஸ்தூரிவாசனையுண்டான சபபென்னவென்று கேட்டதற்கு, அம்மான்கள் நாங்கள் ஆதம் அலைகிஸ்ஸலாமவர்களைக் கண்டு ஸியாறத்துச்செய்யப்போனதில அவர்கள் எங்களுக்குத் துஆச்செய்ததுமன்றி எங்கள் முதுகுகளின்பேரில் அவர்கள் முபாறக்கான திருக்கையினாற்றடவியும்விட்டார்கள் - அதனாற்றான் கஸ்தூரிவாசமுண்டாயிருக்கிறதென்று சொன்னதுகள்.

அதுகேட்டு - இரண்டாவது மான்கூட்டங்கள் சந்தோஷமாகி நாமும் ஆதம் அலைகிஸ்ஸலா மவர்களிடத்திற்போனால் கஸ்தூரிவாசம் பெற்றுக்கொண்டு வரலாமென்ற எண்ணத்துடனே - அதிசீக்கிரமாக நடந்து ஆதம் அலைகிஸ்ஸலா மவர்களிடத்திற்போய் மரியாதை ஒழுங்குடனே சலாம்சொல்லித் தாழ்ச்செய்து நின்றதுகள் - அதுகண்டு ஆதம் அலைகிஸ்ஸலாம்அவர்கள் சந்தோஷமாகி அம்மான் கூட்டங்கட்குத் துஆவுஞ்செய்து அவைகளின் முதுகுகள்பேரிலுங் கையினாற் றடவியும் விட்டார்கள - ஆனல், முன்வந்த மான்கூட்டங்களைப்போலே கஸ்தூரி வாசனை யிந்தமான்கூட்டங்களுக் குண்டாகவில்லை, யதனால் அந்தமான் கூட்டங்கள் கவலையாகி முன்னர் கஸ்தூரிவாசனைபெற்ற மான்கூட்டங்களைப்பார்த்து உங்களுக்கு ஆதம் அலைகிஸ்ஸலாம் செய்ததுபோலே யெங்களுக்குஞ்செய்தார்கள் - அப்பேர்ப்பட்டகஸ்தூரிவாசனையை நாங்கள் பெற்றிக்கொள்ளவில்லையே இஃதென்னகாரணமென்று கேட்க அதற்குக் கஸ்தூரிவாசனையுள்ள மான்கூட்டங்கள்சொன்னதாவது - நாங்கள் அல்லாவுக்காக ஆதம் அலைகிஸ்ஸலாமவர்களைக்கண்டு ஸியாறத்துச்செய்யப்போனோம் - அதனால் கஸ்தூரிவாசத்தைப் பெற்றுக்கொண்டோம் நீங்கள் கஸ்தூரிவாசத்திற்காக ஆதம் அலைகிஸ்ஸலாத்தைக்கண்டு ஸியாறத்துச்செய்யப்போனீர்கள் - அதனால் உங்களுக்குக் கஸ்தூரிவாசனை கிடைக்கவில்லையென்று சொன்னதுகள்.

ஹிகாயத்து.

இப்னுஅப்பாசு றலியல்லாகு அன்கு சொல்லுகிறதாவது யாதென்னில் - ஓர் இராஜாவானவர் இராஜபரிபாலனஞ்செய்யத் தன்வீட்

டில்நின்றுமெழுந்து அரண்மனைக்குப்போகும்வழியிலே முப்பதுபசு மாடுகறக்கிற பாலளவு கறக்கிறவோர்பசுமாடு கறவையுடனே ஒருமனிதனிடம் இருக்கக்கண்டு ஆச்சரியமாய் அந்தப்பசுவையடாத்தாகப்பிடுங்கிக்கொள்ள எண்ணங்கொண்டவராய் வீட்டிற்குவந்திருந்து-மறுநாள இராஜாவானவர் பசுவைவிட்டுப் பால்கறக்கிற மனிதனிடமாய் வந்து கறவையைப்பார்த்துநின்று-பின்னர்-மாட்டுக்காரனைப்பார்த்து ஓய்மனிதனே இந்தமாடு நேற்றுக்கறந்தபாலில்அரைவாசிதானேகறந்திருக்கிறது-அதைப்பார்த்தால் நேற்றுச்சாயரட்சை [illegible]மாட்டைமேய்த்தகாட்டில் நீயின்றுசாயரட்சை மாட்டைமேய்க்கவில்லைப்போலேகாண்கிறது அது தவிர வேறேயென்னசபபினாலே பாற்குறைந்ததென்றுகேட்டார்.

அப்போது மாட்டையுடையவன் இராஜாவைப்பார்த்து ஒருவேளை இராஜாவானவர் அநீதத்தை நியத்து[illegible]செய்திருக்கப்போதும் அதனாலேதான் இம்மாட்டிற் பால்குறைந்ததென்று சொன்னான்-அது கேட்டு இராஜாவானவர்அஞ்சி யன்னீதமானகிரியத்தைவிட்டுமீண்டார் அப்போது முந்திக்கறந்தபாலளவு அந்தமாட்டிற்பால்கறக்கப்பட்டது.

ஹிக்காயத்து.

இமாம் அபுஹனிபா றகுமதுல்லா அவர்களிடத்தில் விற்பனைக்காகச் சில சரக்குகள்வந்திருந்தது-அவைகளைவாங்கச் சிலவியாபாரிகள் வந்திருந்து இன்ன இன்ன சரக்கை இன்ன இன்ன விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறோமென்று கேட்டார்கள்-அதற்கு இமாமவர்கள் காலைபிலாகட்டுமென்றுசொன்னார்கள் பின்பு சுபுகுநேரத்தில் வேறே சில வியாபாரிகள்வந்து இமாமவர்களிடத்தில் முன்கேட்டவிலைக்கு அதிக விலையாக அந்தச்சரக்கைவாங்கிக் கொள்ளுகிறோமென்றுகேட்டார்கள்-அப்போது இமாம்அவர்கள்பிந்திவந்தவியாபாரிகளைப்பார்த்து-முந்திவந்த வியாபாரிகள் கேட்டவிலைக்குச் சரக்குகளைக் கொடுக்கிறதற்கு நாங்கள் இ[illegible]ணுக நியத்துச் செய்துவிட்டோமென்று சொன்னார்கள்.

ஹிக்காயத்து.

அனுசறுவானென்று பெயர்சொல்லப்படும்-அமீறு-வேட்டையாடஎண்ணங்கொண்டு வீட்டைவிட்டெழுந்து காட்டுவழியாகப்போகச்சே-தனக்[illegible]ணீர்த்தாகமுண்டானதின்பேரில் - அங்கே யோர் தோட்டத்தையடுத்துப் பார்க்கும்போது, அத்தோட்டத்தில் ஒரு பின்

ளையைக்கண்டு எனதுதாகத்திற்குத் தண்ணீர்தாவென்றுகேட்டார்-அப்போதுபிள்ளை அமீரைப்பார்த்து எங்களிடத்தில் இப்போது தண்ணீர் சமீபத்திலில்லையென்று சொன்னது-அதுகேட்டு. அமீர் தண்ணீரில்லாதிருக்கில் ஓர் மாதுளம்பழமாவது கொண்டுவந்துதாவென்று கேட்டார்-உடனே பிள்ளை மாதுளம்பழங் கொண்டுவந்து கொடுக்க அதை அமீருடைத்துப்பார்க்கும்போது மிகுந்தஅழகும்-தித்திப்பும் இன்பமுமாக இருக்கக்கண்டு அத்தோட்டத்தைப் பிடுங்கிக்கொள்ள எண்ணம் வைத்துப் பிள்ளையைப்பார்த்து-இம் மாதுளம்பழத்தில் இன்னுமோர் பழங்கொண்டுவந்து தாவென்றுகேட்டார், அதுபோலே பிள்ளை மறுபடியுமோர் மாதுளம்பழங்கொண்டுவந்துகொடுக்க அதையும்அமீர்முன் போலுடைத்துப் பார்த்தபோது, மிகுந்தபுளிப்பாக இருக்கக்கண்டு அமீரந்தப் பிள்ளையைப்பார்த்து-ஓய்பிள்ளாய் இந்தப்பழம் முந்தினீ பறித்துக்கொண்டுவந்த மரத்தின்பழங்காணு அல்லவாவென்றுகேட்டதற்குப் பிள்ளை-ஆம் அம்மரத்துப்பழந்தானென்றுசொன்னது - அது கேட்டுஅமீர் அப்படியிருக்க இந்தப்பழம் புளித்திருக்கிற சபபென்னவென்றுபிள்ளையைக்கேட்க,அப்பிள்ளை அமீரைப்பார்த்து அமீருடைய எண்ணமாகிய நிய்யத்துப் பழத்தைப் புளிப்பாக்கி வைத்ததென்று சொல்லக்கேட்டு - அமீர்பயந்து தோட்டத்தை அபகரித்துக் கொள்ள எண்ணிய நிய்யத்தைவிட்டுவிட்டுப் பிள்ளையைப்பார்த்து-இன்னுமோர் பழங்கொண்டுவந்து தாவென்றுகேட்டுவாங்கித்தின்றுபார்த்தார்-அது முந்தினபழத்தைப்பார்க்கிலு மகாஇன்பமும், ருசியுமாயிருக்கக்கண்டு பிள்ளையைப்பார்த்து-அமீர் இந்தப்பழம் இவ்வளவுநேத்தியாயிருக்கிற சபபென்னவென்று கேட்டார்-அதற்குப்பிள்ளை அமீருடையநிய்யத்து நல்லநிய்யத்தானபடியாற் பழம்நேத்தியாயிருக்கின்றதென்றுசொன்னது-இந்தக்கிஸ்ஸா ரூசுஹறத்துல்மஜாலிசென்னுங்கித்தாபில்வ ருகின்றன ஆதலால் மூமீனாகிய உடற்பிறப்புகளே நீங்கள்கலப்பறுதலான நிய்யத்தென்னும் நினைப்புவைத்து இபாதத்துச்செய்துகொள்வீர்களாகவும். அல்லாகுத்தஆலா நமக்கிருபதியிலும் கிருபைபுரியுமத்துச்செய்வான் ஆமீன்.

கலப்பறுதலான நிய்யத்துச்செய்வதின்பயான்

முற்றிற்று.

—*—

தாய்தகப்பன்மார் பிள்ளைகளுக்குக் குறுஆன் படித்துக்கொடுக்கிறதினாற் கிடைக்கிற வரிசையின்பயான்.

ஹ தி து.

நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுடைய திருச்சமுகத்தில் நடந்ததென்று அப்துல்லா இபுனு சும்றத்து றலியல்லாகு அன்கவர்கள் சொல்லியிருக்கிறதாவது யாதென்னில்-ஒருமனிதன் மிகுந்தஅதபுடனேவந்து சலாம்சொல்லி நபிநாயகத்தைப்பார்த்து அல்லாவுடையறசூலே-தன்பிள்ளைக்குக் குறுஆனைப்படித்துவைக்கிறவனுக்கு எவ்வளவுகூலிகிடைக்குமென்றுகேட்டார்-அதற்குநபிநாயகம் அவர்கள் அம்மனிதனைப்பார்த்து அல்லாகுத்தஆலாவுடைய கலாம்சரீபுக்கு இவ்வளவுநன்மை கிடைக்குமென்கிறதாய்ச் சொல்லத் தீர்மானமில்லையென்று சொன்னார்கள்.

பிறகு நபிநாயகம் அல்லாகுத்தஆலாவுடைய வகிகொண்டுவருகிற ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்களிடத்தில் ஒருத்தன் தன்பிள்ளைக்குக்குறு ஆனைப்படித்துவைத்தானேயானால் அவனுக்கு எவ்வளவுகூலி கிடைக்குமென்று கேட்டார்கள்-அப்போது ஜிபுரீல் அலைகிஸ்ஸலாம் நபிநாயகத்தைப்பார்த்து-யாமுகம்மதே குறுஆனாகிறது அல்லாகுத்தஆலாவுடைய திருக்கலாமாயிருக்கிறது ஆகையால் அதற்கிவ்வளவு கூலியென்று தீர்மானமில்லையென்று சொல்லிவிட்டு வானலோகம்போய் அங்கிருக்கும்-இசுறாபீல் அலைகிஸ்ஸலாமவர்களைப்பார்த்துக் குறுஆனைப் பிள்ளைக்குப் படித்துவைக்கிற தகப்பனுக்கு எவ்வளவுகூலி கிடைக்குமென்று கேட்டதற்கு-இசுறாபீல் அலைகிஸ்ஸலாமும்-முன்னர் ஜிபுரீல் தாங்கள் நபிநாயகத்திடஞ்சொன்னதுபோலே சொன்னார்கள்-பின்னர்-ஜிபுரீல்அலைகிஸ்ஸலாமவர்கள் அல்லாகுத்தஆலாஇடத்திற்கேட்டு நபிநாயகத்திடம்வந்து அல்லாகுத்தஆலாவுடையமுகம்மதேயுங்களுடைய றப்பு உங்களுக்குச் சலாம்சொல்லிச் சொல்லச்சொன்னதாவது யாதென்னில்.

யாதாமொருவன் தன்னுடைய பிள்ளைக்குக் குறுஆனைப்படித்துக் கொடுப்பானே அப்பேர்க்கொத்தவன் (யிதம்) ஹஜ்ஜும் (யிதம்) உம்ரு செய்தவனாகவும்-இசுமாயீல் அலைகிஸ்ஸலாம் அவர்களுடைய மக்களில்நின்றும் (யிதம்) அடிமைகளை யுரிமைவிட்டவனாகவும் (யிதம்)

பேர்களுடனே பிசபிற்செய்தவனாகவும்-பசித்திருக்கிற (மதம்) முசிலீமானவர்களுக்கு வஜீபனங்கொடுத்துப் பசிதீர்த்தவனாகவும்-உடுமானம் இல்லாத(மதம்) முசிலீமானபேர்களுக்கு உடுமானங்கொடுத்தவனாகவுமிருப்பான்-இன்னும் அவனைக் கியாமநாளையிற் கபுறைவிட்டெழும்புகிறவனையிலும் குறுஆனாகிறது அவனுடனேயிருக்கும்-இன்னும் நன்மைதீமை[illegible]நிறுக்கிற திராசித்தட்டிலே அவனுடைய நன்மைத் தட்டுக் கனமாயிருக்கும்-இன்னும்வஸிருத்தல்முஸ்தக்கீமென்கிறபாலத்தின்பேரிலே அவன் மின்வெட்டிமறைந்ததுபோலே நடக்க இடமாயிருக்கும் இன்னும் அவன் சொர்க்கலோகம் போறவனையிலும் குறுஆன் கூடவேயிருக்குமென்று அல்லாகுத்தஆலா சொன்னானென்று ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் சொன்னார்கள்.

இன்னும் நபிநாயகம் தங்கள்முபாறக்காகிய திருவாயினாலே யாதாமொருவன் தன்பிள்ளைக்குக் குறுஆனில் நின்றும் ஓர் ஆயத்தைப் படித்துக்கொடுத்தானேயானால் அவன் ஆயிரம்வருஷம்பகற்காலத்தில் நோன்பாயிருந்து இராவுகாலத்தில் இபாதத்துச் செய்தவனைக்காண மிகவும் வரிசையுடையவனாக இருக்குமென்றும்- இன்னும் ஏழைமிசிக்கீன்கட்கு ஆயிரந் தீனாரென்னுந் தங்கக்காசு ஸதக்காக்கொடுப்பதைக் காண மிகவு மேற்றமானதாயிருக்குமென்றுந் திருவுளமானார்கள்.

இன்னும் நபிநாயகம் யாதாமொருவன் தன்பிள்ளைக்குக் குறுஆனைப்படித்துக் கொடுப்பானேயானால் அவனுக்கு அல்லாகுத்தஆலா ஆகிறத்தில் ஒளியினாலாகிய சவடியொன்றைப் போடுவான் அதைக் கண்டவுடனே-முந்தினபேர்களும் பிந்தினபேர்களும் ஆச்சரியமாவார்களென்று திருவுளமானார்கள்.

இன்னும் நபிநாயகம் யாதாமொருவன் குறுஆனைப்படித்து அதின்பிரகாரம் அமல்ச்செய்துவருவானாகில் கியாமநாளையில் அவனுடைய தாய்தகப்பன்மார்கட்குச் சூரியப்பிரகாசத்தைக்காண மெத்தவும் பிரகாசமுள்ள கிரீடத்தைப்போடுவானென்றுந் திருவுளமானார்கள்.

இன்னும் பிள்ளைகட்கு அழகானபெயரிடுகிறதும்-குறுஆன்-அதபு-இல்மு ஆகியஇம்மூன்றும் படித்துக்கொடுக்கிறதும் கத்தனாச்செய்துவைக்கிறதும்-பெற்ற தாய்தகப்பன்பேரிற் கடமையாயிருக்குமென்றும்-அப்படி குறுஆனைப் படித்துக்கொடாமற்போனால் கியாமநாளை

யில் அவர்கள் வேதனைப்படுவோர்களென[்]றும் - ருக்குமாக்தள் சொல்லி யிருக்கி[ற]ார்கள் - இந்தப்படிக்கு-கலீனத்தில் அசருறென்னுங்கித்தாபில் உகூ-கூ௰வது-சயிட்டில் எழுதப்பட்டிருக்கின்றன.

இன்னும் ஈசா அலைகிஸ்ஸலாம்ஒருகபுறுக்கருகாண்மையாய்நடந்துபோகும்போது-அந்தக்கபுறில் அடங்கியிருக்கிற மனிதனை ம[ல]ாயிக்கத்துகள் அதாபென்னும் வேதனைசெய்யக் கண்டவர்[அந்]த தாங்கள் நாடிப்போன ஹஜ்ஜுக்குப்போய்த்திரும்பி அந்தவழியாகவரும்போது-முன்னர் மனிதனை அதாபுசெய்யக்கண்ட கபுறில் ஒளியினுள்ள தாம்பாளங்கள் அந்தமலாயிக்கத்துகளுடனே யிருக்கக்கண்டு ஆச்சரியமாய் நடந்துவரும்போது-அல்லாகுத்தஆலா ஈசா அலைகிஸ்ஸலாமவர்கள் அளவிலே வகியனுப்பினான்-அஃதியாதென்னில் - அந்தக்கபுறில் அடங்கியமனிதன் முந்தி பாவியாயிருந்தான் அதனாலே அதாபுசெய்யப்பட்டது-அவனுக்கு ஓர் சிறுபிள்ளையுண்டாயிருந்தது அந்தப் பிள்ளையைப்பெற்ற தாயானவள்-மருத்துபுகாறுவென்னும் பள்ளிக்கூடத்தில் ஓதவைத்தாள் ஓதிக்கொடுக்கிற உஸ்தாது அந்தப்பிள்ளைக்கு முதலில் (பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீமென்னுந்) திருமொழியைச்சொல்லிக்கொடுத்தார் - அதை யந்தப்பிள்ளை படித்துக்கொண்டான் - இவ்விதம் என்னுடைய திருநாமத்தை அந்தமனிதனுடையபிள்ளை படித்துக்கொண்டபடியினால் அந்தகபுறில்அடங்கிய அடியானை அதாபுசெய்யாமல், அதைவிட்டும் விடுதலையாக்கி யொளியுள்ள தாம்பாளங்களை மலாயிக்கத்துகளுடனேயனுப்பிவித்தேனென்றுதெரிவித்தான்-இந்தப்படிக்குப் பாயிதாக்குறுஆன்முதலான கித்தாபுகளில் வருகின்றன.

ஆய்-மூமீன்-முசிலிமாகிய உடற்பிறப்புகளே ஒரு(பிசுமில்)ஓதினதற்கு இவ்வளவுதறஜா நன்மையுங்கிடைத்ததானால் ஒருகுறுஆன்முழுமையுமோதினால் எவ்வளவு தறஜாநன்மைகிடைக்கும் ஆனதால் உங்களுடைய பிள்ளைகளை அல்லாகுத்தஆலா இறைக்கிய குறுஆனை யோதவையுங்கள்-அதனால்அல்லாகுத்தஆலா, வுங்களுடையபாவங்களைப்பொறுத்துச் சொர்க்கலோகத்திலே புகு[த்]துவிப்பான் ஆமீன்,

கலீனத்தில் அசருறென்னுங் கித்தாபிற்சொல்லியிருக்கிறது யாதென்னில்-குறுஆனையும்-அதபுவொழுங்கையும்-பறுலானகாரியங்களையும் படிப்பித்துவைக்காத தாய்தகப்பன்மார்களுக்கு-வயிலென்கிறநரகவோடையும் - கடினமான அதாபென்னுந் தண்டனையுங் கிடைக்கும்-

அப்படி யோதவைக்காமற்போனல் அவர்கள் மடமையாகிவிடுவார்கள் ஆதலால் அவர்கள் தாய்தகப்பமார்களை விட்டும் நான் நீங்கிகொள் வேனென்றுநம்முடையநபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் திருவுளமானர்கள்.

ஆனதால் உடற்பிறப்புகளான முசுலீம்களே-அல்லாகுத்தஆலா நம்மனவினிறைக்கிய மகாசிறப்பும் வலுப்பமுமான குறுஆன் வேதத் தைத் தானுமோதாமலுந் தன்பிள்ளைகட்குப்படிப்பித்துவைக்காமலும் துனியாவைநம்பி முதலிலே தமிழ்முதலியபாஷைகளைப் படிக்கவைக் கிறதும்-மற்றும் கைத்தொழில்களைப் படிக்கவைக்கிறதுமாகப் பருவ காலத்தைப் போக்கிவிட்டால் நாளை கியாமத்திலே எந்தவிதத்தில் அல்லாகுத்தஆலாவைச் சந்திப்பீர்கள்-எந்தவிதக் கேள்விக்குச் சவாபு சொல்வீர்கள்-ஆனதால் மேலெழுதிய ஹதீது முதலியவைகளை நன்று கக்கூர்க்கப் பார்வையிட்டுத் தங்கள் தங்கள் பிள்ளைகளைக் குறுஆனை யோதவைத்து அதனுவுள்ளநன்மைகளைக் கொள்ளையாடிக் கொள்ளுங் கள் - அதனுல் அல்லாகுத்தஆலா கணக்கிலடங்காத நன்மை தறஜாத் துகளுடனே பதவியாகிய சொர்க்கத்தையுந் தந்தருள்வான் - ஆமீன் யாறபபல் ஆலமீன்.

ஹ தீ து.

நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமானர்கள் யாதென்னில்-அல்லாகுத்தஆலா இன்சான்களைப் படைக்க எண்ணயி ரம்வருஷத்திற்குமுன்னுலே அவர்களுக்கு-நஸக்கையுண்டாக்கி அதின் பேரிலே தின்னுகிறவர்கள்பெயரை எழுதியிருக்கிறுனென்று திருவுள மானர்கள்.

இன்னும் நபிநாயகம் தங்களுக்குச் சிபுரீல்அலைகிஸ்ஸலாந் தெரி வித்ததென்று அசுகாபிமார்களுக்குத் திருவுளமானது யாதென்னில் ஒருபோதுசுலைமான் அலைகிஸ்ஸலாமவர்கள் கடற்கரையிலேநின்றுதொ ழுதார்கள் அப்போது பசுமையானஇலையை வாயினிடமாகவைத்துக் கொண்டு ஊர்ந்துபோகிற வோர் சிற்றெறும்பைக்கண்டார்கள்-அச்சிற் றெறும்பு கடற்கரையிலோரிடத்திற்போய் நின்றுகொண்டு சத்தமிட் டது அந்தச்சத்தத்தைக்கேட்டுத் தவளையொன்றுவந்து தன்முதுகின் பேரிலே அந்தச் சிற்றெறும்பைவைத்துச் சுமந்துகொண்டுகடலிற்குள் மூழ்கினது-அப்படிமூழ்கிக் கொஞ்சநேரத்திற்குப்பிறகு சிற்றெறும்பு கடலைவிட்டுக் கரையிலேவந்தது-அப்போது சுலைமான் அலைகிஸ்ஸலா

மவர்கள் எறும்பைப்பார்த்து நீவந்ததும் கடற்குட்போய்த் திரும்பிவந்ததுமான இஸ்ஸவைவ யெனக்குத் தெரியும்படியாய்ச் சொல்லென்று கேட்க உடனேசுலேமான் அலைகிஸ்ஸலாத்தைப்பார்த்துச் சிற்றெறும்பு கடலிற்குள் கீழே முழுமட்டையான படலைக்கல்லொன்று கிடக்கிறது அந்தக்கல்லுக்குநடுவில் ஓர் புழுவிருக்கிறது - அப்புழுவினுடைய றிஸக்கை நாளொன்றுக்கு இரண்டுவிடுத்தம் சுமந்துகொண்டுபோய்க் கொடுக்கும்படி அல்லாகுத்தஆலா என்னைநியமித்து அதற்காகக் கடலிலே என்னைக் கொண்டுபோகத் தவளையுருவமாக ஒரு மலக்கையும் படைத்திருக்கிறான் - அந்தத் தவளை என்னைச் சுமந்துகொண்டு கடலிலே முழுகிப் படலைக்கல்லின் பேரில் விடும் - அப்போது கல்லிரண்டாகப் பிளந்து புழுவெளியாகும்-அப்படிப் புழுவெளியானவுடனே நான்சுமந்துகொண்டுபோன-றிஸக்கை அதற்குக்கொடுப்பேன் அதைப் புழுப்புசித்துமகிழ்ச்சியாகி என்னைப்படைத்துக் கடலிற்குள்ளேகிடக்கிற படலைக்கல்லி னடுவிலே குடியாக்கிவைத்து மறக்காமல் எனக்கு இவ்விதம் றிஸக்குக்கொடுக்கிற ஆண்டவனே யுன்னைத் துதிசெய்கிறேன்-இதுபோலே நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய உம்மத்தோர்களையும் - மறக்காமல் அவர்களுக்கும் றிஸக்குக்கொடுவென்று கேட்பதுடனே-அல்லாகுத்தஆலாபேரில் யாதாமொருவன் தவக்கல்ச்செய்வானாகில் அவனுக்கவனே போதுமானவனாயிருக்குகிறானென்று சுக்குர்செய்யும்-பின்னர்-தவளையானது என்னைச்சுமந்துகொண்டுவந்து கடற்கரையிலேவிடுமென்று சிற்றெறும்பு சொன்னது - இந்தப்படிக்கு றவுனக்கில் மஜாலிசென்னுங் கித்தாபிற் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஹிக்காயத்து.

இமாம் ஸாகிதென்பவர்கள் சொல்லியிருக்கிறதாவது யாதெனில்-தாங்கள் அல்லாகுத்தஆலா றஸக்குக்கொடுக்கிற கருமத்திலே நிர்ணயங்கொள்வதைநாடி வீட்டைவிட்டெழுந்து காட்டிற்குப்போய் ஓர் மலைப்பொதும்புக்குட்புகுந்து அல்லாகுத்தஆலா நமக்கு றிஸக்கு இவ்விடத்தில் எவ்விதமாகக்கொடுக்கிறான்-அதைப்பார்ப்போமென்று உறுதியுடனே யங்கு ஓர்மூலையில் இருந்தார்-அப்படியிருக்கும்போது மிகுமழை பேய்ந்தது-அந்த மழையினால் வழிப்போக்கர்களான காபிலாக் கூட்டத்தார் வழிதப்பி இருக்க இடந்தேடிவருகையில்-இமாம் ஸாகித

வர்களிருக்கிற மலேயைக்கண்டு அம்மலேப்பொதும்பில்நுழைந்த அவர்களேக்கண்டு ஒய் அல்லாவுடைய அடியாவேயென்று கூப்பிட்டார்கள் அதற்கு இமாம்ஸாஹிது ஜவாபுசொல்லாமலிருப்பதால் காபிலாக்கள் இவர்குளிராயிருப்பதினலே பேசக்கூடாமலிருக்கிறுரென்று அவ்விடத்தில் நெருப்பிட்டெரித்துப் பேசுவாரென்றுபார்த்தும் அவர்கள் பேசாமலிருப்பதைக்கண்டு இந்தபக்கீர் பசியினற் பேசாமலிருக்கிறுர் ஆதலாற் பசியாறினற்பேசுவாரென்று ஓர் சுபுறுவையெடுத்து விரித்து அதிலே தங்களிடத்திலிருந்த வஜீபன்களேப் பரத்தியவர்கள்முன்னிலே தின்னுமென்று வைத்தார்கள் - அப்போதும் அவர்கள் யாதொரு வஸ்துவையுமெடுத்துத் தின்னு திருப்பதைக்காபிலாக்கள்கண்டு இவரிவ்விடத்தில் நெடுநாளாக யாதொன்றும் தின்னமலிருப்பதால் இஃதென்னமோவென்று தீனையெடுத்துப் புசிக்கவில்லேயென்று எண்ணியவர்களுக்குமுன்பாய்ப் பாலேநன்றுக வற்றக்காய்ச்சி யதிலே சர்க்கரையைப்போட்டுப் பாலூஜாச்செய்து தின்னும்படிக்குக் கிட்டவைத்தார்கள், அதையுமவர்கள் திரும்பிப்பார்க்காம லிருந்தார்கள்-அதைக்கண்டு காபிலாக்கள் ஓகோ இவருடையபற்கள் உண்மையாகப்பூட்டிக் கிட்டப்பட்டிருக்கிறதென்றெண்ணி யவர்களில் இரண்டுபேரெழுந்து ஓர்கத்தியைக்கொண்டு இமாம்ஸாகிதவர்கள் வாயிதழைநீக்கிப் பல்லிற்கொடுத்துப் பிளந்து ஓர்பிடிப் பாலூஜாவை யூட்டினர்கள் - அப்போது இமாம்ஸாகிதவர்கள் சிரித்தார்கள் அதுகண்டு அவ்விரண்டுபேர்களு மிமாம்ஸாகிதவர்களேப்பார்த்து நீர் பயித்தியக்காரரென்றுர்கள் - அப்போது இமாம்ஸாகிதவர்கள் காபிலாக்களேப்பார்த்துநான்பயித்தியக்காரனல்ல ஆகிலும் எனக்கு றஸக்குக்கொடுக்கிறதில் என்னுடையறப்பைச் சோதிக்கஷாடி நானிவ்விதஞ்செய்தேன் - அப்படி நான்செய்தும் அல்லாகுத்தஆலா எனக்கு றஸக்குக்குறைவில்லாமற்கொடுத்தான் ஆனதால் எனக்கு மற்றஅடியார்களுக்கும் எவ்விடத்தில் எத்தலத்திலிருந்தாலும் குறைவில்லாமல் றஸக்குக் கொடுக்கிறவன்தானென்று நான் திட்டமாக அறிந்துகொண்டேனென்றுசொன்னர்கள் - அதுகேட்டுக்காபிலாக்களும் புதுமையானர்கள் - இப்படிக்கு றவ்னக்கில்மஜாலிசென்னும் கித்தாபில் வருகின்றன.

ஹிக்காயித்து.

தாஷியால் அலேகிஸ்ஸலாமவர்கள் பனியிசுறயீல் கூட்டத்தாருடைய பட்டணங்களில்நின்றுமோர்பட்டணத்திற்குட்புகுந்துபார்த்தார்

கள் அங்கே யொருவரையுங் காணாததினாலே தாங்கள் அந்தப்பட்டணத்தைவிட்டும் புறப்படாமல் ஒருமாளிகைவாசலுக்கு அருகாண்மையாய் நடந்துபோகச்சே அந்தமாளிகைக்கு உட்புறத்திலேநின்றும் உருத்தோற்றமில்லாமல் ஓர்சத்தமுண்டாயினது - யாதென்னில்-ஓய் துனியாலே நீர் இம்மாளிகைக்கு உட்பு குந்துபாரும்-அப்படி நீர் மாளிகைக்குட்புகுந்து பார்த்தீராகில் அங்கு இருக்குங் காரணங்களைக் கண்டு கொள்வீரென்றுசொல்லக்கேட்டு-உடனே தானியால் அலைகிஸ்ஸலாம் அந்தமாளிகைக் குட்புகுந்து பார்க்கும்போது அங்கே ஓர்கட்டிற்போட்டு அதிலே பட்டினாலே விரிப்புவிரித்து அவ்விரிப்பின்பேரில் ஒரு மையித்தைவைத்து அம்மையித்தின் தலைமாட்டில் ஓர்கித்தாபுஇருக்கவும்-மேலேயுருவிய வோர்வாளுமிருக்கக்கண்டு தாங்கள் கித்தாபையெடுத்து ஓதிப்பார்த்தீர்கள்-அந்தக்கித்தாபில் எழுதியிருக்கிறதுயாதென்னில்-நான் ஆதுடையமகன் ஷத்தாது-ஷாமிராச்சியத்தை யுடையவன் துனியாவில் நான் ஆயிரவருஷகாலம் உயிரோடிருந்து ஆயிரங் கன்னியழியாதபெண்களைக் கலியாணஞ்செய்து ஆயிரம்பிள்ளைகளைப் பெற்று ஆயிரம்பட்டணத்தை யுண்டாக்கி- ஆயிரம்பட்டணத்தின்பேரிலேசண்டைசெய்துஅவைகளைப்பிடித்துஆயிரம்புதையல்களைப்புதைத்துவைத்து மகாமகிழ்ச்சியுடனே வாழ்ந்திருக்குங் காலத்திலே

பஞ்சகாலம்வந்து எங்களைப்பிடித்தது எவ்விதமெனில்-நாங்கள் ஓர்மரக்கால்அளவு மணிக்கோதும்பைக்கு ஆயிரமரக்காலளவு தங்கங்கொடுத்து வாங்கித்தின்னும்படியான பஞ்சகாலமா யிருந்தது-பின்னர் அப்படியும் வாங்கித்தின்னவுங் கோதும்பைமுதலிய மற்றும் யாதாமொருவஸ்துவுங் கிடைக்காமற் பசியினால் அலைந்துலைந்து வருந்தப்பட்டு நாங்கள் ஹலாக்காகிப்போயினோம்.

ஆகலால் துனியாவையுடையவர்களே நீங்களும் நிஸக்குத்தேடுகிறதிலே யுங்களுடைய நபுசை இலேசாக்கி வைத்துக்கொள்ளுகிறதேதவிர அதிலேமூழ்கி இபாதத்தைவிட்டுவிட்டு வீண்பிராக்காக இருக்கவேண்டாம்-ஆனால்-துனியாவில நான் சம்பாதித்துவைத்த ஆஸ்திபாஸ்தி-பணங்காசு-பெண்டுபிள்ளை-மண்டுமனை-தண்டிகை முதலியவைகளுக்கதிகம் நீங்கள் தேடிக்கொள்ளமாட்டீர்கள்-அப்படிவல்லமையாகத் தேடிவைத்திருந்தாலும் இல்லாமையாகிவிடும்- ஆகலால் பணங்காசுகளில்மிதந்ததைத் தெண்டித்துச் சேகரஞ்செய்துகொள்கிறவனே இறந்

துபோனவனுக்குப் பிற்காலம்-அவனுடைய டணங்காசுகளெங்கே இ
ராஜரீகமெங்கே-மண்டுமனைகளெங்கே-புதைத்துவைத்த புதையலெங்
கே-போச்சுது பார்க்குமிடத்திற் பாவமே சுற்றிக்கொண்டதா யிருக்கிற
தென்று அந்தக்கித்தாபி லெழுதியிருப்பதையோதித்தெரிந்துகொண்டு
தானியால் நபிவந்தார்கள்.

ஆதலால் மூமினாகிய உடற்பிறப்புகளே அறிவென்று சொல்
லுகின்றகண்களால் இந்த ஹிக்காயத்தி லெழுதப்பட்டிருக்கிற சங்கதி
களை நன்றாகக்கூர்க்கப்பார்த்துணர்ந்து கல்பிற்றரிபடுத்தி மாயஇபுலீசு
வலைக்குள்ளே சிக்கிக்கொள்ளாமல் நீங்களும் சிறப்பானகுறுஆனையோ
திப் பறுலு ஷறுத்துமுதலிய குத்துபுக்கள் மசலாக்களைப்படித்து நேர்
வழியில்நடப்பதுடனே உங்கள்பிள்ளைகளையும் குறுஆனை யோதவைத்
து நல்லஅமலில்நடக்கும்படி செய்துகொள்வீர்களாக.

இந்தவிதம் றஸக்கின்பாங்கை யுண்டாக்கிவைத்திருக்கிற அல்லா
குத்தஆலா எந்தவிதமும் அவனடியார்களுக்குக் குறைவில்லாமல் றி
ஸக்குக்கொடுப்பானென்கிற உறுதியை மனத்தில்வைக்காமல் பொரு
ளைப் பூமியைத்தேடிவைக்க ஆசையாகி- எவர்களபேரிலும்இல்முபடிக்
கிறது பறுலாஇருக்கக் குறுஆனையோதி இல்மைத்தெளியாமல் பூமி
யில் இந்தப்பாஷைபடித்தால் நன்றாகச் சம்பாதித்துத் தொப்பைபெ
ருக்கத் தின்னலாமென்ற ஹவாநபுசினாலே அல்லாறசூல்சொன்னசொ
ல்லையு மறந்துவிட்டு இங்கிலீசுதமிழ்முதலிய பாஷைகளைத் தாங்களும்
படித்துக்கொண்டு மனப்பிறிபத்துடனே தங்கள்பிள்ளைகளையும் படிக்க
வைத்து அதின்பேரிலே அதிகஆசைவைக்கிறதாயிருந்து- மகாவலுப்ப
முஞ் சிறப்புமான நம்முடைய புறுக்கான்வேதத்துடைய இல்மைப்
பரதேசியாக விட்டுவிட்டு இபாதத்துஞ் செய்யாமற் பரக்கப்பரக்கப்
பார்த்துத் துனியாவுக்கே தொண்டு ஊழியஞ்செய்து அதற்கான படிப்
புமுதலிய தொழில்களைச்செய்து காலத்தை வீணாகப்போக்கினால்-நீசு
ருயில் அலைகிஸ்ஸலாமென்கிற ப்லியிருந்தாப்போலிருந்துவந்துவிழுந்
து பிடித்து இழுத்து முறித்துத் தகர்த்து உயிர்வாங்கிற ஸக்கறுத்து
வேளையிலே இந்த இங்கிலீசுமுதலிய படிப்புத்தொழில்கள் முன்னிற்
குமா அல்லது குறுஆன் கலிமாத்தொழுகை முன்னிற்குமா இவைக
ளைத்தெளிந்துபாருங்கள் அஷறுபானவர்களே அப்படிப்பார்த்து நல்ல

அமல்களைச்செய்து அல்லாகுத்தஆலாவுடைய றகுமத்தைப் பெற்றுக்கொள்வீர்களாக - ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

தன்பிள்ளைகளுக்குக் குறுஆன்படிப்பித்துவைக்கிற
தாய்தகப்பன்மாா்களுக்குக் கிடைக்கிற
வரிசையின்பயான் முற்றிற்று.

குறுஆனோதுகிறவர்க்குக்கிடைக்கிற
வரிசையின்பயான்.

——0:0——

ஹ தீது.

நம்முடைய நாயகமுகம்மது நபி சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாயினால் யாதாமொருவன் குறுஆனையோதி முடிப்பானேயாகில்-அவன்பேரிலே (சூயித) மலக்குகள் பிழைபொறுக்கத் தேடுவார்களென்று திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

சுபியானுதவுரீ றகுமகுல்லா அவர்கள் சொல்லியிருக்கிறதாவது-யாதென்னில்-ஒருமனிதன் குறுஆனை ஓதினால்-அவனுடைய புருவமத்தியில் ஒருமலக்கு முத்தமிடுவாரென்று சொல்லியிருக்கிறார்கள்.

ஹதீது.

நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் திருவாயினால் யாதாமொருவன் குறுஆனையோதினால் அந்தக்குறுஆன் கியாமநாளையில் அவனிடத்தில் மெத்தவும் அழகானசூறத்தென்னும் உருவமாக வந்து நீரென்னை யறிவீராவென்று கேட்கும் - அப்போது அவன் நீர் யாரென்றுகேட்பான் அதற்குக் குறுஆன் அவனைப்பார்த்து நீர் துனியாவில் என்னையுவந்து உலுவுடனே சங்கையாக இரவும்பகலும் விழித்திருந்துஓதினீரே அந்தக்குறுஆனாகஇருக்குமென்றுசொல்லும் - அப்போது அவன் ஆச்சரியமாக நீகுறுஆனாவென்றுகேட்பான் அதற்குக் குறுஆன் ஆம் நான் குறுஆன்தானென்று சொல்லும்.

பின்பு அவனை அல்லாகுத்தஆலாவுடைய சமுகத்திற் கொண்டுபோகப்பட்டு அவனுடையவலதுகையில் ஸாலிகானஅடியானென்றும் இடதுகையில் ஊழூழிகாலம் சுவர்க்கத்திற் றரிபட்டிருக்கும்படியான கடிதத்தையுங் கொடுத்துத் தலையிலே கிரீடமுந் தரிப்பித்து அவ

னுடைய தாய்தகப்பன்மார்கட்குத் - தனியாவில் விலைமதிக்கக்கூடாத இரண்டுஉடுமானமும் அணையக்கொடுத்து அனுப்பப்படும்-அப்போது உடுமானம் பெற்றுக்கொண்டவர்கள் இந்தவுடை: நமக்கு எவ்விதங் கிடைத்தது நம்முடைய அமல்கள் இவ்வளவுதறஜாவனையில் எற்றவில்லையேயென்று சொல்லுவார்கள்.

அதுகேட்டு அங்குள்ள மலக்குகள் அவர்களைப் பார்த்து உங்களுடையபிள்ளைகள் குறுஆன் ஓதினவரிசையினாலே இவ்வளவுதறஜாவுங்கொடுக்கப்பட்டதென்று சொல்லுவார்கள்-இன்னுங்குறுஆனை நின்று தொழும்போது ஓதினல் அதின் ஹறுபென்னும் எழுத்து-க-க்கு-நூறு நன்மைகிடைக்கும்-இருந்து தொழும்போது ஓதினல் - ஹறுபு-க-க்கு-அன்பது நன்மைகிடைக்கும்-அப்படித்தொழும் நேரமல்லாமல் மற்றநேரத்திலேயுலுவுடன்இருந்தோதினல்-இருபத்தைந்துநன்மைகிடைக்கும் - உலுவில்லாமல் ஓதினல்-பத்துநன்மைகிடைக்கும் - இன்னும் இரவுகால முழுமையும் விழித்திருந்து வணங்கிறதைக்காணக் குறுஆன்ஓதுகிறது ரொம்பவும் வரிசையர்யிருக்குமென்று திருவுளமானார்கள் - இந்தப்படிக்கு-கவானத்தில்அசுரு முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

இன்னும் நபிநாயகம் தங்கள் அசுகாபிமார்களைப்பார்த்து நீங்கள் குறுஆனையோதுங்கள்-அதுகியாமத்நாளையில் உங்களுக்கு மன்றுட்டஞ் செய்வதுந்தவிர நீங்கள் கேட்டபிரகாரங் கொடுக்குமென்றுந் திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

அபூசுறு றகுமகுல்லாஅவர்கள்சொல்லியிருக்கிறார்கள்யாதென்னில் - தாங்கள் ஓர்நாள கபறஸ்தானிடத்திற்போய்க், கபூர்வெட்டும்போது அதில்நின்றும் ஓர்கபூர்பிளந்து அதில்ஓர்வாலிபன் மிகுந்தஅழகாய் நல்லவுடையுடுத்திக்கொண்டு வாசனை பரிமளிக்கத் தன்மடியிலே குறுஆனைவைத்து ஓதிக்கொண்டு இருக்கக்கண்டேன்-அவர் என்னைப் பார்த்து கியாமமுடிந்ததாவென்று கேட்டார்- அதற்குநான் இல்லையென்றுசொன்னேன்-பிறகு அவர் கபூறை மூடிப்போடுமென்று சொன்னார் உடனே நான் கபூறை யவர் சொற்போலே மூடிப்போட்டேனென்று சொல்லியிருக்கிறார்கள்.

ஹிக்காயத்து.

உமறிபுனுல் மைமூன் றகுமதுல்லா அவர்கள் சொல்லியிருக்கிறதாவது யாதென்னில் - யாதாமொருவன் பஜிர்தொழுததின் பின்னர்-முஸ்ஸகிபைத்திறந்துகுறுஆனுடையஆயத்துகளில்நூறுஆயத்து ஓதுவானேயாகில்-துனியாவிலுள்ளவர்கள்செய்கிற அமல்போலுள்ள அமல்களை அல்லாகுத்தஆலா அவனுக்குக் கீர்த்தியாய்க் கொடுப்பான் - இன்னும் குறுஆனுடையவரிசையைப்பற்றி ஹதீதுகள் எழுதுகிறதாயிருந்தால் எழுதிமுடியாது-ஆனதால் என்னுடன்பிறந்தான்மார்களே நீங்கள் அறிவைக்கொண்டும் நன்றாக மேலெழுதப்பட்டிருக்கிற ஹதீது முதலானவைகளைக் கூர்க்கப்பார்த்து இபுலீசுடைய மாயத்தில் அகப்படாமல் அல்லாகுத்தஆலாவுக்குப் பயந்து குறுஆனையோதி அதிற்சொல்லியபடி நல்லஅமலைச் செய்துகொள்வீர்களாக-ஆமீன்.

குறுஆனோதுகிறவருக்குக் கிடைக்கிற
வரிசையின்பயான் - முற்றிற்று.

பிசுமிலுடைய வரிசையின்பயான்.

ஹதீது.

நம்முடைய நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள் யாதென்னில்(பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்) என்னுந் திருநாமத்தை அல்லாகுத்தஆலா இறக்கியபோது அதினுடனே ஆயிரமலாயிக்கத்துமார்களிறங்கினார்கள்-வானலோகத்தில்வசிக்குமலாயிக்கத்துமார்கள் யாவரும் சந்தோஷமாயினார்கள்-அருஷும் அசைந்து துளும்பியது-ஜின்களெல்லாம் அடித்துமோதி முகங்குப்புறவிழுந்ததுகள்-வானங்களும் அசைந்தன-இன்னுந்-திருமக்கமாநகரத்தாரும் அந்நகரத்திலுள்ள வஸ்துகள்யாவுங் கேட்கும்படியாக மலைகளெல்லாந் தசுபீகுசெய்தன-இக்காரணங்களைக்கண்டு மக்கநகரார்களிற் சிலர் முகம்மதுமலைகளை ஸிஹுர்செய்துபோட்டார்-அதிலேதான் இவ்விதமானதென்றுசொன்னார்கள்-அப்போது அல்லாகுத்தஆலா மக்கநகரத்தார்சொன்ன குறைவுக்காக அவர்கள்பேரிலே யிருளாகிறவகைக்குப் புகையையிறக்கிவைத்தான்-அதுகண்டவர்கள் பயந்து வருந்தினதினாலே அவ்விருளையும்-புகையையும் அல்லாகுத்தஆலா நீக்கினான்.

ஆகலால் (பிசுமில்லை) யாதாமொருவன் ஓதுவானாகில் அதிலுள்ள எழுத்துகளில் ஒவ்வோரெழுத்துக்கு நான்காயிரம்நன்மை அல்லாகுத்த்ஆலா எழுதுவான்-இன்னும் அவனில்நின்றும் நான்காயிரம்பாவத்தை யழித்துப்போடுவான்-இன்னும் அவனுக்கு நான்காயிரந் தறஜாக்களை யுயர்த்திவைப்பானென்றும் நபிநாயகந் திருவுளமானார்கள்.

பிசுமிலுடைய மஹறனை.

அல்லாகுத்த ஆலாவுடைய திருநாமங்கொண்டு நான் இதைத்துடக்குகிறேன்-துனியாவில் நல்லார்-பொல்லார் எல்லாருக்குங் கிருபைசெய்கிறவன்-ஆகிறத்தில்-மூமினானவர்கட்குத் தனதாகக் கிருபைசெய்கிறவன்.

இன்னும் நபிநாயகந் திருவுளமானார்கள்-யாதெனில்- மரங்களையெல்லாம் கலமென்னு மெழுதுகோலாகச்செய்து - கடல்கள் முதலிய இடங்களிலுள்ள தண்ணீரையெல்லாம் சாயியென்னு மையாக்கி மனிதர்கள்-ஜின்கள்-அடங்கலுங்கூடிக் கித்தாபுகள் சேகரஞ்செய்து அவைகளில் (பிசுமிலுடைய) மஹறனை இருபதுலட்சம்வருஷகாலம்எழுதினாலும்-அந்தமஹறனாவிற் பத்திலோர்பாக மெழுதிமுடிக்கச் சக்திபெறமாட்டார்கள்.

இன்னும் (பிசுமிலாகிறது) குறஆனுக்குத் திறவுகோலாகவும்-லெவ்குல்மகுபூலுப் பலகையில்-கலம்எழுதினஎழுத்துகளில் முந்தினதாகவும்- ஆகம் அலைகிஸ்ஸலாமுக்கு இறக்கப்பட்டவைகளுக்கெல்லா முந்தினதாகவும் இருக்குமென்றும்.

இன்னும் (பிசுமிலுடனே) லாகவுல் வலாக்குவ்வத்த இல்லாபில்லாகில் அலீயுல் அலீமென்று-யாதாமொருவன்சொல்லுவானாகில்-அவனைவிட்டும்-பலாய்கள்-விசனக்-துக்கம் - சஞ்சலம்-மற்ற வருத்தங்கள் முதலிய எழுபதுபலாய்கள் நீங்கிவிடும்.

இன்னும் சொர்க்கலோகத்தில்-ஜெபல்றகுமானென்னும் பெயரையுடைய ஓர்மலையிருக்கிறது - அந்தமலையில் கசறுல் இகுலாமென்னும் பெயரையுடைய ஓர்மாளிகையிருக்கிறது - அந்தமாளிகைக்குள் தைத்துல்ஜலாலென்னும் பெயரையுடைய ஓர் அறைவீடிருக்கிறது-அவ்வறைவீட்டைப்பொதிந்த மாளிகைக்குப் பன்னீராயிரம் நிலைவீட்டிருக்கின்றன- அந்நிலையின் மேற்படிதொடுத்துக் கீழ்ப்படிவரையில் - ஐந்நூறு

வருஷதொலைதூரமுண்டும்-அவ்வாசல்களை (பிசுமில்லா கிற்றகுமானிற்றகிமென்று) சொன்னவனைத்தவிர மற்றவர்களாற் றிறக்கக்கூடாதென்று நபிநாயகஞ் சொன்னார்கள்.

இன்னும் நபிநாயகமவர்கள் திருவுளமானார்கள்-நான் மிகுறாஜுக்குப்போன இரவையிலே எனக்குச் சுவர்க்கலோக முழுமையுங் காண்பிக்கப்பட்டது-அப்போது நான் சுவர்க்கத்தில் நான்கு ஆறுகளைக் கண்டேன்-அவ்வாறுகள், தண்ணீராறென்று-பாலாறென்று-தேனாறென்று-மதுவாறென்றாக இருக்கக்கண்டு நான் ஜிபுரீல் அலைகிஸ்ஸலாத்தைப்பார்த்து-யாஜிபுரீலே இந்த நான்குஆறுமெந்த இடத்திலிருந்து எந்தஇடத்திற்குப் போகிறதென்றுகேட்டேன்-அதற்குச் சிபுரீல்அலைகிஸ்ஸலாம் என்னைப்பார்த்து - அல்லாவுடையறசூலே இந்த ஆறுகள் இன்னஇடத்திலிருந்து வருகிறதென்பது எனக்குத்தெரியாது ஆனால் போறதுகவுலல்க்கவுதறளவிலாயிருக்கும்-வருகிறதலத்தைக்குறித்தும் அல்லாகுத்தஆலாவிடத்திற் கேளுமென்றார்-அதுபோலே நான் அல்லாகுத்தஆலா இடத்திற் கேட்டேன்-அப்போது ஒருமலக்கானவர் என்முகதாவில்வந்துசலாம்சொல்லி-முகம்மதேயும்முடைய இரண்டுகண்ணையு மூடிவிழியுமென்றுசொன்னார்.

அதுபோலே நான் கண்களை மூடிவிழித்தபோது ஓர் மரத்தடியிலே யிருப்பதாயினேன்-அவ்விடத்தில் வெளுமையான ஓர்முத்துக்குப்பாவைக்கண்டேன் அந்தகுப்பாவுக்குப் பசுமைநிறம் பொருந்திய மாணிக்கத்தினால் வாசலிருக்கிறது - அந்தவாசலுக்குச் சிவந்த தங்கத்தினாற் பூட்டிட்டிருக்கிறது-இவ்விதமான அந்தகுப்பாவிலே இந்தத்துனியாவிலுண்டான மனிதர்கள் ஜின்கள்முதலிய எல்லாத்தையுங் கொண்டுபோய்வைத்துப் பார்த்தால் அவைகளெல்லா மலைமேலிருக்கிற ஓர் பறவையைப்போலா யிருக்கும்-அல்லது கடலிலேயெறிந்த ஓர் பாதம்கொட்டையைப்போலா யிருக்குமேதவிர வேறில்லை-இவ்விதமான குப்பாவின்கீழிருந்து மேற்சொன்ன நான்குஆறு மோடிவரக்கண்டு அவ்விடத்தைவிட்டுந் திரும்பிவரநினைத்தேன்.

அப்போது அந்தமலக்கானவர் என்னைப்பார்த்து ஏன்முகம்மதே நீரிந்த குப்பாவுக்குட் புகுந்து பார்க்கவில்லையென்றுகேட்டார்-அதற்கு நான் அவரைப்பார்த்து இந்தக் குப்பாவுக்குப் பூட்டிட் டிருக்கிறதே அதைத்திறக்கத் திறவுகோலில்லையேயென்று சொன்னதற்கு அவரொன்

னைப்பார்த்து முகம்மதே உம்முடையகையிற் திறவுகோலிருக்கிறதென்றுசொன்னார்-அப்போது நான் அவரைப்பார்த்து என்கையிற் திறவுகோல் எங்கேயிருக்கிறதென்று கேட்டேன்.

அதற்கவர்-என்னைப்பார்த்து முகம்மதே அதின் திறவுகோலாகிறது (பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீமென்னுஞ்) திருநாமமா யிருக்குமென்று சொன்னார்-உடனே நான் அந்தப் பூட்டின் அருகிலே அடுத்து நின்றுகொண்டு(பிசுமில்லே யோதிலவுடனே)பூட்டுங் கதவுந் திறந்துவிட்டது-அப்போது நான் குப்பாவுக்குட் புகுந்துபார்த்தேன்-அந்தகுப்பாவுக்கு நான்குதூண்களுண்டாயிருக்கிறது அந்தநான்குதூண்களில்நின்றும்-நான்கு ஆறுகள்ஓடக்கண்டு குப்பாவைவிட்டும் வெளியில்வர நாடினேன்- அப்போது அந்த மலக்கானவர் என்னைப்பார்த்து - முகம்மதே நீர் குப்பாவைப்பார்த்தீராவென்று கேட்டதற்கு நான்பார்த்தேனென்றுசொன்னேன்-அதற்கவர் முகம்மதே நீரின்னும் பாருமென்று சொன்னார்-அதுகேட்டுநான் மறுபடியும் குப்பாவைப்பார்க்கும்போது அந்தகுப்பாவிற்குள்ளிருக்கிற தூண்கள் நான்கிலும் (பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீமென்னுஞ்) திருநாமத்தை எழுதியிருக்கிறது - அந்த (பிசுமில்என்கிற) மீமில்நின்றும் - தண்ணீராறும் - அல்லாகுஎன்கிற ஹேயில்நின்றும்-பாலாறும்-றகுமானென்கிற மீமில்நின்றும் தேனாறுமாக ஓடுகின்றன - அதுகண்டு நான் இந்த நான்குஆறுகளுக்கும் அடிமூடாகிறது (பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீமாக) இருக்கிறதென்று அறிந்துகொண்டேன்.

அப்போது அல்லாகுத்தஆலா என்னை முகம்மதேயென்று கூப்பிட்டுச்சொன்னதாவது யாதென்னில்-முகம்மதே உம்முடைய உம்மத்தில் நின்றும் யாதாமொருவன்இந்த இசுமுகனைக்கொண்டும் என்னைநினைத்துக் கலப்பறுதலான கல்போடும் (பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீமென்று)சொல்வானாகில் இந்த நான்காற்றிலுள்ளவைகளில் நின்றும் அவனுக்குக் குடிப்பாட்டுவேனென்று சொன்னானென்று நபிநாயகக் திருவுளமானார்கள் - இந்தப்படிக்குத்தக்காயிக்குல்-அக்குபார்-தவுசீர்-றாகில்பயான் அறுபகீன்-நவவிமுதலான கித்தாபுகளில் வருகின்றன.

ஹிக்காயத்து.

ஆரிபீன்களிற் சிலபேர்கள் முந்தின வேதங்களான - தௌறுத்து சபூர்-இஞ்சீல்-ஆகியஇம்மூன்றும்-தூறுசுகுபுகளும்-குறுஆன்சரீபிலே

யடங்கியிருக்கின்றன-அந்த குறுஆன்முழுமையும் அல்கம்தென்னும் சூறத்திற் பொதிந்திருக்கின்றன-அவ் வல்கம்தென்னும் சூறு - பிசுமி ல்லின்பேரிற் பொதிந்திருக்கின்றனவென்று சொல்லியிருக்கின்றார்கள்.

ஹ தீ து.

நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லந்திருவுளமாயிருக் கிறார்கள்-யாதென்னில்-அல்லாகுத்த ஆலாவுக்கு - மூவாயிரந் திருநாம முண்டாயிருக்கிறது-அதில்-ஆயிரந் திருநாமங்களை மலாயிக்கத்துமார் கள் அறிந்திருக்குகிறார்கள்-இன்னும் ஆயிரந் திருநாமங்களை நபிமார் கள் அறிந்திருக்குகிறார்கள்.

இன்னுந் தௌறாத்துவேதத்தில்-௩௱-சபூர்வேதத்தில்-௩௱-இன் சீல்வேதத்தில்-௩௱-குறுஆன் சரீபில்-௯௯-வெளியாயிருக்கிறது-ஆகத் தொளாயிரத்தித் தொண்ணூற்றொன்பது திருநாமங்க ளிருக்கின்றன இவைகள்போகக் குறுஆனில் ஓர்திருநாமத்தை அல்லாகுத்தஆலா மறைத்துவைத்திருக்கிறான்-அந்தத்திருநாமத்தின்பெயர்-இசுமுல்- அகு லமென்று சொல்லப்படும்-இந்தஇசுமுல்அகுலத்தை நபிமார்களறிந் தி ருக்கிறார்களேதவிர மற்றவர்கள் அறியவேயில்லை.

மேற்சொல்லிய மூவாயிரந் திருநாமங்களின் பொருளடங்கலும் (பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீமென்னு மூன்றுஇசுமுகளிற்பொதிந்தி ருக்கின்றன-ஆதலால் யாதாமொருவன் பிசுமில்முழுமையும் ஓதுவா னாகில் அந்த மூவாயிரம் இசுமுகளைக்கொண்டும் - அல்லாகுத்தஆலா வைத் திக்கிர்செய்தவனைப்போ லாகுவான்.

இன்னும் (பிசுமிலுடைய) எழுத்துகள்-௰௯ - ஜகன்னமென்னும் நரகத்திற்கு நேமிக்கப்பட்ட ஸபானியாக்கள்-௰௯-பேர்கள் ஆதலால் யாதாமொருவன் (பிசுமில்லாவை) அதிகமாகவோதிவருவானாகில் அந்த பறக்கத்தினால்-நரகத்தின் ஸபானியாக்கள் வேதனையைவிட்டும் அல்லா குத்தஆலா காத்துக்கொள்வானென்று நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாகியிருக்கிறார்கள்.

ஹிக்காயத்து.

இபுறாகீம் அலைகிஸ்ஸலாமவர்களை நமுறூது நெருப்புக்கிடங்கி லே தள்ளிவிட்டபோது-அவனுடைய வோர்சிறியபெண்பிள்ளையானது தன்தகப்பனாகியநமுறூதைப்பார்த்து-என்தகப்பனை நான்நெருப்புக்கி டங்கிற்போடப்பட்ட இபுறாகீமைப் பார்க்குகிறதற்குப்போகவுத்தரவு

தாருமென்று கேட்டபோது-அப்படியே பிள்ளையுடையமனம்போலே நமுறூது உத்திரவுகொடுத்தான்.

உடனே, அந்தப்பெண்பிள்ளை நெருப்புக்கிடங்கண்டையிற்போய் இபுறாகீம் அலைகிஸ்ஸலாமவர்களைப் பார்த்தபோது அவர்கள் பலவித பச்சைமரங்களடர்ந்து தென்றற்காற்றுவீசும் பூங்காவிலேயிருப்பது போலே சலாமத்தாக இருக்கக்கண்டு-இபுறாகீம் அலைகிஸ்ஸலாத்தை அந்தச் சிறுபெண்பிள்ளை பார்த்து- இபுறாகீமே உம்மை நெருப்புத் தீய்க்காமல் அக்கினிக்குண்டத்தில் சௌக்கியமாயிருக்கின்ற காரணமென்னவென்று கேட்டதற்கு அவர்கள் அப்பிள்ளையைப்பார்த்து ஒருவனுடைய நாவில் (பிசுமில்லிர், இற்றகுமா னிற்றகீமென்னும்) திருநாமமும் மனத்தில் மஹூரிபாவும் உறுதியாகஇருக்குமாகில் அவனை நெருப்புத்தீண்டிக் கரித்துப்போடாதென்று சொன்னார்கள்.

அதுகேட்டு அந்தச்சிறிய பெண்பிள்ளை இபுறாகீம் அலைகிஸ்ஸலாத்தைப்பார்த்து-இபுறாகீமே நான் உம்மிடத்தில்வர ஆசையாயிருக்கிறேன் எப்படி வருகிறதென்று கேட்டதற்கு- இபுறாகீம் அலைகிஸ்ஸலாம் அந்தச் சிறுபிள்ளையைப்பார்த்து நீ-லாஇலாஹ இல்லல்லாகு இபுறாகீம் கலீலுல்லாகியென்று சொல்லிக்கொண்டு வாவென்றார்கள்-அதுபோலே அந்தப்பிள்ளை சொல்லிக்கொண்டு இபுறாகீம் அலைகிஸ்ஸலாமவர்களிடத்திலே சலாமத்தாகப்போய்ச்சேர்ந்து சந்தோஷமாயிருந்து பின்னர் நெருப்புக்குண்டத்திலிருக்கிற இபுறாகீம் அலைகிஸ்ஸலாத்தைவிட்டும் வெளியேவந்து - தன் தகப்பனாகிய நமுறூதிடத்திற்போய்த் தான் இபுறாகீம் அலைகிஸ்ஸலாத்தைக்கண்டு வந்தசமாசாரத்தைச்சொல்லக்கேட்டு அந்தநமுறூது தன்பிள்ளையைப்பார்த்து என்னருமையான மகளே நீயந்த இபுறாகீமுடைய மார்க்கத்தை விட்டுவிடென்றுசொன்னான்.

அதுகேட்டு அந்தச்சிறுபிள்ளை தன்தகப்பனாகிய நமுறூதைப் பார்த்து நானந்தமார்க்கத்தைவிட்டு மீளமாட்டேனென்று பிடிப்பாகச் சொன்னதுகேட்டு நமுறூது மிகுந்த கோபமுண்டாகித் தான்பெற்ற பிள்ளையென்றும் பாராமல் கொடூரமான தண்டனையாகத் தண்டித்து வேதனைப்படுத்தினான்.

அப்போது அல்லாகுத்தஆலா- ஜிபுரீல் அலைகிஸ்ஸலாத்தைப்பார்த்து ஜிபுரீலே நீர் அந்தநமுறூது வேதனைசெய்கிற சிறுபிள்ளையையெடுத்

துக் கொள்ளுமென் றேவினன் - உடனே ஜிபுரீல் அலைகிஸ்ஸலாம் அவர்கள் பூமியில்வந்து அந்தப்பிள்ளையை யெடுத்துக்கொண்டுபோய் இபுருகீம் அலைகிஸ்ஸலாமிடத்தில் வைத்தார்கள்- பின்னர்- அந்தப் பிள்ளையை இபுருகீம்அலைகிஸ்ஸலாமவர்கள் தங்கள்மகனுக்கு நிக்காகுசெய்துகொடுத்தார்கள்- அந்தப்பெண் பிள்ளைவயிற்றில் இருபது நபிமார்கள் பிறந்தார்கள்-இந்தப்படிக்குதுசு[illegible]த்தில்மஜாலிசென்னுங்கித்தாபில் வருகின்றன.

ஆதலால் மூமீனாகியஉடன்பிறந்தான்மார்களே உங்களுடைய மேலானபுத்தியைக்கொண்டுங் கவனித்துப்பாருங்கள்-இபுருகீம் அலைகிஸ்ஸலாத்திற்குப் பகைஞனான நமூறூதுடையமகளான சிறிய வோர்பிள்ளைகேட்ட கேள்விக்கு இபுருகீம்நபியவர்கள்(பிசுமிலைக்கொண்டும்) அறிவித்ததின்பேரில் அந்தப்பெண்பிள்ளைக்குக்கிடைத்த தறஜாவை யாவராலே சொல்லிமுடியும் அப்பேர்ப்பட்ட(பிசுமில் அல்கம்துக்கு) அடிமூடாயிருப்பதால் அல்கம்துடனேகுறுஆனையோதி இல்முகளைப்படித்து வணக்கத்துடனே(பிசுமிலைக்கொண்டும்) அல்லாகுத்த ஆலாவிடத்தில் றகுமத்துங் கிருபையும் பெற்றுக்கொள்வீர்கள. க-ஆமீன்.

ஹிக்காயத்து.

ஹாபிலைக் காபில் ஹசதுவைத்து அவருடைய நித்திரையிலே மண்டையில், தகுதியான கல்லைத்தூக்கிப்போட்டுஉடைத்து மவுத்தாக்கினன்-இவ்விதம்நடந்ததை ஆதம் அலைகிஸ்ஸலாம் அறிந்து தங்கள் மனத்தில் காபில்செய்த குலையைநினைத்துப் பெரியவருத்தமாக இருக்கும்போது- அல்லாகுத்தஆலா ஆதம் அலைகிஸ்ஸலாமுக்கு வகியறிவித்தான்-ஓய்ஆதமே உமக்குத்திடனாகப் பூமியை வழிப்படுத்திவைத்தேனென்றான்.

அதுகேட்டு ஆதம் அலைகிஸ்ஸலாம் பூமியைப்பார்த்து நீ அந்தக்காபிலைப்பிடித்துக்கொள்ளென்றுஏவினார்கள்-அதுபோலே பூமி காபிலைப் பிடித்துக்கொள்ள நாடி யாரம்பித்தபோது-காபில்தெரிந்து பூமியைப் பார்த்து (பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீமுடைய) உண்மையின்பேரில் ஆணையாக நீயென்னை ஹலாக்காக்கிப்போடாதேயென்றுசொன்னான்- அப்போது அல்லாகுத்தஆலா பூமியைப்பார்த்து பூமியே அந்தக்காபில் என்னுடைய பிசுமிலைக்கொண்டு சத்தியமிட்டபடியால் அவனைப் பிடியாதேயென்று சொன்னான்-அதுகேட்டுப் பூமி காபிலைப்பிடியாமல்

விட்டுவிட்டது-இந்தப்படிக்கு நசுஹத்தில் மஜாலிசுமுதலிய கித்தாபுகளில் வருகின்றன.

ஹிக்காயத்து

ஈசா அலைகிஸ்ஸலாமவர்கள் ஓர்நாள்காட்டுவழியாகப்பெரியபாம்பை வேட்டையாடுகிற வேட்டைக்காரனுக் கருகாமையாக நடந்துபோகும்போது அவன்வேட்டையாடத் துணிந் தடுக்கிற பாம்பானது-ஈசாநபியைப்பார்த்து அல்லாவுடைய நபியே என்னிடத்தில் உயிரைக்கொல்லும்படியான நஞ்சிருக்கிறது-ஆதலால் என்னைப் பிடிக்காமல் விட்டுவிட்டுப்போகும்படிக்கு அந்தவேட்டைக்காரனுக்கு நீங்கள்சொல்லுங்களென்று சொன்னது - அதுகேட்டு ஈசாநபியவர்கள் வேட்டைக்காரனைப்பார்த்து - ஓய் மனிதனே நீயிந்தப் பாம்பைப்பிடிக்காமல் விட்டுவிடென்று விலக்கினார்கள்.

அப்போது அந்த வேட்டைக்காரன் கொஞ்சம் விலகிப் பின்னிட்டுநின்று - ஈசாநபியவர்கள் சிலதூரம் போனதின் பின்னர் வந்து அந்தப் பெரியபாம்பையே வேட்டையாட முடிகிப் பிடித்துக்கொண்டான்-பின்னர்-ஈசாநபியவர்கள் போனஇடத்தைவிட்டுத் திரும்பவும்-அப்பாதையாக வரும்போது அந்தவேட்டைக்காரன் பாம்பைப்பிடித்து வைத்துக்கொண்டு இருக்கக்கண்டு பாம்பின்கிட்ட முடுகினார்கள்-அப்போது பாம்பானது ஈசாநபியவர்களைக் காண்கிறதற்கு வெட்கித்துத் தன்தலையை வாலுக்குக்கீழே சுருட்டிவைத்துக்கொண்டு ஈசாநபியவர்களை அல்லாவுடையநபியேயென்று கூப்பிட்டு-இந்தவேட்டைக்காரன் அவனுடைபெலத்தைக்கொண்டென்னை மிகைத்துப் பிடித்துக்கொண்டவனல்லை ஆனால் (பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீமென்னும்) சொல்லைக்கொண்டும் என்னை மிகைத்துப் பிடித்துக்கொண்டான்-அதனாலே என்னுடையநஞ்சும் நீங்கிவிட்டது நானும் அகப்பட்டுக்கொண்டேனென்று சொன்னது.

சாலிகீன்களில் நின்று மொருவர் சொல்லுகிறார் - யாதெனில்-மஸ்துக்கொண்டிருக்கிற என்னுடப்பிறந்தாரிடமாக நான்போனேன்-அப்போதவரை நான் அடித்தேன்-அவரோடிப்போய்த் தண்ணீரில்விழுந்து மவுத்தாகிப்போனார்-அந்தமையித்தை நானெடுத்து அடக்கஞ்செய்துவிட்டு வந்த அன்றையிராத்திரியில்-அவர் சொர்க்கத்திலிருப்பதாகக் கனவுகண்டு நான் அவரைப்பார்த்து நீர்மஸ்துப்பிடித்தவராகத்

தண்ணீரில்விழுந்து தற்கொலையாகி மவுத்தானவராச்சுதே-இவ்விதம் சொர்க்கலோகத்திலிருக்கும்படியான சபபென்னவென்றுகேட்டதற்கு அவர் மெய்தான் உம்மைவிட்டும் நான் பிறமாகிப்போகச்சே(பிசுமில்லா இற்றகுமா னிற்றகீமென்று)எழுதப்பட்ட ஓர் துண்டுக்கடிதாசைப் பூமியிற்கண்டெடுத்து வாயிற்போட்டு விழுங்கிவிட்டுத் தண்ணீரில்விழுந் திறந்து அடக்கப்பட்டபோது-க்புறில் முன்கர்-நக்கிறென்னுமலக்குகளிரண்டுபேரு மென்னிடம்வந்து கேள்விசேட்டார்கள்-அப்போது நானவர்களைப்பார்த்து அல்லாகுத்தஆலாவுடைய (பிசுமில்) என்வயிற் றிற்குள்ளிருக்கச்சே நீங்க ளெவ்விதம் என்னிடத்திற் கேள்விகேட்கிற தென்று சொன்னேன்.

அப்போது அல்லாகுத்தஆலா இரண்டுமலக்குகட்கும் அறிவித்தான்-என்னுடைய அடியான் உண்மைசொன்னான்-ஆதலால் - அவனுடையபாவத்தைப் பொறுத்துக்கொண்டேனென்றுசொன்னான்-இந்தச் சபபினாலேதான் சொர்க்கத்தி லிருக்கிறேனென்றுசொன்னார்.

திருமக்கமாநகரத்தில் ஒருமனிதன் எக்காலமும் நோன்பாகவே யிருப்பார்-அப்படி நோன்பிருக்குநாளெல்லாம் அவர்ஒன்றையும் வஜீபிக்க யாரோனுங்கண்டதில்லை-என்கிலும் அவர் நோன்டதிறக்கிறநோத்தில்-தான் அணிந்திருக்கும் சட்டைச்சேப்பிலிருந்து-ஒரு துண்டுக் கடிதாசையெடுத்துப் பார்த்துவிட்டுச் சட்டைச்சேப்புக்குட் போட்டுக் கொள்வார்-இவ்விதமிருந்து சிலகாலத்திற்குப்பின்னாலே அவர் மவுத்தாகிப்போனார்.

அந்த மையித்தைக் குளுப்பாட்டுகிற மனிதன் மையித்துடைய சட்டைச்சேப்பிலிருந்து கடிதாசுத்துண்டைக்கண்டெடுத்து விரித்துப் பார்க்கும்போது அதிலே(பிசுமில்லா இற்றகுமா னிற்றகீமென்று)எழுதியிருப்பதைப்பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டார்-அப்போது உருத்தோற்றமில்லாமல் ஓர்சத்தம் அல்லாபரத்தரல்நின்றும் ஓய் மையித்துக்குளுப்பாட்டுகிற மனிதனே நீர் ஆச்சரியப்பட வேண்டாம் (பிசுமில்லா) என்கிற இசுமைக்கொண்டும் அவனை வளர்த்தேன் (றகுமான்) என்கிற இசுமைக்கொண்டும் அவன் பாவத்தைப் பொறுத்துக்கொண்டேன் (றகீம்) என்கிற இசுமைக்கொண்டும் - அவனுக்கு நல்ல பதவியைக் கொடுத்தேன் - ஆனதால் நீர் அதைத்தொட்டும் ஆச்சரியப்பட வேண்டாமென்று முண்டாயிற்று-இவ்விதச் சப்தத்தைக் கேட்டவர்

அல்லாகுத்தஆலாவைப்புகழ்ந்து மையித்தைக்குளுப்பாட்டித் தீர்ந்த பின்னர்-கூடிலபேர்களுமுறைபோலே மையித்தையடக்கஞ்செய்துபோ யினர்கள்-இந்தப்படிக்கு-நுசுஹத்தில் மஜாலிசென்னுங் கித்தாபில்வரு கின்றன.

ஹதீது.

நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒருபோ து அபூகுறைறா றலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து-ஓ அபூகுறை றாவே நீர் உளுச்செய்வீரோயானால் (பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்) என்றுசொல்லும்-அதனால் உமமைக் காத்திருக்கிறமலக்குகள் நீருளுச் செய்து முடியுமட்டு முமக்கு நன்மைகளை யெழுதிக்கொண் டிருப் பார்கள்.

இன்னும் உமது பெண்சாதியுடனே நீர் சையோகஞ்செய்ய நாடி நெருங்கும்போது (பிசுமில்லேச்சொல்லிச்) சையோகஞ்செய்துகொள்ளும் அஃதேதனென்றால்-உம்மைக்காத்திருக்கிறமலக்குகள்- அந்த சுனூபென் னு முழுக்கு முழுகித் தீருகிறமட்டிலு முமக்கு நன்மைகளையெழுதிக் கொண் டிருப்பார்கள்.

மேலும் இவ்விசம் நீர் (பிசுமில்லேச்சொல்லிப்) பெண்சாதியுடனே சேர்ந்ததிலே உமதுபெண்சாதி கர்ப்பமாகிப் பிள்ளைபிறந்தால்-அந்தப் பிள்ளையும்-அந்தப்பிள்ளைக்குப்பின்னர்-பிறக்கிற பிள்ளைகளுடையமூச் சுகளின்தொகை யெம்மாத்திரமோ அம்மாத்திர முமக்கு நன்மைகளை யெழுதப்படுமென்று திருவுள மானார்கள்.

இந்தப்படிக்குத் தபுசீறுக் கபீர் - நுசுஹத்தில் மஜாலிசுமுதலிய அனேகங்கித்தாபுகளில் (பிசுமில்லே) ஓதிப் பெண்சாதியுடனேசேர்க்கை செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறபடியால் - மூமீன் - முசிலி மாகியஉடற்பிறந்தான்மார்களே-உங்களுடையபெரியஅறிவினாலேமேற் சொல்லிய ஹதீதைநன்றாயுணர்ந்துபார்த்து நீங்களும் பெண்டீர்சேர்க் கையில் (பிசுமில்லே) யோதிக்கொள்வீர்களாகில் அல்லாகுத்தஆலா நன் மை றகுமத்துச்செய்வான்-ஆமீன்.

இன்னும் நபிநாயகம் திருவுளமானார்கள்-யாதாமொருவன் வீட்டி லிருந்து வெளியேபோகும்போது (பிசுமில்லேச்) சொல்லிக்கொண்டுபோ வானாகில்-இபுலீசுபார்த்து இந்தமனிதனுடனே வீட்டிலேபோகிறதற்கு நமக்கிடமில்லையென்று சொல்லிக்கொண்டுபோவான்.

இன்னும் யாதாமொருவன்-அன்னமுதலிய யாதொரு வஸ்துவை யுண்ணும்போதுந்-தின்னும்போதும் (பிசுமில்லைச்சொல்லி) யுண்டு தின்றானாகில் இபுலீசுபார்த்து இந்தஇடத்தில்நமக்கு உண்டிதின்றி யில்லையென்று சொல்லிக்கொண்டுபோவான்.

இன்னும் யாதாமொருவன் தண்ணீர்குடிக்கும்போது (பிசுமில்லை) ஓதித் தண்ணீர்குடித்தானாகில்-இபுலீசுபார்த்து என்தாகத்திற்கு இவ்விடத்திற் குடிக்கத் தண்ணீர் கிடைக்காதென்று சொல்லிக்கொண்டு போவான்.

இன்னும் யாதாமொருவன் படுக்கும்போது(பிசுமில்லை)ஓதிக்கொண்டு படுப்பானாகில் -இபுலீசுபார்த்து-இவ்விடத்தில் எனக்குப் படுக்க இடமில்லையென்று சொல்லிக்கொண்டு போவான் - ஆதலால் - (பிசுமில்லை) விட்டு விடுவானாகில்-சைத்தான் அவனுடனே-வீட்டுக்குள் வருவான்-உண்பான்-தின்பான் தண்ணீர்குடிப்பான்படுப்பான்இன்னும்தன்பெண்சாதியுடனே (பிசுமில்லை யோதாமல்) சேர்க்கை செய்தால் இபுலீசுஞ் சேர்க்கைசெய்வான்.

இவ்விதம் இபுலீசு சேர்க்கைசெய்யும்படியான செய்கையில் கர்ப்பமாகிப் பிறக்கிறபிள்ளைகளிற் சிலர் ஹறாம் ஜாதாவா[illegible]-சிலர் கண்குருடாகவும்-சிலர்-நொண்டியாகவும்-சிலர்-காபிர் - பாவ[illegible]முதலிய அனேகங் கெடுதலுமுண்டாகிடும்-இவ்விதமானபிள்ளைகளுடனே இபுலீசுங் கூட்டாகுவானென்று அல்லாகுத்தஆலா குறுஆன் சரீபிலுந் திருவுளமா யிருக்கிறான்-கஸீனத்தில் அசுருறென்னுங் கித்தாபிலும் (௱க.அ-வது)பக்கத்தில் வருகின்றன.

இன்னும் யாதாமொருவன்-இராவுகாலம் படுக்கையிடத்திலிருந்து (பிசுமில்லை) இருபத்தோர்திரம் ஓதிக்கொண்டு படுப்பானாகில் அந்த இராத்திரியில்-பகைஞன்-ஜின்-ஷைத்தான்-திருடன்நெருப்பு-சதிமான்யமான-மரணம்-இவைபோலுள்ள பலா முசிபத்தைவிட்டும் அச்சந்தீர்ந்தவனாக இருப்பான்-அவனைவிட்டும் சகல துன்பங்களையும் நீக்கப்படும்.

இன்னும் யாதாமொருவன் (பிசுமில்லைக்) கலப்பறுதலான நிய்யத்தோடும் (சக)திரம் ஓதிப் பயித்தியகாரனுடைய காதிலே யூதுவானாகில் உடனே அப்பபித்தியந்தீர்ந்து அவனுக்கு நல்லபுத்தியுண்டாகும்

இன்னும் யாதாமொருவன் (பிசுமில்லை) நூறுதிரம் ஓதி-வியாதியாயிருப்பவன்பேரிலும்-வஞ்சனைசெய்யப்பட்டு வருத்தப்படுகிறவன் பேரிலும்-தொடர்ச்சியாக ஏழுநாள-அல்லது அதற்கதிகமான சிலநாள்வரைக்கினால் அந்தவியாதி வஞ்சனைமுதலிய பிணிகளெல்லாம் - சந்திரனைக்கண்ட இருளைப்போலுஞ் சூரியனைக்கண்ட பனியைப்போலும் நீங்கும்படியாக அல்லாகுத்தஆலா நீக்கிடுவான்.

இன்னும் யாதாமொருவன் சனிக்கிழமை சூரியோதயகாலத்தில் கிபுலாவை முன்னோக்கி யிருந்துகொண்டு - முறுசலான நபிமார்கள் (ரு.ஙயஙரு)எண்ணம்-அதுபோலே முந்நூற்றுப்பதின்மூன்றுதிரம்(பிசுமில்லை) ஓதிவருவானாகில்-அந்தவரிசையினாலும்-நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள்பேரில் (ள) திரம்-சலவாத்தை ஓதுவானாகில்-அந்த வரிசையினாலும் அவனுக்கு அல்லாகுத்தஆலா கினையாப் புறத்திலே நஸக்குக் கொடுப்பான்.

இன்னும் யாதாமொருவன் ஒருநாள்முழுமையும்(பிசுமில்லை)ஆயிரந்திரம் ஓதுவதை வழமையாக்கி வருவானாகில் துனியாவிலும்-ஆகிறத்திலும்-அவனுடைய ஹாஜத்தை அல்லாகுத்தஆலா நிறைவேற்றிவைப்பான்.

இன்னும் யாதாமொருவன் (பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீமை) ஓர்காகிதத்தில் (உக) வரியாக எழுதி மடித்து மெழுகுசீலை முதலியதினாற் பொதிந்து-கித்திரையிற் றிடுக்கிட்டுப்பயந்து விழிக்கிற குழந்தைப்பிள்ளைகளுக்குக் கட்டினால்-அல்லாகுத்தஆலாவுடைய உத்திரவுகொண்டும்-அந்தப் பிள்ளைக் கிருக்கிறதிடுக்கமும் பயமும்-நீக்கிப்போகிறதுடனே-ஆபத்துகளைவிட்டும்அந்தப்பிள்ளையை அல்லாகுத்தஆலா காத்துக் கொள்வான்.

இன்னும் யாதாமொருவன் (பிசுமில்லை) ஓர்கடிதாசியில் (கூ௫) வரியாகஎழுதி-அந்தக் கடிதத்தை வீட்டிலே கட்டிவைப்பானாகில்- ஜின்னைத்தான்கள்-அந்தவீட்டிலே புகுதாமல் விலகிப்போகும்-இன்னும்-அந்தவீட்டிலே தொழிற்றுறைகள-பணங்காசுகள்முதலிய பறக்கத்து நாட்குநா ளதிகமாகும்-வீட்டையுடையவர்கட்குந் தங்கடம் யாதொன்றும் வரமாட்டாது-இன்னும்-அந்த பிசுமில்லெழுதிய) கடிதத்தை வியாபாரஞ்செய்கிற கடைகளிற் றூக்கிவைத்தாலும் அவனுக்கு இலாபம் அதிகங்கிடைக்கும்-இன்னும்ஹஸதுக்காரர்கள் அன்னீதக்காரர்கள்கண்

பார்வைக்கும் அல்லாகுத்தஆலா மறைவாக்கிவைப்பான்-இவைகளடங்கலும் (பிசுமிலுடைய) பாயிதாவாகஇருக்கும்.

இன்னும் யர்தாமொருவன் முஹற்றமாத முதற்றெய்தியில் ஓர் கடிதாசியில் னாற்றிப்பதின்மூன் றிடத்தில்(பிசுமிலை) எழுதி வைத்துக் கொள்வானாகில் - அவனுக்குத் தங்கடம் வருத்தங்கள் வரமாட்டாது- மேலும் அல்லாகுத்தஆலா அவனையும் அவனுடையபெண்சாதி பிள்ளைகளையும் வருத்தத்திலாக்காமற் காத்துக்கொள்வான்.

ஆனால் இவைகளுக்கெல்லாம் - நல்ல அமலும் கலப்பறுதலான வுண்மையும்--நிய்யத்தும் பிரதானமாக வைத்துக்கொள்ள வேண்டும்- இப்படிக்குக் கஸீனத்தில் அசுரூறுமுதலிய கித்தாபுகளிற் சொல்லப் பட்டிருக்கின்றன.

இன்னும் கியாமநாளென்னு முடிவுநாள் வருமே அந்தநாளில் முகம்மதுநபி சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களுடைய உம்மத்தோர்கள் செய்த அமல்களை நிறுக்கப்படும் - அப்போது அவர்கள் தொழுத தொழுகையில்நின்றும் ஒருறக்குஆத்தாகிறது-மற்றப்பேர்கள்தொழும் ஆயிரம் றக்குஆத்திற்கும் அதிகமாகிவிடும்-அதுகண்டுமற்றவர்களெல்லாம் ஆச்சரியமாவார்கள- அப்போது - அங்குள்ள மலக்குகள் சொல்வார்கள்-முகம்மதுநபியவர்கள் உம்மத்தோர்களுடைய தொழுகையில் (பிசுமில்) உண்டாயிருக்கிறபடியால் இவ்விதம் தொழுகை றக்குஆத்து அதிகமானதென்று சொல்லுவார்கள்.

ஆதலால் (பிசுமிலுடைய)வரிசைகளை யிவ்வளவென்றெழுதி முடியாது-மூமினாகிய இகுவான்களே - மூசிலீமாகிய வுடற்பிறப்புகளே- யாவரும் இந்த பாவை நன்றாகப்பார்த்துக் கல்பிலேதரிபடுத்திவைத்து அதேபிரகாரம் அமல்ச்செய்துகொள்வதுடனே உங்கள்பிள்ளைகளையும் இளமைநேரத்திலேயே குறஆனையோதவைத்து இசுலாமுடைய பறுலு-ஷறுத்து-வாஜிபு - சுன்னத்துமுதலிய நன்னடத்தைகளில் வருத்திவையுங்கள்-அப்படிவைத்தால் (பிசுமிலுடைய) பறக்கத்தினால் அல்லாகுத்தஆலா நம்மனைவோருடைய பாவங்களையுமன்னித்து சுவர்க்கலோகத்திலுந் தாக்கலாக்கிவைப்பான்-ஆமீன் -யாறப்பல்-ஆலமீன்.

பிசுமிலுடைய வரிசையின்பயான்

முற்றிற்று.

அல்கம்து சூறத்துடைய வரிசையின்பயான்.

ஹ தீ து.

அல்லாகுத்தஆலாவுடைய ஹபீபாகிய நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்-யாதென்னில(அல்கம்து)சூறத் திறக்கும்போது அதினுடனே(எழுத) மலக்குகளையும் அல்லாகுத்தஆலா இறக்கினான்-அப்பேர்ப்பட்ட வலுப்பத்தையுடைய(அல்கம்துசூறத்தை) யாதாமொருவன் ஓதுவானாகில்-அவன் - தௌறூத்து-சபூர்-இஞ்சீல்-புறுக்கான்-ஆகியஇந்நான்குவேதத்தையும்ஓதினவனைப் போலாகிடுவான்.

இன்னும் (அல்கம்துசூறத்தை) ஓதுவதிலுள்ள ஒவ்வோர் ஆயத்திற்கும்பதிலாகப் பூமிநிரம்புதலாயுள்ள தங்கத்தைவாரிஅல்லாவுடைய பாதையில் ஸதக்காக்கொடுத்தவனைப்போ லாகிடுவான்.

இன்னும் (அல்கம்தை) ஓதிவந்தவனுடைய சரீரம் நரகத்திற்கு ஹறாமாயிருக்கும்.

இன்னும் - அல்லாகுத்தஆலா அறுஷிற்குக்கீழே ஒருமலக்கைப் படைத்துவிட்டிருக்கிறான்-அந்தமலக்குக்கு மனிதர்தலையைப்போலே தலையும்-எழுபதினாயிரம் இறகு முண்டாயிருக்கிறது-அந்த இறகுகள் ஒவ்வொன்றின்பேரிலும்-ஒவ்வோர் கூட்டமான மலாயிக்கத்துகளிருக்கிறார்கள்-இன்னும்-அவருடைய வலது கன்னத்தின்பேரில் (குல்குவல்லா)என்கிற சூறத்து இகுலாசும் - இடதுகன்னத்தில் (ஷகிதல்லாகு) அன்கு லாஇலாக இல்லாகுவஎன்கிறஆயத்துமுழுமையும்-நெற்றியின் பேரில் (அல்கம்துசூறத்தும்) எழுதப்பட்டிருக்கின்றன.

இன்னும் அந்தமலக்குக்கு முன்பாக எழுபதினாயிரங்கூட்டமான மலாயிக்கத்துகளிருந்து (அல்கம்து`சூறத்தை யோதிவருகிறதில் இய்யாக்கநஃபுது-வஇய்யாக்க நஸ்தயீனென்று சொல்லிலே ஸஜிதாச்செய்வார்கள்-அப்போது அல்லாகுத்தஆலா அம்மலாயிக்கத்துகளைப் பார்த்து-ஒய்-மலாயிக்கத்துகளே - உங்களுடையதலையை ஸஜிதாவைவிட்டு முயர்த்துங்கள்-திடனாகவுங்களைத்தொட்டும் நான் பொருந்திக்கொண்டேனென்று சொல்வான்.

அதுகேட்டு மலாயிக்கத்துகள் - அல்லாகுத்தஆலா இடத்தில் எங்களுடைய நாயனே ஆண்டவனே உன்னுடைய ஹபீபாகிய நபிநா

யக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய உம்மத்துகளில்நின்றும் (அல்கம்து) சூறத்தையோதுவானே அவனைத்தொட்டும் நீ பொருந்திக்கொள்ளென்று சொல்வார்கள் - அப்போது அல்லாகுத்தஆலா அந்தமலாயிக்கத்துகளைப்பார்த்துத் திடனாகநானுங்களை அவர்களைத்தொட்டும் பொருந்திக்கொண்டேன் நீங்கள் சாட்சியாக இருங்களென்று சொல்லுவான்-அதுகேட்டு மலாயிக்கத்துகள் மிகுந்தசந்தோஷமாகுவார்கள்-இந்தப்படிக்குந்- துற்றுல் மன்ஷூறுமுதலிய கித்தாபுகளில் வருகின்றன.

ஹிக்காயத்து.

கருபுல் அகுபாறென்னும் பெரியோர்கள் எகூதி-நஸாறுக்களைப் பார்த்துச்சொன்னார்கள்-யாதென்னில்-தௌறாத்து-இஞ்சில்வேதத்தில் (அல்கம்து) சூறத்துண்டாயிருக்குமாகில் நீங்கள்-எகூதி-நஸாறுவாகப் போகமாட்டீர்கள்-இன்னும்-சபூர்வேதத்தில் (அல்கம்து) சூறத்துண்டாயிருக்குமாகில்- அல்லாகுத்தஆலா அவர்களைக் குரங்கு கின்சீறுகளாய்மாற்றமாட்டான்.

முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் உம்மத்துமார் பேரில் (அல்கம்து) சூறத் திறங்கினபடியால் அவர்களை அல்லாகுத்தஆலா திடனாக வழிகேட்டிலாக்கமாட்டானென்று அவனைநான் ஆதரவுவைத்திருக்கிறேனென்று சொன்னார்கள் - இந்தப்படிக்கு-நுசுஹத்துல் மஜாலிசென்னுங் கித்தாபில் வருகின்றன.

ஹதீது குதுசியில் - அல்லாகுத்தஆலா நபிநாயகத்தைப்பார்த்து முகம்மதே முன்வேதங்களில்-சுகுபுகளில் இல்லாத (அல்கம்து) சூறத்தைக்கொண்டும்-உம்முடைய உம்மத்தோர்களைச் சங்கையாக்கிவைத்திட்டேன்-ஆதலால் யாதாமொருவன் (அல்கம்து) சூறத்தை யோதுவானாகில் அவன்சரீரம் நரகத்திற்கு ஹறாமாகிவிடுமென்று சொல்லியிருக்கிறான்.

ஆனதால் மூமீன் முசிலிமான உடற்பிறப்புகளே (அல்கம்து) சூறத்தினால் முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய உம்மத்தோர்களைச் சங்கையாக்கிவைத்திருக்கிறேனென்று அல்லாகுத்தஆலா சொல்லியிருக்கிற (அல்கம்துடனே) குறுஆனையோதி அதின்படிநல்ல அமல்களைச் செய்வீர்களாக-ஆமீன்.

இன்னும்-துசுஹத்துல் மஜாலிசென்னுங்கித்தாபிற் சொல்லப்படு கிறது-யாதென்னில் (பிசுமிலுடனே அல்கம்துசூறத்தில்) பதினொந்து மீம்என்ற அட்சரமுண்டாயிருக்கிறது -ஆதலால்-யாதோர் அடியான் (அல்கம்து) சூறத்தை ஓதுவானுகில்-அதிலுள்ளமீம்கள் - பதினொந்தும் பறவைகளைப் போலே - புறப்பட்டுப்போய் அறுஷிலே கொழுகிக் கொள்ளுங்கள்.

அப்போது- அறுஷைச் சுமக்கிற மலக்குகள்பேரில் அறுஷி கனமாகி அந்தமலக்குகள் அல்லாகுத்தஆலா இடத்தில்-எங்களுடையஆண்டவனே இந்தக் கனமாகிறது என்னகனமென்று கேட்பார்கள். அதற்கு அல்லாகுத்தஆலா அந்தமலக்குகளைப்பார்த்து-ஓய் மலக்குகளே என்னுடையஅடியான் (அல்கம்து) சூறத்தை யோதினுனே அதினுடைய தவாபாகிய கனமா யிருக்குமென்றுசொல்லுவான்.

அதுகேட்டு அந்தமீம்கள் அல்லாகுத்தஆலா இடமாக எங்கள்ஆண்டவனே (அல்கம்து) சூறத்தை யோதினவனுக்கு - எவ்வளவு கூலி கிடைக்குமென்று கேட்குங்கள்-அதற்குஅல்லாகுத்தஆலா மீம்களைப்பார்த்து-நீங்கள் நடந்துபோய் அவனுடையபட்டோலையி லெழுதியிருக்கிற பாவங்களை ஒவ்வோர்மீமும் பத்துப்பத்துப் பாவங்களை யழித்துப் போடுங்களென்று சொல்லுவான்.

அப்போது அந்த மீம்கள் அல்லாகுத்தஆலா இடத்தில் எங்களாண்டவனேஎங்களுக்கு அதிகமாக்கிவிடுஎன்றுகேட்குங்கள்-அதற்கு ஆண்டவன் அம்மீம்களுக்கு இருவது பாவங்களை யழிக்கச்சொல்லுவான்-அதுகேட்டு மீம்கள் இன்னும் அதிகமாக்கி விடுஎன்று பலதரங் கேட்டதிலே-அல்லாகுத்தஆலா மீம்ஒன்றுக்கு நாற்றிருபதுபாவங்களை யழிக்கும்படியாகச்சொன்னதில் (௰௫) மீமுக்கும் (௬௩௱) பாவங்களை யழிக்கப்படும்.

இன்னும் ஒருநாளொன்றிற்குத்தொழும் ஐந்துநேரத்துத்தொழுகையில் (அல்கம்து) சூறத்தையோதினவனுக்கு (௬௰௩௲) பாவங்களை அந்தமீம்கள் அழித்துப்போடும்.

ஹிக்காயத்து.

முற்காலத்தில் ஓர்மனிதன் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் ஆச்சரியமாகிற மட்டிலும்-அல்லாகுத்தஆலாவை வணங்கினுர்-அதுதெரிக்கு வீடு

டு

ரீல் அலைகிஸ்ஸலாம் அவர்கள்-விருப்பமாகி அந்தவணக்கத்தை யுடைய வனைத் தெரிசித்துக்கொள்ள அல்லாகுத்தஆலா யிடத்தி லுத்திரவு கேட்டார்கள்-அதற்கு அல்லாகுத்தஆலா -லௌகுல்மகுபூலென்னும் பலகையைப்பார்க்கிற ஷறுத்துப்போலே பார்க்கச் சிபுரீல் அலைகிஸ்ஸ லாத்திற் குத்திரவு கொடுத்தான்.

உடனே ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள்-லௌகுல்மகுபூலுப் பல கையைப் பார்த்தபோது-அதிலே அந்தமனிதனுடையபெயரை மூதே வித்தனம்பெற்றவனென்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டு ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள்-அந்தவணக்கத்தாளி யிடத்தி லிறங்கி யவரைப் பார்த்து-லௌகிலெழுதப்பட்டிருக்கிற செய்தியைச்சொன்னார்கள்-அது கேட்டு வணக்கத்தாளி(அல்கம்துலில்லாகி) என்றுசொன்னர்-அப்போ து ஜிபுரீல்அலைகிஸ்ஸலாமவர்கள் தாங்கள்சொன்னவார்த்தையைஅந்த வணக்கத்தாளி கேட்டுக்கொள்ள இல்லையென்று நினைத்து மறுபடியும் அவரைப்பார்த்து முன்சொன்னபடிலௌகிலெழுதப்பட்டிருக்கிறசெய் தியைச் சொன்னர்கள்-அப்போதும் அந்த வணக்கத்தாளி (அல்கம்து லில்லாகி)என்றுசொல்லி நான் சீதேவித்தனத்திற்குப் பாத்தியமில்லா திருந்தாலும் என்னுடைய றப்பு என்னை மூதேவியென்று எழுதமாட் டான்-ஆனல்-துன்பம்-இன்பமாகியபோதும்-எல்லாப் புகழும்-புகழ்ச் சியும் அல்லாவுக்காக இருக்குமென்று சொன்னர்.

அதுகேட்டுச்சிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் ஆச்சரியமானர்கள் அப்போது அல்லாகுத்தஆலா ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்களைப்பார்த் து-ஓய் ஜிபுரீலே நீர் லௌகுல் மகுபூலுப்பலகையைப் பாருமென் முன்-அதுகேட்டு உடனே ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள்பார்த்தார்கள்-லௌகிலே மூதேவித்தனத்தைவிட்டும் சீதேவித்தனத்தில் திடனக அவர்பெயர் திரும்பியிருப்பதைக் கண்டார்கள்.

ஹதீது.

நபிநாயக மூகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாக்கினலே (அல்கம்து) சூறத்தாகிறது அல்லாகுத்தஆலா தன் னுடைய அறுஷின் புதையல்களில் நின்றும் ஓர்புதையலாக இருக்கு மென்றுசொன்னனென்றும்எல்லாவஸ்துகளுக்கும்அடித்தளமுண்டும் அதுபோலே-குறஆனுக்கு அடித்தளமாகிறது (அல்கம்தாக) இருக்கு மென்றும் சொன்னர்கள்.

ஆகலால் (அல்கம்து)சூறத்துடைய வரிசையை இவ்வளவென்று எழுதிமுடியாது-என்கினு மிவ்விடத்திற் சுருக்கமாக எழுதலாயிற்று ஆய்-மூமீன் முசிலீமாகிய உடற்பிறப்புகளே இந்த(அல்கம்தென்னும்) ஒருசூறத்துக்கு இம்மாத்திரம்நன்மை தறஜாக் கிடைக்குமானல்-குறு ஆன்முழுமையும் ஓதினல்-எவ்வளவுநன்மை தறஜாக் கிடைக்குமென் பதை யுங்களுடைய தெளிவான மனக்கண்ணைக் கொண்டும் - மேற் சொன்னஹதீது-ஹிக்காயத்துகளைத்தெளிவாகநோட்டமிட்டுநீங்களும் உங்கள் அருமையான மக்களும் குறுஆனையோதி அல்லாவுடையஏவல் விலகலறிந்து நபிநாயகம் அவர்கள்சொல்லை மறக்காமல் நல்ல அமல்க ளைச்செய்தால் அல்லாகுத்தஆலா நம் மனைவோருக்கும்-இம்மை மறு மையென்னும் இரண்டிடத்திலும் றகுமத்தும்கிருபையுஞ்செய்து பிருதௌசென்னுஞ் சொர்க்கத்திலுந் தாக்லாக்குவான்-ஆமீன்-யாறப்பல்-ஆலமீன்.

அல்கம்து சூறத்துடைய வரிசையின்பயான் முற்றிற்று.

குல்குவல்லா சூறத்துடைய வரிசையின்பயான்.

——0※0——

இருலோகத்திற்கும் நாயகமான காரணக்கடவுள் முகம்மது நபி சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாய்மலர்ந் தருளினர்கள் - யாதாமொருவன் (குல்குவல்லாவென்னும்)சூறத்தை ஒருதிரம் ஓதுவானாகில்-குறுஆனில் மூன்றில் ஒருபங்கு ஓதினவனைப்போ லாகிடுவான்-இரண்டுதிரம் ஓதுவானாகில்-குறுஆனில்-மூன்றில் இரண்டுபங்கு ஓதினவனைப்போ லாகிடுவான்-மூன்றுதிரம் ஓதுவானாகில - குறுஆன்முழுமையும் ஓதினவனைப்போ லாகிடுவான்-இன்னும்(குல்குவல்லாவைப்) பத்துத்திரம் ஓதுவானாகில் - அல்லாகுத்தஆலா அவனுக்குச் சுவர்க்கலோகத்திலே சிவந்த மாணிக்கத்தினல் ஓர்வீட்டைக்கட்டிவைப்பான்.

இன்னும் யாதாமொருவன்-சுபுகுதொழுதபின்னர்(குல்குவல்லாவைப) பத்துத்திரம் ஓதுவானாகில் ஷைத்தான் அவனைக் கலைத்தபோதிலும் அந்தக் கலைவிதத்திலே அகப்படமாட்டான்- அல்லாகுத்த

ஆலா அவனுக்கு நூறுஷ்டீதுகளுடைய தறஜாத்தைக்கொடுப்பானென்றும் நபிநாயகம் திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

அறுபயீன் என்னுங் கித்தாபிற்சொல்லப்பட்டிருக்கிறதியாதென்னில்-முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருமக்கமாநகரத்தைவிட்டுந் திருமதீனமாநகரத்திற்குப் போகவேண்டுமென்றுநாடி கிசுறத்துப் போகும்போது- அபூஜகிலுடைய தெருவில் சபைகூடுகிற வீட்டுவாயிலிலே மக்கமாநகரத்துக் காபிரீன்கள் சபைகூடிப் பேசினதாவது யாதென்னில்.

முகம்மதென்பவரைக் கைப்பிடியாகப் பிடித்தாவது - அல்லது அவர்தலையையறுத்தாவது நம்மிடத்திற் கொண்டுவரப்பட்டவர்களுக்குத் திடனாகச் சிவந்தஒட்டகத்தில் நூறும் - அறபுராச்சியத்துக் குதிரையில் நூறும் றூம்ராச்சியத்து வெள்ளாட்டிப்பெண்களில் நூறும் இனாமாக நாம் கொடுப்போமென்று பேசி முடித்தார்கள்.

அதுகேட்டு மாலிக்குடைய மகன் சுறாக்கத்தென்பவன் சபையைவிட்டும் எழுந்து நின்று சபையோர்களைப்பார்த்து- அந்த முகம்மதை நீங்கள்சொன்னபிரகாரம் நான் கொண்டுவருகிறேனென்றுசொன்னான். அதுகேட்டுச் சபையோர்கள் சுறாக்கத்தைப்பார்த்து நீ அப்படி முகம்மதைக் கொண்டுவந்தால் நாங்கள் நியமித்த வெகுமதிகளை யாதொருதடையின்றித் தருகிறோமென்று ஜாமீனாக ஏத்துகொண்டார்கள்.

உடனே அந்த சுறாக்கத்தென்பவன் சபையைவிட்டும்புறப்பட்டு வாளாயுதமெடுத்துக் குதிரையிலேறிக்கொண்டு நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் போறவழியில் அவர்களுக்குப் பின்தொடர்ந்துபோயினான்-இவ்விதம் வெகுமதிகட்கு ஆசைப்பட்டுக் கொலையை விரும்பிப்போன சுறாக்கத்து நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைக்கண்டு உடனே அவர்களைவெட்டநினைந்து தன்னிடமிருக்கிற வாளை யுறையைவிட்டு உருவினான்.

அப்போது ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் வகிகொண்டு நபிநாயகத்திடம்வந்து அவர்களைப்பார்த்து அல்லாவுடைய றசூலே உங்களுடைய காரியத்திற்கு-அல்லாகுத்தஆலா பூமியை வசப்படுத்தித் தந்திருக்கிறானென்றுசொன்னார்கள்-அதுகேட்டு நபிநாயகம்பூமியைப்பார்த்து-ஆய் - பூமியே அவனைப்பிடியென்று ஏவினார்கள்-உடனே பூமியா

னது-சுருக்கத்தென்பவன் ஏறிவருகிற குதிரையின் நான்குமுழங்கால் மட்டிலும் பிடித்து விழுங்கினது - அதுகண்டு சுருக்கத்தென்பவன்-நபிநாயகத்தைப்பார்த்து அல்லாவுடையறசூலே உங்களைநான் வெட்ட மாட்டேன்-என்னை வெளிப்படுத்தி விட்டுவிடுங்களென்றுசொன்னான்.

அதுகேட்டு நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் துஆச்செய்தார்கள்-உடனே அவர்கள் துஆபறக்கத்தைக் கொண்டும் அல்லாகுத்தஆலா சுருக்கத்தை வெளியாக்கிவிட்டான்-அப்படிச்சுருக்கத்தென்பவன் வெளியாகி ஒருனாஅத்துநேரந் தன்குதிரையை நடாத்திக்கொண்டுபோய் மறுபடியும் கெட்டஎண்ணத்தினால் வாளையுருவிக்கொண்டு நபிநாயகத்தை வெட்டஓடி முடுகினான்.

அதுகண்டு நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல் லமவர்கள் மறுபடியும் பூமியைப்பார்த்து ஆய்-பூமியே அவனைப்பிடியென்று ஏவினார்கள்-உடனேபூமி சுருக்கத்து ஏறியிருக்கிற குதிரையையும் விழுங்கி அவனுடைய தொப்பூள்வரைக்கும் விழுங்கிற்று - அதுகண்டு சுருக்கத்தென்பவன் பயந்து நடுங்கி நபிநாயகத்தைப்பார்த்து-அல்லாவுடையறசூலே இனிமேல் நானுங்களை யொன்றுஞ்செய்யவில்லை என்னை விட்டுவிடுங்களென்று கெஞ்சினான்.

அப்போது றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் துஆச்செய்தார்கள்-உடனே அல்லாகுத்தஆலா துஆவைக்கபூல்செய்துசுருக்கத்தென்பவனை யீடேற்றமாக்கிவைத்தான்-அப்போது சுருக்கத்தென்பவன்-உடனே குதிரையைவிட்டுக் கிழிறங்கி நபிநாயகத்தின் ஒட்டகத்திற்கு முன்னிலேவந்து மண்டிக்கால்போட் டிருந்துகொண்டு அல்லாவுடையறசூலே-உங்களுடையநாயன்-தங்கத்திலின்றுமுண்டானவனா-அல்லது பொன்னிலின்று முண்டானவனா-அல்லது-வெள்ளியில் நின்றுமுண்டானவனா-இவைகளில் நின்றும் எதினாலுண்டானவன் எனக்குச் சொல்லுங்களென்று கேட்டான்.

அப்போதுநபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வாயைமூடினவர்களாய்த்தலையைக்கவிழ்ந்துகொண்டார்கள்-அப்போது ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் அல்லாபரத்தாலிருந்து(குல்ஹுவல்லா) என்னும்சூறத்துடனே யிறங்கி நபிநாயகத்துக்குச்சொன்னார்கள்-அதுகட்டு நபிநாயகம் - சுருக்கத்தென்பவனுக்கு (குல்ஹுவல்லா) என்னும் சூறத்தையோதித்தெரிவித்தார்கள்-அதின்பொருள்யாதென்னில்-முகம்

மதே நீர்சொல்லும் கருமமாகிறது-அல்லாகுத்தஆலா ஒருவனுகஇருக்கும்-அவனுகிறவன்-எப்போதிலும் சகல ஹாஜத்துகளுக்கு யாவரும் அவனளவில் நாடப்பட்டவன்-அவன் ஒருவனைப் பெறவுமில்லை-அவனைப் பெறப்படவுமில்லை-இன்னும் அவனுக்குச் சரியானவன்ஒருவனுமில்லை-ஆதலால்-அவன்-தங்கம்-பொன்-வெள்ளி-யானவனல்லை-இவைகளெல்லாத்தையும்விட்டுந் தூய்தானவனென்று சொன்னுர்கள்.

அதுகேட்டுச் சுருக்கத்தென்பவன்-நபிநாயகத்தைப்பார்த்து அல்லாவுடையறசூலே இசுலாமாகிறதை யெடுத்து எனக்குச் சொல்லுங்களென்றுன்-உடனே நபிநாயகமவர்கள்-இசுலாத்தினுடைய விபரங்களை எடுத்து அவனுக்குச்சொன்னுர்கள்-அதுகேட்டுச் சுருக்கத்து இசுலாத்தி லாகினர்.

ஹதீது.

ஹயாத்துல் குலூபென்னுங் கித்தாபிற் சொல்லியிருக்கின்றது யாதென்னில்-நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அசுகாபிமார்களைப்பார்த்து என்னுடைய அசுகாபிமார்களே- அல்லாகுத்த ஆலா என்னை மிகுறாஜிற்காக வானலோகத்தளவில் அழைத்தபோது அங்கே மூன்றுலட்சத் தறுபதினயிரந் தூணின்பேரில் அறுஷைக் கண்டேன்-அதில்-ஒருதூணுக் கொருதூணிடையில் மூன்றுலட்சம்வருஷத் தொலைதூரம்-அந்தத்தூண்கள் ஒவ்வொன்றிற்குங் கீழே பன்னீராயிரம் மைதானவெளியுண்டாயிருக்கின்றன - அந்த மைதானவெளி ஒன்றென்றும் மஷரிக்குதொடுத்துமஹரிபுவரைக்குமிருக்கின்றன.

அந்தமைதானவெளி ஒவ்வொன் றடங்கலிலும்-எண்பதினயிரம் மலக்குக ளிருக்கிறுர்கள்-அந்தமலக்குகள் அடங்கலும் (குல்குவல்லா) சூறத்தை ஓதுகிறுர்கள்-அப்படி ஓதிமுடிந்தபிறகு-அவர்கள்சொல்லுகிறுர்கள்-எங்களாண்டவனே துனியாவில் ஆண்பெண்களில் நின்றும் (குல்குவல்லா) சூறத்தை யோதுவார்களே அவர்களுக்கு இப்போது நாங்கள் ஓதினதவாபைத் திடனுக ஹதியாச் செய்துவிட்டோமென்று சொல்லக் கண்டேனென்று சொன்னுர்கள்.

அதுகேட்டு அசுகாபிமார்கள் யாவரு மிகுந்த ஆச்சரியப்பட்டார்கள்-அதுகண்டு நபிநாயகமவர்கள்-அசுகாபிமார்களைப்பார்த்து என்னுடைய அசுகாபிமார்களே நீங்கள் ஆச்சரியமாகுதீர்களோ வென்றதற்கு அவர்கள் ஆம் அல்லாவுடைய றசூலே நாங்கள் ஆச்சரியந்தா னுகிறோ

மென்றுசொன்னார்கள்-இவ்விதஞ்சொன்ன அசுகாபிமார்களைப் பார்த்து நபிநாயகமவர்கள் என்னுடைய நபுசு அவன்வசத்திலிருக்கிறதே அந்தநாயன் பேரிலேசத்தியமாகக் (குல்குவல்லாகு அகதுஎன்று) ஜிபுரீல் அலைகிஸ்ஸலா மவர்களுடைய சிறகின்பேரிலும் (அல்லாகுஸ்ஸமதுஎன்று) மீக்காயீல் அலைகிஸ்ஸலா மவர்களுடைய சிறகின்பேரிலும் (லம்யலிது வலம்யூலதுஎன்று) இசுறாயீல் அலைகிஸ்ஸலாமவர்களுடைய சிறகின் பேரிலும் (வலம்யக்குன்லகு குபுவன் அகது என்று இசுறாபீல் அலைகிஸ்ஸலாமவர்களுடைய சிறகின்பேரிலும் எழுதப்பட்டிருக்கின்றன.

ஆகலால் என்னுடைய உம்மத்துகளில்நின்றும் யாதாமொருவன் (குல்குவல்லா) சூறத்தை யோதுவானாகில் - அவனுக்கு அல்லாகுத்தஆலா தௌறுாத்துவேதம்-சபூர்வேதம்-இன்சில்வேதம் - புறுக்கான்வேதம்-ஆகிய இந்நான்கு வேதத்தையும் - ஓதுகிற தவாபைக் கொடுத்திடுவா னென்று திருவுளமாகி—மறுபடியும் நபிநாயகம் அசுகாபி மார்களைப் பார்த்துஎன்னுடைய அசுகாபிகளே-இன்னும் ஆச்சரியமாகுதீர்களோ வென்று கேட்டார்கள்-அதற்கும்-அசுகாபிமார்கள் நபிநாயகமவர்களைப் பார்த்து ஆம் அல்லாவுடையறசூலே ஆச்சரியமாகிறோ மென்றதற்கு நபிநாயகமவர்கள் அசுகாபிமார்களைப்பார்த்துஎன்னுடைய நபுசு அவன் வசத்திலிருக்கிறதே அந்தநாயன்பேரில் சத்தியமாகக் (குல்குவல்லாகு அகதுஎன்று) அபூபக்கர் சித்தீக்குடையநெற்றியின்பேரிலும் (அல்லாகுஸ்ஸமதுஎன்று) உமறுல்பாறூக்குடையநெற்றியின்பேரிலும் (லம்யலிதுவலம்யூலதுஎன்று) உதுமானிபின் னூறைனுடைய நெற்றியின்பேரிலும் (வலம்யக்குன்லகு குபுவன் அகதுஎன்று) அலியுல்முறுத்தலாவுடைய நெற்றியின்பேரிலும் - எழுதப்பட்டிருக்கிறது - ஆதலால் யாதாமொருவன் (குல்குவல்லா)சூறத்தை ஓதுவானாகில் - அவனுக்கு மேற்சொன்ன நான்குயார்களுடைய தவாபுபோ லுள்ளதை அல்லாகுத்தஆலா கொடுத்திடுவானென்று திருவுள்மானார்கள்-றலியல்லாகுத்தஆலா அன்கும்.

இன்னும் நம்முடைய நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒருநாளையதினம்-மதீனாநகரத்தின் கேட்டுவாயிலிடத்திலிருக்கும்போது அங்கே சிலபேர்களகூடி ஜனாஸாவைத் தூக்கிச் சமந்துகொண்டுவரக் கண்டு நபிநாயகம் அந்த மையித்துடனே வந்தவர்களைப்பார்த்து-இந்தமையித்து யாருக்காவது கடன்கொடுக்கவேண்

டிய திருக்கிறதோவென்று கேட்டார்கள்-அதற்கு அவர்கள் நபிநாயகத்தைப்பார்த்து-இந்தமையித்து நான்கு திருங்கடன்கொடுக்க வேண்டிய திருக்கிறதென்று சொன்னார்கள்.

அப்படிச்சொன்னவர்களைப்பார்த்து நபிநாயகம் இந்தமையித்துக் கடன்கொடுக்காமல் மவுத்தாய்விட்டதால் நான் அவனுக்குத் தொழுவிக்கமாட்டேன்-நீங்கள் தொழுங்களென்று சொன்னார்கள்- அப்போது ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்களிறங்கி நபிநாயகத்திடத்தில்வந்துமுகம் மதேஅல்லாகுத்தஆலா உங்களுக்குச்சலாம்சொல்லிச்சொல்லச்சொன்னதாவது யாதென்னில், நான் அல்லாவுடைய வுத்திரவினாலே மவுத்தான மனிதனுடைய சூறத்திலேவந்து அவர் கொடுக்கவேண்டிய கடனைக் கொடுத்துவிட்டேன்-ஆதலால்-நீங்கள் எழுந்து தொழுவியுங்கள் அவருடைய பாவங்களையெல்லாம் பொறுக்கப்பட்டுப் போய்விட்டபடியால்-யாதாமொருவர் அவருடைய ஜனாஸாவின்பேரிலே தொழுவாரேயானால் அவருடைய பாவத்தை அல்லாகுத்தஆலா பொறுத்துவிடுவாரென்று சொன்னார்கள்.

அதுகேட்டு நபிநாயகம் ஜிபுரீல் அலைகிஸ்ஸலாத்தைப் பார்த்து இந்தமையித்திற்கு இவ்வளவு சங்கையுந் தறஜாவும் என்னவிதமாய்க் கிடைத்ததென்று கேட்டார்கள்-அதற்குச் சிபுரீல் அலைகிஸ்ஸலாம் நபிநாயகத்தைப்பார்த்து -இந்தமையித்தான மனிதன் ஹயாத்தோடும்இருக்கச்சே-அல்லாகுத்தஆலாவுடையஸிபாத்துகள்-புகழ்கள் -வன்னிப்புகளுண்டாயிருக்கிற (குல்குவல்லா) என்கிற சூறத்தை நாளொன்றிற்கு நூறுதிரம் ஓதிவந்தார்- அந்தபறக்கத்தைக்கொண்டும்-இவ்வளவுசங்கை தறஜாக் கிடைத்ததென்று சொன்னார்கள்.

ஆதலால் முசிலீமான உடற்பிறந்தான்மார்களே (குல்குவல்லா சூறத்தை) யோதினதால் அந்தமனிதனுடைய கடன்தீர்ந்துபோய்விட்டதே அதுபோலே நாமும் கடன்காரருக்கு(குல்குவல்லாவை) யோதிக் கடனைவிசித் தள்ளிவிடலாமென்று எண்ணி யோதாதீர்கள் - தவாபையெண்ணி யோதினீர்களாகில் அல்லாகுத்தஆலா மிகுந்த தறஜாக்கள் கொடுப்பான்-ஆமீன்.

ஹிக்காயத்து.

சாலிகானயேர்களில் நின்று மொருவர் இராவுகாலம் நித்திரை செய்யும்போது-மக்கமாநகரத்திலுண்டான புறுக்களில்நின்றும் நாலு புறுக்களுக்குத் தலையில்லாமலிருக்கக்கனவுகண்டு-காலையிற்கண்விழித் தெழுந்து அவ்விடத்திலே கனவுக்குத் தகுபீர்சொல்லப்பட்ட ஒருவரி டத்திற்போய்த் தான் இராவுகண்ட கனவைச் சொல்லித்-தகுபீர்கேட் டார்-அதற்கவர் நன்றாக வுற்றுணர்ந்து யோசித்துப் புத்தியின்கூர்மை யினாலேதெளிந்து கனவுகண்டவரைப்பார்த்து ஓய்-சாலிகானவரே நீர் (பிசுமிலே) ஓதாமல் விட்டுவிட்டு நாறுவிடுத்தம் (குல்குவல்லா) சூறத் தை யோதியிருப்பீர்போ லிருக்கிறது-அதனாற்றான்-இவ்வித மான கனவுகண்டீரென்று சொன்னார்-அதுகேட்டுக் கனவுகண்டவர் கனவின் தகுபீர்சொன்னவரைப் பார்த்து நீர் உண்மைசொன்னீர் அது சரிதா னென்று ஒப்புக்கொண்டார்.

ஹதீது.

நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாக் கினாலே யாதாமொருவன் சோறுண்டதின் பின்னாலே (குல்குவல்லா) சூறத்தை ஒருதிரம்ஓதுவானாகில்-அவனுக்கு அல்லாகுத்தஆலா சுவர்க் கத்திலே சிவந்த மாணிக்கத்தினாலே ஒருபட்டணத்தைக் கட்டிடுவான் இன்னும் அல்லாகுத்தஆலா அவனுண்ட பிடியடங்கலுக்கும் ஒவ்வோர் பிடிக்கும் பதலாகப் பத்துநன்மையை எழுதிடுவானென்றுக் திருவுள மானார்கள்.

இன்னும்-நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாக்கினால்-யாதாமொருவன் (பிசுமிலுடனே) குல்குவல்லா சூறத் தையோதிவருவானேயானால் அவனுக்கு அல்லாகுத்தஆலாஐம்பதுவரு ஷத்துடைய பாவத்தைப் பொறுத்திடுவானென்று திருவுளமானார்கள்.

இன்னும் ஒருமனிதன்-நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்களிடத்தில் வந்து தன்னுடைய எழுமைத்தனத்தைச் சொல் லிக்கொண்டார்-அதுகேட்டு நபிநாயகம் அந்தமனிதனைப்பார்த்து-ஓய் மனிதனே நீர் உம்முடையவீட்டிலே நுழையும்போது (குல்குவல்லா) சூறத்தையோதும்-அப்படியோதுவீராகில்-அல்லாகுத்தஆலா உமக்குக் குறைவில்லாத ரிஸ்க்குக் கொடுப்பானென்று சொன்னார்கள் - அந்த

மனிதன் அதேபிரகாரம் (குல்குவல்லா) சூறத்தையோதிவந்தார் - அவர் பேரிலே அல்லாகுத்தஆலா - றிஸக்கை விஸ்தீரணமாக்கிவைத்தான்.

ஆதலால் (குல்குவல்லா) சூறத்தை ஓதுகிறதினால் - துனியாவினுடைய வருத்தமும் - ஆகிறத்துடைய வருத்தமும் - ஸக்கறாத்தினுடைய வருத்தமும் - கபுறுடைய இருள்கள் - கியாமத் தமளி யிவைகளையெல்லாம் விட்டும் - அந்தசூறத்து விடுதலைசெய்து நீக்கிவிடும் அதனாலே தான் அந்தசூறத்துக்கு - இகுலாசென்றுபெயர்வைக்கப்பட்டது - இந்தப்படிக்குத் - துற்றத்தல் நாசிகீன் - நுசுஹத்துல் மஜாலிசு - கஷீனத்துல் - அசுறுறுமுதலிய கித்தாபுகளில் வருகின்றன.

இன்னும் இந்த இகுலாசென்னும்சூறத்துடைய வரிசையை இவ்வளவென்று எழுதமுடியாது - ஆதலாற் - சுருக்கமாகமுடித்தனம் - முசிலிமாகிய உடற்பிறப்புகளே - இந்த ஒருசூறத்தையோதினபேர்கட்கு இவ்வளவுவரிசை தறஜாக் கிடைக்குமானால் - குறுஆன்முழுமையு மோதியதின்பிரகாரம் அமல்ச்செய்தால் எவ்வளவுவரிசை தறஜாக்கிடைக்குமென்மதை நீங்களே யுற்றுணர்ந்துபார்த்து - இபுலீசுடைய கலவிதத்திலாகாமல் குறுஆனையோதி அதின்பிரகாரம் அமல்ச்செய்வதுடனே - உங்கள்பிள்ளைகளையும் ஓதவைத்து நமதுதீனில் லிசுலாத்திற்குள்ளபறுலு - ஷறுத்துமுதலிய நன்னடத்தைகளிலே நடக்கும்படி வருத்திவையுங்கள் - இவ்விஷயத்துடனே நீங்கள் (குல்குவல்லா) சூறத்தைநாள் - க - க்குநூறுதிரம் - அல்லது - ஏக - திரம் - என்றமாத்திரம் ஓதிவருவீர்களானால் உங்களுடைய நன்னாட்டங்களை அல்லாகுத்தஆலா நிறைவேற்றிவைப்பான் - ஆமீன் - யாறப்பல் - ஆலமீன்.

குல்குவல்லா சூறத்துடைய வரிசையின்பயான்

முற்றிற்று.

யாசின் சூறத்துடைய வரிசையின்பயான்.

ஹதீது.

தெள்ளித்தெளித்துத் திருமணியாக்கப்பட்ட நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள் - யாதென்னில் வஸ்தடங்கலுக்கும் கல்புண்டாயிருக்கிறது - அதுபோலே (குறுஆனுக்குக் கல்பாகிறது யாசீன் சூறத்தாக இருக்கும்) ஆதலால் - யாதாமொரு

வன்(யாசீன்சூறத்தை)ஒருதிரம் ஓதுவானாகில் அந்த பறக்கத்தினால்-அவனுக்கு அல்லாகுத்தஆலா குருஆனைப் பத்துத்திரம்ஓதினநன்மை எழுதிடுவான்.

(யாசீன் சூறத்திறங்கின) சபபென்ன வென்றால் - காபிரானவர்கள்நபிநாயகத்தைப்பார்த்து-இந்தமுகம்மது-நபியுமல்ல-நாயன்அனுப்பப்பட்டவருமல்ல - ஆகிலுமிவர் அபித்தாலி புடைய எத்தீம்-இவர் மகுத்தாபுஹானாவென்கிற பள்ளிக்கூடத்திற்குப் போகவுமில்லை-இல்முகளைப் படிக்கவுமில்லை-ஆகலா லிவர் எவ்விதம் நபியாவாரென்று இன்காறுசெய்தார்கள்-இவ்விதங் காபிரீன்களசொல்லுகிறசொல்லை-றத்துச்செய்வதற்காக அல்லாகுத்தஆலா(யாசீன் சூறத்தை) யிறக்கினான்.

முசிலிமாகிய ஆண்பெண் ணிவர்கள் மவுத்தின் ஸக்கருத்துவேளையில் அவர்களிடத்திலிருந்து(யாசீன்சூறத்தை)யோதினால் அதிலுள்ள ஒவ்வோரெழுத்திற்கும்பதிலாகப்பத்துமலக்குகள்இறங்கி ஸக்கருத்தாய்க்கிடப்பவர்கள் முன்னிலேபோய் சப்புசப்பாய் நின்றுகொண்டு அவர்கள்பாவங்களைப் பொறுக்கத் தேடுவார்கள்.

பின்னர் மையித்தைக் குளுப்பாட்டுகிற இடத்திலும்போய் நின்று குளுப்பாட்டித்தீர்ந்து கபனிட்டுச் சந்தூக்கில்வைத்துத் தூக்கிக்கொண்டு போகும்போதுங் கூடவே பின்றொடர்ந்து போறதுடனே பிழைபொறுக்கவுந் தேடுவார்கள்.

இன்னும்-பசியாயிருக்கிறவன் வாக்குமனமும்ஒன்றுபோலே ஓர்மையாய்(யாசீன்சூறத்தை)யோதுவானாகில் அல்லாகுத்தஆலா அவனுடைய பசியைத் தீர்த்துவிடுவான்.

இன்னும்-நெஞ்சில்பயமும் விசனமு முடையவன் (யாசீன்சூறத்தை(யோதுவானாகில்-அல்லாகுத்தஆலாஅவனுடைய பயத்தையும் விசனத்தையும் நீக்கிடுவான்.

இன்னும்-பக்கீரான கடன்காரன்(யாசீன் சூறத்தை)யோதுவானாகில்-அல்லாகுத்தஆலா அவனைக் கடத்தைவிட்டும்நீக்கிக் கலாசாக்கிடுவான்.

இன்னும்-பாதாமொரு ஹாஜத்தையுடையவன்(யாசீன்சூறத்தை)யோதுவானாகில் அல்லாகுத்தஆலா அவனுடைய ஹாஜத்தை நிறைவேற்றி வைப்பான்.

இன்னும்-சுபுகுநேரத்தில் யாதாமொருவன் தொழுதபின்னர்-(யாசீன்சூறத்தை) யோதுவானாகில்-சாயந்தரமட்டிலும்-சாயந்தரமோதுவானாகிற் காலைநேரமட்டிலும் அவனும் அவன்பிள்ளைகள் முதலானவரும்- அல்லாவுடைய அமானதத்திலா யிருப்பார்.

இன்னும்-எந்தப்பட்டணத்திலாகிலும்-பலாய்-முசீபத்தைக் கொண்டும்-சோதிக்கப்படுமாகில் அப்போது கலப்பறுதலாகிய ஓரேநியத்தைக்கொண்டும்(யாசீன்சூறத்தை)யோதினால் அதின் பறக்கத்தினாலே அல்லாகுத்தஆலா அந்தபலாய் முசீபத்து-பஞ்சம்-உபாநோய்முதலிய சகல துன்பங்களையும் நீக்கிடுவான்-இந்தப்படிக்கு - யாசீன் தபுசீர்முதலானதுகளில் வருகின்றன.

ஹிக்காயத்து.

யாபிகி இமாம்அவர்கள் சொல்லுகிறார்கள்-யாதென்னில்-தாங்கள் எமன்ராச்சியத்திலுள்ள பட்டணங்களில் நின்று மோர்பட்டணத்திலுள்ள சாலிகான மொருவனைக் கண்டபோது அவர்சொன்னதாவது-அவ்விடத்திலே மவுத்தாகிப்போன ஒருவனை முறைபோலேகொண்டுபோய்க் கபுறில் அடக்கஞ்செய்துவிட்டு யாவரும் போனபின்னர்-அந்தக் கபுறிலே கடுமையான ஒருஇடியும்-ஒருஅடியுமுண்டானதை யொருசெய்கானவர்கேட்டு இதென்னஆச்சரியம் அறிவோமென் றவ்விடத்தில் நிற்கும்போது.

அந்தக் கபுறிலிருந்து ஓர்கறுத்தநாய் புறப்பட்டது-அதையவர்கள் பார்த்து-உனக்கென்னகேடு நீஎன்னவஸ்துவென்று கேட்டதற்கு-நாயானது-நான் இந்தக்கபுறிலடங்கிய மையித்துடைய அமலாயிருக்குமென்று சொல்லக்கேட்டு-அந்தப்பெரியோர்கள் நாயைப்பார்த்து - இடியும் அடியும் உன்பேரில்விழுந்ததா-அல்லது-மையித்தின்பேரில் விழுந்ததாவென்றுகேட்க - என்பேரிற்றான்விழுந்தது-அவனிடத்தில் (யாசீன் சூறத்தும்) இன்னும் அதைச்சேர்ந்த சூறத்தும் இருக்கக்கண்டேன்-அது அந்தமனிதனுக்குமெனக்கு மிடையிலே திரைபோட்டு அடித்துத் தூரத்தினதென்று சொன்னது - இவ்விதம்நாய்சொல்லக் கேட்டு அந்தப் பெரியோர்கள் எனக்குச் சொன்னார்களென்று சொன்னார்-இந்தப்படிக்கு-இறுஷாதுமுதலான கித்தாபுகளில் வருகின்றன.

ஆதலால் - மூமீன் முஸ்லிமான இகுவான்களே (யாசீன் சூறத்துக்கு) இவ்வளவு வரிசையிருந்தால் - குறுஆன் முழுமைக்கும் எவ்வளவு வரிசையிருக்கிறதென்று உங்களுடைய தெளிவான புத்தியைக்கொண்டு முற்றுணர்ந்து பார்த்து நீங்களும் குறுஆனையோதி இல்முகளைப்படித்து உங்கள்பிள்ளைகளையும் ஓதவைத்து இல்மின்பேரிலேபழக்கமாக்கி அல்லாறசூல்சொன்ன ஏவலாகிய நல்ல நடப்புடனே (யாசீன்சூறத்தைப்பாடமாக்கி யென்றமாத்திரம் நாளொன்றிற்கு(ஒருயாசீன் இரண்டுயாசீன்)ஓதி மவுத்தான உங்கள்தாய்தகப்பன் - பாட்டன் - பூட்டன்முதலானவர்பேரில் ஹதியாச்செய்து வருவீர்களாகில் - அதனாலே அவர்கள் பாவங்களைப்பொறுக்கப்பட்டு - அதாவும் இலேசாகுவார்கள் - உங்களுக்கும் அவர்கள் துஆச்செய்வார்கள் - அதனால் நீங்கள் நன்மையைப்பெறுவீர்கள் - ஆமீன் - யாறப்பல் - ஆலமீன்.

யாசீன் சூறத்துடைய வரிசையின்பயான்

முற்றிற்று.

ஆயத்துக்குறுசிய்யியுடைய வரிசையின்பயான்.

ஹதீது.

சிறப்பான (ஆயத்துக் குறுசிய்யி) நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கட்கு இறங்கினபோது அதினுடனே நாற்பதினாயிரம் - மலக்குக ளிறங்கினார்க ளென்றும் - இன்னுமோர் றிவாயத்தில் அந்த ஆயத்தை வலுப்பமாக்கிவைக்கிறதற்காக எண்பதினாயிர மலக்குக ளிறங்கினார்க ளென்றும் - நுசுஹத்துல் மஜாலிசென்னுங் கித்தாபில் வருகின்றன.

இன்னும் (ஆயத்துக்குறுசிய்யி) இறங்கினபோது - துன்யாவிலுண்டான புத்துஹான்களெல்லாம் அடித்துமோதி முகங் குப்புற விழப்பட்டன.

இன்னும் - துனியாவிலுள்ள இராஜாக்களெல்லா முகங் குப்புறவிழுந்ததுடனே அவர்கள் தலையில் அணிந்திருக்கிற கிரீடங்களெல்லாந் தலையைவிட்டுக் கழண்டு கீழே விழப்பட்டன.

இன்னும்-ஷைத்தான்களெல்லாம் வெருண்டோடினதிலே-சிலது ஒன்றுக்கொன்று அடித்துமோதிக்கொண் டோடிவந்துஇபுலீசிடத்திற் கூடிநின்றுகொண்டு தாங்கள்பட்ட அவஸ்தைகளைச்சொற்றன - அது கேட்டு இபுலீசு அந்த ஷைத்தான்களெல்லாத்தையும் பார்த்து - என்னுடையஷைத்தான்கூட்டங்களே நீங்கள்விரைவாகப் பூமியிலெங்குஞ் சுற்றித்திரிந்து என்னகாரணம் நடந்ததென்று பார்த்துவாருங்களென் றேவினன்.

அப்போது ஷைத்தான்கள் இபுலீசைவிட்டும் புறப்பட்டுப் பல பல திக்குகளெல்லாம் பிரிந்துபோய் மஷ்ரிபு - மகிருவரையிலுஞ்சுற் றிப்பார்த்து அறபுராச்சியத்திலாகித் திருமதீனமா நகரத்திற்குள்ளே புகுந்துபார்க்கும்போது-அங்கே நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு அல்லாகுத்தஆலா (ஆயத்துக்குறுசிய்யி) என்கிற ஆயத்திறக்கினசெய்தி திட்டவட்டமாகத் தெரிந்துகொண்டு போய்விட் டார்கள்.

ஹதீது

இருலோகத்துக்கும் ஆண்டகையாகிய நபிநாயகமுகம்மதுசல்லல் லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள் - குறுஆனில் வலுப்ப மான ஆயத்தாகிறது (ஆயத்துக்குறுசிய்யி) ஆக இருக்கும்ஆதலால் யா தாமொருவன் (ஆயத்துக்குறுசிய்யினை) ஓதுவானாகில் ஓதின நேர முத லிருந்து மறுபடி அந்நேரம்வருகிறமட்டிலும் அவனுக்குநன்மைகளை எழுதும்படிக்கும் - பாவங்களை யழிக்கும்படிக்கும் அல்லாகுத்தஆலா ஒருமலக்கை அனுப்பிவைப்பான்- அந்தமலக்கு வந்து அசேபிரகாரம் செய்வார்.

இன்னும்-ஷம்சுல் மதாரிபென்னுந் கித்தாபிலே சொல்லப்பட் டிருக்கிறது-நம்முடைய நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல் லமவர்கள் திருவாக்கினாலே திருவுளமானார்கள்-யாதெனில் அல்லா குத்தஆலா வெளுமையான வோர்முத்தைப்படைத்து- அந்த முத்தில் நின்றும் உயர்ந்த அம்பனைப்படைத்து - அந்த அம்பனைக்கொண்டு (ஆயத்துக்குறுசிய்யியையெழுதி) அவன் தன்னுடைய வலுப்பமான சி றப்பைக்கொண்டும்-சத்தியஞ்செய்து யாதாமொருவன் (ஆயத்துக்குறு சிய்யைப்) பறுலாக்கப்பட்ட தொழுகைக்குப் பின்னாலே யோதுவானா கில்-எட்டு சுவர்க்கத்துவாயில்களையும் திறக்கப்படும்-அப்படித்திறக்கப்

பட்ட வாயில்களில்நின்றும் எந்தவாயிலில் அவன் புகுத நாடுவானோ அந்தவாயிலிலே புகுந்துகொள்வானென்று சொன்னானென்று நபிநாயகம் திருவுளமானார்கள்.

இன்னும்-நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் தாங்கள் திருவாக்கினால் - யாதாமொருவன் உளூச்செய்து முடிந்தவுடனே (ஆயத்துக்குறுசிய்யினை) ஓதுவானாகில்-அவனுக்கு அல்லாகுத்தஆலா நாற்பது தறஜாத்துகளை யுயர்த்திவைப்பானென்று திருவுளமானார்கள்.

இன்னும்-நபிநாயகம் தங்கள் திருவாக்கினால் - யாதாமொருவன்-(ஆயத்துக்குறுசிய்யினை)ஓதுவானாகில்-அதிலுள்ள ஹறுபுகளென்னும் அட்சரங்கள் ஒவ்வொன்றுக்கும் - ஒவ்வோர்மலக்குகளை அல்லாகுத்தஆலா படைப்பான்-அந்தமலக்குகள் அதை யோதுவானுக்குக் கியாம முடியும் நாள்மட்டிலும் பிழைபொறுக்கத் தேடுவார்களென்று திருவுளமானார்கள்.

இன்னும் வேறோர் ஹதீதில் யாதாமொருவன் தன்னுடைய நித்திரையிற் கண்விழிக்காமற் கனவிலே (ஆயத்துக்குறுசிய்யினை)யோதுவானாகில் அவனுக்கு அல்லாகுத்தஆலா சுபுகுநேரமட்டிலும் றகுமத்துடைய வாயில்களைத் திறந்துவிடுவான்-இன்னும்-அவனுடையசரீரத்திலே யுண்டாயிருக்கிற உரோமங்கள்-ஒவ்வொன்றுக்கும்-பதிலாக ஒவ்வோர்பட்டணத்தைக்கொடுத்திடுவான்-இன்னும் அவன் அன்றஇராத்திரியிலேமவுத்தாகுவானாகில்- அந்தமவுத்துஷகீதுடையமறுத்தபாவாக இருக்குமென்றும் வருகின்றன.

இன்னும்-வேறோர்கித்தாபில் யாதாமொருவன் (ஆயத்துக்குறுசிய்யினைப்)பொழுது குறுபாகிறதருணத்தில் நாற்பது திரம் ஓதுவானாகில்-அவனுக்கு அல்லாகுத்தஆலா நாற்பதுஹஜ்ஜியுடையதவாபான நன்மையை யெழுதிடுவானென்றும் வருகின்றன.

ஹதீது

அப்துல்லாவுடைய மகனார்-ஜாபிறவர்கள் - நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்களென்று சொல்லுகிறார்கள் யாதென்னில்-ஒருவன்-தன்னுடைய வீட்டைவிட்டும் வெளியேபுறப்படும்போது (ஆயத்துக்குறுசிய்யினை) ஓதுவானாகில் அவனுக்கு முன்-பின்-வலம்-இடம்களில் நின்றும் காத்துக்கொள்ளும்படியாக எழுபதினாயிரம் மலக்குகளை அல்லாகுத்தஆலா அனுப்பிவைப்பதுங்

தவிர அவன்வீட்டுக்குவருகிறதற்குமுன்பாக மவுத்தகிப்போனானாகில் அவனுக்கு எழுபது ஷகீதுகளுடைய தவாபைக் கொடுத்திடுவானென்று சொல்லியிருக்கிறார்கள்

இன்னும்-நபிநாயகம் தங்கள் திருவாக்கினாலே திருவுளமானார்கள் யாதாமொருவன்-தன்னுடைய வீட்டைவிட்டும் வெளியே புறப்படும்போது (ஆயத்துக்குறுசிய்யியை) யோதுவானாகில்- அவ்வளவில் அல்லாகுத்தஆலா பிழைபொறுக்கத் தேடுவதற்காக எழுபதினாயிரமலக்குகளை அனுப்புவான்.

இன்னும்- அவன் வெளியிலிருந்துவந்து வீட்டிற்புகுந்து (ஆயத்துக்குறுசிய்யியை) ஓதுவானாகில் அவனுடைய இரண்டு கண்ணுக்கிடையிலுமுள்ள மிடிமையும் - அவனைவிட்டும் அல்லாகுத்தஆலா நீக்கிவிடுவான்.

இன்னும்-அவன் நிர்க்கிளாசெய்கிற இடத்திலே (ஆயத்துக்குறுசிய்யியை) ஓதுவானாகில் ஷைத்தானைவிட்டும் அவனை (ஆயத்துக்குறுசிய்யி) காத்துக்கொள்ளும்.

இன்னும் கோபம் வரும்போது (ஆயத்துக்குறுசிய்யியை) ஓதி அவனுடைய இடதுபக்கத்திலே துப்புவானாகில் ஷைத்தானைத் தடுக்கப்படும்-அவனைவிட்டுக் கோபம் பறந்தோடிப்போய்விடுமென்று நபிநாயகம் திருவுளமானார்கள்.

* இன்னும்-நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் தங்கள் மருமகனாரான-அலியிபுனி அபீத்தாலிபு றலியல்லாகு அன்கவர்களுக்குச் சொன்னார்கள்-யாதென்னில்-யாதாமொருவன் தன் வீட்டிலே (ஆயத்துக்குறுசிய்யியை) யோதப்படுகிறதில்லை-அந்தவீட்டை ஷைத்தான் முப்பதுநாள் வெறுத்தேயொழிய-இன்னும்-அந்தவீட்டிலே வஞ்சனை-சூனியஞ் செய்பவர்களில்நின்றும்-ஆண்பெண்கள் - நாற்பதுஇரவைக்கு நுழையமாட்டார்கள்-ஆதலால்-அலியே நீரும் (ஆயத்துக்குறுசிய்யியை)ஓதும்-உம்முடைய பிள்ளைகளுக்கும் வீட்டிலுள்ளவர்களுக்கும் - அசல் வீட்டுக்காரர்களுக்கும் படித்துக்கொடுமென்று திருவுளமானார்கள்.

---

* இந்த ஹதீதின்கருத்து ஒருநாள் (ஆயத்துக்குறுசிய்யி)ஓதப்பட்டவீட்டில் முப்பதுநாளைக்கு இபுலீசு நெருங்கமாட்டான்.

நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய திருவாக்கினாலே சொல்லக்கேட்டதாக-மாலிக்குடைய மகனார் அனசு றலியல்லாகு அன்கவர்கள் சொல்லுகிறார்கள் யாதென்னில்-யாதாமொரு முசிலீமானவன் (ஆபத்துக்குறுசிய்யியை) ஓதி அதினுடைய தவாபை மவுத்தாகி யடக்கப்பட்டிருக்கிற கபுருளிகளுக்கு ஹதியாச் செய்வானாகில்-மஷரிக்குத் தொடுத்து மக்றிபு வரைக்கும் அடக்கப்பட்டிருக்கிற கபுறுகளுக்கு நாற்பதுஒளிவை அல்லாகுத்தஆலா புகுதவைத்திடுவான்.

இன்னும்-அவர்களுடைய கபுறுகளை அல்லாகுத்தஆலா விஸ்தீரணமாக்கி வைத்திடுவான்-இன்னும்-ஒவ்வோர் மையித்துக்கும் - ஒவ்வோர் தறஜாவை அல்லாகுத்தஆலா உயர்த்திடுவான்.

இன்னும் (ஆபத்துக்குறுசிய்யியை)ஓதுகிறவனுக்கு அல்லாகுத்தஆலா அறுபதுநபிமார்களுடைய தவாபுபோலுள்ள தவாபைக்கொடுத்திடுவான்.

இன்னும்(ஆபத்துக்குறுசிய்யியை)ஓதுகிறவனுக்கு அதினுடைய ஆயத்துகள் ஒவ்வொன்றுக்கும் பதிலாக எழுத்துகளின்தொகை யெவ்வளவோ அவ்வளவுமலக்குகளை கியாமநாள்வரையிலும் பிழைபொறுக்கத்தேடும்படிக்கு அல்லாகுத்தஆலாவுண்டாக்கிடுவானென்றும் நபிநாயகம அலிறலியல்லாகு அன்கவர்களுக்குத் திருவுள மானார்கள்.

இந்தப்படிக்கு கஸீனத்துல் அசுறார்-நுசுஹத்துல் மஜாலிசென்னுங் கித்தாபுகள்முதலான மற்றுங் கிதாபுகளிலும் வருகின்றன. இந்த (ஆபத்துக்குறுசிய்யி) உடைய வரிசைகள் அனேகமிருக்கின்றன-என்கினு மிவ்விடத்திலே சுருக்கமாக எடுத்துக் காட்டலாயிற்று-ஆதலால் மூமீன் முசிலீமாகிய ஐகுவான்களே (ஆபத்துக் குறுசிய்யி) ஒன்றை யோதுபவர்க்கு இவ்வளவு சிறப்பும்-பெருமையும்-தவாபு முண்டாயிருக்கச்சே-குர்ஆன் முழுவதும் ஓதினவர்களுக்கு-எவ்வளவுபேறு தறஜா கிடைக்குமென்று உங்களுடைய தெளிவான புத்தியினாலே ஆய்ந்தாராய்ந்துபார்த்து அல்லாகுத்தஆலா வரிசையாக நமக்குத் தந்திருக்கிற குறுஆனையோதி அதிலுள்ள பிரகாரம் ஏவல் விலகலின்ன

எ

தென்று இல்முமுயர்ச்சியுடனே அறிந்து இபாதத்துச்செய்துவருவீர்க
ளாக ஆமீன்-யாறப்பல்-ஆலமீன்.

ஆபத்துக் குறுசிய்யி வரிசையின்பயான்
முற்றிற்று.

இல்முபடிக்கிற வரிசையின்பயான்.

———o✻o———

ஹதீது.

நம்முடைய காரணகுருவான கற்பகதருவான நபிநாயகமுகம்மது
சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுடையமுபாறக்கான திருவாயினற்
திருவுளமானார்கள்-யாதென்னில்-இல்மைத்தேடிப் படிக்கிறது-மூமீன்
முசிலீமான ஆண்பெண் யாவர்பேரிலும்-பறுலாயிருக்குது - அப்படி
இல்முபடித்துக்கொள்கிறதற்குத் தாங்களிருக்கிற இடத்தில் உஸ்தாதில்
லாதிருந்தால் சின்ராச்சியத்தி லாவதுபோய் இல்மைத்தேடிப் படிக்க
வேண்டுமென்றும்.

இன்னும்-நபிநாயகம் யாதாமொருவன் - அமல்ச்செய்கிறதற்காக
வேண்டி இல்மில் ஒருபாடைப் படிக்கிறதாவது-ஐந்நூறு றக்குஆத்து
ஆயிரம் றக்குஆத்து நபில்த்தொழுகிறதைக்காண கைர் நலமாயிருக்கு
மென்றுஞ் சொன்னார்கள்.

இன்னும்-நபிநாயகர் திருவுளமானதாக-இபுனி அப்பாசு றலியல்
லாகு அன்குமா அவர்கள்-சொல்லியிருக்கிறார்கள் - யாதென்னில்-யாதா
மொருவன்-ஒருஸா அத்துநேரம் இல்மைத் தேடுகிறதாவது-இராவுகா
லத்திலே நின்றுவணக்கிறதைக்காண மிகவு மேற்றமாயிருக்கும்.

இன்னும்-யாதாமொருவன்-ஒருநாள் இல்மைத்தேடிப் படிக்கிற
தாவது - மூன்றுமாதம் நோன்புபிடிக்கிறதைக்காண மிகவும் கைறான
தாக இருக்குமென்றும்.

இன்னும்-நபிநாயகம் யாதாமொருவன்-இல்மைப்படிக்காடி இ
ருப்பிடமிட்டு எழுந்து பிர[illegible]போகத் தன்னுடைய காலத்துக்கி
வைக்கிறதற்கு முன்பாக அவனுடைய பாவங்களைப் பொறுக்கப்படு
மென்றும்-இன்னும் இல்மில் ஒருபாடைப் படிக்கிறதாவது - அபீகு
பைசுமலை பொன்னாகஇருந்து அதைப் பீசபீலில் செலவுசெய்வதைக்
காணக் கைறு இருக்குமென்றும் திருவுளமானார்கள்.

இன்னும்-நபிநாயகம் திருவுளமானார்கள்-யாதாமொருவன் - இல்முபடிக்கநாடி ஆலிம்களுடைய வாசிலிற்போய் இல்மைப்படிப்பானேயானால்-அவனுக்கும்- இல்மைப்படிக்கக் கேட்டுக்கொண்டிருக்க நாடிப்போவானே அவனுக்கும்-ஒவ்வோர் காலடிக்கு ஒவ்வோர் வருஷத்து இபாதத்தை யெழுதப்படுமென்றும்.

இன்னும் நபிநாயகம் அப்படி இல்முபடிப்பவனுக்குமதைக்கேட்பவனுக்கும் சொர்க்கத்தில் ஒருபட்டணம் உண்டாக்கப்படுமென்றும்-அவன் பூமியில் நடந்துபோகச்சே பூமி யவன்பிழையைப்பொறுக்கத்தேடுமென்றும்-அவன் நரகத்தைவிட்டும் - உரிமைபெற்றவனென்று மலக்குகள் சாட்சிசொல்வார்களென்றுந் திருவுளமானார்கள்.

இன்னும்-நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் [illegible] தற்று றலியல்லாகுஅவர்கள் சொல்லியிருக்கிறார்கள் யாதென்னில்-ஆலிம்களுடைய மஜ்லிசில் யாதாமொருவன் ஷறகியத்தான குக்குமகளைக் கேட்டுப்படிக்க ஹாஸிருகிறது-ஆயிரம்-றக்கூஆத்து நபிற் தொழுகிறதைப்பார்க்கிலும் - ஆயிரம் வியாதியஸ்தரைக் கண்டு விசாரிக்கிறதைப் பார்க்கிலும்-ஆயிர மையித்துக்குப்போய் காலிருகிறைப்பார்க்கிலும் ஏற்றமாகஇருக்குமென்றும்.

இன்னும்-நபிநாயகம்-வஸ்துகளுக்குத்தூணுண்டும் அதுபோலே தீனுக்குத் தூணாகிறது பிக்குஎன்கிற இல்மாயிருக்குமென்று திருவுளமானார்கள்.

இன்னும்-நபிநாயகந் திருவாயினாலே-இல்முபடித்துக்கொடுக்கிறவனுக்கு அல்லாகுத்தஆலா றகுமத்துச்செய்ய தடவே-மலக்குகளும்-வானம்பூமிகளிலுள்ள வஸ்துகளும் புடைகளிற்மரித்திருக்கும் எறும்புகள் கடலிலுள்ள மீன்கள்முதலிய வஸ்துகளும் - பிழைபொறுக்கத்தேடுமென்றுந் திருவுளமானார்கள்.

இன்னும்-இபுனு அப்பாசு றலியல்லாகு அன்குமா அவர்கள் சொன்னதாக-அசாக்கிறுடைய மகனும்-தபுறானியி என்பவர்களும் சொல்லியிருக்கிறார்கள்-யாதென்னில்-சுலேமான் அலைகிஸ்ஸலாமவர்களிடத்தில் திரவியம்-இராஜரீகம்-இல்மு ஆகிய இம்மூன்றில் ஒன்றும்-எது உமக்குவேண்டுமென்று அல்லாகுத்தஆலாவாலே கேட்கப்பட்டபோது-சுலேமான் அலைகிஸ்ஸலாமவர்கள்-இல்மைத்தான் தெரிந்தெடுத்துக்கொண்

டார்கள்-அதனால்-அவர்களுக்கு இராஜரீகத்தையும் - திரவியத்தையுங் கொடுக்கப்பட்டதென்று நபிநாயகந் திருவுளமானார்கள் இந்தப்படிக்கு முறுஷிது முதலாகிய கித்தாபுகளில் வருகின்றன.

நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் - இன்சானைப்பார்த்து நீ இல்மைப்படித்த ஆலிமா யிருந்துகொள் அல்லது நீ இல்மைப் படிக்கிறதாக யிருந்துகொள் - அல்லது நீ இல்மைக்கேட்கிறதாக யிருந்துகொள்- அல்லது - நீ இல்மின்பேரிலே பிரியம்வைத்தவனாக யிருந்துகொள்- இதேதவிர - ஐந்தாவதாக இருக்கவேண்டாம். அப்படியிருந்தாற் கெட்டலைந்து ஹலாக்காய்ப் போவாயென்றுதிருவுளமானார்கள்.

இன்னும்-நபிநாயகந் தங்கள் திருவாயினாலே இரவு பகல் அடங்கலிலும்-ஆயிரம்றகுமத்துஇறங்கிறது-அதில் தொளாயிரத்தித்தொண்ணூற்றொன்பது றகுமத்து ஆலிம்களுக்கும்-இல்மைத்தேடிப்படிக்கிறவர்களுக்குமாயிருக்கும்-ஒரு றகுமத்துமாத்திரம் மற்றமனிதர்கட்காக இருக்குமென்று திருவுளமானார்கள்-இந்தப்படிக்கு-நுசுஹத்துல் மஜாலிசென்னுங் கித்தாபில் இரண்டாவது ஜில்தில் (அஅ)'வது பக்கத்தில் வருகின்றன.

இன்னும்-இல்மைப்பற்றிய வரிசைகள் அதிகமாக இருக்கின்றன- என்கினு மிவ்விடத்திற் சுருக்கமாக முற்றிவித்தனம்-ஆதலால் எமது பிரியமுள்ள மூமீன் முசிலீமான சகோதரர்களே-உங்களுடைய தெளிவான புத்திமதியினால் இத்தபாபை நன்றாகப் பார்வையிட்டு மாய்த் துனியாவைநம்பாமல் அல்லாறசூல் சொன்னசொற்போலே இல்லிசுலாத்திலுள்ளபறுலு-ஷறுத்து-வாஜிபு-சுன்னத்துமுஸ்தஹப்பு-ஹலால் ஹறும்-ஏவல்-விலகல்-தெளகீது-அகீதா-மஹரிபா-முதலான இல்முகளைப் படித்து நல்ல அமல்களைச்செய்து சாலிகீன்களென்று இம்மை றுமமையிலும் ஈடேற்றம்பெறுவீர்களாக- ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

இல்முபடிக்கிற வரிசையின்பயான்

முற்றிற்று.

தொழுகையுடைய வரிசையின்பயான்.

ஹதீது

நம்முடைய நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் - கற்பூரவாடைகமழுந் தங்கள் திருவாய்ச்சியினாலே திருவுள மானார்கள - யாதெனில்-ஐந்துகாரியத்தின்பேரில்-இசுலாத்தை யெடுக்கப்பட்டது-அதில் ஒன்றாவது சிறப்பான (லாஇலாக இல்லல்லாகு முகம்மதுற்றசூலுல்லாகி என்னுங் கலிமா) இரண்டாவது - ஐந்துநேரத்துத் தொழுகை-மூன்றாவது-ஸக்காத்துக்கொடுக்கிறது-நான்காவது-றமலான்மாதத்தில் நோன்புபிடிக்கிறது-ஐந்தாவது-மக்கத்திற்போய் ஹஜ்ஜிசெய்கிறது-ஆக இவ்வைந்து காரியமுமா யிருக்கும்.

இன்னும்-என்னுடைய உம்மத்துகள்பேரிலே பறுலாக்கப்பட்டதில் முந்தினது-தொழுகையா யிருக்குமென்றும்-இன்னும்-அவர்களுடைய அமல்களில்நின்றும்-உயர்த்தப்படுகிறதில் முந்தினது - தொழுகையா யிருக்குமென்றும். இன்னும்-கியாமநாளையில்-ஈமானுக்குப்பின்னாலே கேள்விகேட்கப் போகிறதில் முந்தினது-ஐந்தொகுத்துத் தொழுகையா யிருக்குமென்றும்.

இன்னும்-வஸ்துகளுக்குத் தூணுண்டா யிருக்கின்றது-அதுபோல் தீனுக்குத் தூணாகிறது தொழுகையா யிருக்குமென்றும் - அத்தொழுகையை யாதாமொருவன் தரிபாடாகத் தொழுது வருவானாகில்-திடனாகத் தீனைத் தரிபடுத்திவைத்தவனாவான்.

இன்னும்-தொழுகையை விடுவானாகில் திடனாகத் தீனையிடித்தவனாவானென்றுந்திருவுளமானார்கள்-இந்தப்படிக்கு-துற்றத்துன்னாசிகீன்னுபாபு-இறுஷாதுல் இபாதுமுதலிய கித்தாபுகளில் வருகின்றன.

நம்முடைய நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் தங்களுடைய அழகான முபாறக்கான வாயினாற் திருவுளமாகினார்கள் - யாதெனில் - தொழுகையாகிறது அல்லாகுத்த ஆலாவைப் பொருத்தமாக்கி வைத்துவிடும் இன்னும்-நபிமார்களுடைய பாதையாகவும் - மலாயிக்கத்துகளுக்கு உவப்பானதாகவும்-மஹுரிபாவுக்கு ஒளிவாகவும்-ஈமானுக்கு அசிலாகவும்-அமல்களைக் கபூலாக்கிவைக்கிறதாகவும்-வியாபாரங்களுக்கு பறக்கத்தாகவும்-பகைஞர்களுக்கு ஆயுதமாகவும்-ஷைத்

தான்களுக்குப் பொருந்தக்கேடாகவும்-இசுறுயீல் அலைகிஸ்ஸலாமவர்களுக்குந்,தொழுகையை யுடையவனுக்கும் இடையிலே மன்றுட்டம் செய்கிறதாகவும்-தொழு வன் கபுறிலே கியாமநாள்வரைக்கும் விளக்காகவும்-உடுமானமாகவும்-மருவியதுணையாகவும்-தலையின்மேலே நிழலிட்டுக் கொள்கிறதாகவும் கிரீடமாகவு மிருக்கும்.

இன்னும்-தொழுதவனுக்கும்-நரகத்திற்கும்-இடையிலே தொழுகை திரைபோட்டுக் கொள்ளும் - அல்லாகுத்த ஆலாவுக்கு முன்பாக மூமீனுனபேர்களுக்குத் தொழுகை அத்தாட்சியாகவும்-மீஸான் திராசியிலும் கனமாகிடும்-ஸிர்றாத்தல் முஸ்தகீம் பாலத்திலு மின்வெட்டிமறைந்ததுபோலே தொழுகை கடத்திவைத்திடும்.

இன்னுந்-தொழுகையாகிறது-சொர்க்கலோகத்திற்குத் திறவுகோலாகவும்இருக்குமென்று-கவ்னத்தில் அசுறுமுமுதலிய கித்தாபுகளில் வருகின்றன.

இன்னும்-நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லந் திருவுளமானுர்கள்-யாதாமொருவன்-ஐந்துநேரத்துத் தொழுகையைப் பேணுதலாகத் தொழுதுவருவானுகில்- அந்தத்தொழுகை அவனுக்குஒளிவாகவும்-அத்தாட்சியாகவும்-கியாம நாளையில் ஈடேற்றமாகவும் ஆகிவிடும்.

இன்னும்-ஐந்தொகுத்துத் தொழுகையையும்-பேணித்தொழாமலிருப்பானேயானுல்-அவனுக்கு ஒளிவும்-அத்தாட்சியும் - ஈடேற்றமுமுண்டாகமாட்டாது-அவன் கியாமநாளையிலே காறூன்- பிறவூன்-ஹாமான்-உபையிபுனுகலபு-இவர்களுடனே இருப்பான் - இப்பேர்ப்பட்ட கூட்டத்திற்சேராமல அல்லாகுத்தஆலா நம் மனைவோரையும் காத்து ஸாலிகீன்களுடைய கூட்டத்தி லாக்கிவைப்பானுகவும்-ஆமீன்.

இன்னும்-நபிநாயகந் திருவுளமானுர்கள்-யாதாமொரு அடியான் தொழுகையைநாடி எழுந்திருந்தானுகில் - அவனுடையபாவங்களை அவன் தலையின்பேரிலும்- இரண்டு தோளின்பேரிலும்- கொண்டுவந்து வைக்கப்படும்-அவன்-றுக்கூகு-சுஜூது செய்யும்போதெல்லாம் பாவங்கள அவனைவிட்டும் விழுந்து போய்விடும்-இந்தப்படிக்கு-இறுஷாது-இபாதுமுதலிய கித்தாபுகளில் வருகின்றன.

இன்னும்-அபுகுறைறு றலியல்லாகு அன்கவர்கள் நபிநாயகந்திருவுளமானதாகச் சொல்லுகிறுர்கள்-யாதென்னில்-நபிநாயகமுகம்மதுசல்

ல்லாகு அலேஹிவசல்லமவர்கள் அசுகாபிமார்களைப்பார்த்துஎன்னுடை
யஅசுகாபிமார்களே உங்களில்நின்றும் ஒருவனுடைய வீட்டுவாசலிலே
ஒருஆறுண்டாயிருந்து-அதிலே அவன்நாளொன்றிற்கு ஐந்துதரங் கு
ளிசதானாகில்-அவனுடைய அழுக்கில்நின்றும் கொஞ்சமாவது அவன்
பேரிலே தங்கியிருக்குமா சொல்லுங்களென்று கேட்டார்கள்

அதற்கு அசுகாபிமார்கள் நபிநாயகத்தைப்பார்த்து எங்கள் நாய
கமே அழுக்குத்தங்காமற் போய்விடுமென்று சொன்னார்கள்-அப்போ
து நபிநாயகம் அசுகாபிமார்களைப்பார்த்து ஆற்றிற் குளிப்பானுடைய
அழுக்குக் கழன்றதுபோலவே-ஐந்துநேரத்துத் தொழுகையைத்தொ
ழப்பட்டவனுடைய பாவத்தையும் - அத்தொழுகையைக் கொண்டும்
அல்லாகுத்தஆலா நீக்கிவிடுவானென்று திருவுளமானார்கள்.

இன்னும்-நபிநாயகம் யாதானொருஅடியான் இரண்டு றக்ஆத்
துத் தொழுவானாகில் அவனைப்பார்த்து இலட்சமலக்குகள் ஆச்சரியப்
படுவார்கள் - அல்லாகுத்தஆலா அவனைக்கொண்டும் இலட்சமலக்குக
ளுடனே பெருமை பேசுவானென்றுந் திருவுளமானார்கள்.

இன்னும்-நபிநாயகம் நம்முளில்நின்று மொருவன் எங்கேயிருந்த
போதிலும் ஐந்துநேரத்துத் தொழுகையின் பேரிற் பேணுதலாகத்
தொழுதுவருவானாகில் அவனை கியாமத்துநாளையில் சொர்க்கம் புகுத
கிறதற்கு முந்தின கூட்டத்தோடும் ஸிறுத்தல் முஸ்தகீம்பாலத்திலே
மின்வெட்டி மறைந்ததுபோலே நடந்து கடந்திடுவானென்றும்-அந்த
கியாமநாளையிலே அவனுடைய முகமானது நிறைந்த பூரண சந்திர
னைப்போலாகிவிடுமென்றும்.

இன்னும்-அவனை மலக்குகள் இரவும்பகலுமாகக்காத்துக்கொண்
டிருப்பார்களென்றும்-இன்னும்-அவனுக்குப் பீசபீற் காரருடைய தற
ஜாநன்மை கிடைக்குமென்றுந் திருவுளமானார்கள்.

இன்னும் நபிநாயகம் திருவுளமானார்கள்-யாதாமொரு மூமினான
அடியான்தொழ வுலூச்செய்வானாகில் அவன் கண்ணாலே பார்த்தபாவ
முகங்கழுவுகிற தண்ணீருடனே வெளியாகிப் போய்விடும்.

இன்னும்-அவன் இரண்டுகைகளையும் கழுவுவானாகில்- அக்கை
களினாற்றொட்ட பாவங்களெல்லாம் தண்ணீருடனே வெளிப்பட்டிடும்
இன்னும்-இரண்டு கால்களையும் கழுவுவானாகில்- அந்தக் கால்களினால்

நடந்துகொந்த பூாவங்களெல்லாம் தண்ணீருடனே வெளிப்பட்டிடும்-இவ்விதத்தில் அவன் பாவங்களைவிட்டுந் துப்புரவாகிடுவான்-யிந்தப் படிக்கு-இறுஷாதமுதலிய கித்தாபுகளிற் சொல்லிவருகின்றன.

இன்னும்-நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்-யாதாமோர் அடியான் தொழுகிறதற்காக எழுந்து நின்று அல்லாகு அக்பரென்று தக்பீர்கட்டுவானாகில் - அவன் தன்னுடைய பாவங்களைவிட்டும் நீங்கி யன்றுபிறந்த பாலகனைப்போலேயுறப் படுவான்-பின்பு-அவன் (அவூது பில்லாகி மினஷ்ஷைத்தானிற்றஜீம்) என்று ஓதுவானாகில்-அவனுடைய தேகத்தி லிருக்கிற உரோமங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் நன்மையாக உரோமமெவ்வளவு தொகையாகிறதோ அவ்வளவுதொகை நன்மைகளை யெழுதப்படும்

பின்பு-அவன் (அல்கம்துசூறத்தை) யோதுவானாகில்-அவன் ஹச்சும்-உம்ருவும் செய்தவனைப்போ லாகிடுவான்-பின்பு-அவன்-றுக்கூவு செய்வானாகில் தன்னுடைய எடைக்குப் பொன்னைக்கொண்டும்-ஸதக்காச் செய்தவனைப்போ லாகிடுவான்-பின்பு அவன் சுபுஹானறப்பியல் அலீமென்று சொல்லுவானாகில்-வானத்திலிருந்து இறங்கின வேதங்களையெல்லாம் ஓதினவனைப்போ லாகிடுவான்

பின்பு-அவன் சமிஅல்லாகு லிமன் ஹமீதாவென்று சொல்லுவானாகில் - அல்லாகுத்தஆலா அவனளவிலே கிருபைப் பார்வையைக் கொண்டும் பார்த்திடுவான்-பின்பு-அவன் சுஜூதிலேபோவானாகில் அல்லாகுத்தஆலா அவனுக்கு-மனிதர் - ஜின்களுடைய எண்ணமெவ்வளவோ அவ்வளவு நன்மையைக் கொடுத்திடுவான்.

பின்பு அவன் சுபுஹானறப்பியல் அஃலாவென்று சொல்லுவானாகில்-குறுஆனில் கின்றுமுள்ள சூறத்துகள்-ஆயத்துகள் - எத்தனையோ அத்தனை அடிமைகளைவாங்கி யுரிமைவிட்டவனைப்போ லாகிடுவான்-பின்பு-அவன் அத்தகியாத்து ஓதுவானாகில்-அல்லாகுத்தஆலா சபூர் செய்தவர்களுடைய கூலியை அவனுக்குக்கொடுப்பான்-பின்பு-அவன் சலாம்வாங்குவானாகில்-எட்டுச் சொர்க்கலோகத்து வாயிலேயும் - அவனுக்குத் திறக்கப்படுமென்று நபிநாயகந் திருவுளமானார்கள்- இந்தப்படிக்கு-முனீறு மஜாலிசுமுதலான கித்தாபுகளில் வருகின்றன.

ஆகலால் மூமின் முசிலிமான இகுவான்களே - தொழுகையைத் தொழுகிற தேவிகளுக்கு இவ்விதமான தஃஜா நன்மைகள் கிடைக்கிற

தாகஇருக்க அப்பேர்ப்பட்ட தொழுகையைவிட்டுவிட்டு இபுலீசுடைய மாயத்திலகப்பட்டுத் திரிந்தால்-மேற்சொன்ன தறஜா நன்மை எவ்வி தக்கிடைக்கும்-கைகண்டலாபத்தை விட்டுவிட்டுக் காடுகளை சுற்றித் தி ரிகிறது புத்தியீனமல்லவா-இஃது-தெளிவையுடையவுங்களுக்குத் தெ ரியுமல்லவா-அப்படித் தெரிந்தபுத்தியினாலே யுற்றுணர்ந்துபார்த்துத் தொழுகையைவிடாமற் றொழுதுவந்தால்-அல்லாகுத்தஆலா நம் மனோ வோருக்குங் கிருபை றகுமத்துச்செய்து சொர்க்கலோகத்திலே தாக்க லாக்கி வைப்பான்-ஆமீன்.

ஹி க் கா ய த் து.

ஒருமனிதன் அழகான ஒருபெண்பிள்ளையை ஸனைச்செய்ய அழைத் தான்-அதுகேட்டு அந்தப்பெண்பிள்ளை இந்தச்செய்தியைத் தன் புரு ஷனிடத்திற்சொன்னாள்-அப்போது-புருஷனானவன் பெண்சாதியைப் பார்த்து இனியவன் உன்னிடத்தில்வந்தால் நீயவனுக்கு-ஓய்மனிதனே நீ நாடுகிறாயே அந்தநாட்டத்தின்பேரில் நானுனக்குவழிப்படுகிறதற்கு என்புருஷன் பின்னாலேநின்று நாற்பதுநாளைக்குத் தொழுதுகொண்டு வாவென்று சொல்லென்றார்.

அதுகேட்டுப் பெண்ணானவள்-ஸனைவுக்கழைத்தவன் மறுபடிவந் தபோது புருஷன் சொன்னபிரகாரஞ் சொன்னாள்-அவ னதுகேட்டுப் பெண்பிள்ளை சொன்னதுபோலே நாற்பதுநாளுந் தொழுதுவந்தான் பின்னர்-பெண்பிள்ளை அவனையழைத்தாள்-அதற்கவர் - நான் அல்லா குத்தஆலா அளவிலே (தௌபாச்) செய்துவிட்டேன் - ஆதலால் வர மாட்டேனென்று சொன்னார்.

இவ்விதந் தொழுகையாளி சொன்னதைப் பெண்பிள்ளைகேட்டுத் தன்புருஷனிடத்திற்சொன்னாள்-அப்போதுபுருஷன் தொழுகையாகிற து கெட்டசெயல்களை விலக்கிவிடுமென்று அல்லாகுத்தஆலா குறுஆன் சரீபிலே சொல்லியிருக்கிறது நிசமென்றுசொன்னார் - இந்தப்படிக்கு துசுஹத்துல் மஜாலிசென்னுங் கித்தாபில் வருகின்றன.

ஹி க் கா ய த் து.

ஈசா அலைகிஸ்ஸலா மவர்களுடைய காலத்திலே-ஒருஸ்ாலிஹான பெண்பிள்ளை யிருந்தார்கள்-அவர்கள் ஒருபோது மாவைக் குழைத்து ரொட்டிதட்டிநெருப்பெரிகிற அடுப்பில்வைத்திருக்கும்வறவோட்டிலே

அ

போட்டபோது தொழுகைக்கு நேரமானதால் எழுந்து முசல்லாவிற்
போய்நின்று தொழுகைக்குத் தக்குபீர் கட்டிக் கொண்டார்கள்.

அப்போதுஷைத்தானுகிறவன்ஒருபெண்பிள்ளையுடைய ரூபத்தி
லாகிவந்து - அந்த அம்மாளைப்பார்த்து அடுப்பில் வறவோட்டிற்கிடக்
கிற ரொட்டிகரிந்து போகிறதேயென்று சொன்னான்.

அதற்கந்த அம்மாள் திரும்பிப்பார்க்காமற் றொழுகையின் பேரி
லேயிருந்தார்கள்-அதுகண்டு ஷைத்தான் அந்தஅம்மாளுடைய குழந்
தைப்பிள்ளையைத் தூக்கிக்கொண்டு வந்து எரிகிற அடுப்பிலெறிந்து
விட்டு அம்மாளைப்பார்த்து உன் குழந்தை அடுப்பில்விழுந்துவிட்டது
பாரென்றான்-அதற்கும் அந்தஅம்மாள் திரும்பிப் பார்க்காமற் றொழு
கையின்பேரிலேயே ஓரே யர்தாக இருந்தார்கள் -அப்போது அல்லா
குத்தஆலா நெருப்பை யந்தப்பிள்ளைக்குச் சிவந்த அக்கீக்குக்கல்லாக்கி
வைத்தான்.

இவ்வித மிருக்கச்சே அந்த அம்மாளுடைய புருஷன் வெளியி
லிருந்துவந்து வீட்டுக்குட்புகுந்து பார்க்கும்போது-அங்கே பெண்சா
தி தொழுதுகொண்டு இருக்கவும்-அடுப்பிலே தன்னுடைய குழந்தை
சிவந்த அக்கீக்குக் கல்லுடனே விளையாடிக்கொண்டு கிடக்கவுங் கண்
டு-உடனே பிள்ளையை யெடுத்துவிட்டு-ஈசா அலைகிஸ்ஸலா மவர்களி
டத்தில் வந்து-தான்வீட்டிற்கண்ட காரணங்களைச் சொன்னார்.

அதுகேட்டு ஈசா அலைகிஸ்ஸலாமவர்கள் -அந்தமனிதனைப் பார்த்
து ஓய்மனிதனே நீர் வீட்டிற் கண்டுவந்து சொன்னகாரியத்தின் ரகசி
யத்தை உமது பெண்சாதியிடத்திற் கேளுமென்றுசொன்னார்கள்-உட
னே அந்தமனிதன்வீட்டுக்குவந்துதொழுது முடிந்திருக்கிற தன்பெண்
சாதியைப்பார்த்து-உம்மாலே நடந்திருக்கிற ரகசியங்க ளென்னவென்
று கேட்டார்.

அதற்குப்பெண்சாதி புருஷனைப்பார்த்து நானுமக்குவாழ்க்கைப்
பட்ட நாட்டொடுத்து மூன்றுகாரியங்களைப் பேணிநடந்துவருகிறேன்
அதில்(ஒன்றுவது) துனியாவுடைய கருமமும் - ஆகிறத்துடையகரும
மும்-ஓரேநேரத்திற் செய்யும்படியாக வந்து சம்பவித்துக்கொண்டால்
அப்போது நான் முதலிலே ஆகிறத்துடைய கருமத்தைத் தொடங்கி
முடித்துப்போட்டுப்-பின்னர்-துன்யாவினுடைய கருமத்தைப் பார்ப்
பேன் (இரண்டாவது) எப்போதும் - உலுவின்பேரிலே யிருப்பேன்

(மூன்ருவது) இணையின்றிக் கலப்பறுதலான அல்லாகுத்த ஆலாவை வணக்குவேனென்று சொன்ஞர்கள்.

இவ்விதம்-பெண்சாதி சொல்லக்கேட்டுப் புருஷனனவர் உடனே ஈசா அலைகிஸ்ஸலா மவர்களிடத்தில்வந்து தன் பெண்சாதி சொன்னதைச்சொன்னர்-அதுகேட்டு ஈசா அலைகிஸ்ஸலாமவர்கள் அந்த மனிதனைப்பார்த்து உமதுபெண்சாதி அல்லாகுத்தஆலாவுக் குவந்த ஸாலிகானவராய்த் தொழுகையைப்பேணிப் பூணிப்பாகத் தொழுதுவருகிறபடியினலேதான்-அடுப்பிலே உங்கள்பிள்ளையை க்காக்கப்பட்டதென்று சொன்னர்கள்-இந்தப்படிக்கு-நுசுஹத்து முதலான கித்தாபுகளில் வருகின்றன.

ஆதலால்-மூமீனுகிய உடற்பிறப்புகளே அந்தச் சீதேவித்தனமான அம்மான் ஓர்மைத்தனமான ஈமானிலேபாட்டிஞல்-ஷைத்தானுடைய கலவிதத்திலாகாமல்-அல்லாகுத்தஆலாவைப்பயந்து தொழுதுவந்தபடியினலே அவர்கள்பிள்ளையும் நெருப்பில்வேகாமல் - ரொட்டியுக்கரிக்துபோகாமற் றொழுகை காத்துக்கொண்டது -இந்த ஹிக்காய்த்தை நீங்களும் உங்கள் தெளிவான புத்தியினலே யுணர்ந்துபார்த்துத்தொழுகையைவிடாமற் றொழுதுவந்தால் அல்லாகுத்தஆலா அப்பேர்ப்பட்ட தங்கடங்களைக்காத்து றகுமத்துச்செய்வான்-ஆமீன்.

ஹிக்காயத்து.

ஈசா அலைகிஸ்ஸலாமவர்கள் ஒருஆற்றங் கரையோரமாக நடந்துபோகும்போது-ஒளிவிஞலாகிய ஒரு பட்சிசுழிமண்ணிலேஅமிழ்ந்துகிடந்து பின்னர்-சுழிமண்ணைவிட்டும் எழுந்து அந்தஆற்றிலேகுளித்து முன்னர் தானிருந்த அழகிய கோலமாகி மீளும்-இவ்விதம்அந்தப்பட்சி-ஐந்துதடவைசெய்ததை ஈசா அலைகிஸ்ஸலாமவர்கள்கண்டு ஆச்சரியமானர்கள்.

அப்போது ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் ஈசா அலைகிஸ்ஸலாமவர்களிடத்திலே-வந்து-அவர்களைப்பார்த்து ஈசாவே - இந்தப்பட்சியை நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுமத்தில் சின்றும் ஒருவன்தொழுகிற ஐந்நேரத்துத் தொழுகைக்கு- அல்லாகுத்தஆலா வுவமானமாக்கிஞன்-ஆதலால்-சுழிமண் பாவத்தைப் போலும்-பட்சி குளிக்கிறது தொழுகையின் வரிசையைப்போலும்- அந்தப் பட்சி தொழுகிறவனைப்போலுமா யிருக்குமென்று சொன்னர்கள்-இந்தப்படிக்கு-நுசுஹத்தல் மஜாலிசென்னுகித்தாபில் வருகின்றன.

ஹதீது.

தன்பீகுல் ஹாபிலீன் என்னும் கித்தாபிலே சொல்லியிருக்கிறது யாதென்னில்-அல்லாகுத்தஆலா ஏழுவானத்தையும் படைத்தபோது அவைகளை மலக்குகளால் நிரப்பி அவர்களை ஓயாமற் றொழுகையைக் கொண்டுந் தன்னைவணங்கும்படி யேவினன்.

அப்போது - அந்தமலக்குகளிலே சிலர் சுஜூதுசெய்கிறவர்களாகவும்-சிலர் நிற்கிறவர்களாகவும்- சிலர் அல்லாகுத்தஆலாவுடைய (ஹைபத்தினலே) தங்களுக்குள்ள இறவுகளைச் சோரப்போட்டவர்களாகவும் ஹில்லியூன்களும்-அறுஷையுடையவர்களும்-அறுஷைச்சுற்றித் தவாபுசெய்கிறவர்களாய்த் தரிபட்டுப் பூமியை யுடையவர்களுக்குப் பிழைபொறுக்கத் தேடுகிறவர்களாக இருப்பார்கள்.

இவ்விதம் அந்த மலக்குகள்செய்கிற இபாதத்துடையவரிசையை மூமீனனபேர்கள் சங்கைக்காக ஒரு வக்த்துத் தொழுகையிலே - அல்லாகுத்தஆலாசேகரமாக்கிவைத்திருக்கிறன்-இதுபோக-மூமீனனவர்களுக்குத்தொழுகையில்-குறுஆனேதுகிறத்தை யதிகமாக்கிவைத் திருக்கிறன்-இந்த நிகுமத்துகளுக்குச் சுக்கூறுகத் தொழுகையுடையபறுலுஷறுத்துகளைப்பேணித்தொழும்படிக்குச் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஹதீது.

அபுலைதுசமர்கந்தி றகிமகுல்லா அவர்கள் சொல்லியிருக்கிறர்கள் யாதென்னில்-முற்காலத்திலே இபுலீசைக்காணக்கூடியதாக இருக்கும் அப்படி யிருக்கும்போது ஒருமனிதன் இபுலீசைக்கண்டு - அபாமுறத்தே நானுன்னைப்போலே ஆகவேண்டுமென்று சொன்னர்.

அதுகேட்டு இபுலீசு அந்தமனிதனைப்பார்த்து உனக்குப்பிடித்த கேடென்ன- இப்படிக்கு என்னில்நின்றும் - ஒருவருந் தேடவில்லையே நீயேன் தேடுகிறுயென்றான்-அதற்கவர்- இபுலீசைப்பார்த்து எனக்கது பிறியமாயிருக்கிறதென்று சொன்னர் - அதற்கு இபுலீசு அந்தமனிதனைப்பார்த்து-ஓய்-மனிதனேநீயென்னைப்போலே இருக்கவேண்டுமென்றாற் றொழுகையைத் தொண்டும்-பொடும்போக்காயிரு-இன்னும்-பொய்ச்சத்திய மெய்ச்சத்தியமென்றும் பாராட்டாமல் வந்தபடிக்கெல்லாம் சத்தியஞ் செய்யென்று சொன்னன்.

அதுகேட்டு அந்தமனிதன் இபுலீசைப்பார்த்து நானின்முதல் ஒருகாலமுந் தொழுகையை விடுகிறதுமில்லை - பொய்ச்சத்திஞ் செய்கி

நதுமில்லை-இந்தப்படிக்கு-நான் அல்லாகுத்தஆலாவுக்கு அறுதிமானஞ் செய்துகொண்டேனென்று சொன்னார்.

அதுகேட்டு-இபுலீசு அந்தமனிதனைப் பார்த்து-அடே-சூபாடகாரா உன்னைத்தவிர-ஒருவரும் என்னிடத்தில் மாறுட்டமாக அறிவைப்படித்துக் கொள்ளவில்லை-ஆகிலும் இன்றையதினம் நான் உன்கையில் அகப்பட்டுக்கொண்டேன்-ஆகையால்-நானும் இன்றுமுதல் ஒருவருக்கும்-நசீஹத்துச் செய்கிறதில்லையென்று அறுதிமானஞ்செய்துகொண்டேனென்று சொன்னான்.

ஆதலால் - மூமீன்-முசிலீமான விசுவாசமுள்ள வுடன்பிறந்தான்மார்களே-உங்களுடைய அறிவுக்கண்களாலே பார்த்துச் சண்டாள சதிகார-மோசக்கார-பாதகதுரோகி-இபுலீசுடைய மாயவலைக்கண்ணியில் அகப்படாமலும் ஐந்துநேரத்துத் தொழுகையைவிடாமலும் பேணுதலாகத் தொழுதுவருவீர்களாக-ஆமீன்.

சகல படைப்புகளையும் படைத்து அன்னமுதலானவைகள் அதது தராதரப்படிக்குக் கொடுத்து-இரட்சித்துக் காக்கின்ற வல்லமையையுடைய அல்லாகுத்தஆலா தானிறக்கிய நமது புறுக்கான்வேதத்திலே தொழுகையைப்பற்றி (௩௱௬௰) ஆயத்துகள் வெட்டவெளிச்சமாக அனுப்பியிருக்கிறான்.

அஃதாவது - தொழுது கொள்ளுங்கள் - தொழுது கொள்ளுங்களென்று மடக்கி மடக்கிச் சொல்லி யிருக்கிறான் - அப்படி யிருக்க நாம் அந்தச் சொல்லின்பிரகாரம் நடக்காமல் விட்டுவிடுகிறோம் - ஆனால் பாருங்கள்-அல்லாகுத்தஆலாபடைத்த மனிதர்களில்நின்றும்ஒரு அதிகாரி தெருக்களிலே யாதாமொரு குப்பை செத்தைகள் கிடக்கக் கூடாதென்றும்-போடக்கூடாதென்றும்- துப்புரவாக வைக்கவேண்டுமென்றும்-தாக்கீது அனுப்பிவைத்தால் அதற்காக எவ்வளவு சீக்கிரத்திற் காமுஞ்செய்து-நம்முடைய பந்துக்களையுஞ் செய்யும்படி யேவுகிறோம்.

அப்படியிருக்க அதிகாரிகட்கெல்லாம் அதிகாரியான அல்லாகுத்தஆலா அனுப்பிய ஆயத்தின்படிக்கு நடக்காமற்போனால்- கியாமத்து நாளையிலே எந்தமுகங்கொண்டு அல்லாகுத்தஆலாவைச் சந்திக்கிறது என்னஜவாபு சொல்லுகிறது-இன்னும் - அல்லாகுத்தஆலா படைத்த மனிதரில்நின்றுமொருவன் தன்னுடைய காரியத்திற்காக ஒருவனை

நேமித்திருந்தால் அவன் எவ்வளவு பயங்கரத்துடனே ஆஜராய் அந்த எஜமானன் சொன்னவைகளிற் குறைவுகுற்றமவந்தால் நம்மைத் தள்ளிவிட்டோடுவானேயென்று சுறுசுறுப்பாய் நடப்பான்.

அப்படியிருக்க-நம்மைப்படைத்து-உறுப்புகளில் - யாதாமொரு குறைவு குற்றமில்லாமல் தாய்வயிற்றிற் பத்துமாதமுங் காப்பாற்றிப் பிறப்பித்து-அழு துண்ணச்செய்து-வாயிற் பேச்சைக்கொடுத்துக்-கண்ணிற் பார்வையைக்கொடுத்துக்-காலில் நடையைக் கொடுத்து-உண்ண அன்னங்கொடுத்து-உடுத்தத்துணிமணிகொடுத்து-யிமிடறின்னதென்ற பகுத்தறியும் அறிவைக்கொடுத்து - மற்றச் சுகங்களுங் கொடுத்து ஆதரித்தாளுகின்ற-எஜமானனுடைய அல்லாகுத்தஆலா நாளொன்றுக்கு-ஐந்துநேரந் தொழும்படியாய் நேமித்த அந்த ஐந்துநேரத்திற்கும் ஆஜராய்ப்போய்த் தொழவேண்டுமென்ற பயங்கரமில்லாமல் இபுலீசுடைய மாயையிலகப்பட்டுத் தொழுகையைப் பொடும்போக்காகவிட்டுவிட்டால்-எவ்விதம் பாயிதாக்கிடைக்கும்.

அப்படித் தொழுகையைப் பொடும்போக்காக விட்டு விடாமல்-அல்லாகுத்தஆலாவைத் தொழுதுவந்தால் - மிகுந்த பாயிதாக்களைப் பெற்றுக்கொள்ளலாகும்- ஆமீன்.

மதனவிஷரீபென்னுங் கித்தாபில்-மவுலானா றாமிஜலாலுத்தீனவர்கள் சொல்லியிருக்கிறார்கள்-யாதென்னில-சந்தனக்கட்டைக்கு வாசனையிருக்கிறதுபோலே மனிதனுக்கு மனிதத்தன்மைவேண்டும் - அந்தச் சந்தனக்கட்டைக்கு வாசனையிருப்பதினாலே மேலான பிரமான இடங்களிலெல்லா மெவர்களும் உவப்பாகக் கொள்ளுகிறார்கள்.

அதுபோலே மனிதனில் நல்ல ஸாலிகான அமலென்கிற வாசமிருந்தால்-யாவர்களாலு மேன்மையும்-புகழுங் கீர்த்தியுமுண்டாகி அல்லாகுத்த ஆலா இடத்திலும்-அவனுடைய றசூலான நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களிடத்திலும் - உவப்புண்டாகிச் சொர்க்கத்திலும்போய்ச் சேருவான்.

கட்டையில் வாசனையில்லாதிருக்கில்-சந்தனக்கட்டையென்ற பேருமில்லாமல்-அடுப்பிலேபோட்டெரிக்கிற விறவாகும் - அதுபோலே இன்சானென்கிற கட்டையில் இபாதத்தென்கிற வாசனை யில்லாமற் போனால்-எரிநரகுக்கு இரையாகிப்போவான்-இவ்விதமாகாமல்-அல்

லாகுத்தஆலா நம் மனேவோரையும் வாசனையாகிய நல்ல அமலிலே பூணிப்பாகும்படிசெய்து சொர்க்கலோகத்திலே தாக்கலாக்கி வைப்பான் ஆமீன்.

கன்ஸுத் தகாயிகு பத்தாவி ஆலம்கீரி முதலான கித்தாபுகளிற் சொல்லிவருகிறது-யாதென்னில்-பகையில்நின்றும் பயங்கரக் கடிசாகினால்-இமாமானவர் ஜெனங்களை இரண்டு கூட்டமாகப்பிரித்து அதில்-ஒருகூட்டத்தைப் பகைஞருக்கு முன்பாக நிறுத்தி வைத்துவிட்டு-மற்றொருகூட்டத்தைத் தொழுவிப்பார்கள்-அதிலே நான்கு றக்கு ஆத்தான தொழுகையாயிருந்தால் ஒருகூட்டம் இமாமுடனே இரண்டுறக்கு ஆத்துத் தொழுதுவிட்டுப் பகைஞர்கட்கு முன்பாகப்போய் நின்று கொள்வார்கள்.

மற்றவொரு கூட்டத்தார் - மற்ற இரண்டு றக்குஆத்தையும் இமாமுடனேசேர்ந்து தொழுதுமுடித்து-இமாம்சலாங்கொடுத்தவுடனே பகைஞர்முன்பாக வருவார்கள்-அப்போது-முதலாவது இமாமுடனின்று இரண்டு றக்குஆத்துத் தொழுத கூட்டத்தாருடையபாக்கி யிரண்டுறக்குஆத்தையுந் தனித்துத் தொழுது முடிப்பார்கள்-அதுபோலே-இரண்டாவது இமாமுடன் இரண்டு றக்குஆத்துத்தொழுத கூட்டத்தாருடைய பாக்கித் தொழுகையைத் தனித்துத் தொழுது முடிப்பார்கள்.

இதிலே பகைஞர்கள் மிகைத்துக்கொள்வார்களென்று பயங்கரம் கடிசா யிருந்தால் அவரவ ரேறியிருக்கிற வாகனங்களின் பேரிலேயே எந்தத்திசையில்நின்றாலுந் தனித்தனியே சயிக்கினையினாலேதொழுது கொள்வார்கள்.

ஆகலால்-மூமின்-முசிலிமாகிய இகுவான்களே-இவ்விதம்கடுமையான படைநடக்குகிற இக்கட்டாகிய நேரத்திலும்-தொழுகையை நேரந்தப்பித் தொழக்கூடாதென்று-ஷறகிலே வந்திருக்க இக்காலத்தில் சில புண்ணியவான்கள்-யாதாமொரு தங்கடம் நெருக்கமில்லாமல்இருகத்தாக இருக்கச்சே-தொழுகையைத் தொழாமல் விட்டுவிட்டுத் தங்கள் தங்கள் மனம்போன போக்காகத் துனியாவின் ஹவாவின்பேரில் விருப்பமாகி-இபுலீசுடைய மாயாவினோத மயக்கத்தி லகப்பட்டுக்கொண்டு திரிந்து விணைக்கழித்தால் எவ்விதமாகும்-அஷறுமானவர்களே உங்களுடைய தெளிவான கூர்மையான புத்தி அகிலினாலே யோசித்

துப்பார்த்து-அல்லாஹுவுடைய சொல்லைப்பேணித் தொழுகையின்
பேரிற் பூணிப்பாகத்தொழுது நன்மைகளைக் கொள்ளையடித்துக் கொள்
ளுங்கள்.

யாதாமொரு பெண்பிள்ளையானவள் - கெர்ப்பஸ்திரியாயிருந்து
அவள் பேறுகாலம்சமீபித்துப் பிரசவிக்கும்போது-கொஞ்சம் பிள்ளை
வெளிதோற்றி யிருக்கச்சே தொழுகையின் வகுத்துவந்து நேரிட்டு
அந்தநேரந் தப்புகிறதைப் பயந்தாளாகில் - உலுச்செய்யத் தராணியி
ருந்தால் உலுச்செய்வாள்-அதற்குத் திராணியில்லாதிருந்தால்(தயமம்
செய்து) பிள்ளையை நோவியாமல் இருந்து றுக்கூவு சுஜுதுடனேதொ
ழுவாள்.

அப்படித் தொழவலாமற்போனால்-தலையினாலே சயிக்கினைசெய்
து தொழுவாள்-இவ்விதமிருந்தும் தொழுகையைப் பிற்படுத்தமாட்
டாள்-அப்படித்தொழாமல் விட்டுவிட்டால்-அல்லாகுத்த ஆலாவுக்குப்
பாவியாவாள்-இதிலே பிள்ளைக்கு யாதேனுமோர் அபாயம் வருமென்
று பயந்தோற்றினால் மாத்திரம்-தொழுகையைப் பிற்படுத்திவைக்கிற
தாகும்-இந்தப்படிக்கு பத்தாவி ஆலம்கிரி-துற்றுல்முகுத்தார் - முனி
யத்துல்முஸல்லி முதலான கித்தாபுகளில் வருகின்றன.

ஆதலால் மூமீன் முசிலிமான எமதுடற்பிறந்தான்மார்களே-இவ்
விதம் பிள்ளைப்பேறு நெருக்கடியானகாலத்திலும்-தொழுகையை நே
ரந்தப்பித் தொழக்கூடாதென்று-ஷறகிலேவந்திருக்கிறதே-அப்படியி
ருக்க யாதாமொரு நோவினையுமில்லாமலிருப்பவர்கள்- தொழுகையை
விட்டுவிட்டுத் துனியாவுக்குத் தொண்டூழியஞ்செய்து வீண்பொழு
துபோக்கிவிட்டால் எந்தமுகங்கொண்டு அல்லாகுத்தஆலாவைச் சந்தி
ப்பீர்கள்-எவ்விதஞ் சவாபுசொல்வீர்கள்-இதை நன்றாக யோசித்துப்
பார்த்து நீங்களும் தொழுதுகொண்டு உங்களுடைய பெண்சாதி பிள்
ளைகள்முதலான பந்துக்களையும் தொழுதுவரும்படி தெண்டித்துவந்தால்
மட்டிலடங்காதநன்மையும்-தறஜாவும்பெற்று சொர்க்கலோகத்திலும்
புகுதும்படி தொழுகை கொண்டுபோய் விடும்படி அல்லாகுத்த ஆலா
வுதவிசெய்வான்-ஆமீன்-யாறப்பல்-ஆலமீன்.

தொழுகையுடைய வரிசையின்பயான்

முற்றிற்று.

தொழுகையை விட்டவர்கட்குக் கிடைக்கிற வேதனையின்பயான்.

ஹதீது.

அல்லாகுத்த ஆலாவுடைய ஹபீபான நமது நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாக்கினாலே-யாதா மொருவன்-தொழுகையை விடுவானாகில் - அவன் அல்லாகுத்தஆலாவுடைய தருமத்தைவிட்டும்-பிறத்திப்பட்டவனாவானென்றும்-இன்னும் - அவனைவிட்டும் நான் நீங்கிடுவேனென்றுந் திருவுளமானார்கள்.

அனசிபுனு மாலிக்கு றலியல்லாகு அன்கவர்கள் சொல்லியிருக்கிறார்கள்-யாதென்னில்-நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய அருமையான மேலம்பரமான துப்புரவான தெளிவான (றாகு) நெஞ்சுப்பரப்பி லிருக்கும்போது-ரூழ இருந்த அசுகாபிமார்களைச்சுட்டி நானுங்களுக்குத் தொழுகையைக்கொண்டும்-வசியத்துச் செய்கிறேனென்று மூச்சடங்கிற மட்டிலும் சொல்லிக்கொண்டேயிருந்தார்களென்று சொன்னார்கள்.

ஆதலால்-மூமீனான உத்தமர்களே-எனது சகோதரர்களே - இருலோகத்திற்கும் நாயகமான முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் - உபாத்துடைய காலிலே தங்க ளும்மத்தோர்கள் பரிசுத்தமாக வேண்டுமென்ற ஆசையாய்த் தொழுகையைத் தொழுங்களென்று சொல்லுஞ்சொல்லோடு மூச்சடங்கியிருக்குமானால் - தொழுகை யெப்பேர்ப்பட்ட சிறப்பான வரிசையான தருமத்தானதா யிருக்கிறதென்பதை உங்களுடைய நற்புத்தியினாலேயே தெரிந்துகொண்டு நாளொன்றிற்கு - ஐந்துவகுத்துத் தொழுகையைத் தப்பாமற் றொழுது-அல்லாகுத்தஆலாவுடைய அருளையு-முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய விருப்பத்தையும் பெற்றுக்கொள்வீர்களாக-ஆமீன்.

ஸவாசிறென்னுங் கிதாபில்-இபுனுஹஜர் றகுமதுல்லாகி அலைகி சொல்லுகிறார்கள்-யாதென்னில்-யாதாமொருவன்-தொழுகையின் பேரிலே பொடும்போக்காக இருப்பானாகில் - அவனை அல்லாகுத்தஆலா பதினைந்து கருமத்தைக்கொண்டும் வேதனைசெய்வான்.

அதில்-ஆறுகருமம்-துனியாவிலும்-மூன்றுகருமம்-மவுத்துடையநே ரத்திலும்-மூன்றுகருமம் கபுறிலும் - மூன்றுகருமம் கபுறைவிட்டும்-புறப்படும்போதிலுமா யிருக்கும்- இதிலே-துனியாவில்நடக்கிறகருமத் தில் (க-வது) அவனுடைய ஆயிசுக்குள்ள பறக்கத்தைப் பிடுங்கப்படும் (உ)வது-அவனுடையமுகத்திலே ஸாலிகின்களுக்குள்ள லட்சணத்தை யழிக்கப்படும் (ங-வது) அவன்செய்யும் அமல்களுக்கு அல்லாகுத்த ஆலா கூலிகொடுக்கமாட்டான் (ச-வது) அவனுடைய துஆவை வானத் தளவில் உயர்த்தப்பட மாட்டாது (ரு-வது) அவனுக்கு ஸாலிகின்கள் கேட்குந் துஆவிலே பேறில்லை (சு-வது) அவனுடையறஸக்கில்நின்றும் பறக்கத்தை யுயர்த்தப்பட்டுப் போகும்.

இனி-மவுத்தில்நடக்கிற கரும மூன்றில் (க-வது) அவன் தாழ் மைப்பட்டவனாக மவுத்தாகுவான் (உ-வது) அவன் பசித்தவனாக மவுத் தாகுவான் (ங-வது) தாகமுடையவனாக மவுத்தாகுவான் - இன்னும்-அவனுக்குத் துனியாவிலுள்ள கடல்களின் தண்ணீரையெல்லாங் குடிப் பாட்டினாலும்-அவனுடையதாகம் எப்போதுந் தீரமாட்டாது.

இனி - கபுறில்நடக்கிற கரும மூன்றில் (க-வது) அவனுடைய விலாஎலும்பானது பிதுங்கமட்டிலும்-கபுறு அவனை நெருக்கும் (உ-வது) அவனுடையகபுறை அக்கினியினாலே எரிக்கப்படும்- அதினால் அவன் இரவும்பகலும் நெருப்புக்கங்கிகளின் பேரிலேபிரண்டுருண்டுகொண்டு கிடப்பான் (ங-வது) அவன் கபுறிலே-சுஜாவுல்அக்குறவுஎன்னும் பாம் பானதைச் சாட்டப்படும்-அந்தப் பாம்புடைய இரண்டுகண்களும் நெ ருப்பினாலும்-நகங்கள் இரும்பினாலும் உண்டாயிருக்கிறது - அந்த நக த்தினுடையநீளம் - ஒருநாட்பயண தூரம்வரைக்கும் நீண்டதாயிருக் கும்-இவ்விதமான அந்தப் பாம்பானது அந்த மையித்தானவனுடனே கோடையிடியிடிப்பதுபோலே சத்தமிட்டுப் பேசுகிறதாவது-யாதென் னில்-ஆ-மையித்தே-நானுகிறது சுஜாவுல் அகுறவுஎன்னும் பெயரு டைய பாம்பாயிருக்கும்-நீ-துன்யாவிலிருக்கும்போது பொழுது கிழம் புகிறமட்டிலுந்தொழுகாமலிருந்து-கபுகைக்கலாவாக்கினதினாலே அல் லாகுத்த ஆலா உன்னைக் கொத்தும்படி யென்னை யேவினனென்று சொல்லும்.

இன்னும்-அந்தப்பாம்பானது அவனைப்பார்த்து-ஓய்- மையித்தே நீ அசறுவகுத்துவருமளவும்-லுகறை-கலாவாக்கினதினாலும்-மஹ்ரிபு

வருத்து வருமளவும்-அசறை-கலாவாக்கினதிஞலும் - இஷா வருத்து வருமளவும்-மஹறிபை கலாவாக்கினதிஞலும்-சுபுகு-வருத்து வருமள வும்-இஷாவை-கலாவாக்கினதிஞலும்-உன்னைக் கொத்தும்படிக்கு அல் லாகுத்தஆலா என்னை யேவினுனென்று அவனைக்கொத்திக்கொண்டே யிருக்கும்.

இவ்விதம்-அவனைப் பாம்பானது ஒவ்வொருகொத்துக் கொத்தும் போதெல்லாம்-அவன் பூமியில் எழுபதுமுழம் அமிழ்ந்துவிடுவான்-இந்தப்படிக்கு அவன் கியாமநாள்வருமளவும் கபுறில் அதாபு பட்டுக் கொண்டே யிருப்பான்.

இனியவன்-கபுறைவிட்டுப் புறப்பட்டு கியாமநாளில் - மைதான வெளியி லாகும்போது அவனுக்குள்ள கரும மூன்றில் (க-வது) கேள் விகணக்குக் கொரேமாகக் கேட்கப்படுவான் (உ-வது) அல்லாகுத்த ஆலாவுடைய கோபமுண்டாகுவான் (ங-வது) நரகம்புகுதுவான்-ஆக இப்படிமூன்று கருமமும் தாரிக்கு-ஸலாத்துகளுக்குக் கிடைக்கிறதாக இருக்கும்.

இன்னும்-ஒரு றிவாயத்தின்படி-அவனுடைய நெற்றியிலே மூன் றுவரி எழுதப்பட்டவனுகக் கபுறைவிட்டும் புறப்பட்டுக் கியாமத்து மைதானவெளியில் வருவான்-அவனுடைய நெற்றியி லெழுதப்பட்ட வரிமூன்றில் (க-வது) அல்லாகுத்தஆலாவுடைய ஹக்கைப் பழுதாக்கி னவனென்றும் (உ-வது) அல்லாகுத்த ஆலாவுடைய கோபத்தைக் கொண்டும் தனதானவனென்றும் (ங-மது) நீ துனியாவிலிருக்கும்போ து அல்லாகுத்தஆலாவுடைய ஹக்கைப் பழுதாக்கினதுபோலே - இப் போதும் நீ அல்லாகுத்தஆலாவுடைய றகுமத்தை விட்டும்-நற்செயல் கெட்டவனுக இருக்குமென்றும்-மூன்றுவரி யெழுதப்பட் டிருக்கும்.

ஹிக்காயத்து.

இறுஷாதுல் இபாதென்னுங் கிதாபில் எழுதப்பட்டிருக்கிறது யாதென்னில்-ஜெஹன்னமென்னும் நரகத்தில்-ஒருவோடையுண் டும்-அதற்கு (லம் லம்) என்று பேர்சொல்லப்படும்-அந்த வோடையி லே அனேகம் பாம்புகளுண்டா யிருக்கிறது அந்தப் பாம்புகளில் ஒன் றும்-ஒவ்வொன்றையும்-ஒவ்வோர் ஒட்டகத்தின் கழுத்திற்போட்டால் அவ்வொட்டகையினுடைய கழுத்தைக் கனமாக்கிவைத்திடும்-மேலும் அந்தப்பாம்புகளுடைய நீளமாகிறது-ஒவ்வொன்றும் ஒவ்வோர்மாதத தொலைதூரமாக இருக்கும்.

இவ்விதமான பாம்புகளாகிறது -தொழுகையை விட்டவர்களைக் கொத்தும்-அப்படிக் கொத்தும்போது - அதுகளுடைய நஞ்சு அவனு டைய சரீரத்தில் எழுபதுவருஷகாலக் கொதிக்கும்-அதிலே- அவனு டையசதை யுதிர்ந்துபோகுமென்று றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கின்றன.

ஹிக்காயத்து.

நம்முடைய நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர் கள் திருவுளமானதாக-அறுபகின் என்னும் ....த்தாயிற் சொல்லி யிருக் கிறது-யாதென்னில்-ஜகன்னமென்கிற நரகத்திலே ஒருவோடையிருக் கிறது-அந்தவோடையை விட்டும் எங்களைக் காத்துக்கொள் என்று நா ளொன்றுக்கு எழுபதினாயிரம் திரம் நரகத்தை வுடையவர்கள் காவற் றேடுகிறார்கள்.

அந்தவோடையிலே நெருப்பினாலே ஒருவீடு இருக்கிறது-அந்த வீட்டிலே நெருப்பினாலே ஓர் கிணறுண்டாயிருக்கிறது -அந்தக்கிணற் றிலே நெருப்பினாலே ஓர் பெட்டகமுண்டா யிருக்கிறது-அந்தப் பெட் டகத்திலே நெருப்பினாலே ஓர் பாம்புண்டாயிருக்கிறது -அந்தப் பாம் புக்குஆயிரந்தலையுண்டாயிருக்கிறது அந்தத்தலைகளிலொவ்வோர்தலைக் கு ஆயிர முகமுண்டா யிருக்கிறது -அந்தமுகங்களில்-ஒவ்வோர்முகத் திற்குஆயிரம்வாயுண்டாயிருக்கிறது -அந்தவாய்களில்-ஒவ்வோர்வாய்க் குப் பதினாயிரம் பல்லுண்டா யிருக்கிறது-அந்தப்பற்களில் ஒவ்வோர் பல்லின் நீளம் ஆயிரமுழ முண்டாயிருக்கிறதென்று நபிநாயக முகம் மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுள மானார்கள்.

இவ்விதம்-நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர் கள்சொல்லக்கேட்டு-அனசிபுனு மாலிக்கென்பவர்கள் -நபிநாயகத்தைப் பார்த்து அல்லாகுத்தஆலாவுடைய றசூலே-இவ்விதமான அதாபுகள் யாருக்காகஇருக்குமென்று கேட்டதற்கு-நபிநாயகம்-அனசிபுனுமாலிக் கவர்களைப்பார்த்து-அந்தஅதாபானது தொழுகையைவிட்டவனுக்கும் கட்சாராயங் குடிக்கிறவனுக்கும் ......மென்று திருவுளமானார்கள் அ....மது பிறிபமுள்ள மூமினாகிய வுடற்பிறப்புகளே-இதை -நீங்கள் நன்றாகப்பார்த்து இபுலீசுடைய மாயத்திலகப்படாமற் றொழுதுகொள் வீர்களாக-ஆமீன்.

ஹிக்காயத்து.

பனியிசுறுயீல் கூட்டத்தில் உள்ள வொருபெண்பிள்ளை மூசா அலை ஹிஸ்ஸலா மவர்களிடத்தில் வந்து அல்லாகுத்தஆலாவுடைய நபியே நா னொரு பெரும்பாவம் செய்துபோட்டு அதைத்தொட்டும் நாயனளவிற் றிடனுகத் தௌபாச்செய்துவிட்டேன்.

அதைத்தொட்டும்-நீங்களும் அல்லாகுத்தஆலா இடத்திலே என் பிழையைப் பொறுக்கும்படிக்கும்-என் தௌபாவைக் கபூல்ச்செய்யும் படிக்கும்-துஆக் கேளுங்களென்று சொன்னாள்.

அதுகேட்டு மூசா அலைஹிஸ்ஸலாம் அந்தப் பெண்பிள்ளையைப் பார்த்து - ஆய் - பெண்பிள்ளையே நீ யென்னபாவஞ் செய்தாயென்று கேட்டார்கள் -தற்கவள் அல்லாகுத்தஆலாவுடைய நபியே நான் ஸினாச் செய்து ஒரு பிள்ளையைப்பெற்று அந்தப்பிள்ளையைக் கொன்றுபோட் டேனென்று சொன்னாள்.

அதுகேட்டு-உடனே மூசா அலைஹிஸ்ஸலாமவர்கள் அந்தப்பெண் பிள்ளையைப் பார்த்து-ஆய்-கெட்டவளே உன்னுடைய பாவத்தினாலே வானத்திலிருந்து நெருப்பிறங்கி எங்களைத்தீய்த்துக் கரித்துப்போடும் ஆதலால் .. நீ என்கண்ணெதிரே முழியாதே தூரப் போய்விடென்று துரத்திவிட்டார்கள்.

அதுகேட் டுடனே யந்தப்பெண்பிள்ளை மனவேதனைப் பட்டவ ளாக மூசா அலைஹிஸ்ஸலாமவர்களுடைய சமுகத்தைவிட்டும் புறப்பட் டாள்-அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் வானத்தில்நின்றும் இறங்கி மூசா அலைஹிஸ்ஸலாமவர்களிடத்தில் வந்து அவர்களைப்பார்த் து மூசாவே அல்லாகுத்தஆலா வுமக்குச் சலாம்சொல்லிச் சொல்லச் சொன்னதாவது யாதென்னில்.

நீர் தௌபாச்செய்துவிட்டு உம்மிடத்தில்வந்து முறையிட்ட பெண் பிள்ளையை எதுகாரணத்தினாலே துரத்திவிட்டீர்-அந்தப்பெண்பிள்ளை யைவிடக் கெட்டவனை நீர் காணவில்லையாவென்று அல்லாகுத்தஆலா கேட்கச்சொன்னு னென்றார்கள்-அதுகேட்டு-மூசா அலைஹிஸ்ஸலாமவர் கள் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்தைப்பார்த்து ஜிபுரீலே இந்தப்பெண்பிள் ளையைவிடக் கெட்டவன் யாராயிருக்குமென்று கேட்டதற்கு-ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் மூசா அலைஹிஸ்ஸலாமைப் பார்த்து - அந்தப் பெண்பிள்ளையைப்பார்க்கக் கெட்டவனுகிறது - தொழுகையை மன

மூறண்டாகவிட்டவனாக இருக்குமென்றுசொன்னார்கள்-இந்தப்படிக்கு இறஷாதுல் இபாதுமுதலான கித்தாபுகளில் வருகிறன.

ஆதலால்-எம்தன்புள்ள மூமிஸீமாகிய நேசர்களே - பிறவிகளே-நீங்கள் நல்லதெளிவாக இதனைப்பார்த்து இபுலீசுடைய [illegible]மையிலே மாட்டிக்கொண்டு மாட்டாங்கிகளைப்போலாகாமல் அல்லாகுத்தஆலாவைப்பயந்து தொழுதுகொள்வீர்களாக-ஆமீன்.

ஹிக்காயத்து.

பகுஜத்தில் அன்வாறென்னும் கித்தாபில் வருகின்றது-யாதெனில்-நபிநாயக மூகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்-ஒருநாள் பள்ளிவாசலிலே தங்களுடைய அசுகாபிமார்களுடனே இருக்கும்போது-அறபிகளில்நின்றுமுள்ள ஒருவாலிபன் அழுதுகொண்டு வந்தான் அவனைப்பார்த்து நபிநாயகம்-ஓய்-வாலிபனே உன்னை யேதுகாரண மழுகையாக்கிவைத்ததென்று கேட்டார்கள்-அதற்கு-அந்தவாலிபன் நபிநாயகத்தைப்பார்த்து அல்லாகுத்தஆலாவுடைய றசூலே-என்னுடைய தகப்பனார் இறந்துபோயினார்- அவர் மையித்தைக் குளுப்பாட்டவும்-கபனிடவும்-ஒருவரும் வரமாட்டேனென்று சொல்லுகிறார்களென்று சொன்னான்.

அதுகேட்டு நபிநாயக மூகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் - அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாகு அன்கு அவர்களையும் - உமறுல் பாறூக்கு றலியல்லாகு அன்கவர்களையும்பார்த்து நீங்கள் இரண்டுபேர்களும்போய் அந்தமையித்தைப்பார்த்துவாருங்களென்றுசொன்னார்கள்.

உடனே-இரண்டுபேர்களும்போய் அந்தமையித்தைப் பார்க்கும்போது-அந்தமையித்தாகிறது-கறுத்த கின்ஸீறைப்போலே யிருப்பதைக்கண்டுசரோலென்றுதிரும்பி நபிநாயகத்திடமாகவந்து அவர்களைப் பார்த்து-அல்லாகுத்தஆலாவுடைய றசூலே-எங்கள்நாயகமே-அந்தமையித்தாகிறது - கறுத்த கின்ஸீறுடைய வடிவமாக இருக்கக் கண்டோமென்று சொன்னார்கள்.

அதுகேட்டு நபிநாயகமவர்கள் எழுந்தருளியாகி அந்த மையித்துடைய அருகாமையாகப்போய் நின்றுகொண்டு து ஆச்செய்தார்கள்-உடனே அந்தமையித்து மூன்னிருந்த சூறத்தைப்போலே ஆகிவிட்டது-அப்போது-நபிநாயகமவர்கள அந்தமையித்தின் பேராலே தொழுவித்தார்கள்.

பின்னர்-அந்தமையித்தைக் கபுறிற்கொண்டுபோய்-அடக்கஞ்செய்யவைத்து அதின்முகத்தைத் திறந்து பார்த்தார்கள்-அப்போதும்-பழையபடி கறுத்த கின்ஸீறுடைய சூறத்தாக இருக்கக்கண்டு-நபிநாயகமுகம்மது ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அந்த வாலிபகாரனைப் பார்த்து-ஓய்-வாலிபனே யுன்னுடைய தகப்பன் துனியாவிலே என்ன அமல்ச் செய்தானென்று கேட்டார்கள்-அதற்கு-வாலிபன் நபிநாயகத்தைப்பார்த்து இருலோகத்திற்கும் நாயகமாகிய எங்க ளாண்டகையே என்தகப்பன் தொழுகையைவிட்டுவிட் டிருந்தானென்றுசொன்னான்.

அதுகேட்டு நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்-அங்கே தங்களைச்சூழ்ந்து நிற்கிற அசுகாபிமார்களைப்பார்த்துஎன்னுடைய அசுகாபிமார்களே-தொழுகையை விட்டவனுடைய (ஹாலை) நீங்கள் பார்த்தீர்களா - அல்லாகுத்தஆலா அவனை நாளை மகுஷறிலே கறுத்த கின்ஸீறாகவே எழுப்புவானென்று சொன்னார்கள்.

அதுகேட்டு-அசுகாபிமார்கள் யாவரும் நபிநாயகத்தைப்பார்த்து நாங்கள் அல்லாகுத்தஆலாவைக் கொண்டுங் காவற்தேடுகிறோமென்று சொன்னார்கள்.

ஆதலால்-எமது பிரியமுள்ள முசிலீமான உடன்பிறந்தான் மார்களே-தொழுகையைவிட்டவனுக்குக் கிடைத்திருக்கிற சங்கைக்குறைவு இவ்விதமிருக்கிறபடியால் இதைப்பார்த்து உங்கள் கனதியாகிய புத்தியினாலேகவனித்து உயிருடனே யிருக்கும்போது அல்லாவைப்பயந்து தொழுதுகொண்டால் இப்பேர்ப்பட்ட கெடுதிகளைவிட்டும் அல்லாகுத்தஆலா நம்மனைவோரையுங் காத்திரட்சிப்பானாகவும்-ஆமீன்.

ஹிக்காயத்து.

மன்னா பெரியோர்களில்நின்று மொருவர் கப்பலிலேறிப் போகும்போது-கடலிலே மீனைமீன் தின்னக்கண்டு அந்தப்பெரியோர்கள் - கடலிலுமா பஞ்சவிஷய முண்டா யிருக்கிறதென்று நினைத்தார்கள் - அப்போது அங்கே உரு[illegible]தோற்றமின்றி யோர் சத்தமுண்டாயினது - யாதென்னில்-ஓய்-பெரியவரோ-தொழுகையைவிட்ட ஒருவன் இந்தக் கடலில்நின்றும் தண்ணீரள்ளி வாயில்வைத்துத் தண்ணீர் வைப்[illegible]யிருப்பவனைதப்பற்றி வாய்த்தண்ணீரைத் திரும்பக் கடலில்உமிழ்ந்தான் - அவனுடைய உமிழ்நீர் விழுந்தநிமித்தியம்-கடலிலே பஞ்சம் பிடித்ததென்று சத்தமுண்டாயிற்று.

துற்றத்துல் நாசுஹீனென்னுங் கித்தாபிலே சொல்லி யிருக்கிறது யாதென்னில் - அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாகு அன்கவர்களுடைய காலத்திலே ஒருமனிதன் மவுத்தாகிப்போனார் - அவருடைய மையித்தைத்தொழுவிக்கக் கூடினபேர்கள் எழுந்திருந்து நிற்கும்போது மையித்துமேலிட்டிருக்கிற கபன் அசைந்தது- அதுகண்டுஎல்லோர்களும் மையித்தையெடுத்துப் பார்க்கும்போது அதின் கழுத்திலே ஒருபாம்பு சுற்றிக் கிடந்துகொண்டு அவனுடைய சதையைத்தின்று இரத்தத்தை யுறிஞ்சிக் குடித்துக்கொண்டிருக்கக்கண்டு- அந்தப்பாம்பைக் கொன்று போட யாவருநினைத்து நெருக்கும்போது-அந்தப்பாம்பானது (லாஇலாக இல்லல்லாகு முகம்மதுற்ற சூலுல்லாகி) என்னுந் திருக் கலிமாவைச்சொல்லி யென்பேரிலே யாதாமொரு பாவமும் - இல்லாதிருக்க நீங்கள் ஏனென்னைக் கொல்லவருகிறீர்கள்-கியாமநாள் வருகிற வரைக்கும்-இவனை அதாபுசெய்யும்படியாய் அல்லாகுத்தஆலா என்னையேவியிருக்கிறானென்று சொன்னது.

இவ்விதம் பாம்புசொன்ன சொற்கேட்டு-யாவரும் அந்தப் பாம்பைப்பார்த்து ஆப்-பாம்பே இவன் அப்படி யென்ன அமல்செய்தானென்று கேட்டதற்குப்,பாம்பானது அவர்களைப் பார்த்து இந்தமனிதன்-மூன்றுபாவங்களைச்செய்தான்- அதில் (க-வது) வாங்குச்சத்தங்கேட்டானேயானால் எழுந்து-இமாம்-ஜமாஅத்துடனே தொழுகிறதற்குவருகிறதில்லை (உ-வது) இவன் தன்னுடைய திரவியத்தில்நின்றுமெடுத்து ஸக்காத்துக் கொடுக்கிறதில்லை (ங-வது) இவன் ஆலிம்கள் சொல்லப்பட்ட நசீஹத்தைக் கேட்கிறதில்லை-ஆதலால்-நான்செய்கிறது இவனுக்குக் கூலியாயிருக்குமென்று சொன்னது.

ஹிக்காயத்து.

ஒருமனிதனுக்குச் சகோதரி யொருத்தியிருந்தாள்- அப்படியிருக்கிறகாலத்தில்-அவள் மவுத்தாகினாள் அடக்கவேண்டி கபுர்க்குழியிலே மையித்தை இறக்கிவைக்கும்போது-சகோதரனிடத்திலிருந்த பணப்பையுவனுக்குத் தெரியாமல் அந்தக்குழியிலே விழுந்துவிட்டது.

பின்பு அவளையடக்கிவிட்டு அவர் மீளுகிறமட்டிலும் பணப்பை தன்னிடத்திலே யிருக்கிறதாக நினைத்திருந்து பணப்பையைப் பார்க்கும்போது- அது தன்னிடத்திலில்லாமையினாலேயோசித்து அதுவிழு

னாகில் கபுறிற்றுன் விழுமென்கிற தோற்றத்திஞல்-யாதாமொருவரு மில்லாமற்றுனே தனித்தயீராய் விளாவாகவந்து - அந்தக் கபுறைத் தோண்டினர்.

தோண்டும்போது அந்தக் கபுர்முழுமையும் நெருப் புப்பரவங் பட் டிருப்பதைக்கண்டு-சீக்கிர மண்ணைப்போட்டு மூடிவிட்டுஅழுது கொண்டு தன்னைப்பெற்ற தாயாரிடத்திலேவந்து-என்னைப் பெற்ற தா யாரே-என்னுடன்பிறந்தாள் துனியாவில் என்ன அமலஞ்செய்தாள்-அதை எனக்குச்சொல்லுங்களென்றுகேட்டார்-அதற்குத்தாயானவள்-தன்மக னைப் பார்த்து-மகனே நீயேனதைக்கேட்கிருயென்றுள்-அதற்கு மகன் தாயாரைப்பார்த்துச் சகோதரியுடைய கபுறில் நெருப்புப்பாவி யிருக் கிறசெய்தியைச் சொன்னர் - அதுகேட்டுத் தாயானவள் தானு மழுது கொண்டு மகனைப்பார்த்து-ஆம்-என்மகனே யுன்னுடன்பிறந்தாள் தொ ழுகையைப் பொடும்போக்காக விட்டுவிட்டிருந்தாளென்றுசொன்னள். இந்தப்படிக்கு - இருஷாதுல் இபாதுமுதலிய கித்தாபுகளில் வருகின் றன.

யாதாமொருவன்-இமாம்-ஜமாஅத்துடனே தொழுகிறதை விட்டு விடுவாஞகில் - அவன் தௌறாத்து - சபூர் -இன்சீல்-புறுக்கான் ஆகிய இந்நான்குவேதத்திலும் லகுனத்துச்செய்யப்பட்டவனுவான்-இன்னும் தொழுகையைவிட்டவன் பூமியிலே நடப்பாஞகில்-அவனைப் பூமி லகு னத்துச்செய்யும்-இன்னும்-அவன்பேரில் அல்லாகுத்த ஆலாவும்-மலா யிக்கத்துகளும் கோபமாவார்கள்.

இன்னும்-வானலோகத்திற்கும்-பூலோகத்திற்கும் - இடையிலே யுள்ள மலக்குகள் சகலரும்-கடலிலுண்டான மீன்களடங்கலும் - மற்ற வுயிர்ப்பிராணிகளும் தொழுகையைவிட்டவனை லகுனத்துச்செய்யுமென் று நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுள மாி ஞர்கள்.

ஆய்-முசிலீமீன்களே எமது அன்பர்களே-தெளிவானவர்களே-தொ ழுகையை விட்டவர்களுக்குக் கிடைக்கிற அதாபு வருத்தங்களை யிவ்வ ளவென்று எழுதமுடியாது-ஆயினும்-இவ்விடத்திற்சுருக்கமாகச்சொல் லி முற்றிவித்தனம்-ஆகலால் - இந்தபாவை யுங்களுடைய அறிவென் லுங் கண்களினுலே நன்றுகப்பார்த்துணர்ந்து-தல்பிற்றரிபடித்திவைத்

தூக்கொண்டு-சண்டாள-பாதக-துரோகி-இப்லீசுடைய மாயவலைக்குள்ளே மாட்டிக்கொண்டு மதி மயங்காமல்-மக்த்துவருகிறது இன்னவேளையென்று திட்டமில்லாமையால்-ஹயாத்தா யிருக்கும்போதே நாட்களை வீணாக்காமல் நமதுபேரிற்பூண்ட கடனாகியதொழுகையைப் பிந்தவிடாமல் தொழுதுவந்தால் - அல்லாகுத்தஆலா அந்தத் தொழுகையின் பரக்கத்தினாலே சங்கடம் முசீபத்துகளைநீக்கிக் கிருபை கூர்ந்து நம்மனைவோரையும் பருதெளசென்கிற சொர்க்கத்திலும் புகுதவைப்பானாகவும்-ஆமீன்-யாறப்பல்-ஆலமீன்.

தொழுகையை விட்டவர்கட்குக் கிடைக்கிற
வரிசையின்பயான் முற்றிற்று.

ஜும்ஆத் தொழுகையுடைய
வரிசையின்பயான்.

ஹதீது.

நம்முடைய நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்-யாதென்னில்-காபுமலைக் கப்புறத்தே வெள்ளிபோலே வெளுமையானவோர் பூமியுண்டாயிருக்கிறது-அந்தப்பூமியிலே புற்பூண்டுகளில்நின்றும் யாதாமொரு வஸ்துகளுமில்லை.

மேலுமந்தப் பூமியானது இந்தத்துனியாவைப்போலே ஏழுபக்கு விஸ்தீரணமாக இருக்கும்-அதில்முழுமைய மலக்குகளாகவேநிரம்பி யிருக்கிறார்கள்-அவ்விடத்திலே ஒருவூசியைப்போட்டால் அதுகீழே விழ இடமில்லாது அந்தமலக்குகளின்பேரிலேயே விழும்.

இவ்விதம் நெருக்கமாக நிரம்பியிருக்கிற மலக்குகள் ஒவ்வொரு பேர்களுடையகையிலும்-ஒவ்வோர்கொடிப்பிடித்திருக்கிறார்கள அந்தக் கொடிகள் ஒவ்வொன்றும் நாற்பதுகாதவழித் தூரமாகஇருக்கும்-இவ்விதம் நீளமான கொடிகளடங்கலிலும் (லாஇலாக இல்லல்லாகு முகம்மதுற்ற சூலுல்லாகி)என்னு மகா சிறப்பான கிருக்கலிமா எழுதப்பட்டிருக்கின்றன.

இவ்விதங் கலிமாஎழுதிய கொடிகளைப் பிடித்திருக்கும் - அந்த மலக்குகள் எல்லோரும் வெள்ளிக்கிழமைஇரவெல்லாம் காபுமலையைச்

ழம் கூடியிருந்துகொண்டு-அல்லாகுத்தஆலா அளவிலே சாளயப்பட்டவர்களாக ஆண்டவனே அழியாப்பொருளே-பேரின்பக்கடலே - முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிவசல்லமவாகளுடைய உம்மத்துகளுக்கு நீ றகுமத்துச்செய்யென்று-சலாமத் தாகும்படி துஆக்கேட்பார்கள்.

பின்பு -பொழுது உதயமானபோதும் ஆண்டவனளவிலேயவர்கள் ஆண்டவனே-முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய வும்மத்துகளில்நின்றும் இன்றையதினம்ஜுமுஆத்தொழுகை தொழுபவர்களுக்குத் துபாவுக்கு ஆஜருகுவார்களே-அவர்களுடையபிழையை நீ பொறுத்திடென்று துஆக் கேட்டுக்கொண்டேயிருந்து பின்பு அவர்கள் அழுகிறவர்களாகச் சத்தமிடுவார்கள்.

அப்போது-அல்லாகுத்தஆலா அந்தமலக்குகளைப் பார்த்து எம்முடைய மலக்குகளே நீங்கள் எந்தகாரியத்தை நாடியழுதுசப்திக்கிறீர்களென்று கேட்பான்-அதற்கு மலக்குகள்-அல்லாகுத்தஆலா இடத்தில் நாங்கள் நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய வும்மத்தார்களின் பாவங்களைப் பொறுக்கும்படிக்கு நாடி யழுகிறோமென்று சொல்லுவார்கள்.

அதுகேட்டு-அல்லாகுத்தஆலா அந்த மலக்குகளுக்குத் திடனாக நானவர்களுடைய பாவங்களைப் பொறுத்துக்கொண்டேனென்று சொல்லுவான் -இந்தப்படிக்கு-மிஸ்காத்து அன்வாறுமுதலிய கித்தாபுகளில் வந்திருக்கின்றன.

ஆதலால் முசிலிமாகிய இகுவான்களே நீங்கள் இதையுற்றுணர்ந்து யோசித்துப்பார்த்து வெள்ளிக்கிழமை குத்துபாத் தொழுகையின் பேறிற பூணிப்பாயிருந்து தொழுதுகொண்டுவந்தால் அல்லாகுத்தஆலா றகுமத்துச்செய்வான்-ஆமீன்.

ஷிக்காயத்து.

பைத்துல் மகுமூறுக்கு அசல்பாகத்திலே வெளுமையான வெள்ளியில்நின்றும்-ஒருமனாறாவை அல்லாகுத்தஆலா படைத்திருக்கிறான் அந்தமனாறாவுடைய நீளமாகிறது-ஐந்நூறுவருஷத் தொலைதாரமுண்டும்-அந்தமனாறாவின்பேரிலே ஜுமுஆநாளாலல் ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் ஏறிநின்று வாங்குசொல்லுவார்கள்.

இசுருபீல் அலைகிஸ்ஸலா மவர்கள்-அந்த மனாறாவின்பேரிலேறி கிராஅ குத்துபா வோதுவார்கள்-மீக்காயீல் அலைகிஸ்ஸலாமவர்களமற

றமலக்குகளடக்கலைக்கொண்டும் இமாமத்துச்செய்வார்கள்- இவ்விதத் திற் றொழுது முடிந்ததின் பின்னாலே-

ஜிபுரீல் அலைகிஸ்ஸலா மவர்கள் நான்சொன்ன வாங்குக்காகக் கிடைக்கிற வானப முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவாகளுடைய வும்மத்துகளில்நின்றும் - மூமீனுகிய முஅத்தீன்கள் யாவர்க்கும் நன்கொடையாகக் கொடுத்துவிட்டேனென்று சொல்லுவார்கள்.

இசுறுபீல் அலைகிஸ்ஸலா மவர்கள் நான் குத்துபா வோதினதற்குக்கிடைக்கிற தவாபை முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய வும்மத்துகளில்நின்றும்-குத்துபாவோதுகிற கத்தீபலெப்பைமார்கள யாவருக்கும் நன்கொடையாகக் கொடுத்துவிட்டேனென்று சொல்லுவார்கள்.

மீக்காயீல் அலைகிஸ்ஸலாமவர்கள் நான் இமாமத்துச் செய்ததற்காகக்கிடைக்கிறதவாபை முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய வும்மத்துகளில் நின்றும்-ஜும்ஆநாளில் இமாமத்துச் செய்கிறவர்கள் யாவர்க்கு நன்கொடையாகக் கொடுத்து விட்டேனென்று சொல்லுவார்கள்.

மற்ற ஜமாஅத்தாகிய மலக்குகள் முழுமையும்-நாங்கள் ஜும்ஆத் தொழுததற்காகக் கிடைக்கிறதவாபை முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய வும்மத்துகளில்நின்றும்-இமாமுக்குப் பின்னாலே ஜும்ஆத்தொழுகுவார்களே அவர்கள் யாவருக்கும் - நன்கொடையாகக் கொடுத்துவிட்டோமென்று சொல்லுவார்கள்,

அப்போது அல்லாகுத்தஆலா அந்தமலக்குகளைப் பார்த்து என்னுடைய மலக்குகளே - நீங்கள் என்னிடத்தில் ஸகாவத்தைத் திடனாய் வெளியாக்கிவிட்டீர்கள்-ஆதலால்-என்னுடைய சிறப்பு வலுப்பத்தின் பேரிலாணையாக என்னுடைய அடியார்களில்நின்றும்-ஜும்ஆத் தொழுகையைத்தொழுகிறார்களே-அவர்களுக்கு இன்றையிலே நான் அவர்களுடைய பாவங்களைத் திடனாகப் பொறுத்துக் கொண்டேனென்று சொல்லுவான்-இந்தப்படிக்குச்-சுபுதத்துல் வாகிலீனென்னுங் கித்தாபில் வருகின்றன.

இன்னும்-யாதாமொருவன் - ஜும்ஆநாளையிற் குளிப்பானாகில் அதற்காக அவனுடைய பாவங்களைத் தெண்டனுற்றமாக நீக்கப்படும் - இன்னும்-யாதாமொருவன்-ஜும்ஆத் தொழுகைக்கு எழுந்து நடக்

போவானாகில்-அல்லாகுத்தஆலா அவனடக்கிற வழியிலே அடிவொன்றுக்கும் பதிலாக இருபதுவருஷத்துடைய-இபாதத்தை யெழுதிடுவான்.

பின்னர்-அவன் ஜும்ஆத்தொழுவானாகில் எண்ணூறுவருஷத்துடைய அமலைக்கொண்டும்-அவனுக்குக் கூலிகொடுப்பானென்றும்-நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் - திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

நஸீஹத்துல் மஜாலிசென்னுங் கித்தாபிலே எழுதியிருக்கின்றது-யாதென்னில்-ஜும்ஆநாள் வருமேயானால் - அந்நாளில் அல்லாகுத்தஆலா பூமியுடைய முகத்தின்பேரிலே மலக்குகளை யனுப்புவான்-அந்த மலக்குகளுடைய கைகளிலே தங்கத்தினாலாகிய கலமென்னும் எழுதுகோல்களும்-வெள்ளியினாலாகிய கடிதாசுகளும்வைத்துக்கொண்டு பள்ளியுடைய வாயிலின்பேரில்நின்று பள்ளிவாயிலுட்புகுந்து - ஜும்ஆத்தொழுவார்களே அவர்களுடைய பெயரை யின்னாரின்னாரென்று விபரமாக எழுதுவார்கள்.

அப்படியவர்கள் தொழுது முடிந்தபிறகு அந்தமலாயிக்கத்துகள் வானலோகத் தளவில் மீண்டுபோய் அல்லாகுத்த ஆலாவை-எங்களுடைய ஆண்டவனே நாங்கள் பள்ளிவாசலுட்புகுந்து ஜும்ஆத்தொழுதவர்களுடையபெயரை விபரமாக எழுதிவந்தோமென்று சொல்லுவார்கள்.

அப்போது அல்லாகுத்தஆலா அந்தமலக்குகளைப்பார்த்து-என்னுடைய மலக்குகளே என்னுடையசிறப்பு வலுப்பத்தின்பேரி லாணையாக அவர்களுடைய பாவங்களை நான் திடனாகப் பொறுத்துக்கொண்டேன்-ஆதலால-அவர்களின்பேரிலே பாவங்களில்நின்றும் ஒருவஸ்துவேணும் இல்லையென்று சொல்லுவான்.

இன்னும்-ஜும்ஆதினத்திலே தொழுகிறதற்காகநாடி யாதாமொருவன் முதலின ஸாஅத்திற் போவானாகில்-அவன் ஒருவொட்டகையை அறுத்துக் குறுபான்கொடுத்தவனைப்போ லாகிடுவான் - இரண்டாம் ஸாஅத்திற் போவானாகில் அவன் ஒரு மாட்டையறுத்துக் குறுபான் கொடுத்தவனைப்போ லாகிடுவான்-மூன்றாம் ஸாஅத்திற் போவானாகில் அவன் ஒரு ஆட்டையறுத்துக் குறுபான்கொடுத்தவனைப்போ லாகிடு

வால்-நான்காம் ஸஅத்திற்போவானுகில் அவன் ஒருகோழியை ஹதி யாக்கொடுத்தவனைப்போல் ஆகிவிடுவான்-ஐந்தாம் ஸஅத்திற் போவானுகில் அவன் ஒருகோழிமுட்டையைஹதியாக்கொடுத்தவனைப்போலாகி டுவானென்று நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானுர்கள்.

இன்னும்-யாதாமொருவன் - பொடும்போக்காக மூன்று ஜுமுஆவைத் தொழுகாமல் விட்டுவிடுவானுகில் அவனுடைய கல்பிலே முத்திரைபோடப்படும் மேலும்-அல்லாகுத்தஆலா இடத்திலே நாட்களில் நின்றும் உவப்பான நாளாகிறது-ஜுமுஆவுடையநாளாக இருக்கும்.

இன்னும்-ஜுமுஆநாளையிலேதான் அல்லாகுத்தஆலா ஆதம்அலைகிஸ்ஸலாமவர்களைப் படைத்தான் - அதே நாளையிற்ருன் அவர்களைச் சொர்க்கலோகத்தை விட்டும் பூலோகத்தி லிறக்கிவைத்தான் அதேநாளையிற்ருன் அவர்களை உபாத்தாக்கினுன்-அதேநாளையிற்ருன்-துஆக்களைக் கபூல்செய்யப்பட்ட ஸஅத்திருக்கின்றது- அதேநாளையிற்ருன் கியாமநாள்வரும்-ஆனதால்-மூமீன் முசிலிமாகிய இருவான்களேஇந்த பாவை நன்ருகப்பார்வையிட்டு ஜுமுஆவைத் தொழுதுகொள்ளுங்கள்

ஹதீது.

நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்-திருவுளமானுர்கள்-யாதென்னில் - யாதாமொருவன் ஜுமுஆத் தொழுதபிறகு (குல்குவல்லாகு) சூறத்து (குல்அவூது பிறப்பில்பலக்கு)சூறத்து (குல் அவூதுபிறப்பின்னுசு) சூறத்துஆகிய இம்மூன் [illegible]றையும் - ஒவ்வொன்றை ஏழுதிரம் ஓதிவருவானுகில்-அவனுக்கு அல்லாகுத்தஆலாவைக் கொண்டும்-ஒடுக்கத்து நாளையைக்கொண்டும் - ஈமான்கொண்டவர்களுடைய தொகைக்குக் கூலிகொடுக்கப்படும் - இன்னும்-ஹாசியத்தில் பாஜூரிஎன்னுங் கித்தாவில் ஜுமுஆவுடைய பாபிலே சொல்லியிருக்கிறது-யாதென்னில்.

பைத்து.

இலாகி லெஸ்து லில்பிர்தௌஸி அகுலா
வலா அக்குவா அலாநாறில் ஜெஹீமி.
பஹபுலித்தௌபத்தன் வஃபிர் துனூபி
வஇன்னக்கா பிறசன்பில் அலீமி.

இதன்பொருள்.

என்னுடைய ஆண்டவனே நான் பிருதௌசென்னும் சொர்க்கத்திற்குத் தகுமானவனாக இருக்கவில்லை-இன்னும்-நான் ஜஹீமென்னும் நரகத்திற்கும் சக்தியுடையவனாக இருக்கவில்லை-திடனாக நீயாகிறவன் பெரும்பாவத்தைப் பொறுத்துக்கொள்கிறவனாகஇருக்கிறாய்-ஆதலால் எனக்குத் தௌபாவை நன்கொடையாகக் கபூல்ச்செய்து-என்னுடைய பாவங்களைப்பொறுத் தருள்செய்வாயாக.

இந்த இரண்டு பைத்தையும்யாதாமொருவன்-ஜும்ஆநாளையில் மூன்று விசுத்தமோதுவானாகில்-அவன் சந்தேகமின்றியே ஈமானுடனே மவுத்தாகுவான்-இன்னும்-ஜும்ஆவுக்குப் பின்னாலே ஐந்துவிடுத்தமோதுவான்-இப்படி யோதுவார்களுக்கு அல்லாகுத்தஆலா மிகுந்த நன்மை தறஜாக்களைக் கொடுப்பான்-ஆமீன்-யாறப்பல்-ஆலமீன்.

ஜும்ஆத்தொழுகையுடைய வரிசையின்பயான்

முற்றிற்று.

ஸக்காத்துக்கொடுக்கிற வரிசையின்பயான.

ஹதீது.

நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம்பற்றினது-யாதென்னவில் - ஸக்காத்துக் கொடுக்கிறதாகிறது ஈமானைத் தபுரவாக்கி வைக்கிறதாக இருக்கும்-ஆதலால் - யாதா மொருவன் தன்னுடைய திரவியத்திற்குள்ளபடி ஸக்காத்தையிறுத்தாவிட்டு மீதத்திரவியத்தை வைத்துவிட்டு மவுத்தாகுவானாகில்- அந்தத்திரவியத்தை யுடையவனுக்கு-மலக்குகள் கியாமநாள்வரைக்கும் தவ்பாவை யெழுதுவார்கள்.

இன்னும்-யாதாமொருவன் - ஸக்காத்தை மனச் சந்தோஷமாகக் கொடுப்பானேயானால் - அந்தத்திரவியத்தை அல்லாகுத்தஆலா அவனுக்குச் சொர்க்கலோகத்திலே யொளிவினாலுமுள்ள சவுதியாக்கிப் போடுவிப்பான் - அதினுடைய பிரகாச ஒளியுடையதெல்லாம் இலங்கும்.

அந்தப் பிரகாசத்தினால்-அவன் ஸிறாத்தல்முஸ்தகீமென்னும்பாலத்தைத் துரிதமாகக் கடந்து சொர்க்கம்புகுவானென்று - நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

அபூகுறைறா றலியல்லாகு அன்கவர்களுக்கு-நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சொன்னதாகச்சொல்லப்படுகிறது யாதென்னில்-ஆராகிலு மொருவனுக்கு அல்லாகுத்தஆலா திரவியத்தைக் கொடுத்திருக்கில்-அவன் அந்த திரவியத்திற்கு - ஸக்காத்துக் கொடுக்கவில்லையாகில்-அந்ததிரவியத்தை கியாமநாளில் இரண்டுகண்ணிற்குமேலே கரும்புள்ளிவிழுந்த பாம்புபோலாக்கி - யதைக்கொண்டும் அவனுடைய கழுத்திலே சவடிபோலே போடப்பட்டு-அவனுடைய இரண்டு கடவாயிலும் அது கடித்துப் புடுங்கிக்கொண்டே யிருக்குமென்று நபிநாயகந்திருவுளமானார்கள்-இந்தப்படிக்கு-துற்றத்துன்னாஸிஹீன்முதலான கித்தாபுகளில் வருகின்றன.

இன்னும்-அனசுறலியல்லாகு அன்கவர்களைத் தொட்டும் - தபுறாணியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்-யாதென்னில் - நபிநாயகந் திருவுளமானார்கள்-ஸக்காத்தை விலக்கிறவன் கியாமநாளையிலே நரகத்தி லிருப்பானென்று-அப்படிவராமல் அல்லாகுத்தஆலா நம்மனைவரையுங்காத்துக்கொள்வான்.

ஹிக்காயத்து.

இபுனு அப்பாசு றலியல்லாகு அன்குமாவுடைய காலத்தில்-அதிக திரவியமுடைய வொருமனிதனிருந்தான்-அந்தமனிதன் மவுத்தாகிப்போனான்-அப்போது அவனையடக்கக் கபுறுவெட்டினார்கள்-அப்படிக் கபுறுவெட்டும்போது கபுறிலே பெரிய பாம்பைக்கண்டு வந்து இபுனு அப்பாசு றலியல்லாகு அன்குமா அவர்களுக்குத் தெரிவித்தார்கள்.

அதுகேட்டு அவர்கள் - அந்தக் கபுறைவிட்டு வேறோரிடத்தில் கபுறுவெட்டுங்களென்று சொன்னார்கள். அதுகேட்டுக் கபுறுவெட்டப்பட்டவர்கள் வேறோரிடத்திலே கபுறுவெட்டினார்கள் - அதிலும் பாம்பைக்கண்டார்கள்-இவ்விதம்-ஒவ்வோர்கபுறு வெட்டுந்தோறும் பாம்பைக்கண்டு-அதைவிட்டுவிட்டு மறுகபுறு வெட்டுவதிலே ஏழுகபுறு வெட்டினார்கள்-அந்தஏழிலும் பாம்புகிடப்பதாகக் கண்டார்கள்.

பின்னர்-இபுனு அப்பாசு றலியல்லாகு அன்குமா அவர்கள் அந்த மையித்துடைய தாயாரிடத்தில் துனியாவில் இந்தமனிதன்செய்த செயலென்னவென்று கேட்டதற்கு-அந்தத் தாயானவள் இவன் ஸக்காத்தைக் கொடுக்கமாட்டேனென்று விலகிக்கொண்டு இருந்தானென்று சொன்னார்.

அதுகேட்டு-இபுனு அப்பாசு றலியல்லாகு அன்குமா அவர்கள்-அந்தப்பாம்புடனே யவனை யடக்கஞ்செய்யுங்களென்று சொன்னார்கள் அதுபோலவே அந்தமையித்தைப் பாம்புடனே போட்டு - அடக்கஞ்செய்தார்கள்-இந்தப்படிக்கு-துசுவுத்துல் மஜாலிசு முதலான கித்தாபுகளில் வருகின்றன.

குறுஆன் ஷரீபிலே முப்பத்திரண்டிடத்திற் றொழுகையுடனே ஸக்காத்தையுஞ்சேர்த்து அல்லாகுத்தஆலா சொல்லியிருக்கிறான்-ஆகவாற் றொழுகைக்குப்பிறகு வணக்கத்திலே மிகவும் உயர்ந்தவரிசையானது-ஸக்காத்துக்கொடுக்கிறதா யிருக்குமென்று - துற்றல்முகுத்தாறென்னும் கித்தாபிற் சொல்லியிருக்கின்றன.

இன்னும்-ஸக்காத்துச்செய்கிற வரிசையைக் குறித்து அனேகம் இருக்கின்றன-அவைகளையெழுதினால்விரிவாகுமென்று இவ்விடத்திற் சுருக்கமாக முற்றிவித்தனம் (இன்ஷா அல்லா) இனி ஹயாத்து பாக்கியாயிருக்கில் கூடியமட்டில் பிகுவினாவில் ஸக்காத்துடைய பறுளு ஷறுத்து அதைக்கொடுக்கப்பட்ட பேர்கள்முதலிய சகலதும் விஸ்தீரணமாகத்தனித்து அதுமட்டில் கிதாபு அச்சிடப்படும்-ஆகலால் மூமீன் முசிலீமாகிய இருவான்களே-சிறப்பையுடையவர்களே - இந்த பாகத்தை உங்களுடைய அறிவென்னும் கண்களால் நன்றாகப் பார்வையிட்டு இபுலீசுடையமாயத்தில் அகப்படாமல்-துனியாவானது என்றைக்குஞ் சதமாயிருக்குமென்றுநம்பிக்கை வையாமல்-துனியாவுடைய வாழ்க்கை கண்ட கனவைப்போலா யிருக்குமென்பதை யுணர்ந்து - ஸக்காத்து விதியானவர்கள்-ஸக்காத்தை முறைபோலே கொடுத்துக்கொள்ளுங்கள்-இப்படிச் சக்காத்துக்கொடுக்கிறதினாலே மட்டிலடங்காத நன்மையும் - [illegible]டையும்- அல்லாகுத்தஆலா தந்து சொர்க்க லோகத்திலுந் தாக்கலாக்கி வைப்பான்-ஆமீன்-யாறப்பல்-ஆலமீன்.

ஸக்காத்துக்கொடுக்கிற வரிசையின்[illegible]பயான்

முற்றிற்று.

றமலான் மாத நோன்பு பிடிக்கிற வரிசையின்பயான்.

———0✻0———

அல்லாகுத்தஆலா குறுஆன்சரீபிலே திருவுளமாயிருக்கிறான் அதன்பொருள் யாதென்னில்-உங்கள்பேரிலே றமலான்மாதம் நோன்பு பிடிக்கிறதைப் பறுலாக்கப்பட்டதென்று -ஆனதால் மூமீன்களே றமலான்மாதத்தில் நோன்பைவிடாமற் பிடித்துக்கொள்ளுங்கள்.

ஹதீது.

றமலான் மாதத்திலேதான் குறுஆன் பிறக்கப்பட்டது-இன்னும்-அதேமாதத்திலேதான் இபுறாகீம் அலைகிஸ்ஸலாமவர்களுடைய சுகபுத்தௌறுத்துவேதம்-சபூர்வேதம்-இஞ்ஜீல்வேதமிவைகளெபிறக்கப்பட்டது-இன்னும்-றமலான்மாதம் சங்கையும், சிறப்பும், மேன்மையு, மொளிவும் பொருந்தியதாயிருக்கும்-இன்னும் - றமலான்மாதம் பிறைப் பிறந்ததேயானால்-அறஷு-குறுசு-மலாயிக்கத்துகள்முதலிய மற்றவஸ்துகளெல்லாம்-சத்தமிட்டு நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய உம்மத்தோர்களுக்குச் சோபனமென்று சொல்லுங்கள்.

இன்னும் - சந்திரன்-சூரியன்-நட்சத்திரங்கள் - பறக்கிற பக்கிசரங்கள்-தண்ணீரில்வாழு மீனினங்கள்-ஷைத்தானைத்தவிரப் பூமியில் உயிருள்ள வஸ்துகளடங்கலும்-இரவிலும்-பகலிலும் நபிநாயகமவர்களுடைய உம்மத்தோர்கட்குப் பிழைபொறுக்கத்தேடுங்கள் - அதுபோலே அல்லாகுத்தஆலா பிழைகளைப் பொறுத்திடுவான்.

இன்னும் - அல்லாகுத்தஆலா மலாயிக்கத்துகளைப்பார்த்து றமலான் மாதத்தையில் உங்களுடையசலவாத்தையும்-தீசுபீஹையும்-எனது ஹபீபாகிய முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமுடைய உம்மத்தோர்களுக்கு ஹதியாச்செய்யுங்களென்று சொல்லுவான்-அதுபோல - அவர்கள் ஹதியாச்செய்வார்கள்.

இன்னும்-என்னுடைய உம்மத்தோர்கள்-றமலான்மாதத்திலுள்ள தறஜாக்களை யறிந்தார்களேயானால்-வருஷமுழுமையும் றமலானாக இருக்கவேண்டுமென்று பிரியம்வைப்பார்களென்று நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சொல்ல நான் கேட்டேனென்று இபுனு அப்பாஸு றலியல்லாகு அன்குமா அவர்கள் சொன்னார்கள்.

இன்னும்-றமலான்மாதத்தில் நன்மைகளெல்லாம் சேர்க்கப்படும் இபாதத்துகளையும்-துஆவையும்-கபூல்செய்யப்படும்-பாவங்களையெல்லாம் மன்னிக்கப்படும்-சொர்க்கம் அவர்கள்பேரிலே பிரியப்படும்-இன்னும் றமலான்மாத முதற்றெய்தி யிரவையிலே ஷைத்தான்களையும் - சூரியாட்டமாடுகிற ஜின்களேயும் விலங்குபோடப்படும் - நரகத்தினுடைய வாயில்களடங்கலையும் பூட்டப்படும்-சொர்க்கத்துடையவாயில்களடங்கலையும் திறந்துவைக்கப்படும்.

இன்னும் - றமலானுடைய இரவுமுழுமையும் ஒருமலக்கானவர் சப்தித்து நன்மையைத்தேடுகிறவனே நீ நல்மையைத்தேடு - பாவத்தைத்தேடுகிறவனே நீ பாவத்தை விட்டுவிடுஎன்று சொல்லுவார்.

இன்னும்-வேறொர் றிவாயத்தில்வருகிறது- யாதென்னில்-அல்லாகுத்தஆலா றமலான்மாதத்தில் ஒவ்வோ ரிராவிலும் மூன்றுதரம்என்னிடத்தில் கேட்கிறவனுண்டானால்-அவன் கேட்கிறதைக் கொடுப்பேன்-தௌபாச்செய்கிறவனுண்டானால் - அவனுடைய தௌபாவை கபூல்செய்வேன்-பிழைபொறுக்கத் தேடுகிறவனுண்டானால்-அவனுடைய பிழையைப் பொறுப்பேனென்று சொல்லுவான்.

நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்-யாதென்னில்-என்னுடையஉம்மத்துகளில் யாதாமொருவர் தங்களுடைய பெண்சாதிபிள்ளைகளுடனேநோன்புபிடித்திருந்து அந்த நோன்பைத் திறக்குவார்களேயாகில்-அவர்களுக்கு - மக்கம்-மதீனப்-பைத்தில்-முகத்திஸ-ஆகிய இம்மூன்றூரிலு நோன்பு பிடித்தவர்களுக்கு எவ்வளவுநன்மை தவாபு கிடைக்குமோ அதுபோலுள்ள நன்மை தவாபுகளை அல்லாகுத்தஆலா கொடுப்பான்.

இதில்-மக்கத்திலே நோன்புபிடிக்கிறவர்களுக்கு-எழுபதினாயிரம் ஹஜ்ஜும்-எழுபதினாயிரம் உம்றாவும் செய்ததவாபும்- எழுபதினாயிரம் றமலான்மாத நோன்புபிடித்த தவாபும்-அல்லாகுத்தஆலா கொடுப்பான்.

மதீனத்திலே நோன்புபிடிக்கிறவர்களுக்கு என்னைக் கொண்டும் ஈமான்கொண்டவர்கள்-ஈமான்கொள்ளாதவாகள்-எவ்வளவுதொகையாயிருக்கிறார்களோ-அவ்வளவுதொகை நன்மைகளை அல்லாகுத்தஆலா கொடுப்பான்.

இந்தக்கணக்கின் றொகைபோலுள்ள பாவங்களையும் - அவர்களை விட்டும் அல்லாகுத்தஆலா அழித்திடுவான்-இந்ததொகைபோலுள்ள தறஜாக்களையும்-அல்லாகுத்தஆலா வுயர்த்திடுவான்.

பைத்துல் முக்கத்திஸிலே நோன்பு பிடிக்கிறவர்களுக்கு-அல்லாகுத்தஆலாவுடைய உதவியைக்கொண்டும் ஏழுவானம் - ஏழுபூமியிலுண்டான மலக்குகளெல்லோரும்-அவர்கள் பிழையைப் பொறுக்கத்தேடுவார்கள்-இந்தப்படிக்கு-நயாறுல் முதலிய கித்தாபுகளில்வருகின்றன.

இன்னும்-அல்லாகுத்தஆலா சுபிதுறத்துல் முந்தஹா வென்னும் பெயருடைய மரத்திற்குக்கீழே யொருமலக்கைப் படைத்திருக்கிறான் அந்தமலக்குடைய உயரம் ஆயிரம்வருஷத் தொலைதூரமுண்டும்-அவருக்கு ஆயிரம் சிரசுண்டும்-அந்தச்சிரசு ஒவ்வொன்றுக்கு ஆயிரமுகமுண்டும்-அந்தமுகமொவ்வொன்றுக்கு ஆயிரம்வாயுண்டும்-அந்தவா யொவ்வொன்றுக்கு ஆயிரம் நாவுண்டும்-இவ்விதமான அந்த மலக்கினுடைய சிறகின்பேரிலே ஆயிரம் ஜோட்டிப் பின்னலுண்டும்-அந்தச் சோட்டிப்பின்னல் ஒவ்வொன்றுக்கும் ஆயிரமுத்துண்டும்-அந்த முத்துகளின் ஒளிவிலின்றும்-ஆயிரம் கடலுண்டாயிருக்கிறது - அந்தக்கடல் ஒவ்வொன்றிலும்-இரண்டிரண்டு மீனுண்டாயிருக்கிறது - அந்த மீன்கள் ஒவ்வொன்றினீளம் நூறுவருஷத் தொலைதூரமாயிருக்கும்.

அந்த மீன்களுடைய முதுகுகளின்பேரிலே (லாஇலாக இல்லல்லாகு முகம்மதுற்றசூலுல்லாகி) என்னுங் கிருக்கலிமா எழுதப்பட்டிருக்கிறது-இவ்விதமான அந்தமலக்குத் தசுபீகுசெய்தாரேயானால்-அந்தச் சத்தத்துடைய அழகினாலே அல்லாகுத்தஆலாவுடைய அறுஷும் அசையும்-இன்னும்-ஆதம் அலைகிஸ்ஸலாமவர்களைப்படைக்க இரண்டாயிரம் வருஷத்திற்குமுன்னமே-அல்லாகுத்தஆலா அந்தமலக்கைப் படைத்திருக்கிறான்.

மிகுறாஜுடைய இரவையில் நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அந்தமலக்கைக்கண்டுசலாம்சொன்னார்கள்-அப்போது அந்தமலக்குத் தசுபீகு ஓதுகிறதின்பேரிலே பிராக்காக இருப்பதினாலே நபிநாயகம் சொன்னஸலாமவருடைய காதுக்குக் கேட்கவேயில்லை-அதுகண்டு ஜியுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் அந்த மலக்கினிடமாக இவர்கள் முகம்மதுநபியாக்கும் உமக்குச்சலாம்சொன்னார்களென்றார்கள்.

அதுகேட்டவுடனே அந்தமலக்கானவர் தம்முடைய சன்னம்பொருந்திய இரண்டு சிறகையும் விரித்து நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய இரண்டுகண்ணுக்கு மிடையிலே முத்தமிட்டுக்கொண்டு-முகம்மதே-றமலானுடைய பறக்கத்தைக் கொண்டும் உமக்கு மும்முடைய வும்மத்தோர்களுக்கும் இடனுக அல்லாகுத்தஆலா பாவங்களைப் பொறுத்திட்டாரென்று சுல்மாராயஞ்சொன்னார்.

இவ்விதஞ்சொன்ன அந்தமலக்குடைய முன்பக்கத்திலே ஆயிரம் பூட்டுகளிடப்பட்ட பெட்டகம இரண்டு இருக்கின்றது-அந்தப்பெட்டகத்தைநபிநாயகங்கண்டு இந்த இரண்டுபெட்டகத்திலும் என்னஇருக்கிறதென்று அந்த மலக்கிளிடமாகக்கேட்டதற்குஅவர்நபிநாயகத்தைப் பார்த்து-முகம்மதே-இந்தப்பெட்டகத்தில் உம்முடைய வும்மத்தோர்களில் நின்றும்-றமலான்மாதத்திலே நோன்புபிடிப்பவர்களுடைய பேர் எழுதப்பட்ட பட்டோலை வைத்திருக்கிறது - அதின்பேரில் நான் சாட்சி சொல்லுகிறேனென்று சொன்னார்-இந்தப் படிக்கு-நுசுஹத்துமஜாலிசு முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

ஹிக்காயத்து.

தாவூதுதாயி என்பவர்கள் சொல்லியிருக்கிறார்கள்-யாதென்னில்-றமலான்மாதமுந்தின இரவுயிலே-நித்திரை யென்னைமிகைத்திட்டது-அப்போது என்கனவிலே முத்துமாணிக்கத்தினுலுமுள்ள ஆற்றங்கரையின்பேரிலே சொர்க்கத்தைக்கண்டேன் - அந்தச் சொர்க்கத்துப் பெண்களுடைய முகவொளிவு சூரிய வொளிவுபோ லிருக்கிறது-அதுகண்டு நான் (லாஇலாக இல்லல்லாகு முகம்மதுற்ற சூலுல்லாகி)யென்னுந் திருக்கலிமாவைச்சொன்னேன் - அப்போது அந்தப்பெண்களும (லாஇலாக இல்லல்லாகு முகம்மதுற்றசூலுல்லாகி) யென்னுந் திருக்கலிமாவைச் சொல்லி றமலான் மாதத்திலே தொழுகிறவர்களுக்கும்-நோன்பு பிடிக்கிறவர்களுக்கும்- புகழுகிறவர்களுக்கும்-நாங்கள் பார்த்திப மூள்ளவர்களாக இருக்குமென்று சொன்னார்கள்.

ஹிக்காயத்து.

சுகுறத்துல் நிசாலு-என்கிற கித்தாபிற்சொல்லி யிருக்கிறது-யாதெனனில்-றமலானுகிறது கியாமத்துநாளையிலே அழகிய ரூபத்தாக அல்லாகுத்த ஆலாவுடைய திருமுன்பாகவந்து - ஸெஜதாச் செய்யும-

அப்போது அல்லாகுத்தஆலா நமலானைப்பார்த்து - ஆப்-நமலானே-உன்னுடைய ஹாஜத்தை நீகேளு-உன்னுடைய ஹக்கை அறிந்தவனுடைய கையை நீபிடியென்று சொல்லுவான்.

அதுகேட்டு-நமலான் கியாமத்திலே சற்றித்திரிந்துபார்த்து அதினுடைய ஹக்கையறிந்தவனுடைய கையைப் பிடித்துக்கொண்டு அல்லாகுத்தஆலாவுடைய திருமுன்பாகவந்து நிற்கும்-அப்பொழுது அல்லாகுத்தஆலா நமலானே நீ யென்னத்தை நாடுகிறாயென்று கேட்பான். அதற்கு-நமலான் அல்லாகுத்தஆலாவோடும்- ஆண்டவனே கனதியானகிரீடத்தை யிவனுக்குநீபோட நாடுகிறேனென்று சொல்லும்.

அப்போது - அல்லாகுத்தஆலா ஆயிரங்கிரீடங்களை யவனுக்குப் போடுவான்-பின்னர்-நமலான் பெரும்பாவத்தை யுடையபேர்களிலே எழுபதினாயிரம் பேரை மன்றூட்டஞ்செய்ய அவனுக்குக் கொடுக்கப்படும்-பின்னர்-ஆயிரம் கூறுல்கீன் பெண்களைக்கொண்டும் - அவனுக்குச் சோடாக்கி வைக்கப்படும்-அந்த கூறுல்கீன்பெண்கள் ஒவ்வொருவருடனே எழுபதினாயிரம் கிதுமத்துச் செய்கிற பெண்களுமுண்டும் இந்தச்சிறப்புடனே புருக்கின்மேரிலும் அவனையேற்றியும்வைப்பான்.

அதன்பின்னர்-அல்லாகுத்தஆலா-நமலானே நீ யின்னமும் என்னத்தை நாடுகிறாயென்று கேட்பான்-அதற்கு நமலான் - அல்லாகுத்தஆலாவோடும் ஆண்டவனே உன்னுடைய ஹபீபாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய அசல்பாகத்தில் அவனை நீ யிறக்கிவையென்று சொல்லும்-அதுபோலே-அல்லாகுத்த ஆலா அவனைப் பிருதெளசென்னும் சொர்க்கத்தில் இறக்கிவைப்பான்.

அதன்பின்னர்-அல்லாகுத்தஆலா நமலானே நீயின்னமும் - என்னத்தை நாடுகிறாயென்று கேட்பான்-அப்போது-நமலான் அல்லாகுத்தஆலாவோடும்-ஆண்டவனே என்னுடைய ஹாஜத்தை நீநிறைவேற்றினையே அவனுடைய சக்கையும் - தவாபும் - எந்தத்தலத்தி லிருக்கிறதென்று கேட்கும்- அதற்கு அல்லாகுத்தஆலா நமலானைப் பார்த்துச் சிவந்தமாணிக்கம்-பச்சை-மாகதம்- இவைமீல்நின்றும் நாறுபட்டணம் அந்தப்பட்டணம் ஒவ்வொன்றில் ஆயிரமாளிகை- இருக்கிறது-அவைகளை நோன்புபிடித்து இபாதத்தச்செய்தவர்களுக்குக்கொடுத்துச் சங்கையாக்கி வைக்கப்படுமென்று சொல்லுவான்.

ஹ தீ து

நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அசுகாபிமார்களைப்பார்த்துத் திருவுளமானூர்கள்-உங்களில்நின்று மொருவர் நமஸ்காரத்தையில் நித்திரையைவிட்டும் விழித்துப் பாயிலேயிரண்டு படிப்பார்களேயாகில்-ஒருமலக்கு அவரை - நீ யெழுந்திரும் - அல்லாகுத்தஆலா வுமக்கு யுறக்கத்தும் - றகுமத்துஞ் செய்வானென்று சொல்லுவார்.

இன்னுமவர் தொழுகவேண்டுமென்கிற நிய்யத்தைக்கொண்டும் எழுந்திருப்பாரேயானால்- அவர்படுத்திருக்க விரிப்பானது அவருக்குத் துஆச்செய்யும்-அந்தத்துஆஎல்லிதமென்னில்-ஆண்டவனே நீ யிவருக்கு உயர்த்தியாக்கப்பட்ட விரிப்பைக் கொடுத்தருளென்று துஆச்செய்யும்-இன்னும் - அவர் - உடையுடுத்திக் கொண்டாரேயானால் - அந்தவுடையவருக்குச் சொர்க்கத்துடைய உடைகளில்நின்றுமுள்ள உடைகளைக் கொடுத்தருளென்றும் துஆச்செய்யும்-இன்னும்-அவர் செருப்புமுதலியதை யெடுத்துக் காலிலே போடுவாராகில் - அந்த வஸ்துகள் ஆண்டவனே யிவருடைய இரண்டுகாலையும் ஸிறாத்தல்முஸ்தகீமென்கிற பாலத்தின்பேரிலே தப்பாடாக்கிவையென்று துஆக்கேட்கும்.

இன்னும் - அவர் உளுச்செய்கிறதற்குப் பாத்திர மெடுப்பாரேயாகில்- அந்தப்பாத்திரம் - ஆண்டவனே இவருக்குச் சொர்க்கத்துடைய கெண்டியைக் கொடுவென்று துஆச்செய்யும்-இன்னும் - அவர் உளுச்செய்கிற தண்ணீர் ஆண்டவனே இவருடையபாவங்களைவிட்டும் இவரைத் துப்புரவாக்கிவையென்று துஆச்செய்யும்-இன்னும்-அவர் தொழு தெழுந்தாராகில்-அந்த இடம் ஆண்டவனே இவருடைய கபுறை விஸ்திரணமாக்கி வையென்றும்-ஒளிவாக்கி வையென்றும்-றகுமத்தை யதிகமாக்கென்றும் துஆக்கேட்கும்-

இன்னும்-அல்லாகுத்தஆலா அவரளவிற் கிருபைப்பார்வையைக் கொண்டும்பார்த்து-அடியானே நீதுஆக்கேட்குமிடத்திலேதுஆக்கேட்கிறது-உன்னில்நின்றுமுள்ளது-அதைக் கபூல்செய்கிறது என்னில்நின்றுமுள்ளது-கேட்கிறது-உன்னில்நின்றுமுள்ளது - கொடுக்கிறது-என்னில்நின்றுமுள்ளது-பிழைபொறுக்கத் தேடுகிறது-உன்னில்நின்றுமுள்ளது-பிழையைப்பொறுக்கிறது -என்னில்நின்றுமுள்ளது -என்றுசொல்லுவான்- இந்தப்படிக்கு-சபுகத்துல் வாகிலின்முதலான கித்தாபுகளிற் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஹதீது

நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சொன்னதாக-இபுனுஅப்பாசு றலியல்லாகு அன்குமா அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள்-யாதென்னில் - றமலான் மாதத்துடைய இரவுகளில் நின்றுமொவ்வோ ரிரவைக்கும்- நோன்பு திறக்கும்போது- அல்லாகுத்தஆலா நரகத்தைவிட்டும்- பத்துலட்சம்பேர்களை யுரிமைவிட்டிடுவான் - இன்னும்-றமலான் மாதத்தில் வெள்ளிக்கிழமை யிரவானால்-அந்த இரவில் ஒவ்வோர் ஸாஅத்து முழுமைக்கும் அல்லாகுத்தஆலா நரகத்தைவிட்டும்-பத்துலட்சம்பேர்களை யுரிமைவிட்டிடுவான்.

இன்னும் - றமலான்மாத முதல்நாட் டொடுத்து முடிவுநாள்வரைக்கும் எத்தனைபேர்கள் நரகத்தைவிட்டும் உரிமையாக்கப் படுகிறார்களோ- அத்தனைபேர்க ளெண்ணப்படிக்குள்ளபேர்களை-றமலான்கடைசிநா ளிரவில் அல்லாகுத்தஆலா நரகத்தைவிட்டும் உரிமை விட்டிடுவான்-இந்தப்படிக்கு இறுஷாது முதலான கித்தாபுகளில்வருகின்றன.

நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்-திருவுளமானார்கள்-யாதென்னில்-றமலான் மாதத்தில்-யாதாமொருவன் நோன்புபிடிப்பானேயாகில் அவன் (ஆறுலட்சம்) அடிமைகளை யுரிமைவிட்டவர்போலும்-கபூல்செய்யப்பட்ட (ஆறுலட்சம்) ஒட்டகங்களை ஹதியாச்செய்திட்டவர்போலும் (ஆறுலட்சம்) வருஷம் இபாதத்துச்செய்தவர்போலு மாகிடுவான்.

இன்னும்-நபிநாயகமவர்கள் திருவுளமானார்கள்-யாதென்னில்-றமலான்மாதத்தில் நாளொன்றுக்குப் பத்துத்தடவை யாதா மொருவன்-இஸ்திக்குபார் செய்வானேயானால்-அவனுக்கு அல்லாகுத்தஆலா அறுஷைச் சுமக்குகிற மலக்குகள்-ஜிபுரீல் அலைகிஸ்ஸலாம்- மீக்காயீல் அலைகிஸ்ஸலாம்-இசுறாபீல் அலைகிஸ்ஸலாம்-இசுறாயீல் அலைகிஸ்ஸலாம் இவர்களுடைய தவாபுபோலுள்ள தவாபைக்கொடுத்திடுவான்-இன்னும் அவனுடையபாவங்களை அல்லாகுத்தஆலா அழித்திடுவான்.

இன்னும்-றமலான்மாதத்தில் யாதாமொருவன் ஷகர்செய்ததின் பின்னர்-ஒருதடவை (லாஇலாக இல்லாகுவல் ஹையுல் கையூம் அல்காயுமு அலாக்குல்லி நபுசின் பிமாக்கசபத்து) என்று ஓதுவானாகில் அவனுக்கு அல்லாகுத்தஆலா-ஒருநட்சத்திரத்திற்குப் பதிலாகப் (பத்துலட்சம்) நன்மைகளைக் கொடுத்திடுவான் - இன்னும் - அவனுக்கு

அதுபோலுள்ள பாவங்களை அல்லாகுத்தஆலா அழித்திடுவான்-இன்னும் அவனுக்கு அதுபோலுள்ள தறஜாக்களை அல்லாகுத்த ஆலா உயர்த்திடுவான்-அந்ததறஜாவானது அடங்கலும் ஏழுவானம் ஏழு பூமியில் நின்றும் பெரிதானதாக இருக்கும்.

இன்னும்-அவனுக்குப் பிரகாசமான ஒளிவினாலுள்ள தூண்கள் தலைப்பேரிலே ஒளிவினாலே ஆயிர முபர்க்தமேடை உண்டாயிருக்கிறது-அந்தமேடை ஒவ்வொன்றுக்கு ஆயிரங் கட்டிற்போட்டிருக்கிறது-அந்தக் கட்டில்களெல்லாம் கட்டில் ஒவ்வொன்றுக்கு ஒவ்வோர் கூறுல்ஈன் பெண்களாக இருக்கிறார்கள்-இவ்விதமான தூண்களை அல்லாகுத்தஆலா கொடுத்திடுவானென்று நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்-இந்தப்படிக்கு-தியாறுஹீன்முநவ்விறு முதலான கித்தாபுகளில் வருகின்றன.

115092

இன்னும்-றமலான்மாதத்தில் யாதாமொருவன் ஒன்றுபிடி வஜீபணத்தைக்கொண்டும்-ஷர்செய்வானேயானால் அவனுக்கு அறுபது நன்மைகிடைக்கும்-அதிலே-அவன் துவர்க்கத்தில் (பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்என்று)சொல்லி வஜீபவும் வஜீபித்ததின்பின்னாலே(அல்ஹம்துலில்லாகி)என்று சொல்லுவானாகில்-திடனாக அவனை இருபது வருஷம் இபாதத்துச் செய்திட்டதாகவென்று அல்லாகுத்தஆலா எழுதிடுவான்-இன்னும்-நரகத்தைவிட்டும் அவனை அல்லாகுத்த ஆலா காந்துக்கொள்வானென்றும் நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமானார்கள்.

இன்னும்-றமலான்மாதத்திலே பேரீத்தம்பழத்தைக்கொண்டும்-நோன்புதிறக்கிறது ரொம்பவும்-ஏற்றமாயிருக்கும்-நபிநாயகமும் பேரீத்தம்பழத்தை ரொம்பவும் உவப்பாகக்கொண்டு நோன்புதிறந்திருக்கிறார்கள்-அப்படிப் பேரீத்தம்பழ மில்லாமற்போனால் தண்ணீர்-அதற்குப் பின்னாலே மற்றக் கனிவர்க்கங்கள்கொண்டு நோன்பு திறக்கலாம்-கட்டவுத்துசனியாலே நபிநாயக நோன்பு திறக்கஇல்லையென்று-ஷிர்ஹுத்துல் விகாயா முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

இன்னும்-றமலான்மாதத்திலே யாதாமொரு பெண்பிள்ளை தன்னுடைய புருஷன் சந்தோஷமாகும்படி நன்றாகக் கிதுமத்துச்செய்து வருவாளாகில்-அவளுக்கு-ஆசியா-மறியம்மாளவர்களுக்குள்ள தவாபு

கிடைக்குமென்று நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலேகிவசல்லம்திருவுளமானார்கள்.

இன்னும்-றமலான்மாதத்திலே - யாதாமொரு முசிலீமானவன் ஒருமுசிலீமானவனுடைய-ஹறாஜத்தைநிறைவேற்றுவானேயாகில் அல்லாகுத்தஆலா அவனுக்குக் கியாமநாளையிலே ஆயிரம்ஹறாஜத்தைநிறைவேற்றிவைப்பானென்று நபிநாயகமவர்கள் திருவுளமானார்கள்.

இன்னும்-அல்லாகுத்தஆலா மூசா அலேகிஸ்ஸலா மவர்களுக்குச் சொன்னான்-அதாவது-யாதென்னில்-ஆய்-மூசாவே முகம்மதுநபியுடைய உம்மத்தோர்களுக்கு-இரண்டிருள தக்கடஞ்செய்யாம லிருக்கிறதற்காக இரண்டொளிவை நான் கொடுத்திருக்கிறேனென்றான்-அதுகேட்டு மூசா அலேகிஸ்ஸலாம் - ஆண்டவனே-அந்த இரண்டு ஒளிவு மென்னவென்றதற்கு-அல்லாகுத்த ஆலா மூசா அலேகிஸ்ஸலாத்துக்கு அந்த இரண்டு ஒளிவாகிறது-றமலானென்கிற வொளிவும்-குறுஆனென்கிற வொளிவுமா யிருக்குமென்றான்.

பின்னர்-மூசா அலேகிஸ்ஸலாம் ஆண்டவனே - இரண்டு இருளு மென்னவென்றதற்கு அல்லாகுத்தஆலா மூசாவே அந்தஇரண்டிருளாகிறது கபுறிலுண்டாகிறஇருளும்-கியாமநாளிலுண்டாகிற இருளுமாயிருக்கும்-இந்த இரண்டிருளையும்-அந்தஇரண்டொளிவும் விலக்கிவைத்திடுமென்று சொன்னான்.

இன்னும்-றமலான்மாத முப்பதுநோன்புபிடிக்கும்படி பறுலானதென்னவென்றால்-நம்முடையபாவா ஆதம் அலேகிஸ்ஸலாமவர்கள் சொர்க்கலோகத்திலே கோதுமைக்கனியைத் தின்றபோதுஅது அவர்கள் வயிற்றில் முப்பதுநாட் டரிபட்டிருந்தது-அப்போது-ஆதம்அலேகிஸ்ஸலாம் அல்லாகுத்தஆலா அளவிலே தௌபாச்செய்தார்கள் - அதற்கு அல்லாகுத்த ஆலா அவர்களுக்கு இரவுகாலத்துடனே முப்பதுநாள் நோன்புபிடிக்கும்படியாய் ஏவினான்.

அஃ தேதுகாரணத்தினலேயானல் துனியாவுடைய இன்பமாகிறது-நான்குகாரியத்தைக் கொண்டதாயிருக்கும்-அதில்(க-வது) வஜீபனம் (உ-வது) குடிப்பு(ந-வது)ஜிமாஃ (ச-வது)நித்திரை ஆகியஇந்நான்கும் அல்லாகுத்தஆலாவை விட்டும்-அடியானைத் திரைபோட்டுக் கொள்ளுகிறதா யிருக்கும்.

ஆதலால்-இந்த சபனைக்கொண்டும்-நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பேரிலும்-அவர்களுடைய வும்மத்துகள் பேரிலும் இராவுகாலம் வஜிபனதில்லவும்-பகற்காலம்நோன்புபிடிக்கவும்-பறுலாக்கப்பட்டது-இவ்விதம் - பறுலாக்கப்பட்ட நோன்பைப் பேணுதலாகப்பிடித்துவந்தால். அல்லாகுத்தஆலாவுடையவரிசையைப் பெற்றுக்கொள்ளலாம்-ஆமீன்.

நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அசுகாபிமார்களைப்பார்த்துச் சொன்னார்கள்-யாதென்னில்-றமலான்மாதம்கடைசிபிரவானால் வானம்-பூமி இவைகளுடனே மலக்குகள்யாவரும் அழுகுவார்கள்-அம்மேதுகாரணத்தினால்-முகம்மதுநபியவர்களுடைய உம்மத்தோர்களுக்குப் பிடித்த முசிபத்திற்காகஎன்று அழுகுவார்கள்-இவ்விதம் - நபிநாயகம் சொல்லக்கேட்டு - அசுகாபிமார்கள் நாயகமே அதென்ன முசிபத்துப்பிடித்ததென்று கேட்கப்பட்டதற்கு நபிநாயகம் அசுகாபிமார்களைப்பார்த்து வரிசையான றமலான்போறதே அதுதான் முசிபத்துப் பிடிக்கிறது - ஏனென்றால் - றமலானிலே - துஆக்களைக் கபூல்செய்யப்படுகிறது-ஸதக்காக்களைக் கபூல்செய்யப்படுகிறது-நன்மைகளை இரட்டிப்பாக்கப்படுகிறது-அநாபுகளைத் தட்டப்படுகிறது.

ஆனதால்-றமலான் போறதைக்காண வேறேயென்ன பெரியமுசிபத்திருக்கிறது-இவ்விதம்-வானம்-பூமி இவைகளுடனே மலக்குகள்யாவரும் நமக்காக அழுகிறதாயிருந்தால் இந்தவரிசைகள்-சங்கைகள்-நம்மைவிட்டும் தப்பிப்போறதற்காக அழுகை- கைசேதத்தைக்கொண்டும் நாம் செம்பவும் தகுமானவர்களென்று சொன்னார்கள்-இந்தப்படிக்கு-ஹயாத்துல்-குலூபுமுதலிய கித்தாபுகளில் வருகின்றன.

ஹிக்காயத்து

நெருப்பைவணங்கப்பட்ட மஜூசியான வோர்மனிதன் றமலான் மாதத்தில் முசிலீமானபேர்கள் - ஹாசிறாயிருக்கிற கடைவீதியிலே தன்னுடையமகன் ஒருவஸ்துவைவைத்துத் தின்னக்கண்டு கோபமாய் மகனைப்பார்த்து-நீ இந்தமாதத்தில முசிலீமானவர்களுடைய சங்கையைக் கொஞ்சமேனும் பேணுதற்செய்யுமறபோனாயல்லவா வென்று அடித்தார்.

பின்னர்-ஒருவாரத்திற்குள்ளே அந்தமனிதன் இறந்து அடக்கப்பட்டுப்போனார்-அப்போது-அவ்வூரிலுள்ள ஓர்ஆலிமானவர் கனவிலே

அந்தமனிதனைச் சொர்க்கத்தி லிருக்கக்கண்டு நீ மஜூசியாச்சுதே இவ்விதம் சொர்க்கத்திலிருக்க வுனக்கு எவ்விதங்கிடைத்ததென்றுகேட்டதற்கு அந்தமனிதன் ஆம்-மெய்தான் என்றாலும் நான் மரணமடைகிறதருணத்திலே றமலானைச் சங்கைசெய்ததினாலே அல்லாகுத்தஆலா என்னை ஈமான்கொள்ளும்படிக்கும்-இசுலாமாகும்படிக்கும் தௌபீக்குத் தந்தான்-நானும் ஈமான்கொண்டேன் - இந்தப் பறக்கத்தினாலே எனக்கு இந்தச்சங்கை கிடைத்ததென்று சொன்னார் - இந்தப்படிக்கு நுசுஹத்து-துற்றத்து-முதலான கித்தாபுகளில் வருகின்றன.

ஆதலால்-மூமீன் முஸ்லிமான எமதுடப்பிறந்தான்மார்களே சங்கையானவர்களே இவ்விதம்-றமலானைச் சங்கைசெய்த ஒருமஜூசியான மனிதனுக்கு அல்லாகுத்தஆலா கிருபையினாலே ஈமானுண்டாகும்படியான தௌபீக்குண்டாகி இசுலாமுடைய பதவியிற் பொருந்தி மவுத்தடைந்தபோது சொர்க்கபதவியையும் பெற்றுக்கொண்டதா வந்திருக்கிறதே-அதுவுந்தவிர மகாசிறப்பான நமதுஷறகிலே பிக்குஹ்முதலான கித்தாபுகளில் நோன்பாளிகளுக்கு முன்பாக கொடூரமான நோயாளியாக இருந்தாலும்-ஒருவஸ்துவைத் தின்னவுங் குடிக்கவும் போகாது-மறைவிலிருந்து செய்யவேண்டுமென்றும்.

குழந்தைகளுக்குப் பெற்றதாய் முதலியவர்கள் சோறுமுதலான வஸ்துவை யூட்டுகிறதாயிருந்தாலும் நோன்பாளிகளுக்கு முன்னேயிருந்து செய்யாமல் மறைவாகவைத்துச் செய்யவேண்டுமென்றும் வந்திருக்கிறது-அப்படியிருக்க இந்தக்காலத்திலே சில புண்ணியவான்கள் றமலானைச் சங்கைசெய்து தாங்களும் நோன்புபிடிக்காமலிருக்கிறதுமன்றி நோன்பாளிகளுக்குமுன்னாலேயிருந்து தீன்தின்னுகிறதும்-உணவு உண்ணுகிறதுந்தவிரக் கடைவீதிமுதலான இடங்களில்-கிழியக்கிழிய வெற்றிலைபாக்கு வுதடுசிவக்கத் தின்னுகிறதும்- சுருட்டுக்குடிக்கிறதும் தூட்போடுகிறதும் உக்காக்குடிக்கிறதும்-மற்றும் பண்ட பதார்த்தங்களைவாங்கித் தின்னுகிறதுமாக - அதபு மரியாதையைவிட்டு நடக்கிறார்களே இவ்விதமாக நாம்நடந்தால் நாளைகியாமத்திலே. அல்லாகுத்தஆலாவை எவ்விதஞ் சந்திக்கிறது-கேள்விக்கு என்ன ஜவாபு கொடுக்கிறது-ஆதலால்-இந்தபாவை நன்றாகப் பார்வையிட்டு மேற்சொல்லப்பட்ட ஆபத்திற் கிடமாகாமல் நமதுதீனிலே ஹலாலாக்கப்பட்ட றம

லான்மாதத்திலே நோன்புதவறவிடாமற் பிடித்து வந்து அல்லாகுத்த ஆலாவுடைய றகுமத்துகளைப் பெற்றுக்கொள்வீர்களாக - ஆமீன்-யா றப்பல்-ஆலமீன்.

றமலான்மாதம் நோன்புபிடிக்கிற
வரிசையின்பயான் முற்றிற்று.

தருவீகுத்தொழுகையுடைய வரிசையின்பயான்.

———0※0———

ஹதீது.

நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்களென்று அலியிபுனு அபித்தலிபு றலியல்லாகு அன்கவர்கள் சொல்லுகிறார்கள்-யாதென்னில்-றமலான்மாதம் தருவீகுத் தொழுகையுடைய வரிசையைப்பற்றி நபிநாயகத்திடம் கேட்கப்பட்டது-அதற்கு அவர்கள் சொன்னார்கள் - றமலான்மாதம் முதலிரவையில் தருவீகு தொழுவதினால்-அந்தமூமீன் அன்றுபிறந்தபாலகனைப்போலே பாவங்களைவிட்டும் வெளிப்பட்டிடுவான்.

இன்னும்-இரண்டாமிரவையில் தருவீகுதொழுவதினால்-அவனுக்கும் - அவனைப்பெற்ற தாய்தகப்பன் மூமீனாக இருந்தால்-அவர்களுக்கும் அல்லாகுத்தஆலா பாவங்களைப் பொறுத்திடுவான் - இன்னும்-மூன்றாமிரவையில தருவீகுதொழுவதினால்-அவனுக்கு-அறுஷின்கிழாலே நின்று ஒருமலக்கு உன்னுடைய முந்தினபாவங்களை அல்லாகுத்தஆலா பொறுத்திடுவான் நீ அமலைத்துவக்கமாகத்தொடங்கிச் செய்துகொள்ளென்று சத்தமிடுவார்.

இன்னும் -நான்காமிரவையில்-தருவீகுதொழுவதினால்-அவனுக்குத்தௌறாத்து-சபூர்-இன்சீல்-புறுக்கான்-இந்நான்குவேதங்களையும் ஓதின தவாபுபோலுள்ள கூலிகிடைக்கும்-இன்னும் - ஐந்தாமிரவில்-தருவீகுதொழுவதினால்-அவனுக்கு அல்லாகுத்தஆலா மக்கம்-மதீனம்-பைத்துல்முகத்திசு-ஆகிய இம்மூன்று பள்ளிவாசலிலுந்தொழுதவன் தவாபுபோலுள்ளதாபை அல்லாகுத்தஆலா கொடுத்திடுவான்.

இன்னும் ஆறாமிரவையில்-தருவீகு தொழுவதினால்-அவனுக்கு பைத்துல் மகுதஸில் தவாபுசெய்தவனுக்குள்ள தவாபை அல்லாகுத்தஆலா கொடுத்திடுவான்-இன்னும்-அவனுக்குக்-கல்லு மலைகட்டி அடங்கலும்பிழைபொறுக்கத்தேடும்-இன்னும்-ஏழாமிரவையில்-தருவீகு தொழுவதினால்-அவன்-மூசா அலைகிஸ்ஸலாத்தைத் தெரிசித்து-பிறவூன்-ஹாமான் இவர்களுக்குப்பகையாகவும்மூசா அலைகிஸ்ஸலாத்திற்கு உதவியாகவுமிருந்தவனைப்போலாகிடுவான்.

இன்னும்-எட்டாமிரவையில்-தருவீகு தொழுவதினால்-அவனுக்கு-இபுறாகீம் அலைகிஸ்ஸலாமவர்களுக்குக் கொடுத்த தவாபுபோலுள்ள தவாபை அல்லாகுத்தஆலா கொடுத்திடுவான்-இன்னும்-ஒன்பதாமிரவில் தருவீகுதொழுவதினால்-அவனுக்கு நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய இபாதத்தாக அல்லாகுத்தஆலாவை இபாதத்துச்செய்தவனைப்போலாகிடுவான்.

இன்னும்-பத்தாமிரவையில் தருவீகுதொழுவதினால்-அவனுக்கு துனியா ஆகிறத்திலுள்ள கைறை அல்லாகுத்தஆலா கொடுத்திடுவான்-இன்னும்-பதினோராமிரவில் தருவீகுதொழுவதினால் - அவன் தாய்வயிற்றிலிருந்தும் பிறந்த பாலனைப்போல் - துனியாவைவிட்டும் வெளிப்படுவான்-இன்னும்-பனிரண்டாமிரவில்- தருவீகு தொழுவதினால்-அவன் பதினாலாம்நாளுடைய பூரணசந்திரனைப்போலே முகமிலங்கும்படியாகக் கியாமநாளில்வருவான்-இன்னும்-பதின்மூன்றாமிரவில் தருவீகுதொழுவதினால்-அவன்-கியாமநாளிற் றீங்குகளைவிட்டும் அச்சந்தீர்ந்தவனாகவருவான்-இன்னும்-பதினான்காமிரவில் தருவீகுதொழுவதினால்-அவனுக்கு-மலாயிக்கத்துகள் திடனாக இவன் தருவீகுதொழுதானென்று சாட்சிசொல்லுவார்கள்-அதனால்கியாமநாளையில் அல்லாகுத்தஆலா அவனைக் கேள்வி கணக்குக் கேட்கிறதை இலேசாக்குவான்.

இன்னும்-பதினைந்தாமிரவையில் தருவீகுதொழுவதினால்-அவன்பேரில்-அறுஷைக் குறுசைச்சுமக்கிறவர்களும்-மலாயிக்கத்துகளும்பிழைபொறுக்கத்தேடுவார்கள்-இன்னும்-பதினாறாமிரவையில் தருவீகுதொழுவதினால்-அவனுக்குநரகத்தைவிட்டும்விடுதலைபட்டோலையொன்றும்-சொர்க்கத்திலிவன் புகுவானென்ற பட்டோலையொன்றும் ஆகிய இவ்விரண்டு பட்டோலைகளை அல்லாகுத்தஆலா எழுதிடுவான்-இன்

வும்-பதினேழாமிரவையில் தருவீகுதொழுவதினால் அவனுக்கு நபிமார்களுடைய தவாபுபோலுள்ள தவாபை அல்லாகுத்தஆலா கொடுத்திடுவான்.

இன்னும்-பதினெட்டாமிரவையில்-தருவீகுதொழுவதினால் அவனை யொருமலக்கானவர்-அல்லாகுத்தஆலாவுடைய அடியானே யுன்னையும் உன்னுடைய தாய்தகப்பன்மார்களையும்-அல்லாகுத்தஆலா பொருந்திக் கொண்டானென்று சத்தமிடுவார்-இன்னும்-பத்தொன்பதா மிரவையில்-தருவீகுதொழுவதினால் அவனுக்கு பிருதௌசென்னும் சொர்க்கத்திலே தறஜாக்களை யுயர்த்திடுவான்-இன்னும்-இருபதாமிரவையில் தருவீகுதொழுவதினால்-அவனுக்கு-ஷுஹதாக்கள் - ஸாலிஹீன்களுடைய தவாபை அல்லாகுத்தஆலா கொடுப்பான்-இன்னும் - இருபத்தொன்றாமிரவையில் தருவீகுதொழுவதினால்-அவனுக்குச் சொர்க்கத்திலே யொளிவினால் - ஒருவீட்டை அல்லாகுத்தஆலா கட்டிடுவான்-இன்னும்-இருபத்திரண்டாமிரவையில்-தருவீகுதொழுவதினால்- அவன் கியாமநாளையிலே-துக்கம்-விசனம்-சஞ்சலம்-வியாகூல முதலிய சகல கலக்கங்களை விட்டும் அச்சந்தீர்ந்தவனாக வருவான்.

இன்னும்-இருபத்துமூன்றாமிரவையில் தருவீகுதொழுவதினால் அவனுக்குச் சொர்க்கலோகத்திலொருபட்டணத்தை அல்லாகுத்தஆலா கட்டிடுவான்-இன்னும்-இருபத்திநான்காமிரவையில்- தருவீகுதொழுவதினால்-அவனுக்கு இருபத்திநான்கு துஆக் கபூல்ச்செய்யப் பட்டதாக வுண்டாகிடும்-இன்னும்- இருபத்தைந்தா மிரவையில் தருவீகுதொழுவதினால் அவனுக்குக் கபூறுடைய அதாபை அல்லாகுத்தஆலா மாக்கிடுவான்.

இன்னும்-இருபத்தாறாமிரவையில்-தருவீகுதொழுவதினால் அவனுக்கு நாற்பதுவருஷம் அமல்ச்செய்த தவாபை அல்லாகுத்த ஆலா உயர்த்திடுவான்-இன்னும்-இருபத்தேழாமிரவையில்-தருவீகுதொழுவதினால்-அவனை கியாமநாளையில் ஸிறுத்தல்-முஸ்தகீம்பாலத்தின்பேரிலே மின்வெட்டி மறைவதுபோலே அல்லாகுத்தஆலா கடத்திவைப்பான்.

இன்னும்- இருபத்தெட்டா மிரவையில்-தருவீகுதொழுவதினால் அவனுக்குச் சொர்க்கலோகத்திலே ஆயிரந்தறஜாக்களை அல்லாகுத்த ஆலா வுயர்த்திடுவான்-இன்னும்-இருபத்தொன்பதா மிரவையில்-தரு

வீகு தொழுவதினல்-அவனுக்குக் கபூலச்செய்யப்பட்ட ஆயிரம் ஹஜ்ஜுடைய நன்மையை அல்லாகுத்தஆலா கொடுத்திடுவான்-இன்னும்-றமப்பதாமிரவையில்-தறாவீகுதொழுவதினல்-அவனை அல்லாகுத்த ஆலா என்னுடைய அடியானே நீ-சல்சபீலென்னும் ஆற்றுத் தண்ணீரிலே குளி சொர்க்கத்திலுள்ள பழவர்க்கங்களைத் தின்னு-கவுலல்கவுத்றென்னும் ஆற்றுத்தண்ணீரை நீகுடி நானுன்னுடைய நாயன் நீயென்னுடைய அடியானென்று சொல்லுவான் - இந்தப்படிக்கு ஜாலிகமுதலிய கித்தாபுகளில் வருகின்றன.

ஹிக்காயத்து.

முறுஷிதென்னுங் கித்தாபிலே சொல்லியிருக்கிறது-யாதென்னில் அறுஷைச்சூழ்ந்து ஹலதத்துல் குதுஸியென்னும் ஒளிவினல்-ஒருநலமுண்டா யிருக்கிறது-அதிலே அல்லாவைத்தவிர எண்ணதகையறியக் கூடாத மலக்குகளிருந்து ஒய்வில்லாமல் அல்லாகுத்த ஆலாவை வணங்குகிறர்கள்.

அவர்கள் றமலான்மாதத்தின் இரவுவந்தால்-பூமியிலிறங்கி ஆதமுடைய மக்களுடனே தொழுகிறதற்குநாடி அல்லாகுத்தஆலா இடத்தி லுத்திரவுகேட்டுக்கொண்டு இரவடங்கலிலும் பூமியின்பேரி லிறங்குவார்கள்-அந்த மலக்குகள்-ஒருவனைத் தொட்டுக்கொண்டாலும்-அல்லது-ஒருவன் அவர்களைத் தொட்டுக்கொண்டாலும்-அவன் சீதேவித்தனம் பெற்றுக்கொள்ளுவான்-அதன்பின்பு-அவனுக்கு மூதேவித்தனமில்லையென்று நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானர்கள்-இதற்கு நாம் மெத்தவும் பார்த்திபமென்று-உமறிபுனு கத்தாபு றலியல்லாகு அன்கவர்கள் தங்களுடைய ஸமானவில்-மனிதர்களைச் சேகரஞ்செய்து தறுவீகை விடாமற் றெழுது வந்தார்கள்.

இன்னும்-றமலான்மாதம் இரவுகளில்-தறுவீகுதொழுததின்பின்னல் இரண்டு றக்குஆத்து நபில்த் தொழுகிறதிலே ஒவ்வோர் றக்குஆத்துக்கும் (அல்ஹம்து) ஓர்விடுத்தமும் (குல்குவல்லாகு) மூன்றுவிடுத்தமும் ஓதித்தொழுதால்-இரண்டுகுறுஆன் ஓதிமுடித்த தவாபுகிடைக்குமென்று-தப்சீறு-முருதியில் (இக்லாஅன்ஸல்னு) சூறத்திற்கு மஹனுச்செய்கிறதில் வருகின்றன.

இன்னும்-றமலான்மாதம் இரவுக ளடங்கலிலும்-இரண்டு றக்கு ஆத்து தொழுகிறதிலே றக்குஆத்து ஒவ்வொன்றிற்கும் (அல்ஹம்து) சூர்வித்தமும் (குல்குவல்லாகு) மூன்று விடுத்தமும் ஒதித் தொழுதால்-உண்மையான மார்க்கத்தைக்கொண்டும் என்னைநபியாக அனுப்பினவனே அந்த நாயன்பேரிலே சத்தியமாகத் திடனுக அல்லாகுத்தஆலா ஒவ்வோர் றக்குஆத்து அடக்கலுக்கும் இலட்ச மலக்குகளை யனுப்புவான்.

அந்தமலக்குகள் அவனுக்குநன்மைகளை யெழுதுவார்கள்-தீங்குகளை அவனைவிட்டும் அழித்துப் போடுவார்வள் - தறஜாவை யவனுக்கு உயர்த்திடுவார்கள் இன்னும்எழுபது அடிமைகளை வாங்கி யுரிமைவிட்டகவாபை அல்லாகுத்தஆலா அவனுக்குக்கொடுத்திடுவானென்று நபிநாயகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள் என்று அபூகுறைறுறலியல்லாகு அன்கவர்கள் சொல்லியிருக்கிறார்கள்-இந்தப்படிக்கு-துகுறல்ஆபிதீனென்னுங் கித்தாபில் வருகின்றன.

ஆதலால் எமதன்புள்ள மூமின் முசிலிமாகிய உடற்பிறப்புகளே மேலெழுகப்பட்டிருக்கிற-ஹதீதுகளை உங்களுடைய அறிவென்னும் அழகான கண்ணினுற் பார்வையிட்டுச் சோம்பலில்லாமல் இபுலீசுடைய மாயாவிநோதமயக்கத்தி லகப்பட்டு நித்திரையையிருப்பங்கொள்ளாமல்-றமலான்மாதத்திலே தறுவீகுத்தொழுகையை ஒருநாளும்விட்டுவிடாமற்றொழுது அதிலுண்டாநன்மைகளைக் கொள்ளையாடிக்கொள்ளுங்கள் - அதனால் நம் மனைவோரையும் அல்லாகுத்தஆலா கிருபை கூர்ந்து பிருதௌசென்னும் சுவர்க்கத்தில் ருக்கலாக்குவான் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

தறுவீகுத் தொழுகையுடைய மகிமையின்

பயான் முற்றிற்று.

லைலத்துல்கதிறுடைய வரிசையின்பயான்.

ஹதீது.

இருலோகத்திற்கும் வ[illegible]லான வொளிவான தெளிவான-அஹ்மது-காமிது-மஹுமூது-முகம்மது முஸ்தபா றசூல்ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாகினர்கள் யாதென்னில் - யாராகிலுமொருவன்-லைலத்துல்கதறுடையஇரவையிலே-நின்றுவணங்குவானாகில்-அவனுடைய-முந்தினபாவம் பிந்தினபாவங்களைப் பொறுக்கப்படும்.

இன்னும் அல்லாகுத்தஆலா குறுஆன்சரீபிலே திருவுளமானான் இ[illegible]னாகும் குறுஆனை லைலத்துல் கதறிலே இறக்கினோம்-முகம்மதே லைலத்துல் கதிறென்னும் இரவானதுஇன்னதென்று உமக்கு எந்தவன் தெரிவித்துத் தந்தது அதின் உள்ளமையை நீரறிவீரா - லைலத்துல் கதருனது ஆயிரமாத்தை வணக்கத்தைக்காண-னைகுனதாயிருக்கும்-அந்தஇரவையில்-மலக்குகளும் ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமும் அவர்கள் றெப்புடைய வுத்திரவுகொண்டும் பூமியிலே யிறங்குவார்கள்-அப்படி இறக்குகிறது சகல கருமங்களைக்கொண்டு யிறங்குவார்கள்.

ஹதீது

லைலத்துலகதருனது கிழக்குவெளுக்கிறவரைக்கும் ஈடேற்றமானதாயிருக்கும் - லைலத்துல்கதறென்று பெயர்வைக்கப்பட்டது ஏதினாலெனில்-அந்தஇரவையில்-கருமங்கள் ருக்கும்கள் றிஸக்குகள் - அஜல்கள்-இன்னும்-மற்றுஞ்செய்கைகளெல்லாம் அந்தஇரவுதொடுத்து மறுவருஷ[illegible]க்கும் தகுதீர் கட்டளைசெய்யப்படும்-ஆனதால் முசிலீமாகிய வுடற்பிறந்தான்மார்களே நீங்களிதைநன்குணர்ந்துபார்த்து-லைலத்துல் கதறுடைய இரவையிலே முழிப்பாகஇருந்து அல்லாகுத்தஆலாவை வணக்கஞ்செய்தால்அதனுடைய தவாபைப்பெற்றுக்கொள்வீர்கள் லைலத்துல் கதறென்ற இரவாகிறது-றமலான் மாதத்தில்-இருபத்தொன்று மிரவென்றும்-இருபத்தி மூன்று மிரவென்றும் - இருபத்தைந்தா மிரவென்றும்-இருபத் தேழாமிரவென்றும்- இருவத்தொன்பதா மிரவென்றும் பலபல றிவாயத்துவந்திருக்கிறது-என்கினும் - ஹக்காயிக்குல் ஹனபிய்யா-என்னும்-கித்தாபின் சொற்படிக்கு - இருபத்தேழா மிரவாயிருக்கும்.

ஷவ்வீதனென்றால்-லைலத்துல் கதறென்னும் சொல்லிற்கு எழுத்து ஒன்பது-இடனுக-அல்லாகுத்தஆலா-லைலத்துல் கதறென்னும்-லபுலை (இன்னு அன்ஸல்னு) சூறத்தில் மூன்றிடத்தில் மடக்கிமடக்கிச் சொல்லியிருக்கின்றான் - ஆதலால் - முன்சொன்னகணக்கின்படிக்கு-மூவொன்பது - இருபத்தேழா யிருக்கிறபடியால். - றமலான்மாதம்-இருபத்தேழாமிரவுதான் லைலத்துல் கதறுடைய இரவாயிருக்குமென்று-...ஹூர்களில் அனேகம்பேர்களும் -உலமாக்களும் சொல்லி நேர்பட்டிருக்கிறார்கள்.

லைலத்துல் கதறிரவையிலே-லிவாவுல் ஹம்து-லிவாவுல் றகுமத்து- லிவாவுல்மறு...த்து-லிவாவுல்க்கருமத்து- என்னும்பெயருடைய-நான்கு...டிகளிறங்கும் - அந்தக்கொடிகள் ஒன்றொன்றின்பேரிலும் (லாஇலாக இல்லல்லாகு முகம்மதுற்ற சூலுல்லாகி)என்னுங் கிலிமா எழுதப்பட்டிருக்கும்-அதுகள் ஒன்றொன்றுடனே-எழு...னையிரமலக்குக ளிறங்குவார்கள்-அவ் விரவையிலே யாதாமொருவன்- மேற்சொன்ன-கலிமாவை-மூன்றுதரம்-சொல்லுவானாகில்-அதிலே- முதற்சொன்ன வரிசையைக்கொண்டும் - அல்லாகுத்தஆலா அவனுடைய பாவத்தைப் பொறுத்திடுவான் - இரண்டாவது சொன்னவரிசையைக்கொண்டும் அல்லாகுத்தஆலா அவனைநரகத்தைவிட்டும் ஈடேற்றமாக்கிடுவான்-மூன்றுவதுசொன்ன வரிசையைக்கொண்டும் அல்லாகுத்தஆலா அவனைச் சொர்க்கத்திலே தாக்கலாக்கி வைத்திடுவான்.

இன்னும்-அந்தக்கொடிகள் நான்கில் - லிவாவுல் ஹம்தென்னுங் கொடியை-வானத்திற்கும்-பூமிக்குமிடையிலும்-லிவாவுல்றகுமத்தென்னுங் கொடியை நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய கபுறின்பேரிலும்-லிவாவுல் மகுபிறத்தென்னுங் கொடியை கருபாவின்பேரிலும்-லிவாவுல்க் கருமத்தென்னுங் கொடியை பைத்துல் முக்கதீசிலுள்ள படலைக்கல்லின் பேரிலும் நாட்டப்படும்.

அந்தமலக்குகளில் நின்றும் ஒவ்வொருவரும் - லைலத்துல் கதறுடையஇரவையில் முசிலீமானவர்களுடைய வீட்டுவாயிலிலே எழுபது விடுத்தம்வந்து அவர்கள்பேரிலே சலாம் சொல்லிவிட்டுப் போவார்கள்-இக்கப்படிக்கு-சனூகியத்தென்னுங் கித்தாபில் வந்திருக்கின்றன.

இன்னும்யாதாமொருவன்-றமலான்மாதம்- இருபத்தேழாமிரவையில்தொழுவானாகில்-றக்குஆத்துஒன்றுக்கு(அல்ஹம்து)ஓர் விடுத்தமும்

(இன்னாஅன்ஸல்னு)ஓர்விரித்தமும் (குல்குவல்லாகு) பதினைந்துவிடுத்தமும்ஒதித் தொழுகிறதிலே-இரண்டு றக்குஆத்திற்கு மேந்தப்பிரகாரமோதித்தொழுது சலாங்கொடுத்தபின்னர்-நூறுதிரம்-இஸ்திக்குபாறு சொல்வானுகில்- திடனுக - லைலத்துல் கதறை அவன் தெரிந்துகொள்வான்-இன்னும்-அவனுடைய நோன்பையும்-தொழுகையையும் - அல்லாகுத்தஆலா கபுல்செய்வான்-இன்னும் அவனுக்கு அல்லாகுத்தஆலா-இதரீசு-ஷஹைறுபு-யூனுசு-தாவூது அலைகிஸ்ஸலாமவர்களுடைய தவாபுபோலுள்ள தவாபைக்கொடுப்பான்.

இன்னும்-அவன் தேடிய ஹாஜத்தை அல்லாகுத்தஆலா நிறைவேற்றிக் கொடுப்பான்-இன்னும் அவனுடைய இபாதத்தை அல்லாகுத்தஆலா கபுல்செய்வான்-இன்னும்அவன் ஒதின ஆயத்துகளொன்றொன்றுக்கு பதிலாக ஜன்னத்தில்நின்று-மொருபட்டணத்தை யவன்பெற்றுக்கொள்வான்-இன்னும்ஒருறக்குஆத்தில்-றுக்கூவு-ஸுஜூதாவுக்குப திலாக ஷஹீதுடையதவாபை யவனுக்குளெழுதப்படும் இன்னும்-இந்தறமலானிலிருந்து வருகிற-றமலான்வரைக்கும்-இடையிலே அவன்மவுத்தாகிடுவானுகில்அவனுடைய மவுத்துஷஹீதுடையமறுத்தபாவாயிருக்குமென்று-நபிநாயகமுகம்மதுறசூலுல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள் - இந்தப்படிக்கு-றயாலீனென்னுங் கித்தாபில்-வருகின்றன.

ஆதலால் எமதன்புள்ள முஸ்லீமாகிய உடன்பிறப்புகளே-தெளிவையுடையவர்களே-மாய இபுலீசுவலைக்குள் மாட்டிக்கொள்ளாமல் உங்கள் - அறிவென்னுங் கண்களால் இந்தபாவை நன்றாகப்பார்த்து-மகாசிறப்பான-லைலத்துல் கதறுடைய இரவுமுழுமையும்விழித்திருந்து உங்களாலேன்றமாத்திரம்-தறாவீகு தொழுதபின்னர் - திக்றுசெய்வதும்-குறுஆனோதுவதுமாக இருந்து-நபிற்றொழுகையைத் தொழுதுகொள்ளுங்கள் - அல்லாகும்ம இன்னக்க அபூவுன்தகுப்புல்அபுவ என்றுஓதிக்கொள்ளுங்கள் ஆமீன் யாறப்பல்ஆலமீன்.

தறாவீகுத் தொழுகையுடைய

வரிசையின்பயான்முற்றிற்று.

ஷவ்வால்மாதம் ஆறுநோன்புபிடிக்கிற வரிசையின்பயான்.

——— * ———

ஹதீது.

நபீநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்-யாதாமொருவன்- ஷவ்வால்மாதம் - ஆறுநோன்புபிடிப்பானாகில்-அவன் காலமெல்லாம் நோன்புபிடித்தவனைப்போலாகிடுவான்.

அஃதெதனென்றால்-ஒருநன்மைக்குப் பத்துநன்மையென்று அல்லாகுத்தஆலா குறுஆனிலே திருவுள மானபடிக்கு - றமலானுடைய நோன்பு ஒன்றுக்குப்பத்துவிகிதம் முந்நூறுநாள்நோன்பாகும் - ஆறுநோன்பு ஒன்றுக்குப்பத்துவிகிதம் அறுபதுநாள் நோன்பாகும் - இந்தத்தொகைப்படிக்குமுந்நூற்றறுபதுநாள் ஓர்வருஷம்-அதனுலேதான் காலமெல்லாம்-நோன்புபிடித்தவனைப்போலாகிடுவானென்று நபிநாயகமருளிச்செதார்கள்- திடனுக அல்லாகுத்தஆலா-வானலோகத்தையும்-பூலோகத்தையும்-ஷவ்வால் மாதத்தில் கின்றும்ஆறுநாளையிற் படைத்தான் ஆதலால்யாதாமொருவன் அந்தஆறுநாளையில் நோன்புபிடிப்பானுகில்-அல்லாகுத்தஆலா அவனுக்கு-கல்குகள் அடங்கலுடைய-எண்ணத்திற்கும் பதிலாக ஒவ்வோர் நன்மையையெழுதுவான்-அவனைவிட்டும் பாவங்களையழிப்பானென்று நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமானுர்கள்,

ஹிக்காயத்து.

றவுலத்துல்முத்தகீனென்னுங் கித்தாபிலே-கதுபுல்அகுபாறவர்களைத்தொட்டும் பேசிவருகிறதியாதென்னில்-பீவி பாத்திமாறலியல்லாகுத்தஆலா அன்ஹா-அவர்கள் வியாதியாயிருந்தபோது-அலிறலியல்லாகு அன்கவர்கள்-பீவிபாத்திமா நாயகியவர்கள் வீட்டிற்குப் போய் - பீவிபாத்திமாநாயகியைப்பார்த்துப்-பாத்திமாவேதுனியாவினுடைய இன்பங்களில்கின்றும் உம்முடைய கல்பு எந்தவஸ்துவை நாடுகிறதென்று கேட்டார்கள்-அதற்கு-அவர்கள் அலிறலியல்லாகுஅன்கவர்களுடன்-எனக்குஓர் மாதுளம்பழத்தின்மேல் ஹாஜத்தாயிருக்கிறதென்று பாத்திமாநாயகிசொன்னுர்கள்-அப்போது அலிறலியல்லாகுஅன்கவர்களிடம்ஒருவஸ்துவுமில்லாமையினுலே ஒருஸா அத்துநேரம்யோசனையாயிருந்து

பின்னை எழுந்தருளியாகிக் கடைவீதியிற்போய் ஒருமனிதனிடத்தில் ஒருகிரசம் கடன்வாங்கி அதனாலே யொரு மாதுளம்பழம்வாங்கிக் கொண்டு பீவி பாத்திமாநாயகியவர்கள் வீட்டுக்குவரும்போது ஒருபாதையருகிலேகிடக்கப்பட்ட ஓர்வியாதியஸ்தனை அலிறலியல்லாகுஅன்கவர்கள்கண்டு அவ்வியாதியஸ்தனைப்பார்த்து- ஓய்பெரியவரே - உம்முடைய தல்புஎன்னவஸ்துவை நாடுகிறதென்றுகேட்டதற்கு-அப்பெரியவர்-ஓய் அலியே இவ்விடத்தில் நான்ஐந்துநாளாக இருக்கிறேன் எனக்கருகாமையாக மனிதர்கள் நடந்துபோறார்கள் - அப்படிப்போறவர்களில்நின்றும் ஒருவருமென்னளவிற் திரும்பிப் பார்க்கவில்லை-என்னுடையதல்பு ஒருமாதுளம்பழத்தை நாடுகிறதென்று சொன்னார்.

அதுகேட்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் ஒருஸாஅத்துநேரம் யோசனைசெய்து தங்கள்மனதில் பீவி பாத்திமாவுக்காக நாம்ஒருமாதுளம்பழம்வாங்கினோமே - அந்தப்பழத்தை யிவருக்குக்கொடுத்துவிட்டால் பாத்திமாவுக்குப்பழமில்லையே என்கிறும் கேட்டவர்க்குக்கையிலிருக்கிற பழத்தைக்கொடுக்காமற்போவோமேயாகில்-அல்லாகுத்தஆலா கேட்டவரைநீர்விரட்டாதீரென்று குறுஆனிற்சொன்ன சொல்லிற்கும்-குதிரையின்பேரிலிருந்து கேட்டபோதிலும் கேட்டவரை நீங்கள் விரட்டாதீர்களென்று நபிநாயகமவர்கள்சொன்னசொல்லிற்கும்விரோதமாகுமேயென்று மனதிலெண்ணி அம்மாதுளம்பழத்தையுடைத்து அந்தப்பெரியோருக்கு முழுமையும் தின்னக்கொடுத்துவிட்டார்கள்- அந்தஸாஅத்திலேயே- அந்தப்பெரியவருக்கும்- பீவிபாத்திமா றலியல்லாகு-அன்ஹா அவர்களுக்கும் சுவாத்திய மாக்கப்பட்டது-அப்போது அலிறலியல்லாகுஅன்குபீவிபாத்திமாவுக்குக்கொடுக்கிறதற்கும்பழமில்லையேயென்று வெட்கித்தவர்களாய் வீட்டுக்குவந்தார்கள் - அப்போது பீவி பாத்திமாநாயகி-அலிறலியல்லாகுஅன்கவர்களைக்கண்டு எழுந்திருந்து சங்கைசெய்து-என்னுடையநாயகமே-நீங்கள் விசனப்பட்டவர்களாகஇருக்கிறீர்களோ-அல்லாகுத்தஆலாவுடைய சிறப்பு வலுப்பத்தில் பேரிலாணையாகத் திடனாகநீங்கள்-அந்தப்பெரியோருக்குமாதுளம்பழத்தைக் கொடுத்து வஜீயனமாக்கிவைத்தபோது - என்னுடைய கல்பைவிட்டும் - மாதுளம்பழத்துடையதேட்டம் நீங்கிவிட்டதென்று சொன்னார்கள்.

அப்போது பிவிபாத்தியாகாயகியவர்களுடைய சொல்லைக்கேட்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் மனதில்மிகவுஞ் சந்தோஷமானார்கள்- அந்தவேளையில் ஒருவர்வந்து கதவைத் தட்டினார், உடனே அலிறலியல்லாகுஅன்கவர்கள்வந்து அந்தமனிதனைப்பார்த்து நீர் யாரென்றுகேட்டார்கள்.

அதற்கம்மனிதன்-நான்சல்மான்பாரிசாயிருக்கும்-ஆகலால்- யா அலியே-கதவைத்திறக்கவென்று சொன்னார்கள்-உடனே அலிறலியல்லாகுஅன்கவர்கள் எழுந்து கதவைத்திறந்தார்கள்-அப்போது சல்மான்பாரிசவர்கள் கையிலே பிடவையைக்கொண்டு மூடப்பட்டஓர்தபக்கு இருக்க அலிறலியல்லாகு அன்கவர்கள்கண்டார்கள்-அந்தத் தபக்கை சல்மான்பாரிசவர்கள் அலிறலியல்லாகு அன்கவர்கள்முன்னிலேவைத்தார்கள்.

அப்போது அலிறலியல்லாகு அன்கவர்கள்சல்மான் பாரிஸவர்களைப்பார்த்து-ஓய் சல்மானே இந்தத்தபக்கு யாரில்நின்றுமுள்ளதென்று கேட்டதற்குச்-சல்மான்பாரிசு அலிறலியல்லாகுஅன்கவர்களைப்பார்த்து இது அல்லாகுத்தஆலா அளவில்நின்றும் றசூல்சல்லல்லாகுஅலைகிவசல்லமவர்களளவில்வந்தது-அவர்கள் உங்களுக்குத்தந்தார்களென்றுசொன்னார்கள்.

அப்போது அலிறலியல்லாகுஅன்கவர்கள் அந்தத் தாம்பாளத்தைத் திறந்துபார்க்கச்சே அதிலே ஒன்பது மாதுளம்பழமிருக்கக்கண்டு-அலிறலியல்லாகுஅன்கவர்கள் சல்மான்பாரிசைப்பார்த்து-ஓய்சல்மானே இஃதெனக்குள்ளதாயிருந்தால்-ஒன்றுக்குப்பத்தென்று அல்லாகுத்தஆலாசொன்ன சொற்பிரகாரம் - பத்துப்பழமிருக்க வேண்டுமே யென்றதற்குச் சல்மான்பாரிசவர்கள்-சிரித்துக்கொண்டுதாங்களணிந்திருக்கிற சட்டைக்கைக்குள்நின்றும் ஒருமாதுளம்பழத்தைவெளிப்படுத்தி அந்தத் தாம்பாளத்தில் வைத்து யாஅலியே அல்லாகுத்த ஆலாவின்பேரிலாணையாக இது பத்துப்பழமாகஇருந்தது- அதில்ஒருபழத்தை உங்களைச்சோதிக்காடி நானெடுத்து சட்டைக்கையில்வைத்து மறைத்தேனென்று சொன்னார்கள் - அதுகேட்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் - சந்தோஷமானார்கள்.

ஆறுநோன்பு ஆண்பெண் யாவரும்பிடிக்கவேண்டுமென்று-கித்தாபுகளில் வந்திருக்க-இந்தஸமானவில்-சிலபுண்ணியவான்கள்- சொல்லு

கிறார்கள்-ஆறுநோன்பு பெண்டுகள்தான் பிடிக்கிறது-ஆண்பிள்ளைகள் பிடிக்கத்தேவையில்லையென்று விட்டுவிடுகிறார்கள்-அப்படி ஆறுநோன்பு பெண்களுக்குமாத்திரம் உரித்து-ஆண்களுக்கு உரித்தில்லையென்று ஒருவரும் ஒருகவுலிலுஞ் சொல்லவில்லையே.

ஆதலால் மூமின்முசிலீமாகிய உடற்பிறப்புகளே உங்களுடைய மேலான அறிவைக்கொண்டும் இந்தபாவை நன்றாகப் பார்வையிட்டு ஆண்பெண் யாவரும் ஷவ்வால்மாதம் ஆறுநோன்பைப்பிடித்துவந்து அதனுடைய தவாபைக்கொள்ளையாடிக்கொள்ளுங்கள் அதனால் நம்பினோருக்கும் அல்லாகுத்தஆலா கிருபைறகுமத்துச் செய்வான் ஆமீன்-யாறப்பல்ஆலமீன்.

ஷவ்வால் மாதம் நோன்புபிடிக்கிற
வரிசையின்பயான் முற்றிற்று.

துல்ஹஜ்ஜுமாதம் அறபாஎன்னுமொன்பதாம்நாள் நோன்புபிடிக்கிற வரிசையின்பயான்.

——0✻0——

ஹதீது.

நபிநாயக முஹம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்-யாதென்னில்-யாதாமொருவன்-துல்ஹஜ்ஜுமாதம் - ஒன்பதாம்நாள் நோன்பு பிடிப்பானாகில் அவனுக்கு-அல்லாகுத்தஆலா ஐயூநபியவர்கள் நோயின்பேரில் சபூர்செய்த தவாபைக் கொடுத்திடுவான்.

இன்னும்-அறபாஎன்ற வொன்பதாம்நாள்நோன்புபிடிப்பானாகில் அவனுக்கு அல்லாகுத்தஆலா ஈசாஅலைகிஸ்ஸலா மவர்களுக்குக் கொடுத்த தவாபைப்போலுள்ள தவாபைக் கொடுத்திடுவானென்று நபிநாயகம் திருவுளமானார்கள்.

இன்னும்-உம்முசல்மா றலியல்லாகுஅன்குமா அவர்களைத்தொட்டும்-பேசிவருகிறது யாதென்னில்-நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள் அறபாஎன்ற ஒன்பதாம்நாள் யாதாமொருவன் நோன்புபிடிப்பானாகில் அவனுக்குக்-கபுல்ச்செய்யப்பட்ட ஹஜ்ஜாளிகளுடைய எண்ணத்திற்குப் பிழைபொறுக்கப் படுமென்றும்.

இன்னும் அவனுக்கு என்னுடைய ஷபாஅத்து வாஜிபென்றும் இன்னும் அவனை நரகத்தைவிட்டும் எழுபதுவருஷத் தொலைதூரப் படுத்தப்படுமென்றும்-நபிநாயகந் திருவுளமானார்கள்.

இன்னும் யாதாமொருவன் துல்ஹஜ்ஜு-மாதம் அறபாஎன்னும் ஒன்பதாம்நாள் நோன்பு பிடிப்பானாகில் அவனுக்கு முன்னையின் பாவத்தை அல்லாகுத்தஆலா பொறுத்திடுவானென்று நபிநாயகந் திருவுளமானார்கள்.

ஆனதால் முசிலிமாகிய எனது பிறியமுள்ளபிறவிகளே இந்தபாவைப் பார்வையிட்டு எட்டாம்நாள் அறபா என்னும் ஒன்பதாம்நாள் நோன்புகளைப் பேணுதலாகப் பிடித்துக்கொள்ளுங்கள் - அல்லாகுத்தஆலாவுடைய றகுமதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்-ஆமீன்-யாறப்பல் ஆலமீன்.

துல்ஹஜ்ஜு-மாதம் அறபாஎன்னு மொன்பதாம்நாள்
நோன்புபிடிக்கிற வரிசையின்பயான்
முற்றிற்று.

ஐயாமில்பீலென்னும் பெயர்பெற்று
மூன்று மூன்று நோன்பு பிடிக்கிற
வரிசையின்பயான்.

——— * ———

ஹதீது.

நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்-யாதென்னில்-மாதமாதம் யாதாமொருவன் மூன்று மூன்று நோன்பு பிடிப்பானாகில்-அவன்காலமெல்லாம் நோன்புபிடித்தவனைப் போலாகிடுவானென்றும்-இன்னும்-நபிநாயகம் ஊரிலும்-சபரிலும்-ஆஜருயிருக்கும்போதும்-ஐயாமில்பீலு நோன்பை விடமாட்டார்கள்.

ஆனால்-ஐயாமில்பீலென்று சொல்லுகிறது-மாதமாதம்-யௌமுல்பீசு-யிடு-இந்நாட்களில் நோன்புபிடிக்கிறதாயிருக்கும்-இன்னும்-ஐயாமில்பீலென்னுஞ் சொல்லுக்குப் பொருளாகிறது - வெளுத்தநாளென்று சொல்லப்படும்-அது என்னசபபைப்பற்றி வெளுத்தநாளென்று பேரிடப்பட்டதென்றால்-பாவா ஆதம்அலைகிஸ்ஸலா மவர்கள் சொர்க்கலோகத்திலிருந்தும் பூலோகத்திலிறங்கினபோது பொழுதினுடைய சூட்டி

ருமாகை ஆதம் அலேயிஸ்ஸலாமவர்களுடைய இஸ்கையெற்காக்க முடி
நடவேண்டிட்டது-அப்போது ஜிபுரீல் அலேயிஸ்ஸலாமவர்கள்-பாவ
ஆதம் அலேயிஸ்ஸலா மவர்களிடம்வந்து அவர்களை-ஜுமாயிற்றுதொ
ழுது பிறந்தெருக்கு ஏவினார்கள்-அதுகேட்டு யாவர் ஆதமலேயிஸ்ஸ
லாம் ஜூமாவிற்று தொழுபிடித்து வந்தார்கள்-அப்போது முதல்
ளின்மேல் அவர்களுடையதிரேகம் மூன்றிலொருபங்கு வெளுப்பாகின
து - இரண்டாவதான தொழுகையிலே யவர்களுடைய திரேகம் மூன்றில்
இரண்டுபங்கு வெளுப்பாகினது-மூன்றாம் தொழுகையிலே யவர்க
ளுடைய திரேக முழுமையும் வெளுப்பாகினது - இதனாலேதான்
பட்சமாக மூன்றுநோன்பு பிடிக்கிறதற்கு - ஐயாமில்பீயென்று பேரும்
கொடுக்கப்பட்டது.

இதல்லாமலிச் சிறப்புக்குடைய நிங்கட்கிழமை இரவில் தொழு
கையில் ரசூலுல்லா முகம்மது சல்லல்லாகு அலேயிவசல்லமவர்கள் உதித்து
பிறந்தவர்களாயிருக்கிறார்கள்-அதைக்குறித்து அவர்களிடம் கேட்கப்பட்
டபோது இந்த இரண்டு நாட்களில் அல்லாகுத்தஆலா முஸ்லிமான
வர்களுக்கும் மன்னிப்பான்-வெறுத்திருக்கும் இரண்டுபேரைத்
தவிர அவர்களை விட்டுவிடுங்கள் என்று அல்லாகுத்
தஆலா சொல்லுவானென்று நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலே
யிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்.

ஆகையால் ஈமானுள்ள முஸ்லிமாகிய இருவர் சகலேசு-சமுதாயமேயான
வர்களே இத்திரவ்வையை நன்றாகப் பார்வையிட்டு மேற்சொன்ன விய
சப்பதுக்கு நோன்புபிடித்து ஆகுறுடையதவாபைக் கொள்ளைபடைத்துக்
கொள்வீர்களாக ஆமீன் யாறப்பல் - ஆலமீன்.

ஐயாமில்பீயென்னும் பெயர்பெற்ற மூன்றுமூன்று
நோன்புபிடிக்கிற வரிசையின்பயான்
முற்றிற்று.

முஹற்றமாதம் நோன்புபிடிக்கிற வரிசையின் பயான்.

———0✻0———

ஹதீது.

நம்முடைய நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்-யாதென்னில் - முஹற்றமாதம் ஆசுறாநாளில் யாதாமொருவன் நோன்புபிடிப்பானாகில் அவன் வருஷமெல்லாநோன் புபிடித்தவனைப்போலாகிடுவான்.

இன்னும்-அந்நாள் மகாசிறப்பான வரிசையான சங்கையான நாளாயிருக்கும்-அந்நாளையில் அல்லாகுத்தஆலா வானலோகம் - பூலோகம்-கலம்-இவைகளைப் படைத்தான்-இன்னும்-அதேநாளையில்-ஜிபுறீல்-மீக்காயீல்-இசுறாபீல்-அலைகிஸ்ஸலாமும் இவர்களைப் படைக்கப் பட்டது-இன்னும்-அதேநாளையில் அல்லாகுத்தஆலா-ஆதம் அலைகிஸ்ஸலாம் ஹவ்வா அலைகிஸ்ஸலாமிவர்களைப்படைத்தான்.

இன்னும்-அதேநாளையில் ஆதம் அலைகிஸ்ஸலாமவர்கள் தௌபாவைக் கபூலாக்கப்பட்டது-இன்னும்-அதேநாளையில் இதுரீசு அலைகிஸ்ஸலாமவர்களை மேலானயிடத்தி லுயர்த்தப்பட்டது-இன்னும் - அதேநாளையில் நூகு அலைகிஸ்ஸலாம் அவர்களுடைய கப்பல் நாற்றைம்பது நாள் ஓரிடத்திலுந் தரிபடாமற் றண்ணீரிலோடிக்கொண்டு திரிந்து பின்னர்-ஜூதியாஎன்னு மலையின்பேரிலே தரிபட்டது.

இன்னும்-அதேநாளையில் இபுறாகீம் அலைகிஸ்ஸலாமவர்கள் பிறந்தார்கள்-இன்னும்-அதேநாளையில் அவர்கள் ஷகீதானார்கள்-இப்பேர்ப்பட்ட வரிசையான ஆசுறாநாளுடைய சங்கையைஅறியாது சிலர் இலேசாக எண்ணிக் கலியாணமுதலானது செய்யக்கூடாதென்றுசொல்லுகிறார்கள்-வேஷங்கள்போட்டுச் சறகுக்குவிரோதமான காரியங்களனேகமும் நடக்கிறார்கள்-அல்லாகுத்தஆலா அப்பேர்ப்பட்ட சொல்லைவிட்டும் நம்மனைவோரையுங் காத்துக்கொள்வானாகவும்-ஆமீன்.

ஹிக்காயத்து.

இபுனு அப்பாசு றலியல்லாகு அன்கவர்களைத்தொட்டும் பேசிவருகிறது-யாதென்னில்-நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருமதீனமாநகரத்திற்குப் போனபோது அங்கே யூதிகள் முஹற்றமாதம் ஆசுறாவென்னும் பத்தாம்நாள் நோன்புபிடிக்கக் கண்டு அவர்களிடத்தில் நபிநாயகம் இதென்னநாளென்று கேட்டார்கள்.

அதற்கு எகூதிகள் நபிநாயகத்தைப்பார்த்து இதுவல்லமையான நாள் இந்தநாளிலே அல்லாகுத்தஆலா மூசா அலைகிஸ்ஸலாத்தையும் அவர்களுந்மத்தையும் ஈடேற்றமாக்கிவைத்துப்-பிறவூனையும்-அவனுடைய கவுங்களையும் கலாக்காக்கினான்.

ஆதலால் அந்தநாளையில் அல்லாகுத்தஆலாவைச் சுக்ரூர் செய்ததுக்காக எங்கள் அலைகிஸ்ஸலாம் நோன்புபிடித்தார்கள்-அதனாலே நாங்களும் நோன்புபிடிக்கிறோமென்றுசொன்னார்கள்-அதுகேட்டு நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அந்தஎகூதிகளைப்பார்த்து மூசா அலைகிஸ்ஸலாத்தைக்கொண்டும் நாங்கள் மெத்தப் பார்த்திபமானவர்கள் உங்களைப்பார்க்கிலும் நாங்கள் மூசா அலைகிஸ்ஸலாத்தைக்கொண்டு மெத்தவும்-தகுமானோம்-மெத்தவும் பார்த்திபமானோமென்று சொல்லிப் பின்னர்-நபிநாயகம் - ஆசுறாநோன்பைத் தாங்களும் பிடித்துத் தங்கள் அசுகாபிமார்களையும் அந்தநோன்பு பிடிக்கும்படிக்கு ஏவினார்கள்.

இன்னும்-நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அசுகாபிமார்களைப் பார்த்து நீங்கள் முஹற்றமாதம் ஒன்பதாம்நாள்-பத்தாம்நாள்-நோன்புபிடியுங்களென்று திருவுளமானார்கள் - ஆதலால் எகூதிகளைக்கொண்டு ஒப்புநீக்கிறதற்காகத்தான் ஒன்பதாம்நாள் பத்தாம்நாள் நோன்புபிடிக்கவேண்டுமென்று-இறுஷாது - குத்துபாமுதனான கித்தாபுகளில் வருகின்றன.

இன்னும்-நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லந் திருவுளமானார்கள்-யாதாமொருவன்-ஆசுறாநாளில் நோன்புபிடிப்பானாகில் அவனுக்கு அல்லாகுத்தஆலா-ஆயிரம்ஹஜ்ஜும் - ஆயிரம்உம்றாவும் செய்தவனுடைய தவாபை யெழுதிடுவான்-இன்னும்-அவனுக்கு ஆயிரம் ஷகீதுகளுடைய தவாபைக் கொடுக்கப்படும்-இன்னும்-அவனுக்கு மஹரிபு-மஷரிகு-இவ்விரண்டுக் கிடையிலுள்ளவர்கள்செய்த அமலின் கூலிபோலுள்ள கூலியை எழுதப்படும்.

இன்னும்-அவன் இசுமாயீல் அலைகிஸ்ஸலா மவர்களுடைய பிள்ளைகளில்நின்றும்-ஆயிரம்பிள்ளைகளை யுரிமைவிட்டவனைப்போலாகிடுவான்-இன்னும்-அவனுக்குச் சொர்க்கலோகத்திலே எழுபதினாயிரமாளிகைகளைக் கட்டப்படும்-இன்னும் - நரகத்தின்பேரிலே அவனுடைய தேகத்தை அல்லாகுத்தஆலா ஹறாமாக்கிடுவான்.

இன்னும்-வேறோர் ஹதீதில்வருகின்றது-யாதென்னில்- ஆசுறாநாளில் யாதாமொருவன் நோன்புபிடிப்பானாகில் அவனுக்குப் பதினாயிர மலக்குகளுடைய தவாபைக் கொடுக்கப்படும்-இன்னும்- யாதாமொருவன் ஆசுறாநாளில் (குல்குவல்லாகு) சூறத்தை ஆயிரந்தடவையோதுவானாகில்-அவனளவில் அல்லாகுத்தஆலா றகுமத்தெல்கிற கண்கொண்டுபார்ப்பான்-இன்னும்-அவனைச் சித்தீகீன்களிலென்றும் எழுதப்படும்-இந்தப்படிக்கு-துசுஹத்தென்னும் கித்தாபில் வருகின்றன.

ஹிக்காயத்து.

ஆசுறாநாளையில் உலகத்திலுண்டான மிருகஜாதிகளும்புழுப்பூச்சிகளான ஊர்வினங்களும்-பறவையினங்களும்ஆகிய இவைகளெல்லாம் நோன்புபிடிக்குமென்று-இறவுஷாதுமுதலிய கித்தாபுகளில் வருகின்றன.

பதகுஎன்பவர்களைத் தொட்டும் பேசிவருகிறது - யாதென்னில்- ரொட்டியைப்பிய்த்து நுணுக்கி எறும்புக்குழியிற் போடுகிறவனாக இருந்தேன்-அதிலே ஆசுறாநாளானபோது எறும்புகள் ரொட்டிப்பொடிகளைத்தின்னவில்லாததை நான் கண்டேனென்று பதகுஎன்பவர்கள் சொன்னார்கள்.

இன்னும்-ஆசுறாநாளில் யாதாமொருவன் ஸதக்காக் கொடுப்பானாகில் அவன் வருஷமுழுதும் ஸதக்காக் கொடுத்தவனைப்போலாகிடுவான்-இன்னும் யாதாமொருவன் - ஆசுறாநாளையிலே தன்னுடைய பெண்சாதிபிள்ளையினபந்துகுடும்பத்தார்பேரில் றிஸக்கை விஸ்தீனப்படுத்துவானாகில் அவன்பேரில் அல்லாகுத்தஆலா அந்த வருஷமெல்லாம் றிஸக்கை விஸ்தீனப்படுத்துவான் - இந்த ஹதீதைக்கொண்டு நாங்கள் ஐம்பதுவருஷம் சோதித்துப் பார்த்தோம் - அதுபோலே நாங்கள் கண்டோமென்று - சுபியானி றகிமகுல்லாகி அலைகிஅவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னும் - ஆசுறாநாளில் யத்தீமுக்குச் சலாம் சொன்னால்-பூலோகத்திலுண்டான மூமீன்கள் அடங்கலுக்கும் சலாம் சொன்னவனைப்போலாகிடுவான்-இன்னும்-அதேநாளையில் யாதாமொருவன் உலமாக்கள்-பெரியோர்களுடைய கையைப்பிடித்துத் தசுபீகுகொடுப்பானாகில் அவன் கபுறைவிட்டும் எழும்பும்போது மலக்குகள் அவனுக்குத் தசுபீஃகொடுப்பார்கள்-இந்தப்படிக்கு-ஷிறுஹத்தென்னும் கித்தாபில வருகின்றன.

இன்னும்-ஆசுறுநாளில் கண்ணிலே சுறுமாவிட்டுக் கொண்டார் அந்த வருஷம்வரைக்கும் கண்ணுக்கு வியாதியுண்டாகமாட்டாது-இவ்விதம் கண்ணுக்குச சுறுமாக்கொடுக்கிறது - அனபிமதுகபின்படிக்கு ஆகுமானது-ஷாபியீமதுகபின்படிக்குச் சுறுமாக்கண்ணில் கொடுக்கிறதென்று வரவில்லை.

இன்னுந் தௌறாத்து வேதத்திலே ஆசுறுநாளையில்-யாதா மொருவன் நோன்புபிடிப்பானகில-அவன்கால மடங்கலிலும் நோன்புபிடித்தவனைப்போ லாகிடுவானென்று எழுதப்பட் டிருக்கின்றன- இன்னும் ஆசுறுநாளையில்-யாதாமொருவன்-எத்தீமாகிய பிள்ளையின் தலையைத் தடவுவானகில் - உரோமமொன்றுக்கு பதிலாக ஒவ்வோர் தரஜாவை அவனுக்குச் சொர்க்கலோகத்திலே அல்லாகுத்த ஆலா கொடுத்திடுவான்.

ஹிக்காயத்து.

யாபிகி இமாமவர்கள் சொல்லியிருக்கிறார்கள்-யாதென்னில் றீய்ஏன்றுசொல்லப்பட்ட ஊரிலே சிமானகிய ஒரு காலியானவரிருந்தார்-அவரிடத்திலே ஆசுறுநாளையில் ஒருபக்கீறானவர் போய் அவரைப்பார்த்து காலியாரே அல்லாகுத்தஆலா உம்மைச் சிறப்பாக்கிவைப்பான்-நான் குழந்தைகளையுடைய பக்கீறானவன்-ஆகலால்- இந்த ஆசுறுவில் நீர்செய்யுஞ் சக்கைகையைக்கொண்டும் ஏதேனும் வாங்கிக்கொண்டு போகலாமென்று இடனுக நான்வந்தபடியால்- இந்த ஆசுறுவினுடைய சக்கைக்காக நீரெனக்குப் பத்துமனுவுரொட்டியும்-ஐந்துமனுவு இறைச்சியும் இரண்டிதிரகமும் தாருமென்று கேட்டார்.

அப்போது-காலியானவர் பக்கீறைப்பார்த்து நீர் லுகறுடையவகுத்தில் வாருமென்று சொன்னர்-அதுபோலே பக்கிர் லுகறுநேரத்தில் வந்தபோது-காலியார் பக்கீறைப்பார்த்து நீர் அசறுடையநேரத்திற்கு வாருமென்றார்-அதுபோலே பக்கீர் அசறுநேரத்தில்வந்தபோது காலியார் ஒன்றுங் கொடுத்தாரில்லை.

அப்போது பக்கீர் மனவருத்தமாகப் போய் வீட்டு வாசற்படிக்கு அடுக்க இருக்கத்தக்கதாயுள்ள ஓர் நசுறானிக்கு அடுத்தாண்மையாகப் போய் அந்த நசுறானியைப் பார்த்து பக்கீர் இந்தச் சங்கையான ஆசுறுநாளுடைய வுண்மையின்பேரி லாணையாக எனக்கு ஒருவஸ்து நீர் கொடுமென்று கேட்டார்-அதற்கு நசுறானி பக்கீறைப்பார்த்து-நீர் சங்

...யான வலுப்பமான காலேக்கொண்டும் சத்தியஞ் செய்துவிட்டீர்-...லா உம்முடைய ஹாஜத்தை நீர்சொல்லுமென்றுகேட்டான்.

அப்போது பக்கீறுனவர் காஜியிடத்திற் கேட்டபடிக்கு நசுருனி ...த்தில் ரொட்டியும்-இறைச்சியுந் திரகமுங் கேட்டார்-உடனே நசுருனி பத்துப்பறை தொலிக்கோதுமையும்-நாறுமணுவு இறைச்சியும் இருநூறுதிரகமும் பக்கீறுக்குக்கொடுத்து நான் ஜீவியாத்தா யிருக்குங் காலமெல்லாம் இதுபோலே உமக்கும் உம்முடைய பிள்ளைகளுக்கும் வருஷாவருஷம் கொடுத்துக்கொண்டு வருவேனென்றுசொன்னான்.

அதுகேட்டு பக்கீறுனவர் நசுருனி கொடுத்தவைகளை யெடுத்துக் கொண்டு தமது வீட்டிற்கு வந்துவிட்டார்-பின்னர்-இராவான போது காஜியா நித்திரைசெய்தார்-அப்போது அவர்கனவிலே உருத்தோற்றமின்றி-ஓய்-காஜியாரே உமது தலையை யுயர்த்திப் பாருமென் றோர்சத்தங்கேட்டார்-உடனே காஜியார் தன் தலையை யுயர்த்திப்பார்த்தபோது தங்கத்தினால் ஓர்கல்லும்-வெள்ளியினால் ஓர் கல்லும் - அடுக்கடுக்காய் வைத்துக் கட்டப்பட்ட ஓர் மாளிகையும்-உட்புறம்-வெளிப்புறத்தி லிருந்து பார்த்தாற் றெரியுமே அப்பேர்க்கொத்த சிவந்தமாணிக்கத்தினாலே கட்டப்பட்ட ஓர்மாளிகையும் பார்த்து என் னாண்டவனே இந்த இரண்டுமாளிகையும் யாருக்கென்று கேட்டார்-அதற்கு நீர் அந்தப்பக்கீறுடைய ஹாஜத்தை நிறைவேற்றியிருந்தால் அதற்காக உமக்கு இந்த இரண்டுமாளிகையு முண்டாகி இருந்தது-நீர் பக்கீறுக்கு ஒன்றுங் கொடுக்காமற் போனபடியால் அந்தபக்கீறுக்குக்கொடுத்த நசுருனிக்கு இவ்விரண்டுமாளிகையு முரித்தாகிவிட்டதென்று சொல்லப்பட்டது.

அதுகேட்டுக் காஜியார் திடுக்கிட்டுப் பதறிக் கண்ணைவிழித் தெழுந்து கெட்டேனே கெட்டேனே கைசேதமே யென்று கதறிச் சத்தமிட்டுக்கொண்டு காலேயில் அந்த நசுருனியிடத்திற்போய் இந்தகாலேயில் நீஎன்னநன்மை செய்தாயென்று கேட்டார்-அதற்கு நசுருனி காஜியைப்பார்த்து நீர் ஏனதைக் கேட்குகிறீரென்றான்.

அப்போது காஜியார் தான் இராவுகண்ட கனவை நசுருனிக்குச் சொல்லி நீஅந்தப் பக்கீறுக்குச்செய்த நன்றிக்காக உனக்குக்கிடைத்திருக்கிற அந்த அழகான இரண்டுமாளிகையை எனக்கு லட்சந் திரகத்துக்கு விற்றுப்போடென்று சொன்னார்-அதுகேட்டு நசுருனிகாஜியைப்பார்த்து ஓய்-காஜியே கபூல்ச்செய்யப்பட்ட அடங்கலும் விலையதிக

மான விலையாயிருக்கும்-ஆனதால்-நீர் இந்தபூமிநிரம்பத் தங்கத்தைத் தந்தபோதிலும் அதைநான் உமக்கு விற்கமாட்டேனென்று சொன்னான்.

அதுகேட்டுக் காலிபார் நசுறானியைப் பார்த்து நீ இரண்டுமாளிகையைக்கொண்டு என்பேரில் பகில்த்தனம் செய்கிறாயோவென்றார்-அதுகேட்ட நசுறானி காலியாரைப் பார்த்து நீர் முசிலீமானவ ரல்லவென்றுசொல்லித் தன்னுடையமேலேகிடந்த பூதாலே யறுத்தெறிந்துபோட்டு இதுஉண்மையாக வுள்ளதீன் மார்க்கமாக இருக்குதென்று (அஷ்ஹது அன்லாஇலாக இல்லல்லாகு வ அஷ்ஹது அன்னமுகம்மதற்ற சூலுல்லாகி) என்று ஷகாதத்துக் கலிமாவைச் சொல்லி இசுலாமாகினர்-இந்தப்படிக்கு-இருஷாது முதலான கித்தாபுகளில் வருகின்றன.

ஆதலால் மூமீன்முசிலீமாகிய இருவான்களே உங்களுடைய அறிவென்றுசொல்லும் கண்களால் இந்தபாவை நன்றாகப் பார்வையிட்டு ஆசுறாநோன்புபிடித்து நல்ல அமலைச்செய்து ஹறாமானதைத் தவிர ஹலாலான வஸ்துகளைத் தங்கள்தங்கள் நாட்டம்போலே அல்லாகுத்தஆலா இடத்திற் கேட்டால் அவன் கிருபையைச் செய்து கொடுப்பானென்றும்-றஸக்கை விஸ்திரணமாக்குவானென்றும்-குத்துபாமூதலான கித்தாபுகளில் வந்திருப்பதால்-அதேபிரகாரம் அல்லாகுத்த ஆலா இடத்திற். கேட்டுக்கொள்ளுங்கள்-நோன்பு பிடித்துக் கொள்ளுங்கள்-அவன் நம்மனைவோர்க்கும் கிருபை றகுமத்துச்செய்வான்-ஆமீன் - யாறப்பல்- ஆலமீன்.

முஹற்றமாதம் நோன்புபிடிக்கிற
வரிசையின்பயான்
முற்றிற்று.

—*—

றஜபுமாதம் நோன்புபிடிக்கிற வரிசையின்பயான்.

ஹ'தீது.

நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானுர்கள்-யாதெனில்-றஜபுமாதம் யாதாமொருவன் நோன்புபிடிப்பானுகில் அவன் ஆயிரம்வருஷம் நோன்பு பிடித்தவனைப்போலாகிடுவான்-இன்னும்-அவனுடையபாவத்தை அல்லாகுத்தஆலா பொறுத்திடுவான் இன்னும்-அவனுக்கு எழுபதுஹாஜத்தை அல்லாகுத்தஆலா நிறைவேற்றிவைப்பான்-இன்னும்-அவன் ஒருநாள் நோன்பு பிடிக்கிறதற்கு பதிலாக இசுமாயீல் அலைகிஸ்ஸலாமவர்களுடைய பிள்ளைகளில் நின்றுமொருபிள்ளையை யுரிமைவிட்டவனைப்போலாகிடுவான்.

இன்னும் - யாதாமொருவன் றஜபுமாதத்தில் (குல்குவல்லாகு) சூறத்தை யோதுவானுகில்-அவனுக்கு எழுபதுவருஷத்துடையபாவத்தைப் பொறுக்கப்படுமென்று நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானுர்கள்.

சொர்க்கலோகத்திலே ஓர் ஆறுண்டாயிருக்கிறது-அந்த ஆற்றுக்கு-றஜபென்று பேர்சொல்லப்படும்-அதின் தண்ணீரானது பாலிலும் அதிகவெளுமையும்-தேனிலுமிகுந்த தித்திப்புமுடையதாயிருக்கும்.

ஆதலால் யாதாமொருவன்-றஜபுமாத நாட்களில் நின்றுமொரு நாள் நோன்புபிடிப்பானுகில் அவனுக்கு அல்லாகுத்தஆலா அந்தஆற்றினுடைய தண்ணீரைக் குடிப்பாட்டுவானென்று நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானுர்கள்.

இன்னும்-யாதாமொருவன்-றஜபுமாத நாட்களில்நின்றும் நான்கு நாள்நோன்புபிடிப்பானுகில் அவன்-பலாய்-பயித்தியம்-வெண்குஷ்டம் கருங்குஷ்டம்-தச்சாலுடைய பித்தனு இவைகளை விட்டும் -சுபாத்தியமாக்கப்படுவான்.

இன்னும்-யாதாமொருவன்-றஜபுமாதத்தில் ஐந்துநாள்நோன்புபிடிப்பானுகில்-அவன் கபுறுடைய அதாபைவிட்டும்-அச்சந்தீரப்படுவானென்று நபிநாயகம் திருவுளமானுர்கள்.

இன்னும் நபிநாயகம் - யாதாமொருவன் றஜபுமாதத்தில் பதின்மூன்று-பதினாலாம்நாள் நோன்புபிடிப்பானாகில் அவன்மூவாயிரம்வருஷம்நோன்புபிடித்தவனைப்போலாகிடுவானென்று திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

பஸறா ரடச்சியத்தில் ஓர் ஆபிதான பெண்பிள்ளை யிருந்தார்கள். அவர்களுக்கு மவுத்தா ஆஜருனபோது-றஜபுமாதத்தில் தங்கள் மகனையழைத்து நானுடுத்தி யிபாதத்துச்செய்த பிடவையை எனக்குக் கபனிட்டு அடக்கஞ்செய்யென்று வசியத்துச்செய்து பின்னர் மவுத்தாகிப் போனபோது.

அந்த அம்மாள்சொன்ன பிடவையைக்கபனிடாமல் மகன்வேறே பிடவையைக்கொண்டுங் கபனிட்டுக் கபுறில் அடக்கிவிட்டு வீட்டுக்கு வந்தபோது - அந்தஅம்மாளுக்கு இட்டடக்கிய கபனை வீட்டி லிருக்கவும்-அந்தஅம்மாள் முன்சொன்னபிடவையை வைத்திருந்தஇடத்தில் அது இல்லாம லிருக்கவு மகனார்கண்டு அவ்விடத்தில் நின்று மிகுந்த ஆச்சரியங்கொண்டார்.

அப்போது-உருத்தோற்ற மில்லாமல் ஓர் சத்தமுண்டானது யாதென்னில்-ஓய்-மனிதனே உம்முடைய கபனை நீரெடுத்துக்கொள்ளும் திடனாக அந்தம்மாள் பிடவையைக்கொண்டும்-அவர்களைக் கபன்செய்துபோட்டோம்-திடனாக நாம் றஜபுமாத்தையில் நோன்புபிடித்தவர்களைக் கபுறிலே [illegible]த்தவர்களாக இறக்கிவைக்கமாட்டோமென்று சத்தமுண்டாயிற்று.

ஆதலால் மூமீன்முசிலீமாகிய நேசர்களே-உங்களுடைய அழகான அறிவுக்கண்களால் மேற்சொன்ன ஹதீது ஹிக்காயத்தைநன்றாகப்பார்வையிட்டு-றஜபுமாத்தையில் நோன்புபிடித்து அதிலுள்ள தவாபுகளைப் பெற்றுக்கொள்வீர்களாக-அதனால் அல்லாகுத்தஆலா நம்மனைவோர்களுக்குங் கிருபைறகுமத்துச்செய்வானாகவும்-ஆமீன்-யாறப்பல்ஆலமீன்.

றஜபுமாதத்தில் நோன்புபிடிக்கிற வரிசையின்பபாள்

முற்றிற்று.

ஷகுபான்மாதத்தில் நோன்புபிடிக்கிற வரிசையின்பயான்.

——0✳0——

ஹதீது.

நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலேகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்-யாதென்னில்-ஷகுபான்மாத நாட்களில் நின்று மோரநாள் யாதாமொருவன் நோன்புபிடிப்பானாகில் அவனுடையசரீரத்தை அல்லாகுத்தஆலா நரகத்திற்போடுகிறதில் நின்றும் - ஹறாமாக்கிடுவான்-இன்னும்-அவன் சொர்க்கலோகத்திலே யூசுபுநபியவர்களுக்குச் சினேகிதனாகிடுவான்-இன்னும்-அவனுக்கு அல்லாகுத்தஆலா-ஐயூபு நபி-தாவூதுநபி யவர்களுடைய தவாபுபோலுள்ள தவாபைக் கொடுத்திடுவானென்று நபிநாயகந் திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

மறியம் பீவியவர்களுடைய மகனார்-ஈசா அலேகிஸ்ஸலாமவர்கள் ஓர் மலையின்பேரிலே நடந்துபோகும்போது அந்த மலையிலே வெண்மையான ஒருபடலைக்கல்லைக்கண்டு-அதைச் சுற்றிவந்து ஆச்சரியப்பட்டார்கள்-அப்போது அல்லாகுத்தஆலா ஈசா அலேகிஸ்ஸலாமவர்களுக்கு நீர்கண்டிருக்கிற ஆச்சரியத்தைப்பார்க்க மேலான ஆச்சரியத்தை நாம் வெட்டவெளிச்சமாகத் தெரிவிக்க நீர் நாடுகிறீரோவென்று வகியறிவித்தான்.

அதுகேட்டு ஈசா அலேகிஸ்ஸலாமவர்கள் மெய்தான் நானும்வெளியாக்கத்தான் நாடுகிறேனென்று சொன்னார்கள்-அப்போது அந்தக்கற் பிளந்தது-அந்தப்பிளம்புக்குள்ளே ஓர்மனிதன் தன்னுடையகையிலே பசுமையான வோர்கோலும்-அவரிடம் ஓர் முந்திரிகைமரமு மிருக்கக் கண்டார்கள்-அப்போது அந்தமனிதன் நாட்கள் அடங்கலிலும் இஃதெனக்கு றஸக்காகஇருக்குமென்று சொன்னார்.

அப்போது-ஈசா அலேகிஸ்ஸலாமவர்கள் அந்தமனிதனைப்பார்த்து நீர் இந்தக்கல்லில் அல்லாகுத்தஆலாவை எவ்வளவுகாலமாக வணங்குகிறீரென்று கேட்டதற்கு-அவர் ஈசா அலேகிஸ்ஸலாமவர்களைப்பார்த்து நானிந்தக்கல்லில் நானூறுவருஷகாலந்தொடுத்து வணங்குகிறேனென்று சொன்னார்-அதுகேட்டு ஈசா அலேகிஸ்ஸலாமவர்கள் ஆண்டவனே

இவரைப்பார்க்கிலும் நீமெத்தவும் வரிசையான கல்க்கைப்படைத்திருக்கிறுயென்று நான் எண்ணவில்லையென்று சொல்லுனர்கள்.

அப்போது அவர்களுக்கு அல்லாகுத்தஆலா நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய வும்மத்துகளில் நின்றும்-ஷகுபான்மாதம் பதினேந்தாமிரவையில் இரண்டு றக்குஆத்துத் தொழுதானே அவனுகிறவன்-இந்த நானூறுவருஷம் இபாதத்துச் செய்ததைப்பார்க்கிலும் - மெத்தவும் - வரிசையானவனுக இருக்குமென்று சொன்னுன்.

அதுகேட்டு ஈசா அலைகிஸ்ஸலாமவர்கள் நாம் நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய வும்மத்திலாகி யிருக்கவேண்டாமாவென்று சொன்னுர்கள்.

ஆனதால்-ஈமதன்புள்ள மூமீன் முசிலீமாகிய வுடற்பிறப்புகளே ஈசா அலைகிஸ்ஸலாமவர்களே-இவ்விதம் நம்முடைய நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய வும்மத்திலாகவேண்டுமேயென்று கைசேதப்பட்டிருக்கிறதைப் பார்த்தீர்களா!

அப்பேர்ப்பட்ட நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய உம்மத்துகளாக நாமிருந்துகொண்டு துனியாவினுடையபராக்கின்பேரிலாகி வணக்கஞ்செய்யாமற் காலத்தை வீணுகப்போக்கிவிட்டால் எவ்விதம் நற்பதவியென்ற தறஜாக்கிடைக்கும்.

ஆனதால்-இந்தபாபில் எழுதிய ஹதீது-ஹிக்காயத்துகளை நன்ருகவுங்களறிவுக்கண்ணினுற் பார்வையிட்டு நேரந் தவறிப்போகாமற் றொழுதுகொள்ளுங்கள-நோன்பு பிடித்துக்கொள்ளுங்கள்-அதனுல் அல்லாகுத்தஆலா நம் மனைவோருக்குங்கிருபை கருமத்துச் செய்வாஞகவும்-ஆமீன்-யாறப்பல்-ஆலமீன்.

ஷகுபான்மாதத்தில் நோன்புபிடிக்கிற

வரிசையின் பயான்

முற்றிற்று.

ஹஜ்ஜினுடைய வரிசையின்பயான்.

ஹதீது.

நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள் -யாதென்னில்-யாதாமொருவன்-ஹஜ்ஜு செய்கிறதற்கு நாட்டங்கொண்டு தன்னுடைய வீட்டைவிட்டும்-புறப்படுவானாகில் அவன் அன்றுபிறந்த பாலகனைப்போலேபாவங்களைவிட்டும்-வெளிப்படுவான் இன்னும்-அவன் தன்வீட்டளவிலே மீண்டுவருகிறமட்டிலே அவனடந்தஅடி ஒவ்வொன்றுக்கும்பதிலாக எழுபது வருஷத்துடைய இபாதத்தை யவனுக்கு எழுதப்படும்.

இன்னும்-அவன் வீட்டுக்குவந்தபோது துஆச் செய்யச்சொல்லி அதன்துவாவைக் கொள்ளையாடிக் கொள்ளுங்கள் - அஃதேதென்றால் அவனுடைய துஆவைக் கபூல்ச்செய்யப்படும்-இன்னும்-கருபத்துல்லாவில் நாளொன்றுக்கு நூற்றிருபது றகுமத் திறங்கிறது-அதிலே அறுபதுறகுமத்துத் தவாபுசெய்தவர்களுக்கும்-நாற்பதுறகுமத்துத்தொழுது வருகிறவர்களுக்கும்-இருபதுறகுமத்து கருபத்துல்லாவைப் பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்கும் - ஆகஇருக்குமென்று நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

இபுனு அப்பாசு றலியல்லாகு அன்கவர்களைத்தொட்டும்வந்திருக்கிறது-யாதென்னில்-றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்-யாதாமொருவன்-வீட்டைவிட்டு ஹஜ்ஜிற்காவது - அல்லது உம்றாவுக்காவது நாட்டங்கொண்டு புறப்பட்டுப்போவானாகில் அவன் பூமியிற்காலைவைத்துக் காலைத்தூக்குந்தோறெல்லாம்- அவனுடையபாவங்கள் மரத்தினுடையஇலைகள் உதிர்வதுபோலே யுதிர்ந்துபோகும்.

இன்னும்- அப்துல்லா அவர்களைத்தொட்டும்-தபுறானிபவர்கள் பேசுகிறார்கள்-யாதென்னில்-நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்-ஹஜ்ஜுசெய்துகொள்ளுங்கள்-அஃதேதென்றால்-அழுக்கைத்தண்ணீர் கழுகிப்போடுவதுபோலே பாவங்களை ஹஜ்ஜி கழுகிப்போடும்.

இன்னும் பூமிமுகத்தில் உயர்த்தியானஊர் ஒன்றுமில்லை மக்கத்தைத்தவிர-ஆதலால் யாதாமொருவன்-மக்கத்தில் ஒருதொழுகைதொழுவானேயானால்-அவனுக்கு லட்சதொழுகையாகும்-அவ்விடத்திலிருந்து ஒருநோன்பு பிடிப்பானாகில்-அவனுக்கு லட்சம் நோன்பாகும்-அவ்விடத்திலிருந்து ஒருதிரகம் ஸதக்காச் செய்தால் அவன் லட்சந் திரகம் ஸதக்காச்செய்ததாகும் - அவ்விடத்திலிருந்து ஒருகுறுஆன் ஓதினால் அவன் லட்சம்குறுஆன் ஓதினதாகும்-அவ்விடத்திலிருந்து ஒருதசுபீஃ செய்தால் அவன் லட்சந்தசுபீஃ செய்ததாகும்-இவ்விதம் - ஒன்றுக்கு லட்சமாக எழுதப்படுமென்று நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமானார்கள்.

இன்னும்-யாதாமொருவன் தான்கொடுக்கவேண்டிய நபக்கா அன்னவஸ்திரம் கடன்போக மீந்திருக்கிற சொத்து மக்கத்துக்குப்போய் ஹஜ்ஜிசெய்து திரும்பிவருகிறமட்டிலும் நடுத்தரமான-உண்பனைதின்பனைமுதலிய செலவுக்குப் போதுமானதா யிருந்தால்-அவன் வயதில் ஒருதடவை மக்கம்போய் ஹஜ்ஜிசெய்கிறது பறுலாயிருக்கும்,

மேற்சொல்லியபடி விதியிருக்க ஹஜ்ஜிசெய்யாமல் மவுத்தாகுவானாகில்-அவனுடிறைல் எகூதியாக நசுறானியாகச்சாகுவான்-இந்தப்படிக்கு ஹதீதில் வந்திருக்கிறது.

இன்னும் - யாதாமொருவன் - ஹஜ்ஜு-செய்தவன் என்னுடைய வுபாத்திற்குப்பின்னர்-நானடங்கியகபுறைச் சியாறத்துச்செய்வானாகில் அவன் என்னை ஹயாத்தாயிருக்கும்போது ஸியாறத்துச்செய்தவனைப் போலாகிடுவான்-அப்படி என்கபுறை ஸியாறத்துச் செய்யாமற்போனால் திடனாக அவனென்னை வெறுத்திட்டவனாவானென்று நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமானார்கள் - இந்தப்படிக்கு-இறவ்ஷாதுல்லிடாது முதலான கித்தாபுகளில் வருகின்றன.

ஆதலால்-மூமீன் முசிலிமாகிய எமது சினேகிதர்களே-பிறவிகளே யுக்களுடைய அறிவென்னும் அழகான கண்ணினாலே இந்த பாகை நன்றாகப் பார்வையிட்டுச் சிறப்பான ஹஜ்ஜு செய்துகொள்ளுங்கள்-நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய கபுறை ஸியாறத்துச்செய்துகொள்ளுங்கள்-அதனாலே மட்டில்லாத தறஜாவும்

[illegible]யும் கிடைக்கும்-அதுவுடனே அல்லாகுத்தஆலா நம் மனைவோரை யும் சொர்க்கலோகத்திலும் தாக்கலாக்கி வைப்பான்-ஆமீன்-யாறப்பல் ஆலமீன்.

ஹஜ்ஜினுடைய வரிசையின்பயான் முற்றிற்று.

—*—

நோன்புப் பெருநாளையிற் கொடுக்கிற பித்துறு ஸக்காத்துடைய வரிசையின்பயான்.

—*—

ஹதீது.

நம்முடைய நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர் கள் திருவுளமானார்கள் - யாதென்னில் ஓர் அடியான் பித்துறுவுடைய ஸதக்காவை யிறுக்காதவனாயில் அவனுடைய நோன்பு வானலோகத் திற்கும்-பூலோகத்திற்கும் இடையில்-ஆகாசத்தைக் கொழுகிப் பிடிக் கப்பட்டதா யிருக்கும்-இன்னும் - பித்துறுடைய ஸதக்காவை யவன் இறுத்துவிட்டால் அல்லாகுத்தஆலா பசுமையொருந்திய இரண்டிறகை அந்த நோன்புக்கு உண்டாக்கிவேவான் - அவ்விரண்டு இறகைக் கொண்டும்-நோன்பு எழாவது வானத்தளவிற் பறந்துபோம்.

பின்னர்-அந்த நோன்புடையவன் மஹ்சறவில்வருகிறபடியிலும் அறுஷுடைய கிந்தீல்களில்நின்றும் - ஒரு கிந்தீலில்-அந்த நோன்பை வைக்கும்படிக்கு அல்லாகுத்தஆலா மலக்குகளை யேவுவான்-அதேபிர காரம் அவர்கள் கிந்தீலில் நோன்பைவைத்திடுவார்கள்.

ஹிக்காயத்து.

அப்துல்லா அவர்களுடைய மகனார் சாலிகுமென்பவர்கள் சொல்லி யிருக்கிறார்கள்-யாதென்னில் - பித்துறுடைய நாளையிலே தொழுகிற முசல்லாவளவிலே அவர்கள்போய்த் தொழுகையைத்தொழுதபின்னர் வீட்டுக்குவந்து தம்முடையபெண்சாதிபிள்ளைகளை யொரேசேகரமாகத் தம்மிடமாகவைத்துக்கொண்டு பின்னர்தன்கழுத்திலே இரும்புச்சங்கி லியை யெடுத்துப்போட்டுப் பின்னர் சரீரமடக்கலும் சாம்பலைவாரிப்

டுபோட்டுக்கொண்டு கடிசான அழுகையாக அழுதார் - அப்போது சில மனிதர்களவரிடமாகவந்து அவரைப்பார்த்து-ஓய்-சாலிகே இந்நாள் ஈதுப்பெருநாளாச்சுதே அதனாலே சந்தோஷமாகவல்லோ இருக்கவேண்டும்-அப்படியிருக்க நீரிப்படி அலங்கோலமாக இருக்கும்படியாகவந்த சபபென்ன ஏனிவ்விதஞ் செய்கிறீரென்று கேட்டார்கள்.

அதற்கு அவர்கள்-அந்தமனிதர்களைப்பார்த்து மெய்தான்நானும் பெருநாளென்று அறிந்திருக்கிறேன் - என்றாலும் நான் அல்லாகுத்தஆலாவுக்கு ஊழியான் அப்படியடியானான என்னை அமல்ச் செய்யும்படி உப்பு என்னையேவினான் - அதுபோலே நான் அமல்ச் செய்தேன் அந்தஅமலை அல்லாகுத்தஆலா கபூல்ச் செய்தானோ- அல்லது-கபூல்ச் செய்யவில்லையோ அதை அறியேனென்று சொன்னார்-இந்தப்படிக்குச்-சுபுதத்தென்கிற கித்தாபில்வருகின்றன.

இன்னும்-யாதாமொருவன்-பித்துறுடைய ஸதக்காவைக் கொடுப்பானாகில்-அவனுக்குப் பத்துவஸ்துகள் உண்டாகிடும்-அதில் (௧-வது) பாவங்களைவிட்டும்-அவனுடைய தேகந் துப்புரவாகும் (௨-வது)நரகத்தைவிட்டும் அவன் விடுதலையாவான்(௩-வது)அவனுடையநோன்பு கபுல்ச்செய்யப்பட்டதாகிடும் (௪-வது) அவனுக்குச் சொர்க்கம் வாஜிபாகும் (௫-வது) அவன் கபுறைவிட்டும் அச்சந் தீர்ந்தவனாக வெளிப்பட்டிடுவான் (௬-வது) அவனுக்கு-அந்தவருஷத்தில் செய்யும் அமல்களைக் கபுல்ச்செய்யப்படும் (௭-வது) அவனுக்கு கியாமநாளையிலே என்னுடைய ஷபாஅத்தை வாஜிபாக்கப்படும் (௮-வது) அவன் மின்வெட்டிமறைந்ததுபோலே ஸிருத்தல் முஸ்தகீம் பாலத்தைக் கடந்திடுவான் (௯-வது) நன்மை தீமைநிறுக்கப்படும் மீஸான்திராசில் அவனுடைய நன்மை தட்டில் அதிகமாகிடும் (௰-வது) அல்லாகுத்தஆலா அவனுடைய திருநாமத்தை மூதேவியீனுடைய பட்டோலையைவிட்டும் அழித்திடுவானென்று-நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்.

இன்னும் யாதாமொருவன்-பித்துறுடைய ஸதக்காவைக் கொடுப்பானாகில்-வித்து-ஒன்றுக்கு பதிலாக அவனுக்கு எழுபதினாயிரமாளிகை யுண்டாகிடும்-அந்தமாளிகையுடைய நீளமாகிறது மஷரிகு-மஹரிபுடைய விஸ்தீனத்திலின்றுந் தொலைதூரமாக இருக்குமென்று நபி

நாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள் இந்தப்படிக்கு-இருஷாது முதலியகித்தாபுகளில் வருகின்றன.

அப்படிப் பித்துறு ஸதக்காக் கொடுக்கிறது யார்பேரில் வாஜிபானால்-முசிலீமாகிய நாட்டான்மகன்-தான் குடியிருக்கிற வீடு-புழங்குகிற பாத்திரம் - உடுத்துகிறவுடைகள் - ஏறிப்போகிற வண்டிவாகனங்கள்-இவைகள்தவிரக் கடனும்போக-ரொக்கம்-நகைவகை முதலானதில் ஸக்காத்துத்தொகையிருந்தால் மேற்சொன்னபேர்களடக்கல்பேரிலும் வருஷம் சிரப்பமாகீர் திருந்தபோதிலும்-தன்னைத்தொட்டும் தன் சிறுபிள்ளைகளைத் தொட்டும் பித்துறு ஸதக்காக் கொடுக்கிறது வாஜிபா யிருக்கும்.

இன்னும்-அவன் பெண்சாதி-பெரியபிள்ளைகளைத் தொட்டும்-பித்துறு ஸதக்காக்கொடுக்கிறது அவன் பேரில்வாஜிபில்லை-ஆனால்பித்துறு ஸதக்காவாகிறது - நபர்ஒன்றுக்கு அரைமரக்கால் மணிக்கோதுமை கொடுக்கிறது வாஜிபு-இதிலேமரக்காலென்பது-இருக்கு ராச்சியத்தில் வழங்கிறஇருத்தல்எட்டாகஇருக்கும்-அந்தருத்தல்-ஒன்றுக்கு (௱௩௰) திரகம்-அந்தத்திரகம்-ஒன்றுக்குப் பதினான்குபணஎடை அந்தப் பண எடை ஒன்றுக்கு-ஐந்துதொலிக் கோதுமையா யிருக்கும்.

ஆதலால்-இதேபிரகாரம்கணக்கிட்டுகொடுக்கவேண்டும் - அப்படிக் கோதுமை கொடுக்கிறதைப்பார்க்கிலும் - அதனுடைய கிறையத்தைக் கொடுக்கிறது இந்த-ஸமானவில் ரெய்பவும் ஏற்றமானதா யிருக்குமென்று-பத்தாவி ஆலங்கிரி முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

அப்படி பித்துறு ஸதக்காவாஜிபானநேரம்-நோன்புப்பெருநாள் கிழக்குவெளுக்கிறதுகொண்டாயிருக்கும்-அப்படிக் கிழக்கு வெளுக்க முன் மவுத்தாகிப்போனால் - அவன்பேரில் பித்துறுஸதக்காவாஜிபாக மாட்டாது - பெருநாள் தொழுகைக்குப் போகுமுன் - பித்துறுஸதக்காக்கொடுக்கிறது முஸ்தகப்பு-அந்தஸதக்காவை யாருக்குக்கொடுக்கிறதென்றால் - ஒருமிசிக்கீனுக்காவதுஅல்லது - பல - மிசிக்கீனுக்காவது கொடுக்கலாம்.

இனி-ஷாபியிமத்கபிலே-நோன்புப்பெருநாள் ஒருஇரவுபகலைக்குத் தனக்கும் தன்பேரில் - நபக்காக்கொடுப்பது விதியாயிருக்கிறவர்களுக்கும்-வஜீபனச்செலவுபோக கொடுக்கவேண்டிய கடன்போக-மீதமிருந்தால்-ஒவ்வொருவருக்கு விதியானது அந்தந்தவூர்களில் அதிகம்-புழங்

கிற தானியத்தில் ஒருமரக்கால்-தானியம்-பித்துறுடைய கீய்பத்தைக் கொண்டும்-கொடுக்கிறது பறுலாயிருக்கும் - இரண்டுகையைக்கூட்டி எட்டுச் சிறங்கைநெல்லு - அல்லது நான்குசிறங்கை அரிசிகொடுக்கிறது போதுமானதாயிருக்கும்.

ஆதலால் மூமீன்முசிலீமாகிய எமதுபிறவிகளே நேசர்களே-உங்களுடைய-அழகான - தெளிவான அறிவென்னும்கண்ணினாலே இந்தபாவை நன்ருகப் பார்வையிட்டு நோன்புப்பெருநாளையிற் கொடுக்கிற பித்துறு ஸதக்காவைக்கொடுத்து அதனுடைய வரிசைகளைத் தவாபுகளைப்பெற்றுக்கொள்ளுங்கள் - அல்லாகுத்தஆலா நம்மனைவோருக்குங் கிருபை றகுமத்துச் செய்வானாகவும் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

நோன்புப் பெருநாளையிற்கொடுக்கிறபித்துறு
ஸதக்காவுடைய வரிசையின்பயான்
முற்றிற்று.

ஹஜ்ஜுப் பெருநாளையில் குறுபான்கொடுக்கிற வரிசையின்பயான்.

ஹதீது.

இருலோகத்திற்கும் நாயகமான வள்ளலான ஒளிவான-தெளிவான பேரின்பக்கடலான-காரணகுருவான மூகம்மது முஸ்தபாறசூல்சல்லல்லாகுஅலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள் யாதென்னில் - நீங்கள்-உலுகியாவென்னும் குறுபான் கொடுங்கள் அந்தகுறுபான் தன்னுடைய முதுகின்பேரிலே உங்களையேற்றிக்கொண்டு வஸிறாத்தல்முஸ்தகீம் பாலத்தின்பேரிலே நடந்து அக்கரைசேர்த்திடும்.

அப்படி குறுபான்கொடுக்கிறது யார்பேரில் வாஜிபானால் - முந்தின பித்துறு ஸதக்காவுடைய பாபிலே சொன்னபடிக்கு-ஸக்காத்துத் தொகையுள்ள-நாட்டான் மகனாகிய சீமான்தனமாகிய முகீமோகிய முசிலீமாகியபேர்கள்பேரிலே-ஹஜ்ஜிப்பெருநாள்-பத்தாமிரவுடைய கிழக்குவெளுக்கிறதுகொண்டு தன்னைத்தொட்டும் ஒருகிடாய் குறுபான் கொடுக்கிறது வாஜிபு.

இதிற்சொல்லியபடி பத்தாம்நாள் பதினோராம்நாள் - பனிரண்டாம் நாள்வரைக்கும் குறுபான்கொடுக்கலாம் - என்கினும் பத்தாம் நாளையிலே குறுபான்கொடுக்கிறது மிகவுமேற்றமாகஇருக்கும்.

அப்படி குறுபான்கொடுக்கிற கிடாயின் வயதுப்பருவம்-எவ்விதமொகளில்-பள்ளையாட்டுக் கிடாயா யிருந்தால் ஒருவருஷத்துக் கிடாயும் செம்புலியாட்டுக் கிடாயாயிருந்தால - ஆறுமாதத்தின் கிடாயுமாக இருக்கவேண்டும்.

ஷாபியீமத்ஹபில் - குறுபான்கொடுக்கிறது ன்னத்து அதிலே செம்புலிக் கிடாய் ஒருவருஷத்துடையதும் - பள்ளையாட்டுக் கிடாய் இரண்டுவருஷத்துடையதுமா யிருக்கவேண்டும்.

இதுதவிர விதைபேற்றினகிடாயும்-மோளக்கிடாயும்-காதிற் கொஞ்சம் அறுபட்டகிடாயும் - குறுபான்கொடுக்கஆகும் - இரண்டுகண் பொட்டைக்கிடாய் - நடக்கஏலாத நொண்டிக்கிடாய் மெலிந்தகிடாய்-காதுவால் மிகவும் அறுபட்டகிடாய்-இப்பேர்க்கொத்த கிடாய்கள்குறுபான்கொடுக்க ஆகாது.

அப்படி குறுபான் செய்கிறகறி[illegible]றுபங்குவைத்து அதிலே தனக் கொருபங்கும்-தன்னுடைய பந்துஜனங்களுக் கொருபங்கும் மிசிக்கீன்களுக்கு ஒருபங்கும்வைத்துக்கொடுப்பது - முஸ்தஹ[illegible]ப்பாயிருக்கும்- அந்தக்கிடாயுடைய தோலேவிற்கக் கூடாது-ஹதியாக்கொடுத்துப்போடவேண்டும-அல்லது தனக்குப்புழங்கிறதற்கு எத்தனமாக வைத்துக்கொள்ளலாம்.

ஹதீது.

யாதமொருவன் குறுபான் கொடுக்கிறதற்காக ஆட்டுக்கிடாய்வாக்கத் தன்வீட்டைவிட்டும் புறப்பட்டுநடந்துபோவானாகில்-அவனடக்கிற அடியொன்றுக்குப் பத்துநன்மைகிடைக்கும் - பத்துப் பாவத்தையவனைவிட்டும் அழிக்கப்படும்-பத்துத் தறஜாவை அவனுக்கு உயர்த்தப்படும்-அப்படி குறுபானுக்குவாங்கிற ஆட்டுக்கிடாயை விலேபேசுகிற பேச்சுமுழுமையும்-தசுபீகாகஇருக்கும்.

இன்னும் அந்தக்கிடாயினுடைய கிறையத்தை யுடையவனுக்குக் கொடுப்பானாகில்-ஒருதிரகத்திற்கு பதிலாக அவனுக்கு-எழுநாறு நன்மைகிடைக்கும்-இன்னும் பூமியின்பேரில் கிடாயைத் தூக்கிப்போட்டு அறுக்கநாடுவானேயாகில் இந்தபூமிதொடுத்து ஏழாவதாகிய பூமிவரைக்கும் உண்டானகல்க்குகளடங்கலும் அவனுக்குப் பிழைபொறுக்கத் தேடுவார்கள்-அப்படியறுத்த குறுபான் கிடாயுடைய இரத்தம்ஒழுடுமேயானல்-அந்த இரத்தத்தில்நின்றும் ஒவ்வோர் துள்ளிக்கு பதிலா

கப் பத்துப் பத்து ம குகளை அல்லாகுத்தஆலா படைத்திடுவான் அந்தமலக்குகள் இந்த அடியானுக்குக் கியாமநாள்வரைக்கும் பிழை பொறுக்கத் தேடுவார்கள்.

அந்த இறைச்சியைப் பங்குவைப்பானேயாகில் ஒருபிடிஇறைச் சிக்கு பதிலாக இசுமாயீல் அலைகிஸ்ஸலாமவர்களுடைய பிள்ளைகளில் நின்றும்-ஒருபிள்ளையையுரிமைவிட்டவனைப்போல்அவனுகிடுவானென் று நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமா னுர்களென்று - அலியிபுனுஅபீத்தாலிபுறலி யல்லாகு அன்கவர்கள் சொல்லியிருக்கிறுர்கள்.

இன்னும் நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர் கள் தங்கள் திருத்தேவியாராகிய ஆயிஷத்து றலியல்லாகு அன்கா அ வர்களுக்குத் திருவுளமானுர்கள்-ஆயிஷாவே உங்களுடைய உலுகியா வை முற்படுத்திக் கொள்ளுங்கள் அஃதேதெனிலெனில்-அந்தஇரத்தத் தில் நின்றும் பூமியின்பேரிலேவிழுகிற துள்ளிகளில்நின்று முந்தின துள் கு பதிலாக உங்களுடைய பாவங்களில்நின்று முந்தினபாவத் தை லாகுத்தஆலா பொறுத்திடுவா னென்றுசொன்னுர்கள்.

அப்போது-ஆயிஷாறலியல்லாகு அன்கா அவர்கள் - நபிநாயகத் தைப்பார்த்து-அல்லாகுத்தஆலாவுடைய றசூலே அதுநமக்குச்சொந்த மா-அல்லது-எல்லாமூமினனபேர்களுக்குமா என்றுகேட்டார்கள்- அ தற்கு நபிநாயகம் தங்கள் திருத்தேவியாரைப்பார்த்து - அதுநமக்கும் மற்றுமெல்லா மூமினனபேர்களுக்குமா யிருக்குமென்று திருவுளமா னுர்கள்.

ஹதீது

தாவூதுஅலைகிஸ்ஸலா மவர்கள் அல்லாகுத்தஆலாவோடும்-இலா கியாண்டவனே-முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய உம்மத்துகளில்நின்றும் உலுகியாக் கொடுப்பானே யவனுக்குநீ எவ்வ ளவுதவாபைக் கொடுப்பாயென்று கேட்டார்கள் அதற்கு அல்லாகுத் தஆலா-உலுகியாவுடைய தவாபாகிறது குறுபான்கொடுக்கிற அந்தக் கிடாயிலுண்டான ரோமங்களடங்கலிலும் ஒவ்வோர் ரோமங்களுக் கும் பதிலாகப் பத்துநன்மையைநான் கொடுத்திடுவேன்-பத்துப் பா வத்தையழித்திடுவேன்-பத்துத் தறஜாவை யுயர்த்திடுவேன்.

இன்னும் அதினுடைய ரோமம் ஒவ்வொன்றுக்கும் பதிலாகச் சொர்க்கலோகத்தில் ஒருமாளிகையும் - கூறுல்கீன் பெண்களில்நின்று

ஒருபெண்ணும் - அவனுக்குக் கிடைத்திடும் இவைதல்லாமலும் கோம்பையுடையதில் நின்றுமுள்ள ஏறுவாகனமும் அவனுக்குக்கிடைக்கும் அந்தவாகனம் ஒருகாலைத் தூக்கி வைத்தால் ஒவ்வோரடியாகிறது-கண்ணிற்கு எட்டுகிற தூரம்வரையில் வைக்கும்.

அதில் சொர்க்கத் துடையவர்கள்ஏறுவார்கள் அப்படியேறினவர்கள் நாடின இடத்திற்குக் கொண்டு பறக்கும்-ஆப்-நாலூதே உலூகியாக்கள்-ஸிருத்தல் முஸ்தகீம் பாலத்தையு மிதித்துக்கொண்டுபோகும் - கியாமத்துநாளையில் பலாய்களை நீக்கியும் விடுமென்று நீரறியவில்லையாவென்றுகேட்டான்.

இன்னும் யாதாமொருவன் குறுபான் கொடுப்பானேயானால் அவன் கபுறில்நின்றும் எழுந்திருக்கும்போது அவனுடைய தலைமாட்டின்பேரிலே அந்தகுறுபானிருக்கும் அதையவன்கண்டுகொள்வான்-அப்போது அதினுடைய உரோமமாகிறது தங்கத்தினு லுண்டாயிருக்கும் அதினுடைய இரண்டுகண்ணும் சொர்க்கலோகத்துடைய மாணிக்கத்தினு லுண்டாயிருக்கும்- அதினுடைய இரண்டுகொம்பும் தங்கத்தினுலுண்டாயிருக்கும் அதையவன்பார்த்து நீயார்-நீயென்னவஸ்து - உன்னைக்காண அழகான வஸ்துவைநான்காண வில்லையேயென்று சொல்லுவான்-அப்போது-அது-அவனைப்பார்த்து நானுகிறது- துனியாவில் நீகொடுத்த குறுபானாக இருக்குமென்றுசொல்லிப் பின்னர் நீயென்முதுகின்பேரில ஏறென்று சொல்லும்-அவன் அதிலே ஏறினவுடனே அவனைக்கொண்டு வானலோகம்-பூலோக மிதற்கிடையிலும் - அறுஷுடைய நிழல்வரையிலுங் கொண்டுபோகும் - இந்தப்படிக்கு - துற்றத்துல்நாசுஹீன்முதலான-கித்தாபுகளில் வந்திருக்கின்றன.

ஆதலால்-மூமீன் முசிலிமாகிய எனது பிறவிகளே விசுவாசமானவர்களே-உங்களுடைய தெளிவான கூர்மையானபுத்தியைக்கொண்டும் இந்தபாவைநன்றுகப் பார்வையிட்டு ஹஜ்ஜிப்பெருநாளையில் - உழ்கியாவென்னுங் குறுபானைவிதிப்படிக்குக் கொடுத்து அதிலுண்டான நன்மை தறஜாக்களைக் கொள்ளையடிக் கொள்ளுங்கள்-அதனல் அல்லாகுத்தஆலா நம்மனைவோர்களுக்குங் கிருபை றகுமத்துச் செய்வானாகவும் ஆமீன்யாறப்பல் ஆலமீன்.

ஹஜ்ஜுப்பெருநாளையில் குறுபான்கொடுக்கிற
• வரிசையின்பயான் முற்றிற்று.

சலவாத்துடைய வரிசையின் பயான்.

அல்லாகுத்தஆலா குறுஆனிலே திருவுளமானான் - திடனுக- அல்லாகுத்தஆலாவும் அவனுடையமலக்குகளும் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் பேரில் சலவாத்துச் சொல்லுகிறார்கள் ஈமான் கொண்ட பேர்களேநீங்களும் நபிநாயகம்அவர்கள்பேரில் சலவாத்தும் சலாமுஞ் சொல்லுங்களென்றபொருளாயிருக்கும்.

ஹதீது.

நபிநாயகமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள் யாதென்னில்-என்னிடத்தில்-ஜிபுரீல்அலைகிஸ்ஸலா -மீக்காயீல்அலைகிஸ்ஸலாம்-இசுறாபீல் அலைகிஸ்ஸலாம் இசுறாயீல்அலைகிஸ்ஸலாம்ஆகி[illegible] நான்குமலக்குகளும்வந்து-அல்லாகுத்தஆலாவுடைய றசூலே - உங்கள் பேரிலே- யாதாமொருவன்-ஒருநாளடங்கலிலும் - பத்துத்தடவை சலவாத்துச் சொல்லுவானாகில் அந்த சலவாத்துச்சொன்னவனுடைய கையைப்பிடித்துக்கொண்டு போய் ஸிறாத்தல்முஸ்தகீமென்னும்பாலத்தின் பேரிலேமின்வெட்டி மறைவது போலே கடத்திவைப்பேனென்று ஜிபுரீல்அலைகிஸ்ஸலாம் அவர்கள் சொன்னார்கள்.

இன்னும் அவனுக்கு - உங்களுடைய கவுலக்கவுதறூற்றில்நின்றுமுள்ள தண்ணீரை நான்குடிப்பாட்டிடுவேனென்று-மீக்காயீல் அலைகிஸ்ஸலாமவர்கள் சொன்னார்கள்-இன்னும் - அவனுடைய பாவத்தை அல்லாகுத்தஆலா பொறுக்கிறவரையில்-நான் அல்லாகுத்தஆலாவை ஸஜதாச்செய்வதைவிட்டுந் தலையை யுயர்த்தமாட்டேனென்று -இசுறாபீல் அலைகிஸ்ஸலாமவர்கள் சொன்னார்கள்-இன்னும்- அவனுடையறூகை நபிமார்களுடைய றூகைக் கைப்பற்றுவதுபோலே மெதுவாகக் கைப்பற்றுவேனென்று இசுறாயீல் அலைகிஸ்ஸலாமவர்கள் சொன்னார்கள்-என்று நபிநாயகந் திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

அசன்பஸரி றகிமகுல்லாகி யவர்களிடத்தில் ஒருபெண்பிள்ளையானவள்வந்து-உஸ்தாதே-எனக்கு ஓர்பெண்பிள்ளையிருந்தது-அந்தப்பெண்பிள்ளை மவுத்தாகிப்போய்விட்டது அந்தப்பிள்ளையை நான் கனவிற்

காணவேண்டுமென்று நடுகிறேன்-அதற்காகநீங்கள் எனக்கு நல்லதொ அமலைப்படித்துத் தாருங்களென்று கேட்டாள்.

உடனே அந்தப்பெண்பிள்ளைக்கு-அசன்பஸரியவர்கள் - சலவாத்தைப் படித்துக்கொடுத்தார்கள் அதைப்பெண்பிள்ளை படித்துக்கொண்டு அமல்ச்செய்தாள்- அப்போது ஒருநாளையதினம் அவள்தன்னுடைய மகளைக் கனவிலேகண்டாள் எவ்விதமெனில்-அவள்மேலே கீலில்நின்றுமுள்ள பிடவைகட்டியிருக்கவும் கழுத்திலுங் காலிலும் - நெருப்பில் நின்றுமுள்ள விலங்குபோடப் பட்டிருக்கவு மாகக் கனவுகண்டுபதறிவிழித்துக் கண்ணாலே தாரைதாரையாகக் கண்ணீர்வடிய அழுதுகொண்டு அசன்பஸரியவர்க ளிடத்தில்வந்து தானிரவுகண்ட கனவைச் சொன்னாள்.

அதுகேட்டு அசன்பஸரியவர்களும் அவர்கள்கூட இருந்தபேர்களும் அழுதார்கள்-பின்னர்-அசன்பஸரியவர்கள் அந்தப்பெண்பிள்ளைக்குத் தயிரியஞ் சொல்லியனுப்பினார்கள்-அப்படியிருக்கையில் கொஞ்சநாளைக்குப் பிறகு அசன்பஸரியவர்களுடைய கனவிலே-அந்தப் பெண்பிள்ளையுடையமகள்-ஓர்கட்டிலின்பேரிலிருக்கவும்- அவளுடையதலையிலே-மஷ்ரிகுதொடுத்து மஹ்ரிபுவரைக்கும் ஒளிவுபிறகாசிக்கின்ற கிரீடமொன்று போடப்பட்டிருக்கவுங்கண்டு-அவளைப்பார்த்து அசன்பஸரியவர்கள்-ஓ பெண்பிள்ளையே நீயாரென்று கேட்டார்கள் - அதற்கு-அந்தப்பெண்பிள்ளை அசன்பஸரியவர்களை-உஸ்தாதே உங்களுக்குஎன்னை யின்னாளென்று தெரியவில்லையோவென்று கேட்டாள் - அதற்கு அசன்பஸரியவர்கள்ஆம்-எனக்குஉன்னைத்தெரியவில்லையென்றுசொன்னார்கள்-அப்போது-அந்தப்பெண்பிள்ளை அசன்பஸரியவர்களை நீங்கள் இன்னபெண்பிள்ளைக்குச் சலவாத்துப் படித்துக் கொடுத்தீர்களே அந்தப்பெண்பிள்ளையுடைய மகள்நானென்று சொன்னாள்.

அப்போது-அஸன்பசரியவர்கள் அந்தப்பெண்பிள்ளையை உனக்கு இவ்வளவுதறஜா என்னமுகாந்திரத்தைக்கொண்டுக்கிடைத்ததென்று கேட்டார்கள்-அதற்கந்தப்பெண்பிள்ளை அசன்பஸரியவர்களே ஓபெரியவரே எங்களுடைய கபறஸ்தானுக்கு அருகாமையாக ஒருமனிதன் நடந்தார்-அவர் அவ்விடத்தில் நபிநாயகமுகம்மது சல்லல்லாகு-அலைவசல்லமவர்கள் பேரில் ஒருசலவாத்தையோதி அதின் தவாபை பெண்

கள

களுக்கு ஹுகியாச்செய்தார்- அப்போது எங்களுடைய கபறஸ்தானில் ஐந்நூற் றைம்பது பேர்களை அதாபுசெய்யப் பட்டது அவர்களையெல்லாம் - நபிநாயகமவர்கள்பேரில் அந்தமனிதன் சொன்னசலவாத்தின் பறக்கத்துக்கொண்டு அதாபைவிட்டும் விடுதலைசெய்து நீக்கிவிடுங்க ளென்று சத்தமுண்டானது- அதில்நின்றும் நானும்உடனே விடுதலை யாகினேனென்று சொன்னுள்.

அப்போது அசன் பஸரியவர்கள் அஜபாய்-விழித்தெழுந்து-காலையில் அவளுடைய தாயையழைத்துத் தாங்கள் இரவுகண்ட கனவைச் சொல்ல அவள்கேட்டு மிகுந்த சந்தோஷமாகி அல்லாகுத்தஆலாவைத் தொழுது நபிநாயகத்தின்பேரிலே சலவாத்து ஓதுவதை முக்கியமாக்கி வந்தாள்.

ஹ தீ து.

நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் திருவுளமானர்கள் யாதென்னில் என்பேரில் யாதாமொருவன் ஒருசலவாத்துச்சொல்வானேயானல் - அப்படிச்சொன்னவன்பேரில் அல்லாகுத்தஆலா பத்து சலவாத்துச்சொல்வான்-இன்னும் யாதாமொருவன் என்பேரில் பத்து சலவாத்துச்சொன்னல் அவன்பேரில் அல்லாகுத்தஆலா நூறுசலவாத்துச் சொல்லுவான்-இன்னும் யாதாமொருவன் என்பேரில் நூறுசலவாத்துச் சொல்லுவானுகில்-அவன் முனுபிக்குத் தனத்தைவிட்டும் நீங்கினவனென்றும்-நரகத்தைவிட்டு நீங்கினவனென்றும் அவனுடைய இரண்டுகண்ணுக்கு மிடையிலே அல்லாகுத்தஆலாஎழுதிடுவான்.

இன்னும் அவனை அல்லாகுத்தஆலா கியாமநாளையிலே ஷகீதுகளுடைய கூட்டத்துடனே குடியிருந்தாட்டிவைத்திடுவான்-இன்னும் யாதாமொருவன் - ஜும்ஆநாளையில் என்பேரில் நூறுசலவாத்து ஓதுவானுகில்-அவனுடனே ஒளிவு இருக்கும்படியாய் கியாமத்துநாளையில் வருவான் அந்தஒளிவை கல்க்குகள் அடங்கலுக்கு மிடையிலே பங்குவைக்கப் படுமேயானல் அவரவர்களுக்கு அந்தவொளிவு விஸ்தீரணமாகிடுமென்று நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் திருவுளமானர்கள்.

இன்னும் யாதாமொருவன் என்பேரில் சலவாத்துச்சொல்லுவானே யானல்- அல்லாகுத்தஆலா அந்தச்சலவாத்தில்நின்றும் ஒருமலக்

கைப்படைப்பான் அந்தமலக்குக்கு இரண்டு சிறகுண்டும் அதில்ஒரு சிறகு மஷ்ரிகுவரையிலும்-மற்றொரு சிறகு முஹ்ரிபுவரையிலு மிருக்கும்-அவருடைய இரண்டுகால்களும்அறுஷுக்குங் கீழாலேஇருக்கும் அவருக்கு அல்லாகுத்தஆலா சொல்லுவான் ஒய்மலக்கே என்னுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம்பேரில் அவன்சலவாத்துச் சொன்னது போலே நீரும் என்னுடைய அடியான்பேரில் சலவாத்துச் சொல்லுமென்று சொல்லுவான்-அதுகேட்டு அந்தமலக்கானவர் கியாம நாள் மட்டிலும் அவனுக்குப்பிழைபொறுக்கத் தேடுவார்- இந்தப்படிக்கு-சுபுதத்துவாஹிலீன் முதலிய கித்தாபுகளில்வருகின்றன.

ஹிக்காயத்து.

சுபியானுதவுரி யென்பவர்கள் சொல்லுகிறார்கள் நான்ஹஜ்ஜுக்குப்போனேன்-மக்கத்தில் கருபத்துல்லாவை நான் சுற்றிவரும்போது-அறபாத்துமலையிலும்-மீனாபஸாரிலும்-மற்ற இடங்களிலும் றசூல்சல்லாகு அலைகிவசல்ல மவர்கள்பேரில் சலவாத்துச் சொல்லும் படியான ஒருமனிதனைக் கண்டேன்-அந்தமனிதனைப்பார்த்து-ஓய் மனிதனே அந்த-அந்த இடங்களில்-ஒவ்வோர் துஆவோதவேண்டியதாயிருக்க-அதைநீர் விட்டுப் போட்டு சலவாத்தை யோதிக்கொண் டிருக்கிறீரே-அஃதென்னவென்று கேட்டேன் - அதற்கவர் நானிதை யோதிவருகிறது ஒருகாரணத்தைப் பற்றியென்று சொன்னார்.

உடனே நானவரை அஃதென்னகாரணஞ்சொல்லுமென்று கேட்டதற்கு-அவர்சொன்னார்-குறாஸான் தேசத்தில் நின்றும் நானும்என் தகப்பனுருமாகஹச்சுசெய்கிறதற்கு மக்கத்திற்குவரப்புறப்பட்டுகூபாவுக்குவந்தோம்-அப்போது என்தகப்பனார் உடம்புசீக்காகிஅங்கேஇறந்துபோயினார் - உடனேநான் அவருடைய முகத்தைத் துணியினால் மூடிப்போட்டுப்-பின்னர் கொஞ்சநேரஞ்சென்று மையத்துடையமுகத்தைத்திறந்து பார்த்தேன் அப்போது அவருடைய சூறத்துக் கழுதை சூறத்துப் போலவும் அவருடைய முகம் பன்றிமுகம்போலவுமிருக்கக் கண்டு நான் கடிசான விசனமாகினேன் - அப்படிவிசனமாகி இவ்வித சூறத்தில் மனிதர்கள் எவ்விதம் வெளியாகுமதென்று எண்ணினேன் பின்புஒரு ஸாஅத்தது நேரத்திற்குள்ளே என்னை நித்திரை மயக்கிவிட்டது.

அப்போது நான் ஒருகனவுகண்டேன் அந்தக்கனவாகிறது - யாதென்னில் ஒருபெரியோர்கள்வந்து என்முகத்தின் துணியைநீக்கினது போலாயிருந்தது-அப்போது அந்தப்பெரியோர்கள் என்னைப்பார்த்து இவ்விதம் பிரமாண்டமுள்ள துக்கம்-விசனம்-உனக்கேனென்று கேட்டார்கள்-அவர்களோடு நான்எவ்விதம் விசனப்படாம லிருப்பேனென்று சொன்னேன்.

அப்போதவர்கள் என்தகப்பனிடமாகப்போய் அவருடைய முகத்தைத் தடவினார்கள் உடனே என்தகப்பனைக்கொண்டும் சோதிக்கப்பட்டதே அது அவரைவிட்டும் நீங்விட்டது பிறகுநான் என்தகப்பனுடைய முகமூடியைத்திறந்துபார்த்தேன்-அப்போதுதகப்பனுருடைய முகம் பதினாலாநாட் சந்திரப்பிரகாசமாக இருக்கக்கண்டு-நான் அந்தப்பெரியோர்களை நீங்கள் யாரென்றுகேட்டேன்.

அதற்கவர்கள் நானுகிறது முகம்மது நபியென்று சொன்னார்கள்-அப்போதுநான் அவர்கள்மேற்கிடந்த [illegible]ரிவட்டத்தருகைப் பிடித்துக்கொண்டு அல்லாகுத்தஆலாபேரி லாணையாக இங்கேகடந்த சபையெனக்குச சொல்லவேண்டும் அதைநானறியவேண்டுமென்று கேட்டேன் அதற்கவர்கள் சொன்னார்கள் உன்தகப்பன் வட்டிவாங்கித் தின்னுகிறவராக இருந்தார்-அதனாலேஇவ்வித சூறத்து அவருக்கு உண்டாயினது

ஆனால் அவர் ஹயாத்தாயிருக்குங்காலத்தில்-படுக்கைக்கு ஆஜருகும்போது நாளொன்றுக்கு நூறு நூறு தடவை சலவாத்தை யோதிக்கொண்டு படுப்பார்-இந்தஹாலிலே யவர்மவுத்தானபோது என்னுடைய உம்மத்தோர்கள் என்பேரிலே சொல்லுகிற சலவாத்தை எழுதுகிற மலக்கானவர் என்னி[illegible] வந்து என்ன அல்லாவுடைய நபியே உங்கள்பேரில் நாளொன்றுக்கு இரவில் நூறு நூறுசலவாத்து ஓதிவந்த இன்னா-இவ்வித ஹாலாக - மவுத்தாயிருக்கிறாரேயென்று சொல்லக்கேட்டு உடனே நான் அல்லாகுத்தஆலா இடத்தில் அதைப்பற்றிக்கேட்டேன் - அப்போதுஎனக்கு மன்றாட்டங் கொடுக்கப்பட்டது ஆதலால் நான்வந்துஉன் தகப்பனுருடையமுகத்தைத்தடவிவிட்டுப்போறேனென்றுசொன்னார்கள்-நான் அதுகேட்டுச் சந்தோஷமாகி அன்றுமுதல் சலவாத்தை யெவ்விடத்திலும் எப்போதிலும் விடாமல் ஓதிக்கொண்டு வருகிறேனென்றுசொன்னார்-இத்தப்படிக்குத் துற்றத்து-ஷிறஹத்துல் விசுலா முதலானகித்தாபுகளில் வருகின்றன.

ஆனதால் எமதுபிறியமுள்ள நேசர்களே முசிலிமாயெ உடற்பிறப்புகளே - நாம் வட்டிக்குக்கொடுத்துக்கொண்டு சலவாத்தையோதினல் மேற்சொன்ன மனிதனுடைய குற்றநீங்கினதுபோலே நீங்குமென்ற வெண்ணங்கொள்ளாமலும் வட்டிக்குக்கொடுக்காமலுமிருந்து-சலவாத்தினுடைய வரிசையை யெண்ணிச் சலவாத்தையோதிக்கொண்டுவந்தால் அதினுடைய பறக்கத்தினல் அல்லாகுத்தஆலா முசீபத்துகளை நீக்கிவைப்பான் ஆமீன்.

இன்னும்-நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானூர்கள் - யாதாமொருவன் என்னுடையஹக்கை வலுப்பப்படுத்தினதற்காக என்பேரில் சலவாத்துச்சொல்லுவானுகில்-அதனலே அல்லாகுத்தஆலா ஒருமலக்கைப் படைப்பான்-அந்தமலக்குக்குஇரண்டுசிறகுண்டும்-அந்தச் சிறகானதில் ஒருசிறகு மஷ்ரிகிலும்-மற்றோர்சிறகு மஹ்ரிபிலுமா யிருக்கும்-அவருடைய கால்இரண்டும் கருத்ததரூவான ஏழாவது பூமியின்கீழாலேயிருக்கும்-அவருடைய சிறகு அறுஷின்கீழாலேயிருக்கும்-அந்த மலக்குக்கு அல்லாகுத்தஆலா வுத்திரவு கொடுப்பான்-ஓய்-மலக்கே நீர் என்னுடைய ஹபிபான முகம்மது நபி பேரிலே என்னுடைய அடியான்சொன்ன சலவாத்தைப்போலேநீரும் அவன்பேரிலே சலவாத்துச் சொல்லுமென்று வுத்திரவு செய்வான்· அவர் அவன்பேரில் கியாமநாள் வரைக்கும் சலவாத்துச் சொல்லுவாரென்று நமதுநபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் திருவுளமானூர்கள்.

இன்னும்-நபிநாயகம் திருவுளமானூர்கள்-யாதாமொரு அடியான் என்பேரில் சலவாத்துச்சொல்லுவானுகில்-அவனுடையவாயில்நின்றும் அந்தச் சலவாத்துச் சீக்கிரமாகவெளிப்பட்டு-மஷ்ரிகு-மஹ்ரிபு - கரை கடல் மலைமுதலிய சகலதிக்குகளிலும் அணுகாமல் [illegible] இன்னுடையமகன் இன்னுன்-அல்லாகுத்தஆலாவுடையகல்க்குகளில்நின்றும்-ரொப்பவும் ஏற்றமான தெளிவான முகம்மதுநபிசல்லல்லாகுஅலைகிவசல்லம் அவர்கள்பேரிலே சொன்ன சலவாத்தாக இருக்குமென்று சொல்லும்.

அப்போது அச்சொல்லைக்கேட்டவஸ்துகள் இந்தநபியின்பேரில் சலவாத்துச் சொல்லியேயல்லாமற் றரிபட மாட்டாதென்று அவைக ளும்சலவாத்துச்சொல்லுங்கள் -அந்தசலவாத்தினல்அல்லாகுத்தஆலா

ஒருபறவையைப் படைப்பான் - அந்தப்பறவைக்கு எழுபதினாயிரம் சிறகுண்டும் - அந்தச்சிறகுகள் ஒவ்வொன்றடங்கலிலும் எழுபதினாயிரந் தூவலான பிரிவுச்சிறகுண்டும்-அந்தத் தூவலிற கொவ்வொன்றுக்கு எழுபதினாயிரந் தலையுண்டும்.

அந்தத்தலை யொவ்வொன்றுக்குஎழுபதினாயிரமுகமுண்டும்-அந்தமுக மொவ்வொன்றுக்கு எழுபதினாயிரம் வாயுண்டும் - அந்தவாய் ஒவ்வொன்றுக்கு எழுபதினாயிரம் நாவுண்டும்-அந்தநாவு ஒவ்வொன்றினால்-அல்லாகுத்தஆலாவை எழுபதினாயிரம் விதமான தசுபீஃசெய்யும் அப்போது அல்லாகுத்தஆலா அந்தத்தசுபீகுடைய தவாபு அடங்கலையும் சலவாத்துச் சொன்னவனே அவனுக்கு எழுதிடுவான்-இந்தப்படிக்குத்-தாலாயிகைருத்துமுதலான கித்தாபுகளில் வருகின்றன.

இன்னும்-நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்-யாதாமொருவன்-என்பேரிலே ஜும்ஆவுடைய நாளையில் ஒருசலவாத்துச்சொல்லுவானானால்-அவன்பேரில் அல்லாவும்-அல்லாவுடையமலக்குகளும்-பத்துலட்சம்சலவாத்துச்சொல்லுவார்கள் இன்னும்-அவனுக்குப் பத்துலட்சம் நன்மைகளை யெழுதப்படும்-இன்னும்-அவனைவிட்டும் பத்துலட்சம்பாவத்தை யழிக்கப்படும்-இன்னும்-அவனுக்குப் பத்துலட்சந் தறஜாக்களை யுயர்த்தப்படுமென்று நபிநாயகந் திருவுளமானார்கள்

ஹிக்காயத்து.

ஸாலிகீன்களில்நின்று மொருவர் வளமையாக ஒருகணக்குவைத்து நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்பேரில்தான் நித்திரைசெய்கிற இடத்திலே சலவாத்தையோதிவந்தார்-அப்படி யோதிவருகையில்-அவர் ஒருநாளிரவு கண்ணிரண்டும் - நித்திரைமயக்கங்கொண்டு தன்னையறியாமல் நித்திரைகொண்டுவிட்டார்.

அப்போது அந்த ஸாலிகீனுடையகனவிலே நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஹாஸிருகி-ஓய்-ஸாலிகீனே-என்பேரில் சலவாத்துச்சொன்னவாயைக் கொண்டுவாரும்-நான் முத்தமிட்டுக்கொள்ளவேண்டுமென்று கேட்டார்கள்-அப்போது நான் வெட்கப்பட்டவனாக என்முகத்தைக் கிட்டக்கொண்டுபோய்க் கன்னத்தைக் கொடுத்தேன்-அதிலே நபிநாயகமவர்கள் முத்தமிட்டார்கள்-பின்புநான் கண்விழித்து

பார்த்தேன் - அதிலே என்கன்னமும் என்வீடும் எட்டுநாள்மட்டிலே கஸ்தூரிவாசம் வீசிக்கொண்டிருந்தது.

அந்த எட்டுநாளும்-என்னுடைய பெண்சாதி என்கன்னத்தில்வீசுகிற கஸ்தூரிவாசத்தைக்கண்டாளென்று சொல்லியிருக்கிறார்கள்- இந்தப்படிக்கு- நுசுஹத்துல் மஜாலிசென்னுங் கித்தாபில் வருகின்றன.

இன்னும்-நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்-ஆப்-மனிதர்களே நீங்க ளுங்களுடைய சிறுகுழந்தைகள் அழுகிறதென்று அடிக்காதீர்கள்-அப்படி யடிக்காம லிருப்பது எவ்வளவுநாளென்றால் ஒருவருஷத்திற்கு அடிக்காதீர்கள்-அஃதெதினாலென்றால்-சிறுகுழந்தைகள்-நான்குமாதம்வரையில் அழுகிறதாகிறது (லாஇலாக இல்லல்லாகு)என்கிற திக்கிறாயிருக்கும்-இன்னும்- நான்குமாதம் அழுகிறதாகிறது - என்பேரில்-சலவாத்துச்சொல்கிறதா யிருக்கும்-இன்னும்-நான்குமாதம் அழுகிறதாகிறது-அந்தப்பிள்ளையுடைய தாய்தகப்பன்மார்களுக்குத் துஆஇரக்கிறதா யிருக்கும்-ஆகையினாலே நீங்கள் சிறுபிள்ளைகளை யொருவருஷம்வரையில் அடிக்கவேண்டாமென்று நபிநாயகந் திருவுளமானார்கள்-இந்தப்படிக்கு - நுசுஹத்தில் மஜாலிசென்னுங்கித்தாபில் வருகின்றன.

ஹிக்காயத்து.

சறபல் முஸ்தபாஎன்கிற கித்தாபில்வருகிறது-யாதென்னில்-பீவி ஆயிஷா றலியல்லாகு அன்கா அவர்கள் ஒருநாள் ஷகறுடையவகுத்தில் வீட்டிற் புடவைதைத்துக்கொண் டிருந்தார்கள்- அப்போது ஊசிகீழே விழுந்தது-உடனே விளக்கும் அவிந்துபோய்விட்டது- அவ்விடத்தில் நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் வந்தார்கள் : அவர்களுடைய பிரகாச வெளிச்சத்தினாலே கீழே விழுந்த ஊசியைஆயிஷாறலியல்லாகு அன்கா அவர்கள்கண்டு எடுத்துக்கொண்டு பின்னர் நபிநாயகத்தைப்பார்த்து அல்லாகுத்த ஆலாவுடைய றசூலே உங்கள்முகத்தை எந்தவஸ்துப் பிரகாசமாக்கி வைத்துவிட்டதென்று கேட்டார்கள்.

அதற்கு நபிநாயகம் ஆயிஷாறலியல்லாகு அன்கா அவர்களைப்பார்த்துக்-கேடென்றகேடெல்லா மென்னைக் காணாதவனுக்கா யிருக்குமென்றார்கள்-அப்போது ஆயிஷாறலியல்லாகு அன்கா அவர்கள்நபிநாயகத்தைப்பார்த்து-அப்படி உங்களைக்காணாதவர் யாரென்று கேட்டதற்கு

நபிநாயகம் என்னைக்காணாதவன் பகீலனென்றுசொன்னார்கள்- அதற்கு- ஆயிஷாறலியல்லாகு அன்கா அவர்கள் நபிநாயகத்துடனே அப்படியுள்ளபகீலர் யாரென்றார்கள் அதற்கு நபிநாயகம் ஆயிஷாவே என்னுடையதிருநாமங் கேட்டவுடனே சலவாத்துச்சொல்லாதவன் பகீலனென்று சொன்னார்கள்.

அதுகேட்டு பீவி ஆயிஷாறலியல்லாகு அன்கா அவர்கள்வழமையாக நாளொன்றுக்குப் பதினாயிரம்சலவாத்துஓதி வந்தார்கள்- அப்போதுநபி நாயகமவர்கள்- பீவி ஆயிஷாறலியல்லாகு அன்கா அவர்களைப் பார்த்து- ஆயிஷாவே இந்தசலவாத்தை யொருதடவையோதினால்-அது என்பேரில்-லட்சம்சலவாத்து ஓதின தவாபுகிடைக்குமென்று சொன்னார்கள்- அதைக்கேட்டு பீவி ஆயிஷாறலியல்லாகு அன்கா ஓதிவந்தார்கள்- அந்தச் சலவாத்தாகிறது.

அல்லாகும்ம சல்லிவசல்லிம் வபாரிக்கு அலாசெய்யிதினா முகம்மதின் வஆலிகி வஸகுபிகி அததமாபிகில்மில்லாகி சலாத்தன் தாயிமத்தன் பிதவாமி-மூல்க்கில்லா என்று சொல்லப்பட்ட சலவாத்தாயிருக்கும்.

ஆதலால் மூமீன் முசிலிமாகிய இகுவான்களே- அருமையானவர்களே-உங்களுடைய அறிவென்னும் அழகான கண்களைக்கொண்டும்- இந்தபாபிலே சொல்லப்பட்டிருக்கிற ஹதீது-ஹிக்காயத்துகளை நன்றாகப்பார்வையிட்டு நாளொன்றுக்கு நூறுதடவை அல்லது பதினோர்தடவையானாலும் சலவாத்தை யோதிவாருங்கள்-அல்லாகுத்த ஆலாவைத் தொழுதுகொள்ளுங்கள்-சலவாத்துடையபறக்கத்தினால் பாவங்களைமன்னித்து நம்மனைவோரையும் அல்லாகுத்த ஆலா சொர்க்கப்பதியிலாக்கிடுவான்-ஆமீன்-யாறப்பல்-ஆலமீன்.

சலவாத்துடைய வரிசையின்பயான்

முற்றிற்று.

கபுறை ஸியாறத்துச்செய்கிற வரிசையின்பயான்.

ஹதீது.

கபுறுகளை ஸியாறத்துச் செய்கிறது முஸ்தஹப்பாயிருக்கும்-ஆதலால்-யாதாமொருவன்-கபுறுகளை ஸியாறத்துச்செய்ய நாடுவானாகில்

அவன் தன்வீட்டில் இரண்டுறக்குஆத்து நபிற்றெழுமெறதில்-ஒருறக்கு ஆத்தில் (அல்ஹம்து) ஒருதடவை (ஆயத்துல்குறுசிய்யி) ஒருதடவை (குல்குவல்லாகு)சூறத்து மூன்றுதடவை ஆகஇவ்விதமோதித் தொழுகிறது - இதுபோலே மறு றக்குஆத்துக்கும் ஓதித்தொழுகிறது முன் தஹப்பாயிருக்கும் - அப்படியோதித் தொழுதபின்னர் - அந்தத்தவாபை மையித்திற்கு ஹதியாச்செய்தால் அதை கபுறில் மையித்தளவில் ஒருவொளிவாய் அல்லாகுத்தஆலா அனுப்பிவைப்பான்.

பின்பு தொழுதவனுக்கு மிருந்த தவாபை பெழுதிவிவான்-பின்பு கபுறஸ் தானிற்குப்போய்த் தன்காலி லணிந்திருக்கிற ஜூத்தா முதலானவைகளைக் கழற்றிவிட்டுக் கபுறினிடவாகத் தன்முதுகு கிபுலாப்புறமாக மையித்தின்முன் முகத்தை முன்னோக்கினவனாக நின்றுகொண்டு (அஸ்ஸலாமு அலைக்கும்) யா அஹ்லுல்குபூர் - யஃபிறல்லாகுலனு - வலக்கும் அன்தும் லனுஸலபின் வநகுநு பில்லி திரியென்றுசொல்லிப்பின்பு துஆவோத நாடுவானேயாகில் கிபுலாவைமுன்னோக்கிநின்று ஓதி ஸியாறத்துச் செய்யவேண்டும் - அப்படி ஸியாறத்துச்செய்கிறதற்கு வரிசையானநாள் திங்கள்-வியாழம் - வெள்ளி - சனி இந்நான்குநாட்களும்நல்லதாயிருக்கும்- ஜும்ஆத்தொழுதபின் ஸியாறத்துச்செய்கிறது அழகாயிருக்கும் - இந்தப்படிக்கு-பத்தாவி ஆலம்கிரியென்னுங் கித்தாபில் - ஐந்தாவது ஜில்தில்(௩௰௭-வது) பக்கத்தில் வருகின்றன.

இன்னும் அல்ஹம்து சூறத்து மூன்றுதடவை - குல்குவல்லாகு சூறத்துமூன்றுதடவை - ஆயத்துல்குறுசிய்யியும் ஓதி ஹதியாச்செய்கிறது - மிகவுநன்மையாயிருக்கும் அதனால் மையித்துக்கு அதாபுலேசாகும்.

ஆதலால் மூமினாகிய உடற் பிறந்தான்மார்களே - உங்களுடைய தெளிவான நேரான புத்தியைக்கொண்டும் - இந்தபாவை நன்றாகப் பார்வையிட்டு கபுறுகளை ஸியாறத்துச்செய்து வரிசைகளைப் பெற்றுக்கொள்வீர்களா - அந்தபறக்கத்தினால் அல்லாகுத்தஆலா நம்மனைவோருக்கும் கிருபைபறகுமத்துச் செய்வானாகவும் ஆமீன் யாறப்புல் ஆலமீன்.

கபுறஸ்தானை ஸியாறத்துச்செய்கிற வரிசையின்பயான்

முற்றிற்று.

பள்ளிவாசற்கட்டுகிறதிலும் பழுதுபார்க்கிறதிலுங் கிடைக்கிறவரிசையின்பயான்.

ஹ து தீ.

அல்லாகுத்தஆலா குறுஆனிலே திருவுளமானன் அஃதியாதென்னில் - ஆயத்தின்பொருள் - அல்லாவுடைய பள்ளிவாசல்களைப் பழுது பார்க்கிறதெல்லாம் - அல்லாகுத்தஆலாவைக்கொண்டும் - ஒடுக்கத்துநாளைக்கொண்டும் ஈமான்கொண்டவர்கள் தான் பார்ப்பார்கள்.

தபுசீர்ஜமலில் இந்த ஆயத்திற்குப் பொருட்செய்யப்பட் டிருக்கிறது யாதென்னில்-பள்ளிவாசல்களைக் கட்டுகிறதும் - பழுதுபார்க்கிறதும் - அதிலே இபாதத்துச் செய்கிறதும் பாய் - விளக்கு முதலானது கொண்டு அலங்கரிக்கிறதும் - அதிலிருந்து துனியாவுடைய வார்த்தைகளைப் பேசாமலிருக்கிறதும் - நன்மையா யிருக்குமென்றுவருகிறது.

ஹ தீ து.

நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்-யாதமொருவன் ஒருகாடைக் கூண்டளவிற் பள்ளிவாசலைக் கட்டுவானகில்-அவனுக்கு அல்லாகுத்தஆலா சொர்க்கத்தில் ஒருமாளிகையைக் கொடுப்பான்.

இன்னும் யாதாமொருவன் பள்ளிவாசற் கட்டுவானகில் - அவனுக்கு அதேபிரகாரம் அல்லகுத்தஆலா சொர்க்கத்தில் இரண்டுவீடு கட்டிடுவான் என்று நபிநாயகஞ்சொல்ல நான்கேட்டேனென்று-உதுமான் றலியல்லாகு அன்கவர்கள்சொன்னார்கள்.

இன்னும்யாதாமொருவன் ஒருஹௌலு-அல்லது-ஒருவிடுதி அல்லது ஒருபள்ளிவாசல் கட்டுவிப்பானகில்-அதில் ஒவ்வோர் சாணுக்கும் பதிலாகச் சொர்க்கலோகத்திலே-அல்லாகுத்தஆலா - பொன்-வெள்ளி நவரத்தினம்-இவைகளால்-நாற்பதினாயிரம் பட்டணம் கட்டுவான்-அந்தப்பட்டணங்கள் ஒவ்வொன்றிற்கு நாற்பதினாயிரம் வீடுகள்-அந்தவீடுகள் ஒவ்வொன்றிற்கு ஆயிரம்-வெள்ளாட்டியும்-நாற்பதினாயிரம்-கட்டிலும் -அந்தக்கட்டில்கள் ஒவ்வொன்றிற்கு-ஆயிரம் கூறுல்ஈன் பெண்களும் ஆயிரமரவையும் - அந்தமரவைகள் ஒவ்வொன்றிற்கு நாற்பதினாயிரம் வகையானதீன்களும் குடிப்புவகைகளும் உண்டாயிருக்கிறது.

இவைகளை அனுபவிக்கும்படியான கூவத்தென்ற சக்தியையும் அவனுக்குக் கொடுப்பானென்று நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்-இந்தப்படிக்கு முஙீறென்கிற கித்தாபில் வருகின்றன.

ஹ தீ து-

அல்லாகுத்தஆலாவுக்காக ஒருபள்ளிவாசற் கட்டுவானாகில் - ஒவ்வோர் சாண் அல்லது-ஒவ்வோர்முழம் ஒன்றுக்கு பதிலாக - தங்கம்-வெள்ளி-மாணிக்கம்-பச்சை-மரகதம்-முத்து- இந்த இரத்தினங்களால் சொர்க்கலோகத்திலே நான்குகோடிப் பட்டணங்களை அல்லாகுத்தஆலா அவனுக்குக் கொடுத்திடுவான் - அந்தப்பட்டணங்களில் ஒவ்வோர் பட்டணத்திற் பத்துலட்சம்வீடு உண்டாயிருக்கும் - அந்தவீடுகளில்-ஒவ்வோர்வீட்டிற்-பத்துலட்சங் கட்டில்களுண்டாயிருக்கும் - அந்தக் கட்டில்களில் ஒவ்வோர்கட்டிலில்-ஒவ்வோர் கூறுல்ஈன்பெண்கள் இருப்பார்கள்-இன்னும்-மேற்சொன்ன வீடுகள் ஒவ்வொன்றில் நாற்பதினாயிரம்- மரவைகள்வைத்திருக்கும்- அந்தமரவைகளில் ஒவ்வொன்றில்-நாற்பதினாயிரம் பிங்கானிருக்கும் - அந்தப் பிங்கான்களில் ஒவ்வொன்றிலும் - பலவிதமான நான்குகோடி வஜீபனமுண்டாயிருக்கும் - இவ்விதமான பெண்களையும் - வஜீபனத்தையும்-அனுபவிக்கும்படியான சக்தியை அல்லாகுத்தஆலா அவனுக்குக் கொடுத்திடுவானென்று நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லங் திருவுளமானார்கள் - இந்தப்படிக்குத்-தபுசீறு றாகில் பயானில் வருகின்றன.

இன்னும் யாதாமொருவன் பள்ளிவாசலில் விளக்கு ஏற்றுகிறதற்குக் குளோப்புகள் வாங்கிவைப்பானாகில்-அந்தக்குளோப்புகள் உடைகிறவரையில்-எழுபதினாயிர மலக்குகள் அவன்பேரிலே பிழைபொறுக்கத்தேடுவார்கள்-இன்னும்- யாதாமொருவன் - பள்ளிவாசலுக்கு ஒரு விளக்கேற்றி வைப்பானாகில் -அறுவைச் சுமக்கிற மலக்குகளும் - மற்றமலக்குகளும் - பள்ளிவாசலிற் பிரகாசமிருக்கிற மட்டிலே அவனுக்குப் பிழைபொறுக்கத் தேடுவார்களென்று நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்.

தமீம் றலியல்லாகு அன்கவர்கள் ஒருநாள் பள்ளிவாசலிலே குளோப்புத் தூக்கினபோது நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தமீம் றலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து-ஓய் தமீமே

கீர் இகலாத்தை ஒளிவாக்கிவைத்தீர் ஆதலால் அல்லாகுத்தஆலா வுட
முடையபேரில் உமக்குத் துனியாவிலும் - ஆகிறத்திலும் ஒளிவாக்கி
வைப்பானாகவும்.

எனக்கு ஒருமகனுண்டாயிருந்தால் அந்தமகனையுமக்குக் கலியா
ணமுடித்துத் தருவேனென்று சொன்னார்கள்- அதுகேட்டு ஒருபனிதன்
நபிநாயகத்தைப்பார்த்து - அல்லாகுத்தஆலாவுடைய றசூலே என்மக
னையந்தத் தமீம்அவர்களுக்குக் கலியாணமுடித்துக் கொடுக்கிறேனென்
றுசொல்லி யவர்களுக்கு நிக்காகுசெய்து கொடுத்தார்.

இன்னும் நமலான்மாத்தையில் யாதமொருவன் பள்ளிவாசலில்
விளக்கேற்றிவைப்பானாகில் - அந்தவிளக்கு அவனுடைய கபுறில் அவ
னுக்கு ஒளிவாயிருக்கும்-மேலும்-அந்தப்பள்ளிவாசலித் றொழுதுவரு
கிறபேர்களுடைய தவாபைப்போல் அவனுக்குத் தவாபை யெழுதப்
படும்-இன்னும் - அந்தப்பள்ளிவாச லிருக்கிறவனாயில் - அறுவைஷ
மலக்குகளும் மற்றமலக்குகளும் அவன்பாவத்தை மன்னிக்க
தேடுவார்களென்று நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல
திருவுளமானார்கள்.

இன்னும் யாதாமொருவன் பள்ளிவாசலிலே பாய்வாங்கிப் போ
வானாகில்-அந்தப்பாய்கிழிந்து துண்டுதுண்டாய்ப் போகுமட்டிலும்
னுக்கு எழுபதினாயிர மலக்குகள் பிழைபொறுக்கத் தேடுவார்கள்.

இன்னும் யாதமொருவன் பள்ளிவாசலிலே கிடக்கிற ஒரு-அசி
கியமான வஸ்து-அல்லது ஒருகுச்சி - குப்பை கூழமுதலானவைகளை
வெளிப்படுத்துவானாகில்-அவனுக்குச் சொர்க்கலோகத்திலே அல்லா
குத்தஆலா ஒருமாளிகையைக் கொடுப்பான் இன்னும் கூறுல்கீன்
பெண்களுக்குக் கொடுக்கிற மகராகிறது பள்ளிவாசலைத் தூத்துப்பெ
ருக்கிறதாயிருக்குமென்று நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகி
சல்லமவர்கள் திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

ஹசன்பஸரி றகுமத்துல்லாகி அலைகியவர்கள் சொல்லுகிறார்க
பள்ளிவாசலிலிருந்து துனியாவுடைய பேச்சுகளைப் பேசுகிறது - ஆ
மாடுகள் வைக்கோற்புல்லைத் தின்பதுபோலே அவனுடைய நன்மை

ளாத்தின்றுவிடும் - இன்னும் நாற்பது வருஷத்து அமல்களும் அழிந்து போகுமென்று- துற்றல் நாசிஹீன்முதல்ய கித்தாபுகளில் வருகின்றன.

ஹதீது.

இன்னும் யாதாமொருவன் பள்ளிவாசலில் இல்முடைய மஜிலிசில்மையித்து வைக்கிறஇடத்தில் - கபறஸ்தான்களில்-வாங்குசொல்லுகிறபோது - குறுஆன் ஓதுகிற இடத்திலிருந்து - துனியாவுடைய பேச்சுகளைப் பேசுகிறதாவது- முப்பது வருஷஞ்செய்கிற அமலுடைய தவாபை யழிக்கப்படுமென்று- நபிநாயக முகம்மதுறசூல்சல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்- இந்தப்படிக்குத தபுசிறு றாகில் பயானிலே சொல்லப்படுகிறது.

ஆதலால் மூமீன் முசிலிமாகிய எமது நேசர்களே - சகோதரர்களே - உங்களுடைய மேலாம்பான தெளிவான அறிவென்று சொல்லும் கண்களினாலே - மேலேசொல்லப்பட்டிருக்கிற ஹதிது-ஹிக்காயத்துகளை நன்றாகப்பார்வையிட்டுத் தனியானவகம்பனம்- இபுலீசுடைய கலவியிலகப்படாமல்-ஷறகைப்பேணிநடந்து -பள்ளிவாசல்களைக்கட்டுங்கள் - அவைகளைப் பழுதுபாருங்கள் - யாராகிலும் பள்ளிவாசற்கட்டவேண்டும் அதற்காக வுபகாரஞ் செய்யுங்களென்று கேட்டபேர்களுக்கு- உங்களா லேண்டமாத்திரம் இருவான்-உபகாரம்-ஒத்தாசைசெய்யுங்கள்-இன்னும் பள்ளிவாசலுக்குக் - குளோப்பு-பாய்-விளக்குமுதலானவைகளைச் சறகின்படிக்கு வாங்கிப் போடுங்கள-இன்னும்-துனியாவுடைய பேச்சுகளை மேலேஎழுதப்பட்ட இடங்களிலிருந்து பேசாமல் வாயைப்பேணி நல்லஅமல்களைச் செய்யுங்கள் அதனால் அல்லாகுத்தஆலா நம்மனைவோர்களுடைய பாவங்களையும் பொறுத்துச் சொர்க்க லோகத்திலும் தாக்கலாக்கிவைப்பான் - ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

பள்ளிவாசல் கட்டுகிறதற்கும் அவைகளைப் பழுதுபார்க்கிறதற்குங் கிடைக்கிற வரிசையின்பயான்

முற்றிற்று.

ஹித்தாவுடைய பிரிவின்வரிசையின் பயான்.

அல்லாகுத்தஆலா மகாசிறப்பாகிய குறுஆன்ஷரீபிலே- புருஷன் மவுத்தாகிப்போன பெண்பிள்ளை நான்குமாதமும் - பத்துநாளும் சரியாக ஹித்தாஇருக்க வேண்டுமென்று வெட்டவெளிச்சமாகத் தெளிவாகத்-திடனாக - விபரமாகத் திருவுளமாயிருக்கிறான் இந்தப்படிக்கு நபிநாயக மவர்கள்சொன்ன ஹதீதிலும் - நான்கு மதுஹபிலும் - மேற்சொன்னபிரகாரமே வந்திருக்கின்றன.

ஆதலால்-யாதாமொருவன் -தன்பெண்சாதியைச் சேர்க்கைசெய்தாலும் - சேர்க்கைசெய்யா திருந்தாலும் அல்லது-பாலிக்ககாத சிறுபெண்ணாக இருந்தாலும்-பால்குடிக்கிற குழந்தையாக இருந்தாலுஞ்சரி-அவன்மவுத்துக்கு - நான்குமாதமும் - பத்துநாளுஞ்சரியாய் ஹித்தாஇருக்கிறது யாவர்பேரிலும் வாஜிபென்று - தபுசீர்ஜமல்-பத்தாவிஆலம்கிரிமுதலிய கித்தாபுகளில் வருகின்றன.

இவ்விதத்தில் ஹித்தா இருக்கிற பெண்பிள்ளை ஹாமலா யிருந்தாலாகில் - அவள் பிள்ளைப் பெறுகிற மட்டிலும் - ஹித்தா இருக்கவேண்டும் -- இதிற்சொன்னபடிக்குப் புருஷன் மவுத்தாகிப் போனவுடனே அல்லது மற்றுநாள் பிள்ளைப் பெறுகிறமட்டிலும் அவள் ஹித்தா இருக்கவேண்டும்.

எவ்வளவு நாளாகிலும் அவள்பிள்ளைப் பெற்றேயொழிய ஹித்தா முடிவாக மாட்டாது-இன்னும்- ஹித்தாமுடியமுன்பாக அவள்நிக்காஹ் செய்துகொள்கிறதும் ஹறாமாயிருக்கும் அல்லது நிக்காஹுசெய்தாலும் கூடாது-இந்தப்படிக்கு-றத்துல்முஹ்தாறுமுதலியகித்தாபுகளில்வருகின்றன.

இன்னும்-ஹித்தாவிதியான பாலிகளல்ல பெண்பிள்ளை - தங்கப்பொன்-வெள்ளி- இரத்தின முதலான ஆபரணங்களிட்டு அலங்காரஞ்செய்யக்கூடாது-இன்னும் - அவள் பட்டுப்புடவை - சிகப்புப்புடவை குஸும்பச்சாயக் காச்சியபுடவை - குங்குமப்பூச்சாயங் காய்ச்சியபுடவை இவைகளுடுத்தக்கூடாது.

இன்னும்-அவள்-எவ்விதமான மணவஸ்துக்களையும்-அணியப்பூசக்கூடாது எண்ணெய் தேய்க்கக் கூடாது-அப்படி எண்ணெய் தேய்க்க

தத்திஞலே-சரீரத்திற்கு - யாதேனுமொரு தங்கடமுண்டாகுமானல் அதஞலே எண்ணெய் தேய்த்துக்கொள்ள ஆகும் - இன்னும் அவள் கண்ணுக்குச் சுறுமாவிடக்கூடாது. அப்படிச் சுறுமாவிடாதத்திஞலே கண்ணுக்கு ஒருதங்கடம் வருமேயாகில் கண்ணுக்குச் சுறுமாவிட்டுக் கொள்ளஆகும்.

இன்னும் அவள் மருதாணி யிட்டுக்கொள்ளக்கூடாது - நெருக்கமான பல்லுள்ள சிப்புகளிஞலே தலைக்கொண்டையைச் சிவிவார்ந்து முடிக்கக்கூடாது - ஆனல் சிப்புக்கு ஒருபக்கத்திலே பெரும்பல்லாக இருக்குமே அதைக்கொண்டு தலைமுடியைச் சிவிக் கட்டிக்கொள்ள ஆகும்-மேலு மேற்சொன்ன பாலீக்கான பெண்பிள்ளைக்குச் செய்கிற முறைமை - பாலீக்காகாத சிறுபெண்பிள்ளைக்கு வாஜிபில்லை.

இன்னும் ஹித்தாவிதியான பெண்பிள்ளை முதலிலேதான்-ஹித்தா இருந்த வீட்டைவிட்டு வேறேவீட்டிற்காகிலும் - தெருவிற்காகிலும் போகக்கூடாது-ஆனல் - ஹித்தா இருக்கிறவீட்டு முத்தத்தைச்சார்ந்து வேறே குடித்தனத்தா ரில்லாதிருக்கில் - முத்தத்திற்கு வரலாம்-இன்னும் அதைச்சேர்ந்த தாவாரம் கூடம் சர்க்காரிடத்தில்வரலாம்.இன்னும் - ஹித்தாஇருக்கிறவீடு இடிந்துபோமென்கிற பயந்தோறறினல் அவன்மானமாக வேறோர்வீட்டிற்போய் ஹித்தா இருக்கிறதுஆகும்.

இன்னும்-ஹித்தா விதியானவளுக்கு உண்ணஉடுத்த-[illegible] திரச்செலவுக்கு இல்லாதிருக்கில் - பகற்காலத்திலும்-இராக்காலத்தில் கொஞ்சநேரத்திலும்-அதபு-மரியாதை-யொழுங்குடனே[illegible] திற்போய்க் கூலிப்பாடு பட்டுக்கொண்டுவந்து செலவுசெய்து, ஹித்தா இருந்த இடத்திலேயே இருக்கவேண்டும்.

இன்னும்-புறதேசத்திற்குப்போயிருக்க புருஷன் அங்கேயிறந்துபோனதாகக் காயிதமூலியமாகச் சமாசாரந் தெரியவந்தால மவுததான நாளைக் கணக்கிட்டுப்பார்த்து அம்மட்டிற் போனநாட்போக மீதமிருக்கிறபாக்கி நாளைக்குத்தான் - ஹித்தா இருக்கவேண்டும் - இதேதவிரக் கடிதாசு வந்தநாளையிலிருந்து நான்குமாதமும் -பத்துநாளும் ஹித்தா இருக்கவேண்டு மென்பதுஇல்லை.

இவ்விதமாக நமதுமார்க்கத்தில் ஹித்தாவுடைய காரியத்தைக் குறித்துக் - குறுஆன்சரீபிலும்- ஹதீதுக் கித்தாபுகளிலும் வந்திருக்க

இக்காலத்திலே-சில பேர்களிலே-ஒன்றரைப்பொழுது-நோன்புடனே கடுமையான ஹித்தா இருக்கவேண்டுமென்றும் - மூன்றுநாள்வரைக்கும்-துணிமுதலானதைப் போர்த்து முகமூஞ்சிதெரியாமல் ஹித்தா இருக்கவேண்டுமென்றும் - நாற்பதுநாள் - ஹித்தா இருக்கவேண்டுமென்றும்.

அப்படி இத்தா இருக்கிறது வீட்டுக்குள்ளேயே ஒருபள்ளத்தை தோண்டி அதைச்சூழப் பச்சைகிடுகினாலே உடையவளொருத்தி தட்டியிலொரு ஆள்நுழைந்துவரும்படியான வாசலிட்டு அதற்குள்ளேயேமலபாதை ஜலோபாதைக் கிருக்கிறதும் குளிக்கிறதண்ணீரும் அந்தப்பள்ளத்திலேயே விழவேண்டுமென்றும் - ஒரேபிடவையோடுமே ஹித்தா இருக்கவேண்டுமென்றும்.

அப்படி ஹித்தா இருக்கிறதிலும் - யாதாமொரு கெர்ப்பாஸ்திரி பிறத்தியிலிருந்து வந்தால அவள் கெர்ப்பத்தி லிருக்கிறபிள்ளை ஆண்பிள்ளையாயிருந்தால் ஹித்தா முறிந்துபோகும் அதனால் நீவரக்கூடாதென்று அவளைவிரட்டி விடுகிறதும் - இன்னும் பிறர்சத்தங் காதிற்குக்கேட்கக் கூடாதென்று காதிலே பஞ்சைவைத் தடைத்துக் கொள்ள வேண்டுமென்றும்-ஜாயிசானபேர்களுடன் பேசும்போதுகுரலிடாமற் பிரம்புதட்டிக் கோரணை காட்டிப் பேசவேண்டுமென்றும்.

தலையைக் கைகளினாலே சொறிந்தால் ஹித்தா முறிந்துபோகும்-ஆகையாலாகக் குச்சியினாலே தலையைச்சொறிய வேண்டுமென்றும்-வீட்டு முற்றத்தில் வந்துநின்று வானத்தைப்பார்த்தால் ஹித்தா முறிந்துபோகுமென்றும் நாற்பதுநாட்கழித்து ஹித்தாவைவிட்டு வெளியே புறப்படும்போது-குறுஆன்சரீபை விரித்து அதின்முகத்தில் முழிக்கவேண்டும்-அப்படி-குறுஆன் சரீபில்லாதிருக்கில் -பாக்திஹாவோதுகிற லெப்பைமாருடைய கண்ணிலே முழிக்க வேண்டுமென்றும்,

இன்னும்-ஹித்தாப் புறப்படும்போது அரிசியைப்பூமியிற்பரப்பி அதின்பேரில் அவள்நடந்து வரவேண்டுமென்றும்-ஹித்தாப் புறப்பட்டவுடனே பள்ளிவாசல்களில்வந்து சலாம்சொல்ல வேண்டுமென்றும் பச்சைப்புற் பூண்டுகளில் மிதித்துநடந்துபோய் - ஆறு-குளம் - கடல்-மரமட்டைகளைப் பார்த்து வரவேண்டுமென்றும்- இன்னும் அனேகம் ஷறகுக்கு மாற்றமான பிதஹத்துகளாக நடக்கிறது-இவ்விதம் நடக்கிற

னை அந்தர்தவூர்களிலுள்ள சில புண்ணியவான்கள் ஒத்துக்கொண்டு இருக்கிறார்களென்பது பார்வையினாலும்-கேள்வியினாலுந் தெரியவருகின்றன.

ஆதலா லிந்தச்செய்கைகளெல்லாம் இபுலீசுடைய மாயத்தி லகப்பட்டு மதிமயங்கிச்செய்கிறதேதவிர அல்லா றசூல் சொன்னசொல்லுகளல்லே-ஆமீன்முமினீனாகிய எமதுடன்பிறப்புகளே கனதியானவர்களே பரிசுத்தமார்க்கத்தையுடையவர்களே-உங்களுடைய ஷமென்றுசொல்லுகின்ற தெளிவான கண்களைக்கொண்டும்-இந்தபர்வை நன்றாகப்பார்வையிட்டுச் சண்டாளபாதகதுரோகி மாருட்டகாரனை இபுலீசுடைய மாயத்தில் அகப்படாமல் அல்லா றசூல் இமாம்கள்சொன்ன சொற்பிரகாரம்-புரிஷன்மவுத்தான பெண்பிள்ளையை நால்குமாதமும்-பத்துநாளும்-ஹித்தாயிருக்கும்படி செய்துகொள்ளுங்கள்-ஹமலாயிருக்கிற பெண்பிள்ளையைப் பேறுகாலமவரைக்கும் ஹித்தாவிலிருக்கும்படி செய்யுங்கள்-அதனால் அல்லாகுத்தஆலா அதிகன்ஷம தறஜாக்களைத் தந்து உம்மனேவோனையும் சொர்க்கத்திலுந்தாக்கலாக்கிவைப்பான்-ஆமீன் யாறப்பல்-ஆலமீன்.

ஹித்தாவுடைய பிரிவின்பயான்

முற்றிற்று.

மவுலிதுசரிபினுடைய

வரிசையின்பயான்.

---*---

ஹதீது.

நகாசிறப்பான மேன்மையான வுயர்த்தியான நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய மவுலிதையோதாமொருவன் ஓதுவானாகில் அல்லது - ஓதக்கேட்டு நபிநாயகம்பேரில் சலவாத்துச் சொல்வானாகில் அவனுக்கு அல்லாகுத்தஆலா இருபதிலுமுள்ள ஆபத்துக்களுடைய தீவினைகளைவிட்டும்-காத்துக்கொள்வான்-இன்னும்-அவனுடையபாவங்களைப் பொறுத்திடுவான்-இன்னும்-அவனுடைய தன்மைப் பட்டோரில்லை அவனுடைய வஸ்துவைக்கொடுத்திடுவான் இன்னும்-அவனுக்கு றகுமத்துச்செய்வான்.

இன்னும்-அவனுடையகல்பை யொளிவாக்கிவைப்பான்-இன்னும் அவன் ஹஜ்ஜு-உம்ருவுடைய தவாபைப் பெற்றுக்கொள்ளுவான்-இன்னும்-தௌருத்து-சபூர்-இன்சில்-புறுக்கான்-ஆகிய இந்தநான்குவேதத்தையும்ஓதின தவாபைப்பெற்றுக்கொள்ளுவான்-இன்னும்-ஷைத்தான்கள் அடங்கலுடைய திக்குகளைவிட்டும்-முனாபிக்குத்தனத்தைவிட்டும்-ஹசதைவிட்டும் - தச்சாலுடைய பித்தனைவிட்டும் காத்துக்கொள்வான்.

இன்னும்-யாதாமொருவன் நபிநாயகத்தின்பேரில் மவுலிதை யோதித் தன்னுடைய ஹாஜத்தை அல்லாகுத்தஆலா யிடத்திற் கேட்பானாகில் அவனுக்கு அல்லாகுத்தஆலா துனியா ஆகிறத்துடைய ஹாஜத்துகளை நிறைவேற்றிவைப்பான்-இன்னும்-யாதாமொருவன்-ஜும்ஆநாள் முழுமையும் வளமையாக மவுலிதை யோதிவருவானாகில்-அவன் - ஆயிரம் அடிமைகளை உரிமைவிட்ட தவாபைப் பெற்றுக்கொள்ளுவான்.

இன்னும்-யாதாமொருவன் மவுலிதை ஓதுகிற மஜ்லிசிலிருந்து நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவாகள்பேரில்சலவாத்துச்சொல்லுவானாகில் அவன் அல்லாகுத்தஆலாவை வணங்கிறவனைப் போலாகிடுவான்-இன்னும்-அவனுக்கு ஆகாசத்திற் பறக்கிற பறவைகளும்-காட்டிலுள்ள மிருகஜாதிகளும்-பிழைபொறுக்கத் தேடுங்கள் [illegible]க்கு-அன்வாறென்னுங்கித்தாபிற் சொல்லியிருக்கின்றன.

ஹிக்காயத்து.

[illegible]இன்களில்நின்று மொருவரைத்தொட்டும் பேசப்பட்டிருக்கிறது-[illegible]தென்னில்-ஸாலிகான ஒருகைச்சவடகாரனர் வருஷா வருஷம் அந்தவூரையாளுகிற சுல்தான் கஸ்தூரிகொடுத்து மவுலிது ஓதுகிறதற்கு முன்பாக அவா நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய மவுலிதுக்கு அன்னபதார்த்தங்கள் அழகாகச்சமைத்து உலமாக்கள்-பக்கீர்-புக்கறுக்கள்-ஸாலிகீன்கள்முதலாகிய யாவருக்கும் வாய்வயிறுா வஜீபனங்கொடுத்து மவுலிதையோதிவருகிறவராக இருந்தார்.

இவ்விதம் - கைச்சவடகாரனர் ஊரையாளுகிற சுல்தானுக்கு முந்தியே வருஷாவருஷம் நபிநாயகத்துடைய மவுலிதைச்சங்கையாகவோதிவருவதினுல்-அந்தசுல்தான் இவரென்ன ஒருவர்த்தகன் நமக்கு முற்பவே மவ்லிதுடைய கஸ்தூரிக்களரியை நிறைவேற்றிப் போடுகிறார் அப்படியிருந்தால் நாம் சுல்தானென்கிறபெருமை யென்ன இருக்கிறதெ[illegible]

னத்திலே ரோஷங்கொண்டு இந்த வருஷம் கைச்சவடகாரனை நாம் சிந்தைக்க வேண்டுமென்றெண்ணி மவுலீதுக்கு எடுத்தபோது அவ்வூரில் தண்ணீர்-விறகு விற்கிறவர்களுக்கு நீங்கள் தண்ணீர் விறகு விற்கக் கூடாதென்று தாக்கீதுசெய்து விலக்கியிருந்தார்.

அப்போது - கைச்சவடகாரர் வழமைபோலே மவுலீது கந்தூரி செய்கிறதற்குத் தண்ணீர் விறகுவாங்கி வாருங்களென்று தம்முடைய ஹாதிம்களுக்கு உத்திரவுசெய்தார்-அதுகேட்டவர்கள் தண்ணீர்விறகு விலைக்குவாங்க அவைகளுள்ளவர்களை யழைத்துக்கேட்டபோது அவர்கள் ஊராளுகிற சுல்தான்செய்திருக்கிற தாக்கீதைத் தெரிவித்தார்கள்-உடனே இந்தச்செய்தியை ஹாதிம்கள-தங்கள்-எஜமானாகிய கைச்சவடகாரனுருக்குவந்து சொன்னார்கள்.

அதுகேட்டுக் கைச்சவடகாரனார் - தம்முடைய ஹாதிம்களைப்பார்த்து-நீங்கள்-சந்தனக்கட்டை பனிநீர் கந்தூரிச்செலவுக்கு எவ்வளவுசெல்லுமோ அவ்வளவும் சீக்கிரம் வாங்கிப்போடுங்களென்று உத்திரவுசெய்தார்-அதுபோலே ஹாதிம்கள் சந்தனக்கட்டை - பனிநீர்செல்லுஞ் செலவுக்கெல்லாம் போதும்படி வாங்கிவந்து-மகா-இன்பமாக வஞ்சனம் சமைத்தார்கள் - அதுகண்டு கைச்சவடகாரனார் உலமாக்கள்-பக்கீர்புக்கருக்கள் ஸாலிஹீன்கள் - முதலாகிய யாவரையும் அழைத்து வைத்து உபசரித்து உண்ணக்கொடுத்து வழமைபோலே சிறப்பாக மவுலீது ஓதினார்.

இவ்விதம் கைச்சவடகாரனார் கந்தூரிகடாத்திய செய்தியை ஊராளுகிற சுல்தான்கேட்டு மிகவும் ஆச்சரியமாகித் தமது ஆட்களைக் கொண்டும் அந்தக் கைச்சவடகாரனை அழைப்பித்து அவரைப்பார்த்து சுல்தான்-ஓய்-கைச்சவடகாரனாரே நீர் என்விட்டுக்காக இவ்விது கந்தூரிக்கு முன்னதாக என்ன வஸ்துவைக்கொண்டும்-வஞ்சனஞ் சமைத்து இந்தப் பட்டணத்திலுள்ளவர்கட்கெல்லாம் மகாசிறப்பாக வஞ்சன முண்ணக்கொடுத்தீரென்று கேட்டார்.

அதற்குக் கைச்சவடகாரனார் சுல்தானைப் பார்த்து சந்தனக்கட்டை பனிநீரைக்கொண்டும்-அன்னபதார்த்தங்கள சமைப்பித்துக் கொடுத்தேனென்று சொன்னார்-அதுகேட்டுச் சுல்தான் கைச்சவடகாரனைப்பார்த்து ஓய் -கைச்சவடகாரனாரே இந்த வருஷம் நீர் மவுலீது கந்தூரிக்குச் செலவுசெய்த கணக்கைக்கொண்டுவாருமென்றுசொல்லி-

ளூர்-அதுபோலே அவர் கணக்கைக்கொண்டுவந்தபோது அந்தக்கணக்கைப் பார்வையிட்டு அதி லெவ்வளவுதொகை செலவா யிருக்கிறதோ அவ்வளவு தொகையையும் கைச்சவடகாரனுருக்குச் சுல்தான்கொடுத்துச் சந்தோஷப்படுத்தினூர்.

ஆதலால் எமதன்புள்ள இருவான்களே அந்தக் கைச்சவடகாரனூர் தம்துபெண்சாதி பிள்ளைகளுக்காகத் தேடிவைத்திருந்த சொத்துகளை நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள்பேரிச் மனமிகவும் குப்பாயச் செலவுசெய்து மவுலிதுசரீபை யோதி கந்தூரி செய்தான் இந்தக்காரணத்தை நீங்களுடைய தெளிவான புத்தியினுலே ஆலோசித்துப்பார்த்து நமக்கு இருலோகத்திலும் வாரீஸ்தராகிய நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள்பேரில் குப்புவைத்து மவுலிதையோதி அதின்வரிசையைப் பெற்றுக் கொள்ளுங்கள் ஆமீன்.

ஹிக்காயத்து.

இசுமாயீலவர்களுடையமகனூர் அப்துல்வாகிதென்பவர்கள்சொல்லியிருக்கிறூர்கள் - அஃதியாதென்னில் மிசுறுதேசத்தில் ஒருமனிதர் நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய மவுலிது கந்தூரிக்காக அன்னபதார்த்தங்கள் சமைப்பித்து மிகவுஞ் சிறப்பாக வருஷாவருஷம் மவுலிதை யோதிவருகிறவராக இருந்தார் - இந்த மவுலிதை யோதிவருகிறவருடைய வீட்டிற்கு அசல்பாகமாக ஓர் எகூதி குடும்பத்துடனே யிருந்தார்.

அந்த எகூதிமனிதனுடைய பெண்சாதி தம்புருஷனைப் பார்த்து வருஷக்கோறும் இந்தமாதம்வந்தால் நமதுவீட்டிற்கடுத்த வீட்டு முசிலிமானவர் அனேக பணங்களைச் செலவிட்டு அன்னபதார்த்தங்களைச் சமைப்பித்துச் சனங்களையழைத்துச் சிறப்பாகவுண்ணக்கொடுத்துச் சங்கைசெய்கிறூரே அஃதென்னகாரணத்தினுலென்று கேட்டாள்.

அதற்கு எகூதி தன்பெண்சாதியைப் பார்த்து இந்தநாளாகிறது- முசிலிமானவர்களுடைய நபியாகிய முகம்மதென்பவர்கள் பிறந்த நாளென்றெண்ணி இவ்விதமான சிறப்புஞ் சங்கையுஞ்செய்துசந்தோஷக் கொண்டாடுகிறூர்களென்று சொன்னூர்-அதைக்கேட்டு அந்தப்பெண்பிள்ளை யாதொன்றும்பேசாமல் வாயைமூடிக்கொண்டு யிருந்தாள்.

சொன்னார்-இரவானபோது எகூதியும்-பெகர்சாதியும்-சித்திரைசெய் யச்சீர [illegible] பிள்ளையுடைய கனவிலே சங்கை டயங்கத்தைக் கொண்டும் வெறுப்பமாக்கி வைக்கத்தக்கதான அழகையுடைய வொரு வனையும் அவர்களுடனே ராகூசிமார்களில்லின்று மோர்கூட்டத்தார் களும் - அவர்களை வெறுப்பமாக்கி வைத்தவர்களாக அடுத்த முனிமு டைய வீட்டிற் புகுக்கக்கண்டாள்.

அப்படிப் புகுந்தவர்களில்லேன்றும்-ஒருவனைப் பார்த்து எகூதியு டையபெண்சாதி இதோ மகாசிறப்பான முகவழகையுடையவர்களாயிரு க்கிறவர்கள்யாரென்றுகேட்டதற்கு-அவர் இவர்களாகிறதுறசூல்சல்லலாகு அலைஹிவசல்லம்-இந்தவீட்டிலிருக்கப்பட்டவர்கள் - இவர்களைக்கொண் டும் சந்தோஷமானதற்காக அவர்களை மேவர்கள் சலாம்சொல்லிச் சிய றத்துச் செய்கிறதற்காக அவ்வீட்டிற் புகுந்தோர்களென்று சொன்னார்.

அதுகேட்டு எகூதியுடையபெண்சாதி திரும்பவும்-அம்மனிதனைப் பார்த்து-இப்போது அவர்களிடத்தில் - நான்பேசினால் ஜவாபுகொடுப் பார்களாவென்றதற்கு அவர்கள்-ஆம் - ஜவாபு கொடுப்பார்களென்று சொன்னார்-அதுகேட்டு எகூதியுடையபெண்சாதி [illegible]நாயக முகம்மது றசூலல்லாகு அலைஹிவசல்லமவர்களவர்களில்வந்து நெருக்க அன்பு மரியா தையுடனே முகம்மதேயென்று சிறப்பாகக்கூப்பிட்டாள்-அதற்கு நபி நாயகமவர்கள் - அந்தப்பெண்பிள்ளையைப்பார்த்து-லெப்பைக்கியென்று ஜவாபுகொடுத்தார்கள்.

அப்போது அந்தப்பெண்பிள்ளை நபிநாயகத்தோடே - நாயகமே நானுங்களுடையதீனில இல்லாதவள் [illegible] பகைஞருடைய தீனிருக் கிறவளாயிருக்க - என்போல் கொத்தவளுக்குத் நாங்கள்-லெப்பைக்கி யென்று ஜவாபு சொல்லலாமாவென்று கேட்டாள்-அதற்கு நபிநாயக மவர்கள் அந்தப் பெண்பிள்ளையைப் பார்த்து - என்னை யுண்மையுடைய மார்க்கத்தைக்கொண்டும்-நபியாக அனுப்பிவைத்தானே அந்த நாயன் பேரில் ஆணையாக அல்லாகுத்தஆலா உன்னைத்திடனாக் கேர்வழிகாட் டினுமென்று நான் அறிந்தேயல்லவல்ல உன்னுடைய கூப்பிடுதலுக்குச் ஜவாபு சொல்லவில்லையென்று சொன்னார்கள்.

அதுகேட்டுப் பெண்பிள்ளை நபிநாயகத்தைப்பார்த்து நீங்கள் சக லமான நபியாம் விருப்பமானகுணத்தின்பேரில் இருக்கும் [illegible] அக [illegible]ல் உங்களுடையகாரியத்திற்கு விரோதஞ்செய்தவள் [illegible]

போவான்-இன்னு மிவைகளுடைய கதறை யல்லம் நட்டினவன் பேறு கெட்டுப்போவான்-காயமே-உங்களுடையதிருக்கையை நீட்டுங்களென்று சொன்னாள்-உடனே,நபிநாயகம் கையைநீட்டினார்கள்-அந்தப் பெண் பிள்ளை நபிநாயகத்தின் கையினிடமாக-ஷகாதத்துக் கலிமாவைச்சொல்லி இசுலாத்தி லாகினாள்.

அப்படி இசுலாத்திலாகிப் பின்னர்-அந்தப் பெண்பிள்ளை தம்முடையமனத்திலே சுபுகுநேரமாகுமல் நம்முடைய இடத்திலுள்ள திரவியங்களெல்லாம் ஸதக்காச்செய்து - தாம் இசுலாமான சந்தோஷத்திற்காகவும்-இராத்திரி கண்ட கனவிற்காகவும்-நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய மவ்லிது சரீபுக்குத் கந்தூரிக்குமாகவுமென்று இரகசியத்திலே அல்லாகுத்த ஆலாவுக்கு அறுதிமானஞ் செய்துகொண்டாள்.

பின்னர் - சுபுகானபோது அந்தப்பெண்பிள்ளை தம்புருஷனுடைய வலுப்பமாகிய ஸாலிகாகிய கிஸ்மத்திலிருந்து - நபிநாயக மவர்களின் மவுலிது கந்தூரிக்காகச் சாமக்கிரிகைகள் ஆயத்த மாக்கும்படியாகக் கண்டு மிகுந்த ஆச்சரியமாகத் தம்புருஷனுடைப்பார்த்து உங்களை ஸாலிகாகிய ஹிம்மத்திலிருக்கக் காண்கிறேன் - ஆதலா லிவ்விதமானது ஏதுகாரணத்தைக்கொண்டுமென்று கேட்டாள்.

அதற்குப் புருஷனுர் பெண்சாதியைப்பார்த்து இன்று இரவிலே நீயொருவருடைய கையின்பேரிலே இசுலாமாகினையல்லவா அவர்களுக்காகவென்று சொன்னார்-அதுகேட்டுப் பெண்சாதிபுருஷனுடைப்பார்த்து-உமக்கு இந்தஇரகசியத்தை வெளியாக்கினதுயார் அதின்பேரி லுண்மை உதயமாக்கி அறிவித்துத்தந்தது யாரென்றுகேட்டாள்.

அதற்குப் புருஷனவர் பெண்சாதியைப்பார்த்து நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய இரண்டு கையின்பேரில் நீ இசுலாமானதின்பின்னர் நானுமவர்களுடையஇரண்டுகையின்பேரிலே கலிமாச்சொல்லி இசுலாமாகினேன்- அப்போது நபிநாயகம் வெளியாக்கித் தந்தார்களென்று சொன்னார்.

ஆதலால் எமதன்புள்ள நேசர்களே மூமினனவர்களே எவ்விதமிருந்த ஏகுதியவருடையபெண்சாதியு மெவ்விதமானார்கள் இதையுங்களுடைய புத்தியிற்றெரிந்து நபிநாயகமவர்களுடைய மவுலிதுசரீபை யோதினல் அல்லாகுத்த ஆலா நல்லதறஜாக்களைக்கொடுத்து நம் மனைவோரையும் சொர்க்கத்திலுந் தாக்கலாக்கிவைப்பான்-ஆமீன்.

ஹிக்காயத்து

சுலதான் மூலப்பறென்பவர்கள் நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய மவுலிது சந்தூரிக்காக ஒருவருஷம் வரைக்கும் சாமான்கள்சேகரித்து - அதனாலே கிருமத்தான அனேகந் தீன்வஸ்துகள்செய்து பட்டணத்திலுள்ள யாவர்க்குந் தஹறவந்திற்குச் சொல்லி யழைத்துச் சங்கைசெய்துவைத்து வருஷாவருஷம் மவுலிதை யோதிவருவார்.

அப்படி யவர் மவுலிதஓதுகிற சந்தூரிக்காக அன்னபதார்த்தங்களாக்குமிடத்திலேஆட்டுத்தலைகளில் ஐயாயிரமும்-கோழித்தலைகளிலே இருபதினாயிரமும்-வஜீபனம் பரப்பிவைக்கிற பாசன்களில் முப்பதினாயிரமும்-கடோறுக்களிலே லட்சமும்-குவித்திருந்ததாக அந்த மவுலிதுக் காரியில் ஆஜராயிருந்தபேர்களில் ஒருவர் தாமெண்ணிக் கணக்கிட்டதாகப் பல ஆலம் என்னும் பெரியோருடைய மவுலிதிற் சொல்லியிருக்கின்றன.

இன்னும்-மக்கம்-மதீனம்-ரூம்-ஷாம்-பல்கு - புகாறு முதலிய அனேகதேசங்களி லிருப்பவர்களும்-நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய மவுலிதை மிகுந்த சிறப்புவைத்து ஓதிவருகிறார்கள்-இன்னும்-மக்கத்திலுள்ள நான்கு மத்ஹபு - முப்தீகளும் மவுலிதுஷரீபை யோதுகிறது முஸ்தகப்பென்று பதுவாக் கொடுத்திருக்கிறார்கள்.

இன்னும்-ஜனுலுஸ்வலீறு-ஹதீயத்தில்-ஹறமைன்முதலாகிய கித்தாபுகளில் மவுலிதுசரீபின்வரிசையும்- தறஜாவும்-அதிகவிரிவாய் எழுதியிருக்கிறார்கள்-மேலும்-நம்முடைய நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பிறக்கதினுல - சுக்குறை வெளியாக்கிவைத்து வஜீபனம்-குடிப்பு-ஸதக்காமுதலிய நற்காரியங்களைச் செய்து மனிதர்கள் கூடியிருந்து சந்தோஷமாய் மவுலிது மதருகளை யோதி யுகப்பு வைக்கிறது-முஸ்தகப்பு-ஆதலால் அப்படி மவுலிதையோதிவைப்பவர்களுக்கு அதற்குப்பதிலாக அல்லாகுத்தஆலா சொர்க்க லோகத்திலே தாக்கலாக்கிவைக்கிறது-எவ்விதமுண்டாகாமற்போகும்.

பாருங்கள் நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் பிறந்தாரென்ற சந்தோஷமான செய்தியை அபூலகபுஇடத்தில்அவனுடைய வெள்ளாட்டியாகிய துவைபாவென்பவள் வந்து சொன்னதற்

ஊ அபூலகபு சந்தோஷமாகி யுடனே அந்தவெள்ளாட்டியை யுரிமை விட்டார்கள் திங்கட்கிழமைதோறும் அபூலகபுக்கு ... காலையிலே சாக்கப்படுகிறதென்று ஸஹீகாக வந்திருக்கிறது.

ஆனால் - அபூலகபே குர்ஆனிலே பழிக்கப்பட்ட காபிராயிருந்தும்-அவனுடைய தன்மையிப்படியிருந்தால்-அல்லாஹுத்தஆலுக்கு ஈமான் கொண்ட முசிலிம்கள் மவுலிதுசரீபையோதினால் எவ்வளவு தருஜாக்கிடைக்குமென்பதை எமதுபிறவிகளே தங்கள் தங்கள் மேலாம்பரனபுத்தியைக்கொண்டும்-நன்றாக யோசித்துப்பார்த்து ஐந்துவகுத்துந் தொழுதுகொண்டிருங்கள்-நபிநாயகத்துடைய மவுலிதுசரீபை யோதிக்கொள்ளுங்கள்-ஆனால்- முக்கியமாக மவுலிதில் ஹறாமான கருமங்களையும்-பித்அத்துகளையும் தவிர்த்து மவுலிது ஓதினால் - நம்மனைவோரையும் அல்லாஹுத்தஆலா சொர்க்க லோகத்திலே தாக்கலாக்கி வைப்பான்-ஆமீன்-யாறப்புல்-ஆலமீன்.

மவுலிது சரீபினுடைய வரிசையின்பயான்.

முற்றிற்று.

இந்த இரத்தினவிலாசம் - நசீகத்துலாசமென்னும் பெயருடைய புத்தகத்தை - அறபுப்பாஷையிலிருந்த மொழிகளைத் தமிழ்ப்பாஷையில் தருஜமாச்செய்ய வுதவிசெய்த நாயனே- இதை நீ கபுல்செய்து இதைப்படிப்பவர்கள்-கேட்பவர்கள்-உதவிசெய்தவர்கள் - தவீர்செய்யவர்கள் முதலியயாவரும் ... செய்து படித்து நல்லஅமல்ச் செய்யும் ...த் தௌபீக்குக்கொடுத்துச் ... பாவங்களையு மன்னித்துச் சொர்க்க லோகத்தில் தாக்கலாக்கிவைத்தருள்-ஆமீன்-யாறப்பல்-ஆலமீன்.

இனிதித் தகப்பல்பின்னி ஹுறிதித் தருஜமாத்தல் - அரிவியம் பிபாக்கத்தி ... நபியின் முகம்மதின் ஸல்லல்லாகு அலைகிவஆலிகி வஸல்லம் பிகி அஜ்மயீன் ... கம்தில்லாதி நபில் ஆலமீன்.

இரத்தினவிலாசம் நசீகத்துலாசம்

முற்றிற்று.